


வினோபா கண்ட காந்தி

விநோபா கண்ட காந்தி

விநோபா

தமிழாக்கம் :

இராம. கோபிநாதன், பி. ஏ. (ஆனர்ஸ்)

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

மதுரை — 625020

Tamilnad Gandhi Smarak Nidhi Publication No. 152

First Edition—March, 1974—2000 Copies

VINOBA KANDA GANDHI

By

VINOBA

Translated by

R. Gopinathan, B. A. (Hons.)

Price : **Rs. 4—50**

Publishers :

Tamilnad Gandhi Smarak Nidhi

Madurai-625020

Printed at

Vaigai Achagam, Madurai-625001

பதிப்புரை

காந்தியடிகள் வெறும் தலைவராக வாழவில்லை; ஒரு யுகபுருஷராக வாழ்ந்தார்.

தூய்மை வாழ்க்கையின் நடமாடும் ஓவியமாகத் திகழ்ந்தார்.

கொழுந்து விட்டெரியும் குரோதத்தை அடக்கி மழையென அருளாசி பொழிந்தார்.

கணந்தோறும் வளர்ந்து மலர்ந்த ஒரு தனிச் சிந்தனை போக்காக விளங்கினார்.

அச்சிந்தனைப் போக்கை நன்கு இனங்கண்டு கொண்டவர் விநோபா.

அவரும் ஒரு யுகபுருஷர்.

காந்தியடிகளின் சொல் சிந்தனையின் முழுப்பொருளையும் நன்கு புரிந்து தெளிந்து, அவர் காட்டிய அகிம்சை வாழ்க்கையை மேற்கொண்டவர்.

காந்தியடிகளின் சொற்கள், சிந்தனைகளைப் பற்றி புனிதர் விநோபா அவ்வப்போது கூறிய கருத்துக்களைக் குறிப்பிட்ட தலைப்புக்களில் தொகுத்துத் தருவது இந்நூல்.

குஜராத்தியில் இந்நூலை முதலில் தொகுத்தளித்தவர் திரு. காந்திபாய் ஷா.

அதன் மராத்திப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாடுபட்டு தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ள திரு. இராம. கோபிநாதன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

இந்நூலைத் தாமதமின்றி உடனே வெளியிடவேண்டுமென்ற விருப்பத்தால் எழுந்த அவசரத்தின் விளைவாக ஆங்காங்கே பிழைகள் புகுந்துவிட்டன. அதற்காக வருந்துகின்றோம். அடுத்த பதிப்பினை பிழையின்றி அச்சிட ஆவன செய்வோம்.

காந்தியடிகளை, இன்றையத் தலைமுறையினர், அவருடைய சிந்தனைகள் மூலமே நன்கு புரிந்துகொள்ள இயலும். இந்நூல் இதற்குப் பெரிதும் உதவும். இதனைத் தமிழக மக்கள் படித்துப் பயன்பெறுவார்களாக.

மதுரை
30—3—1974

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625020

பொருளடக்கம்

தொகுப்புரை

''நான் உயிரோடிருக்கும் போது உங்களில் சிலர் ஒளி விட்டுப் பிரகாசிக்கவில்லையென்றாலும், என் மறைவுக்குப் பிறகு உலகம் உங்கள் தேஜஸையும் ஆற்றலையும் உணரும்'' என்று காந்திஜி அவ்வப்போது தம் ஆசிரம வாசிகளுக்குச் சொல்வதுண்டு. காந்திஜியின் கணிப்பு விநோபாஜி விஷயத்தில் முற்றிலும் உண்மையாகியிருப்பது கண்கூடு.

இன்று நேற்றல்ல 1916லேயே தீனபந்துஆன்ட்ரூஸோடு பேசுகையில் ''ஆசிரமத்திலுள்ள கிடைத்தற்கரிய மாணிக்கங்களில் இவர் ஒருவர்''. தம் சொந்த புண்ணிய பலத்தால் ஆசிரமத்தையே புனிதப்படுத்துபவர்; பெறவந்தவரல்லர்; தர வந்தவர் என்று விநோபாஜியைப் பற்றி காந்திஜி குறிப்பிட்டிருக்கிறார்.

வேறொரு பக்கம் பார்த்தால், ''கடவுள் தன் பெருங்கருணையாலே பாபுவின் திருவடிகளிலேயே என்னை நிலைத்திருக்கப் பண்ணினார்......... பாபுவின் ஆசிரமத்திலிருந்து கிடைத்ததெல்லாம் என் மனதுக்கு மட்டும்தான் தெரியும் .... ஆசிரமத்துக்கு வந்தபின்தான் எனக்குப் பார்வையே கிட்டிற்று. பாபுவின் ஆசிரமம் எனக்குப் பார்வை அளித்த தாயகம்'' என்கிறார் விநோபாஜி.

''கடவுள் என்னுடைய சேவையை ஏற்பாரா? இவ்வுலகில் தங்கள் ஆசி தவிர மற்றெல்லாம் சூனியமாகத் தெரிகிறது ...... தங்களுடைய மாபெரும் வேள்வியில் 'ஆஹுதி'யாகும் தகுதியை இறைவன் எனக்கு வழங்கச் செய்வீர்களா?'' என்று விநோபாஜி, காந்திஜிக்கு ஓரிருமுறை கடிதம் எழுதியுள்ளார்.

அதற்குப் பதில் எழுதுகிறார் காந்திஜி: ''உங்கள் அன்பும் ஒழுக்கமும் என்னைப் பெருவியப்பில் ஆழ்த்துகின்றன. உங்கள் பக்தியும் சிரத்தையும் ஆனந்தக் கண்ணீரை வருவிக்கின்றன. நான் தகுதியுடையவனோ இல்லையோ உங்களுக்கு நிச்சயம் பலன் சித்தியாகும். நீங்கள் ஒரு பெரும் சேவையின் கருவி

ஆவீர்கள்......... கடவுள் உங்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து, பாரத நாட்டின் உயர்வுக்காக உங்களைப் பயன் படுத்துவாராக!''

காந்திஜியின் இந்த ஆசி முழுக்க முழுக்கப் பொருளுடையதாகி வருவது கண்கூடு. விநோபாஜி இந்நாட்டுக்கு மட்டுமன்றி உலகத்துக்கே செய்யும் ஒரு பெரும் சேவைக்குக் காரணமாக இருக்கிறார். காந்திஜியின் மாபெரும் வேள்வியை அவர் தொடர்ந்து நடத்தி வருகிறார். ''காந்திஜி காட்டிய அகிம்சா மார்க்கத்தை, அவர் இட்ட கட்டளைக்கிணங்க தொடர்பு பிசகாமல் நடத்த நான் முழுக்க முழுக்க முயன்று வருகிறேன் என்பதற்கு என் அந்தராத்துமாவே சாட்சி சொல்கிறது.........அவருடைய சிந்தனையில் நான் புரிந்து கொண்டதை, எனக்குப் பிடித்ததை, செயலாக்க ஒவ்வொரு கணமும் விழிப்போடிருந்து முயன்று வருகிறேன் என்று சொல்ல நான் வெட்கப்படவில்லை ...... பாபுவின் மறைவுக்குப் பிறகு அவர் பணியைத்தான் செய்து வருகிறேன் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.. ......என் சிந்தனையில் காந்திஜியின் சிந்தனையின் சாரம் ஓர் அம்சமாக இருந்து வருகிறது என்று கருதுகிறேன்'' என்கிறார் விநோபாஜி.

* * *

உலகம் இன்று அநியாயம், துன்பப் பீடிப்பு, சுரண்டலினால் விளைந்த நலிவு ஆகியவை காரணமாகத் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தின் தளையிலகப்பட்டு மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது. போர், ஏவுகணைக் கருவிகள் ஆகியவற்றின் சாபக்கேட்டால் அது நடு நடுங்கிப் போய் இருக்கிறது. விஞ்ஞானத்தை அதிகார வர்க்கமும் பெரும் பணக்காரர்களும், தன்னலக்காரர்களும் விலை பேசி வாங்கி விட்டிருக்கின்றனர். மனித இனம் இந்த இக்கட்டிலிருந்து விடுபட மேற்கொண்டிருக்கும் முயற்சியின் சின்னமாகவே காந்திஜி விளங்கினார். அவர் ஒரு தனி மனிதர் என்ற நிலையில் மட்டுமே மறைந்துள்ளார்; ஆனால் சிந்தனை வடிவில் அவர் அமரர். சிந்தனையை விளக்கும் ஒரு கருவிதான் தனி மனித உருவம். இப்படி ஒரு நிமித்த காரணமாக இருந்துவிட்டு காந்திஜி மறைந்து போனார். ஆயினும் அவர்தம் சிந்தனை நிலைத்திருக்கிறது. சிந்தனையை இடைவிடாது சலித்தெடுத்துக்

கொண்டிருக்க வேண்டும். கருத்தூன்றி ஆய்வு செய்து வர வேண்டும். அதற்குச் சார்புடைய செயல்களையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு அவ்வப்போது அதை வளர்க்க வேண்டும்—மலர்விக்க வேண்டும். அதை முன் நடத்திச் செல்ல வேண்டும். புதுப்புது முனைப்புகள் தோன்ற வேண்டும். இதுவே விநோபாஜியின் பார்வை. காந்திஜி தந்த சிந்தனைத் தாரையை மேலும் முன்னேறச் செய்வதே அவர் மேற்கொண்டுள்ள வழியின் சிறப்பு

* * *

இவ்வாறு சொந்த வாழ்க்கை, சிந்தனைத் துறை ஆகிய இரண்டிலும் காந்திஜியை பின்பற்றுவோரிடையே விநோபாஜிக்கு இணையற்ற ஓரிடம் உண்டு. எனவே காந்திஜியை விநோபாஜி பார்த்தபார்வை, உணர்ந்த உணர்வு ஆகியவற்றின் வயணத்தை நாமும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பம் நமக்கு மேலிடுகிறது. விநோபாஜியோ இதைப் பற்றி ஒன்றும் எழுதுவதாக இல்லை. அன்றியும் சரளமாக, கோவையாக மேற்கோள் காட்டி ஏதேனும் சொல்லியிருக்கிருரா என்று பார்த்தால் அதுவும் கிடைப்பதாயில்லை. ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக, எவ்வெப்போதோ சொன்னவை நிறைய உண்டு. குறிப்பாக, காந்திய சிந்தனைக்கு உயிர் மூச்சுப் போன்ற பூதானம், கிராமதானம் சம்பந்தமாக நாடு முழுவதும் சுற்றி வந்த போது காந்திஜியைப் பற்றியும் அவர் தம் சிந்தனை, செயல் முறை பற்றியும் பல சொற்பொழிவுகளும் உரையாடல்களும் நிகழ்த்தி இருக்கிருர். ஆதலால் காந்திஜியின் தரிசனத்தை—சிந்தனையை ஒருசேர நம் முன் வைக்க வேண்டுமென்ருல், இவற்றிலிருந்துதான் கொஞ்சம் தயார் செய்ய வேண்டியிருக்கும் இத்தகைய ஒரு முயற்சியின் விளைவே இத் தொகுப்பு நூல்.

தொகுத்துச் செய்யப்படும் நூல் ஒரு பௌதிகக் கலவை போன்றல்லாது ஒரு ரசாயனக் கூட்டுப் பொருளாக அமைய வேண்டும் — பிராணவாயுவும் ஜலவாயுவும் இணைந்து நீர் தோன்றுவதைப் போல, அரிசியும் பாலும் கலந்து சமைத்த பின் நல்ல பாயசம் உண்டாவது போல— என்ற கருத்து தொகுத்தபோது கூடவே இருந்து வந்தது.

இவ்விஷயமாகத் தொகுக்கத் தொடங்கிய போது சுமார் 300 சொற்பொழிவுகளும், கட்டுரைகள் முதலியனவும்

கிடைத்தன. இவை அனைத்திலிருந்தும் பொறுக்கியெடுத்தே இந்நூல் தயாராகியுள்ளது. ஆனால் இந்த நூல் இந்த 300 சொற்பொழிவுகளில் இருந்து மட்டும் தொகுக்கப்பட்டதல்ல. இவற்றைச் சேகரிப்பதற்கு முன்பே 21 அத்தியாயங்களாகப் பிரித்துக் கொண்டிருந்தேன். பின் ஒவ்வொரு அத்தியாயமும் இவற்றிலிருந்து உருவாகி பரிபக்குவம் அடைந்துள்ளது.

இதில் உள்ளது முற்றும் விநோபாஜியினுடையதே. இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தொகுப்பாசிரியரின் சில சொற்களும் வாக்கியங்களும் கோவையின் தொடர்பு கருதிக் கலந்திருக்கலாம். ஏனையவெல்லாம் விநோபாஜியின் சொற்களாலேயே தெளிவாக்கப் பட்டுள்ளன. ஆயினும் இப்படி தெளிவாக்குவதில் தொகுப்பாசிரியர் மனத்தில் ஏற்கெனவே தயாராகி இருந்த ஒரு பூர்வாங்க வரைபடம் உண்டு தான். ''விநோபாஜியின் காந்தி தரிசனம் இவ்வாறு'' என்று தொகுப்பாசிரியர் கருதியதை ஒத்தே இவ்விளக்கம் உருவாகியிருக்கிறது. ஆதலால் விளக்கத்தின் முழுப் பொறுப்பும் தொகுப்பாசிரியருடையதே. பேச்சு அல்லது கட்டுரையின் மூலத்தை புதிது புதிதான முன் பின் தொடர்புகளில் இங்கே எடுத்தாளும் போது தவறும் குறையும் இருப்பதற்கு ஏதுவுண்டு. அவ்வண்ணம் புலப்படுபவற்றை தொகுப்பாசிரியரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுகிறேன்.

அதுவுமன்றி, கைக்கெட்டிய சரக்கை வைத்துத் தான் தொகுப்பு உருவாகியிருக்கிறது. மேலும் சில கிடைக்கவும் கூடும். அப்படி ஏதேனும் இருந்து, கவனத்துக்கு வந்தால், அவற்றை அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்ளலாம்.

காந்திஜியைப் பற்றித் தொகுத்த பார்வையாக விநோபாஜி சொல்பவற்றின் ஒரு கணநேரக் காட்சியாவது இந்நூல் வாயிலாகக் கிட்டும் என்றும், அதன் விளைவாக ''காந்தி—விநோபா'' என்ற இணைப்புருவத்தை நன்குணர வாய்ப்புண்டாகும் என்றும் நம்புகிறேன்.

இந்நூலுக்கான மேற்கோள்களை சகோதரி காந்தாபென் ஷாவும் திரு அமிர்த மோதியும் திரட்டித் தந்துள்ளனர்.

—காந்தி ஷா

1 அமைதி, புரட்சி: இவற்றின் அபூர்வ சந்திப்பு

சிறுவயதில் என் எண்ணம் எல்லாம் வங்காளத்தின் மீதும் இமயமலையின் மீதுமே பதிந்திருந்தது. வங்கத்துக்கும் இமயத்துக்கும் போவதைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருந்தேன். ஒரு பக்கம் வங்கத்தின் ''வந்தேமாதர''த்தின் புரட்சி மனப்போக்கு என்னை இழுத்தது. இரண்டாவது இமாலயத்து ஞானயோகம் என்னை வலிந்து ஈர்த்தது. 1916 ஆம் ஆண்டு நான் வீட்டை விட்டு வெளியேறியபோது இமயத்துக்குப் போகும் ஆசை தீவிரமாக இருந்தது. அதற்கு அடுத்தபடியாக வங்கத்துக்குப் போகிற ஆசை. இமாலயத்துக்கும் வங்கத்துக்கும் போகிற வழியில் காசி இருந்தது, விதிவசமாக நான் காசிக்கே போய்ச் சேர்ந்தேன்.

காசியில் இருந்தபோது ஒருநாள் முதன் முதலாக காந்தியின் நினைவு எனக்குண்டாயிற்று. அவருடைய புகழ் பெற்ற அந்தச் சொற்பொழிவை நான் பரோடாவில் இருந்த போதே செய்தித்தாள் வாயிலாகப் படித்திருந்தேன். வாரணசி பல்கலைக் கழகத் திறப்பு விழாவின் போது ஏற்பாடாகி இருந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அவர் வந்திருந்தார். அவ்விழாவிற்குப் பெரும் பெரும் புலவர்கள் ராஜாக்கள், மகாராஜாக்கள் வைசிராய் ஆகியோர் வந்திருந்தனர். அவர்கள் முன்னிலையில் காந்தி நிகழ்த்திய அந்த தைரியமான பேச்சு என் மனதில் ஆழமாகப்பதிந்து ஒரு மனமாற்றத்தை விளைவித்திருந்தது. நாட்டின் அரசியல் விடுதலை, ஆன்மீக மறுமலர்ச்சி- இவ்விரண்டுமே வேண்டும் என்று கேட்கிறவர் இம்மனிதர் என்று எனக்குத் தோன்றி இருந்தது. தேவை இவையே என்ற கருத்தை நானும்

கொண்டிருந்தேன். சில கேள்விகள் கேட்டு அவருக்குக் கடிதம் எழுதினேன். பதில் வந்த பிறகு மேலும் சில கேள்விகள் கேட்டு எழுதினேன். அதற்கு வந்த பதிலோடு ஆசிரமத்தில் சேருவதற்கான விதிமுறைகள் அச்சிட்டதாள் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தது. பதிலில் இப்படி விவகாரம் செய்வதால் போதிய விளக்கம் கிட்டாது என்றும், நேரில் சந்திக்க வேண்டும் என்றும் காந்தி எழுதியிருந்தார். என் கால்கள் காந்தி இருக்குமிடம் நோக்கித் திரும்பின. அப்படிப் பார்த்தால், நான் இமயத்துக்கும் போகவில்லை வங்கத்துக்கும் போகவில்லை என்று தான் தோன்றும். ஆனால் என் உள்ளத்தைப் பொறுத்த வரையில் நான் இரண்டு இடங்களுக்கும் ஏககாலத்தில் போய்ச் சேர்ந்து விட்டேன். காந்தியிடம் இமயத்தின் அமைதியும் சிந்தித்தது, வங்கத்துப் புரட்சியும் கிட்டிற்று. எனக்கு அங்கே கிடைத்த சிந்தனைப் போக்கிலேயே புரட்சியும் அமைதியும் சந்தித்துக் கலந் திருந்தன.

பாபுவின் திருவடிகளிலே.

1916—ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாம் தேதியன்று கோச்பரம் ஆசிரமத்தில் காந்தியை முதன் முதலாகச் சந்தித்தேன். கடவுளின் பெருங்கருணையாலே அவர் என்னைத் தம் திருவடிகளிலே நிரந்தரமாக இருத்தியருளினார். என் இதயமும் வாழ்க்கையும் என்றும் அவர் திருவடிகளிலே உறுதிபெற்று நிற்பதை என் இதயத்திலும் வாழ்க்கையிலும் காண்கிறேன். எனக்கு அவர் தந்த சிந்தனையையும் பயிற்சிகளையும் எவ்வளவு தூரம் கடைப்பிடித்தேன் என்பது எனக்குத் தெரியாது; அவருக்கும் தெரியாது; என்றும் உங்களுக்கும் ஒரு கால் தெரியாமல் போகலாம்; கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும். அவருடைய சிந்தனையில் எவ்வளவைப் புரிந்து கொண்டேன், எவ்வளவு எனக்கு உகப்பாய் இருந்தது, அச்சிந்தனையைச் செயலாக்குவதில் நான்

எவ்வளவு தூரம் தேறினேன், எவ்வளவு விழுக்காடுகள் ஏற்பட்டன என்பதையெல்லாம் பலர் அறியச் சொல்ல எனக்குத் தயக்கமோ, வெட்கமோ இல்லை. இது மட்டும் அன்று. அவர் உயிர் வாழ்ந்த காலத்தில் நான் எவ்வளவு விழிப்புடன் இருந்தேனே—கடவுள் அருளினுல் நான் மிகுந்த விழிப்புடன் தான் இருந்து வந்தேன்—அதை விட அதிக விழிப்பு இப்போது எனக்கு உண்டென்பது நிச்சயம். இன்றும் இடைவிடாது ஒன்றை அனுபவித்து வருகிறேன்- அவர் என் முன் இருக்கிறார்; என் பின்னுல் இருக்கிறார்; என் தலைக்கு மேலும் இருக்கிறார்.

சங்கராச்சாரியரின் ஒரு வாக்கியம் எனக்கு எப்போதும் நினைவுக்கு வருவதுண்டு ''மனிதனுக்கு மூன்று பெரும் பாக்கியங்கள் உள்ளன. மனித உடல் பெற்றதே முதல் பெரும் பாக்கியம். ''முமுக்ஷுத்வம்''- முக்திக்கான தவிப்பு இரண்டாவது பெரும் பேறு. மூன்ருவது, எப்போதேனும் மகாபுருஷர்களைச் சந்திக்கும் பேறு'' என்று கூறியிருக்கிறார்- ''மனுஷ்யத்வம்; முமுக்ஷுத்வம் மகாபுருஷ ஸம்ச்ரயம்''.

சங்கராச்சாரியரின் இந்த வாக்கியத்தைச் சிந்திக்கும் போது என் இதயத்தில் ஆனந்தம் ததும்பி வழிகிறது. நான் பெரும் பேறுடையேன். மானுட உடலெடுத்துள்ளேன்; முக்திக்கான ஏக்கமும் இருக்கிறது; ஒரு மகானுடைய நல்லுறவும் கிட்டியுள்ளது. பெரியோர்களின் சொற்களை நூல்வாயிலாகக் கற்பது என்பது ஒரு நிலை. ஆனுல் அவர்களோடு நேரிட உறவு கொள்ளுதல், உறவுகிட்டுதல், அவர்கள் வழிகாட்ட, ஏவபணி செய்தல்; அவர்கள் வாழ்க்கையை நேரில் பார்த்தல் என்பது முற்றும் வேறு. எனக்கு இப்பேறு கிட்டிற்று என்பதால் நான் நிறைவுடையோனே!

உள்ளும் புறமும் ஒன்றிய நிலை.

காந்தி என்னைப் பரீட்சித்தாரா-சோதித்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனுல் நான் என் அறிவுக்கு

எட்டியவரை அவரை நிரம்பச் சோதித்திருக்கிறேன். அவர் அந்தச் சோதனையில் தேறாதிருந்தால் நான் அவரிடம் நிலையாகத்தங்கி இருந்திருக்கவும் மாட்டேன். அவர் என்னைச் சோதித்து கொஞ்சமேனும் குறை கண்டிருப்பார்தான். குறை கண்டும் என்னைத் தம்மிடமே தொடர்ந்து இருக்க அனுமதித்தும் இருப்பார். சத்தியத்தின்பால் அவரிடம் சற்றேனும் குறை அல்லது நிறையின்மை கண்டிருப்பேன் எனில் நான் அவரிடம் தங்கியிருக்க மாட்டேன். ''நிறைவுடையேன் அல்ல குறையுடையேன்'' என்று காந்தி எப்போதும் சொல்லுவார். அவருடைய இச்சொல் மெய்யும் கூட. பொய் சொல்ல அவருக்குத் தெரியாது. அவர் சத்தியநிஷ்டர்-உண்மையின்பால் உறுதிபூண்டு நின்றவர். நான் பல மகான்களைப் பார்த்திருக்கிறேன்.முக்தர்கள் அல்லது முழுமையடைந்தவர்கள் என்று தோன்றியிருப்பினும் அவர்கள் யாரிடமும் எனக்கு ஈடுபாடு உண்டானதில்லை. எப்போதும் தன்னைக் குறையுடையவன் என நினைத்து வந்தமையே எனக்கு அவரிடம் ஈடுபாடு உண்டாக்கிற்று. காந்தியின் முத்திரை என் மீது பதிந்த அளவு மற்றெந்தப் பெருந்தகையாளரின் முத்திரையும் என் மீது பதிந்ததில்லை.

நான் பாபுவைச் சந்தித்ததும் அவரிடம் மாறாத அன்பு பூண்டமை அவரிடம் உள்ளும் புறமும் ஒத்திருந்த ஒரே பண்பு காரணமாகத்தான். அதுவுமின்றி, கர்மயோகத்தின் தீட்சை அவரிடமிருந்து எனக்குக் கிடைத்தது. கீதையில் இது (கர்மயோகம்) பேசப்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் அதைக் கண்கூடாக பாபுவிடம் தான் கண்டேன். கீதையில் ஸ்திதப்பிரக்ஞனின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அந்த வர்ணனை யாருக்குப் பொருந்தும் என்பதை உணர, உடல்தாங்கி இருக்கும் ஸ்திதப் பிரக்ஞன் ஒருவனைச் சோதித்துக் காணும் பேறு கிட்டவேண்டும். அவ்விலக்கணங்கள் மிகப் பெரிய அளவு காந்தியிடம் இருந்ததை நான் நேரில் கண்டிருக்கிறேன்

கற்றுவின் மனம் போலக் கசிந்துருகும் பண்பினர்.

இவ்வாறு மகான் ஒருவரோடு இணைந்து பணி செய்த பேறும் அவரோடு வாழ்ந்த பெரும் பேறும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. பெரிய மனிதர்களின் நிழலில் வாழ்வோர் முழு மலர்ச்சி அடைவதில்லை என்பது பலர் கருத்து. அதற்கு உவமையாக, பெரிய மரத்துக்கடியில் வளரும் சிறிய மரங்கள் உணவுச் சத்து கிடைக்காமல் வளர்ச்சி குன்றிப் போவதைச் சொல்வதுண்டு.

ஆனால் இக்கருத்து பெருந்தகையாளர்களுக்குப் பொருந்தாது, அத்தகைய பெருந்தகையினருக்கு வேறு ஒரு உவமையே பொருந்தும். மகான்களைச் சார்ந்து வாழ்வோர் தாய்ப்பசுவினிடம் வளரும் கன்றே போல்வர். பசு தன் கன்றுக்குப் பால் சுரக்கிறது; ஆனால் பெரிய மரமோ சிறிய மரங்களுக்குப் போகும் உணவுச் சத்தை உறிஞ்சி விடுகிறது. பெருந்தகையாளர் தாய்ப்பசுவைப் போன்று அன்பு உடையர். பசு, வைக்கோலையும் புல்லையும்தான் தின்று இனிய பாலைத் தன் கன்றுக்கு ஊட்டுகிறது, அக்கன்று வளர்கிறது கொழுக்கின்றது. மகாத்மா காந்தியைப் பொறுத்த வரையில் அவர் நிழலை அண்டி வாழ்ந்தோர் எல்லோரும் ஒன்றை அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள். அவரிடம் தனிப்பட்ட நிலையில் பகைமை பாராட்டியவர்கள் நல்லவர்களாக மாறியிருக்கின்றனர். சிறியவர்கள் பெரிய மனிதர்களாகி இருக்கின்றனர். நண்பர்கள் அச்சம் தவிர்ந்து வாழ்ந்திருக்கின்றனர். ஆயிரக் கணக்கானவர்களின் பெருமையை அவர் மேலும் வளர்த்துள்ளார். இத்தனை இருந்தும் (மகாத்மாஜி) தம்மை எல்லோரையும் விடச் சிறியவராகவே மதித்து வந்தார். அளவோடு வாழ்ந்ததால் என்வாழ்க்கை நிறைவுடைய தாயிற்று என்பது என் கருத்து.

என் கருத்து.

1916—ஆம் ஆண்டு நான் காந்தியைச் சென்றடைந்த போது எனக்கு வயது 21. நான் ஒரு "ஜிஜ்ஞாஸு" (அறிவுப்பசியுடையவன்) என்ற நிலையில் அவரை அண்டினேன். பண்புடைமை, சான்ருண்மை என்னிடம் மிகக் குறைவு என்பதை என் நண்பர்கள் எல்லோரும் அறிவார்கள். நான் இயல்பிலேயே ஒரு காட்டு விலங்கு போல் இருந்தவன். என்னுள் கொழுந்து விட்டெரியும் குரோதத்தின் "ஜ்வாலாமுகி"யையும் வேறு பல "வாசனை"களின் வடவாக்கினியையும் அடக்கியவர் பாபுவேயாவார். என் மீது அவருடைய அருளாசிகள் மழையெனப் பொழிந்திருக்கின்றன. அவர் வளர்த்தவற்றுள் காட்டு விலங்கு நான் ஒருவன். இன்றைய என் நிலை பாபுவின் அருளாசி விளைத்த விந்தை, விசித்திரம். என்போன்ற பண்பிலா மானுடனைச் சேவகனுக- தொண்டனுக மாற்றினுர்.

கண்ணொளி தந்த தாயகம்.

பாபுவின் ஆசிரமத்துக்கு நான் வந்ததாலும் அங்குள்ள வாழ்க்கை முறையில் பலவற்றை என் போக்கில் நான் பார்த்துத் தெரிந்து கொண்டதாலும் எனக்குண்டான நன்மைகள் பல. வாழ்க்கை ஒருமைப்பாடுடையது, இடையறுதது என்ற அனுபவம் இதன் விளைவாக எனக்கு உண்டாயிற்று. பாபு தம்மை யாருக்கும் குருவென்று கருதவில்லை என்பது போலவே தம்மை ஒருவரின் சீடர் என்றும் கூறிக் கொள்ளவில்லை. அதுபோலவே நானும் எவருக்கும் குருவோ சீடனே அல்ல. ஆனுல் குருவின் பெருமையை நான் பெரிதும் போற்றுகிறேன். மெய்தீண்டுவதால் மட்டுமோ, காட்சிமாத்திரத்தாலோ, சொல்லால் மட்டுமோ சீடனை உயர்த்தக்கூடிய குரு இருக்கக் கூடும். இவ்வளவு மட்டும் அன்று. சங்கல்பத்தாலேயே சீடனை உயர்த்தவல்ல பூரணுத்துமாவான குருவும் இருப்பார் என்று கூடக் கருது

கிறேன் ஆனால் அதையெல்லாம் என் கற்பனையில் தான் காண்கிறேன். அப்படி ஒரு குருவை நான் நேரில் சந்தித்த தில்லை. இந்த குரு விஷயத்தை இதோடு விட்டுவிட்டு ஒன்று மட்டும் சொல்வேன். பாபுவின் ஆசிரமத்தில் எனக்கு என்ன கிட்டிற்றோ அதுதான் நான் இன்று வரை செய்து வரும் பணி. அதற்கு முன் நான் இயற்றிய சாதனைகள் யாவும் வெறும் பாவனை சார்ந்தவை. பிறகு தான் பாபுவின் ஆசிரமச் சாதனைகளை மேற்கொண்டேன். ஆசிரமத்துக்கு வந்த பிறகுதான் எனக்குப் பார்வையே கிடைத்தது. பாபுவின் ஆசிரமமே எனக்குக் காட்சி அருளிய தாயகம் என்பேன்.

அகிம்சையே அகல்வீதி.

பாபுவிடம் வந்தபிறகு 32 ஆண்டுகள் என் சொந்த சாதனையில் கழிந்தன. அக்காலத்தில் நான் செய்த நித்திய விசாரம், மனனம் யாவும் ஆன்மீகம் சார்ந்தவையே ஆயினும் செயலிலிருந்து விடுபடும்-ப்ரவர்த்திமுக்த- சாதனைகள் அல்ல. அரசு, சட்டம், நாட்டு நடப்பு போன்றவற்றிலும் நான் ஈடுபட்டுத்தான் இருந்தேன். சமூகச் சிந்தனை இயலில் ‘‘அப்-டு-டேட்’’ ஆக இருப்பேன். பாபு அவ்வப்போது எழுதுவதும் பேசுவதும் எனக்கு வழிகாட்டி வந்தன. அவருடைய சிந்தனைகளை நான் கருத்தூன்றிப் படிப்பேன். அவற்றுள் செயலாக்கக் கூடியவற்றை இயன்றவரை செய லாக்கியும் வந்திருக்கிறேன் இப்படிப் பழகப் பழக பாபு காட்டிய அகிம்சை நெறி கைக்கெட்டுவதாயிற்று.

பாகவத தர்மம் பற்றி அழகான ஒரு சுலோகம் உண்டு. காந்தி ஆராய்ந்து கண்டு பிடித்த அகிம்சைக்கு அது மிகவும் பொருந்தும். அச்சுலோகமாவது:

யானுஸ்தாய நரோ ராஜன் நப்ராமாத்யேத் தர்ஹிசித்
தாவன் நிமீல்ய வாநேத்ரே நஸ்கலேத் நபதேதிஹ

"யார் ஒருவன் இதைப் பிடித்துக் கொண்டு நடக்கிருனே அவனுக்கு விபத்து ஒன்றும் நேராது. (பொருளில்) மறந்தும் தவறு நிகழாது. அதாவது வழியில் விழிவைத்து நடந்தாலும் சரி ஓடினுலுமே சரி அவன் என்றும் வீழ்வதில்லே". இப்படி இருக்கிறது பாகவத தர்மம்.

இத்தகைய ஓர் அழகிய விஞபாட்டை, பாபு காட்ட நமக்குக் கிடைத்திருக்கிறது. சர்வோதய சமூகம் அமைக்கும் ஆசை நிறைவேற வேண்டுமாயின் இப்பாதையில் போகலாம்.

2

கிடைத்தற்கு அரிய ஒரு பெருந்தகை

கடவுளுக்குப் பாரத நாட்டின்பால் பெருங்கருணை உண்டு. தொன்று தொட்டு இன்று வரை பெருந்தகையாளர்கள் பலர் இங்கே அவதரித்திருக்கின்றனர், ஒவ்வொருவரும் கூடுதலாகவோ, குறைந்த அளவிலோ வாழ்க்கையை வளம் செய்திருக்கின்றனர். இப்பெருந்தகையாளர் தொடரில் கடைசிக் கண்ணியாகவும், இனிவரவிருக்கும் சான்றோர் வரிசையில் முதல் கண்ணியாகவும் வைத்தெண்ணப்பட வேண்டியவர் காந்தி. கடந்த காலத்து மகான்கள் நமக்குத் தந்து சென்றவற்றைப் பிழிந்த சாறும், இனி வருங் காலத்தில் கடவுள் அனுப்ப இருக்கும் எண்ணற்ற மகான்கள் தோன்றுவதற்கான வித்தும் அவரிடம் கிடைக்கிறது. இப்படி ஒரு யுகச் சந்திப்பில் தோன்றியிருக்கிறார் அவர். அதனால் சென்ற காலத்தின் பழுதிலாச் சிறப்பும், இனி வருங்காலத்தின் அருளும் அவர் மாட்டுக் கிடைக்கின்றன. பல பெருந்தகையாளர் விஷயத்தில் இப்படிச் சொல்வதற்கில்லை, ஒவ்வொருவருக்கும் ஒரு தனிச்சிறப்புண்டுதான். ஆனால் பழைய பரம்பரையின் பழமும், புதிய பரம்பரையின் வித்தும் ஏககாலத்தில் வந்து கலந்த பெருந்தகையினர் அரிதாகவே இருப்பர். இப்படிக் கண்டடைதற்கு அரிதான மகா புருஷர்களில் காந்தியும் ஒருவர்.

அறிவியல் யுகத்தின் தலைவர் :

காந்திஜி ஒரு சத்புருஷர்—நற்பெரும் தகை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். அவர் ஒரு நல்ல மனிதர் என்பதோடு ஒரு புதுச் சிந்தனைப் போக்கைத்

தோற்றுவித்தவரும் ஆவார். அவர் புதிய ஒரு வாழ்க்கைச் சித்தாந்தத்தை வழங்கினுர்.

இப்படி ஒரு புதுச்சிந்தனை, பெருந்தகையாளர் எல்லோரிடம் இருந்தும் கிடைத்திருக்கிறது என்பதற்கில்லை. அம்மகாபுருஷர்கள் குறிப்பிட்டதொரு சூழ்நிலைக்கேற்ப, தமக்குத் தோன்றிய கருத்துக்களுக்கு ஒரு உருவம் கொடுத்திருக்கிருர்கள். அந்தக் கருத்துக்கள் முளைவிடுகின்றன; மலர்கின்றன. அப்படிப் பார்த்தால் எல்லாப் பெருந்தகையாளர்களின் இதயப்பாங்கும் ஒன்று போலவே இருக்கும். ஆனல் ஒவ்வொருவருடைய அறிவும் கற்பனைத் திறனும் வெவ்வேறுவகை; வெவ்வேறு அளவு என்பதைக் காண்போம். அந்தந்தக் காலத்துக்கு மிகவும் தேவையான சிந்தனையும், விசாரமும் உடையவர்கள் அந்தந்த யுகத்தலைவர்களாகவும் அமைகின்றனர் காந்திஜி இப்படியொரு யுகத்தலைவராக அமைந்த நற்பெரும் தகையாளர் ஆவார்.

சாமானிய சமயப் பிரசாரமும் புரட்சியும் முற்றும் வேறுவேறு பொருள்களாகும். சாமானிய சமயத்தை முனிவர்களும் பக்தர்களும் எப்போதும் பரப்பி வந்திருக்கின்றனர். ஆனல் காலத்தின் தேவையோடு சான்றோர்களின் போதனையும் இணையும் போது உண்டாவது புரட்சி. மிகவும் சாமானியமென்று சொல்லக்கூடிய சமயநெறியைப் பிரசாரம் செய்வது என்பது ஒன்று. காலத்தின் உடனடித்தேவை என்ன என்பதை அறிந்து அதனேடு சமயவிசாரத்தையும் இணைத்து விடுவதென்பது முற்றும் வேருகும். சமய விசாரத்தின் உள்ளார்ந்த வலிமையையும், புறஉலக வாழ்க்கையின் வேகங்களையும் இணைத்துக் காட்டுபவர் சமயத் தலைவராக அல்லது ஒரு நற்பெருந்தகையாளராக அமையாதவிடத்து யுகபுருஷன் அல்லது யுகத்தலைவன் மட்டுமாகி விடுகிருர். காந்தி இப்படிப்பட்ட ஒரு யுக புருஷராவார்.

ஸ்மிருதிகாரர்கட்கிடையில் ஒரு சமூகவியற் பெரும் புலவர்.

கிட்டத்தட்ட ஸ்மிருதிகளை இயற்றியோரிடையில் வைத்தெண்ணும் அளவுக்குப் பெரிய சிந்தனையாளர் காந்தி. ஒரு சிலர் அவரை ஏசுகிறிஸ்துவுக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றனர். மற்றும் சிலர் அவரைத் திலகருக்குச் சமம் என்கின்றனர். என் கணிப்புப்படி அவர் ஸ்மிருதிகாரர்கள் வரிசையைச் சேர்ந்தவர். பரந்த சிந்தனையில் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையையும் தொட்டுச் சென்றிருப்பதால் அவரை மனுவுடனோ யாக்ஞவல்கியருடனோ ஒப்பிட்டுக் கணிப்பதே பொருத்தம். அவர் ஒரு சமூகவியல் அறிஞர் ஆவார்.

அப்படியும் மனுவினின்றும் காந்தி வேறுபட்டவர். மனுவின் போக்கு சிந்தனை சார்ந்தது. காந்தியின் பாங்கு தொண்டு செய்வதை மையமாகக் கொண்டது. காந்திஜி செயல் சார்ந்தவர்—'ஆக்டிவிஸ்ட்'. காந்தி கண்கூடாகக் கண்டவாறு நிலைமையைப் புரிந்து கொள்வார் என்பதே அவர் சிறப்பு. அதுவும் புற உலகப்பார்வை சார்ந்த பாங்கு. அவர் எழுதிய நூல்களை விட அவர் மிகவும் பெரியவர் என்பதே அவருடைய உறுதியுண்மை. வாழ்க்கையுண்மை என்ற கண்கொண்டு நோக்கும் போது ஷேக்ஸ்பியரும் மில்டனும் அவர்கள் நூல்களை விடச் சிறியவர்களாகத் தான் காட்சியளிக்கின்றனர். காந்தியின் வாழ்க்கை மிகவுயர்ந்தது, நல்லது, பீடுடையது. சிந்தனையை வெளியிடுவதில்—எக்ஸ்ப்ரஷன்—அவர் திறனுடையவரல்லர், ஆதலால் அவருடைய நூல்களை விட அவர் வாழ்க்கையின் வெற்றி பெரிது.

பெருந்தகையாளரின் அரிய கற்பனைத்திறன்:

சங்கராச்சாரியார் ஒரு பெருந்தகையாக விளங்கியவர். இராமகிருஷ்ணபரமஹம்ஸரும் மிகப் பெரியவர் தாம். இவர்களிருவருமே வாழ்க்கையின் பல பகுதிகளைப் பாதிக்கும்

படியாக பலவற்றைப் போதித்துள்ளனர். அது காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கையில் மாறுதலைத் தோற்று வித்துள்ளனர், ஆனால் அவர்கள் சூரியநாராயணனைப் போல் தொலைவில் நின்று ஒளி தந்தவர்கள், ஆதவன் கதிர்களால் நமக்கு உடல் நலம் கிட்டுகிறது. ஆனால் உடம்பின் ஏதாவது ஓர் உறுப்பில் வீக்கம் உண்டாகி அதற்கு ஒத்தடம் கொடுப்பது தேவையானால் சூரியனின் கதிர்கள் பயன்படா, அதற்கு நெருப்பே தேவையாகிறது. அந்நெருப்பு தொண்டனாக உருவெடுத்து நெருங்கி வந்து நமக்குத் தொண்டு புரிகிறது. சூரியநாராயணன் நமக்கு ஆசிரியன், பணியாளன் அல்லன் அவன் ஒளிதருபவன். அந்த ஒளியின் துணைகொண்டு நம் அறிவுக்கெட்டின வகையில நாம் செயல் படலாம். அவர்கள் உங்களுக்கு வழிகாட்டுபவர்களாகச் சமைந்தோர்—சேவகர் களாக அன்று. இப்படியெல்லாம் இருந்தாலும் சூரிய நாராயணன் இல்லாவிட்டால் நெருப்பில் உள்ள ஆற்றலும் கூட இல்லையாகும் என்பதென்னவோ உண்மைதான்!

ஆன்மீகப் பெற்றி உள்ளிருந்தே கிளர்ந்து வருவது ஆதலால் ஒரு பெருந்தகையாளரை மற்றொருவரோடு ஒப்பிட்டுக் கணித்தல் ஒவ்வாது. இதில் யார் அதிகம் யார் குறைவு என்பதும் பொருளற்றது. ஒவ்வொருவருடையதும். அவரவருடைய தனிப் பெற்றியாகும். நாம் மட்டும் ஏதோ அப்பெருந்தகையாளர்களின் ஒப்புமை வேற்றுமை விபரங் களைப்பற்றிப் பேசலாம் என்பதோடு சரி.

பரிவாலும் அன்பாலும் தூண்டப் பெற்றவர் :

பெருந்தகையாளர்களிற் பலர் அன்பும் பரிவும் மிக்குடையோர். அவர்களிடம் ஞானம் ஒளிந்தும், கருணை வெளிப்பட்டும் காண்கிறோம். காந்தி இதுபோன்ற ஒரு பெருந்தகை. அன்பாலும் கருணையாலும் தூண்டப்பெற்று அவர் கடைசி வரையிலும் மக்கள் பணியைச் செய்து

வந்தார். சிலர் அவரை உயிருக்குயிராய்க் கருதினர் என்றல் சாமானிய நிலேக்கு இறங்கி வந்து அவர்கள் நிலேயில் நின்று அவர்களோடு பேசுவார். யாரோ ஒருவருக்கு வயிற்று நோவு என்றல் உடனே அதைப்போக்க மருந்து சொல்லுவார். யாரோ கணவன் மனேவிக்கிடையில் சண்டை என்றல் அவர்களும் வருவார்கள்-அவரிடம் அறிவுரை கேட்க. தமது பெரும்பணிகளுக் கிடையில் இதற்கென்று பொழுது ஒதுக்கி இவற்றில் எல்லாம் பெரும் ஈடுபாட்டுடன் ஒவ்வொரு வருக்கும் தக்க அறிவுரை சொல்லுவார். ஒரு தாயின் அன்போடு அவர் பேசிவந்தார், கவலேப்பட்டார். ஆதலால் மக்கள் ஒரு கரவுமில்லா மனத்தோடு அவரிடம் ஓடுவார்கள். இப்படி வெளிப்படையாக அவருடைய கருணே மலர்ந்து மணம் வீசிற்று.

ஆண்களுக்கு அவர் தம்மைப் போன்ற ஓர் ஆண் மகஞகவே தெரிந்தார். பெண்களுக்கு அவர் ஓர் சகோதரி போல் காட்சியளித்தார். பெண்களும் அவரிடம் திறந்த மனத்தோடு பேசினர். பலர் அவரைத் தம் குடும்பத்தில் ஒருவராகவே பாவித்தனர்.

காந்தியை அவருடன் மிகநெருங்கியிருந்த நாங்கள் பாபு என்றே அழைத்து வந்தோம். பிறகு நாடெல்லாம் அவரை 'பாபு' என்றே குறிப்பிட்டுப் பேசிற்று. அதன் பிறகு அவரை 'ராஷ்டிரபிதா'—நாட்டின் தந்தை எனக்குறிப்பிட்டனர். எனக்கென்னவோ பாபுவைப் பற்றி நினேக்கும் போதெல்லாம் அவர் ஒரு தந்தையைப் போல விளங்கிஞர் என்பதை விட ஒரு தாய் போல விளங்கிஞர் எனறே தோன்றுகிறது. ''ஸஹஸ்ரம்த்து பித்ருன் மாதா கௌரவேணுதிருச்யதே''—என்பதுவாக்கு—ஆயிரம் தந்தையின்ரைவிடப் பெருமையில் ஒரு தாய் சிறப்புக்குரியவள். பாபுவினிடத்தில் தந்தைப் பண்பைவிடத் தாய்மைப் பண்பே சிறந்திருந்தது. நாம் அவரை நினேயுந்தோறும் அவருடைய பல பிற பண்பு நலன்

களிலும் மிகவும் எடுப்பாய்த் தெரிவது அவருடைய பரிவே. நெருங்கி இருந்தோர் மட்டுமின்றித் தொலைவில் இருந்தோரும் அவருடைய அன்பை அனுபவித்தனர். அவரது பண்புகள் பலவற்றிலும் அவர் தம் அன்பும் கருணையுமே முக்கிய மானவை.

இவ்வாறு பாபுவைப் பழைய பரம்பரையின் பழ உரு வாகவும், புதிய பரம்பரையின் வித்துருவாகவும் அறிவியல் சிந்தனையாளரான ஒரு யுகத்தலைவராகவும், ஸ்மிருதிக்காரர் களின் வரிசையைச் சேர்ந்த ஒரு சமூகவியல் பேரறிஞராக வும், கருணையும் பரிவும் நிறைந்து தாயொத்த அன்பு காட்டும் ஒரு பெருந்தகையாளராகவும் காண்கிறோம். இத்தகைய ஒரு பெருந்தகையாளரின் சந்நிதியில் இருக்கக் கொடுத்து வைத்தது நம்முடைய பெரும் பாக்கியமே ஆகும்.

3 மூர்த்தியைவிடக் கீர்த்தி பெரிது

நம் நாட்டில் விபூதி பூஜை (மூர்த்தி உபாசனை) உண்டு. பெருந்தகையாளர்களை தெய்வீக வடிவில் பார்ப்பது நமக்கு அடிப்படை இயல்பாகி விட்டிருக்கிறது. காந்தியை தெய்வமாக்குகிற முயற்சியும் நாட்டில் நடந்து வருகிறது. பலர் அவருடைய குணசம்பத்தைப் பாடிப் பரவுகின்றனர்: அவரைக் கடவுளே என்கின்றனர். இராமன், கிருஷ்ணன் ஆகியோர் வரிசையில் அவரைக் கொண்டு போய்ப் பிரதிஷ்டை பண்ணுவது என்னவோ சரியன்று,

மனித உடலிலேயே ஓர் ஆசை. அமைந்துள்ளது— இறை இயல்பை 'இவ்வுடம்பிலேயே, இக்கண் கொண்டே' அனுபவித்து விடவேண்டும் என்ற ஆசை. எப்போதோ ஒரு கால் பெருந்தகையாளர்கள் உடல் தாங்கி வருகின்றனர்— பூரணப் பிரம்மம் நேரிடக் காணும் பரமமாக உடல்தாங்கி மானிட உருவில் வருகிறது என்ற நம்பிக்கை நமக்கும் நம் உபாசனைக்கும் ஓர் ஆதாரமாக அமைகிறது என்ற அளவில் அது போற்றற்குரியதே. இப்படி முழுநம்பிக்கை வைக்க நமக்கு ராமன் கிருஷ்ணன் முதலியோர் கிடைத்திருக் கின்றனர். இந்நிலையில் மூன்றுவதோர் அவதாரம் தேவையா என்ன?

இன்றைய நிலையில் இராமனும் கிருஷ்ணனும் இருக்கும் இடத்தில் மேலும் ஒருவரை வைப்பதால் லாபம் ஒன்றும் இல்லை. மாறாகத் தீமையே விளையும். மனிதர்களை மேலும் அதிமானுடர்களாகப் பாவிக்கும் புதுமுயற்சிகள் நடந்த தாலுமே, புராணகாலம் முதல் கவிகற்பனையால் வளம்

பெற்று விட்ட இராமன், கிருஷ்ணன் ஆகியோர் வரிசையில் அவர்களுக்கு இடம் கிடைக்காது. அவர்கள் பக்கத்தில் இவர்களைக் கொண்டு போய் வைத்தால் அது 'போலி'யாகத் தெரியும். விஞ்ஞான யுகத்தில் இத்தகைய முயற்சி நகைப் புக்கிடமாகிவிடும் என்பதும் ஒன்று. "பாரத நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத் தர பகவான் அவதரித்தார்" என்ற போக்கில் காந்தியின் வரலாற்றை எழுத முற்பட்டால் அது பாகவதத்தைக் கேலி செய்வது போல் தொனிக்கும்—ஒரு நகைச் சுவை சித்திரம் போன்று. பாகவதத்தை அன்றாடம் பாராயணம் செய்வது போல இதைப் பாராயணம் செய் யவும் ஒண்ணாது அதற்கு நேர் மாறாக இது ஒரு இலக்கிய விசித்திரமாகி விடும்—"ஃபாஸ்" என்னும் தமாஷ் நாடக மாகிவிடும்.

அவரை மனிதராகவே இருக்க விடுங்கள்.

காந்தியைப் பொறுத்த வரையில் இத்தகைய மூட பக்திக்குத் தேவை இல்லை. அவர் ஒரு மனிதர் மட்டும் தான். அப்படி அவர் மனிதராகவே இருக்க வேண்டும். அவரை அப்படி இருக்க விடுவதால் தான் நமக்கு லாபம். அப்படிச் செய்வதால் நல்லவர் ஒருவரின் ஓவியம் நம் கண் முன் நிற்கும். இன்றைக்கு மிகத் தேவையான ஒழுக்க நெறிகள் எவை என்பது உலகத்துக்குத் தெரிய வாய்ப் புண்டாகும். அதை விட்டு அவரைத் தெய்வமாக்கினால் தெய்வங்களுக்கு ஒரு நன்மையும் இல்லை என்ப தன்றி நமக்குக் கிடைக்க வேண்டிய லட்சியம் ஒன்றை நாமே தொலைத்தது போலும் ஆகும். பக்தி பாவனைக்கு ஒத்தவை நிறையத்தான் உண்டே நம்மிடம். நமக்கு இப்போது வேண்டியது ஒரு புதுத் தெய்வம் அன்று வாழ்க்கைத் தூய்மையின் ஒரு புனித ஓவியமே உடனடியான தேவை. நீதிக்கு நாம் தந்து வந்துள்ள பழைய எடுத்துக் காட்டுகள் தற்காலத்துக்கு ஒவ்வா. புது எடுத்துக் காட்டு கள் பாபுவின் உருவத்தில் நமக்குக் கிடைத்துள்ளன.

அவரைத் தெய்வமாக்குவதால் நமக்குத் தீமையே யன்றி வருங்காலத்தில் நன்மை ஒன்றும் விளைவதாயில்லை. எத்தனையோ சமயச் சம்பிரதாயப் பிரிவுகளில் மேலும் ஒன்று என்று சேருவதன்றி நமக்கு என்ன நன்மை? ஆதலால் உத்தமமான வழி காந்தியைக் கொண்டுபோய் கடவுளரோடு இருத்தாமலிருப்பதே அவரைத் தெய்வமாக் காமல் ஓர் இலட்சிய மனிதராக இருக்க விடுவதே சிறந்தது.

காந்தியைப் போன்ற ஒரு பெருந்தகையாளர் நமக்காக வந்து தோன்றினர் என்பது தான் எத்தனை ஆனந்தம் தரும் செய்தி. அவர் இவ்வுலகம் தவிர்த்த வேறுவுலகத்தைச் சேர்ந்த திவ்ய புருஷராகாமற்போனதே கடவுள் அருளால் தான் என்று கொள்ளல் வேண்டும். சுகதேவர் பிறப் பிலேயே ஞானி. கபில மகாமுனி பிறந்த கணமே தாய்க்கு உபதேசம் செய்வாராயினர். சங்கராச் சாரியார் எட்டாவது வயதில் வேதம் கற்பதை முடித்துக் கொண்டு பாஷ்யம் எழுதத் தலைப்பட்டார். அவர்கள் எல்லோரும் இந்த இப்பிறவியில் எதையோ முயன்று அல்லது நாம் காணும் வகையில் தம்முடையதான ஒரு சாதனையை மேற்கொண்டு அல்லது சத்திய நிஷ்டையால் எதையோ சென்றடைந்தனர் என்பதில்லை. இவ்வகையில் காந்தியின் வாழ்க்கை நமக்குச் சாதகமாக அமைந்துள்ளது; அது பிறர் பின்பற்றத்தக்கதாக உள்ளது.

ஒருவர் என்னை ஒரு தரம் கேட்டார் ''அவரைக் 'காந்தி' என்பதா அல்லது 'காந்திஜி' என்பது தான் சரியா?'' என்று. ''நீங்கள் அவரை ஒரு தனி மனிதர்'' என்றோ வழிபாட்டுக் குரியபெருந்தகையாளர் என்றோ கருதுவீர்களாயின் 'காந்திஜி' என்று தான் சொல்லவேண்டும். அப்படியன்றி, காந்தி ஒரு சிந்தனைப் போக்கு என்று கொள்வீர்களானால் 'காந்தி' என்று தான் சொல்ல வேண்டும் அதற்குப் பிறகு 'காந்தி இருந்தான் என்று சொல்ல வேண்டியிருக்கும். என்னைப்

பொறுத்த மட்டில் 'காந்தி' ஒரு சிந்தனைப் போக்கு மட்டும் தான்.

அவர் கணம் தோறும் மலர்ந்து வந்தார்

காந்தியைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்றுண்டு. நாம் அதைப் புரிந்து கொள்ளவில்லை எனின் அவரை நாம் இனங்கண்டு கொள்ளமுடியாது. அவர் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே இருந்தார்—கணம் தோறும் மலர்ந்து வந்தார். பழைய நூல் ஒன்றின் புதுப் பிரதிகள் எடுப்பது போல் அன்று. அவர் இப்போது இருந் தால் எத்திசையில் திரும்புவார், எப்படி மாறுவார் என்பதை யாராலும் கூற இயலாது. அவர் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமாகக் கூறியிருக்கிறார் என்பதை வைத்து குறிப்பிட்ட ஒரு காரியத்துக்கு ஆசி வழங்குவார் என்று நாம் நினைத்தால் அது நம் சுயநலம் கருதிய பேச்சாகி விடும். இப்படி ஊகிக்கவும் அனுமானிக்கவும் யாருக்கும் உரிமை இல்லை. ''லோகோத்தராணுங்சேதாம்ஸி கோஹி விஜ்ஞான மர்ஹதி'' (உலகம் கடந்த பெரியோரின் சித்தத்து ஆழம் யாரே கணத் தாம்)? ஆதலால் காந்தி இப்போது இருந் தால் என்ன செய்வார், என்ன செய்யமாட்டார் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம்.

இதை உணரவில்லையெனின் காந்திக்கு நாம் பெரும் அநியாயம் இழைத்தவர்கள் ஆவோம். அவரிடமிருந்து நாம் ஒரு சிந்தனைப் போக்கைப் பெற்றுள்ளோம், அதைப் புரிந்து கொண்டு சுயமாகச் சிந்திக்க வேண்டும். அவருடைய சிந்தனைப் போக்கை அவர் சொன்ன சொற்களோடு அல்லது அவர் ஆற்றிய செயல்களோடு இணைத்துப் பார்த்தீர்களானல் அவருக்கு அநியாயம் இழைத்தவர்கள் ஆவீர்கள். இராம தாசர் சொன்னது போல ''படித்த முட்டாள்கள்'' அதாவது வெறும் சொல்லைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பவர்க ளாகிச் சமைவது தான் மிஞ்சும்.

ஸ்தூலத்தை விடுமின்; சூட்சுமத்தைப் பற்றுமின்

மகான்களுடைய சிந்தனைப் போக்கைக் கிரகித்துக் கொள்ளவேண்டுமே அன்றி அவர்களுடைய புறவாழ்க்கையைப் பிடித்து வைத்துக் கொள்வது கூடாது என்பது நூலோர் முடிபுமாகும். அவ்வசனமாவது நாம் சிந்திக்க வேண்டியது பெருந்தகையாளர்களின் சொற்களேயன்றி அவர்களுடைய வாழ்க்கையின் ஸ்தூல வரலாறன்று. இவ்வளவு மட்டுமல்ல. சொற்களுக்குப் பொருள் கொள்ளும் போது கூட யாவற்றினும் உயர்ந்த பொருளையே கொள்ளல் வேண்டும். ஆதலால் அவர்கள் சொல்லின் சூட்சுமத்துள் சூட்சுமமான, சுத்தத்திலும் சுத்தமானதையே நாம் கொள்ள வேண்டும். இன்றைய விஞ்ஞான உலகத்து மார்க்ஸ் புராண காலத்து மனுவைப் போல் இருக்கமாட்டார். நான் பணிவோடு சொல்ல விரும்புவது காந்தியும் அவரைப்போல (மனுவைப்போல) காட்சி தரமாட்டார். நடந்து கொள்ள மாட்டார் என்பதே.

அதற்குமேல் எழும் ஒரு கேள்வி, "தாங்கள் காந்தியை விடவும் முன்னேறி விட்டீர்களா?" என்று காந்தியின் காலத்தினின்றும் முன்நோக்கி நகர்ந்து விட்ட காலத்தில் தான் நாம் இருக்கிறோம் என்று சொல்லும் துணிவு வேண்டும். சொல்வதில் பணிவும் வேண்டும்தான். இதில் காந்தியை விடப்பெரியவர்கள் சின்னவர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. அதற்கான சந்தர்ப்பமும் வரவில்லை. அது அவசியமும் அல்ல. வளர்ந்திருக்கிறோமா குறைந்திருக்கிறோமா என்பதைக் கடவுளே அறிவார். அது நாம் சொல்லி ஆகிற காரியம் அன்று. அவரைவிடப் பெரியவர்கள் ஆகிற தேவையும் நமக்கில்லை. ஆனால் நம் காலம் அவர் காலத்தைவிட முன்னேறியிருக்கிறது. இப்போது நம் கண்ணுக்குப் புலப்படும் தொடுவானம் ஒன்றன்று-பல புதியனவும் தோன்றுகின்றன. இதை நாம் புரிந்து கொள்ள

வேண்டும். இல்லை என்றால் உங்களைப் போலவும் என்னை போலவும் காந்திச் சிந்தனையைப் போற்றுகிறவர்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்தவர்கள் ஆ வோ ம். அந்தப்பழியைப் பிறகு துடைக்க இயலாது.

முழுக்க முழுக்க 'ஏமாற்றுக்காரர்'

மிகுந்த உணர்வு நுட்பம் உடையவர் ஆதலால் சூழ் நிலைக்கொப்ப காந்தி உடனுக்குடன் மாறிவந்தார். அவரைப் பற்றி ஒருகால் நான் ஒரு சொல் கூறினேன்- பலருக்கு மன உளைச்சலைத் தந்த ஒரு சொல் 'ஏமாற்றுக்காரர்' என்று. ஏசுநாதரின் ஒரு கவி உண்டு. அதில் அவர் 'ஸந்த்'களை (பக்தர் களைப் (பித்தலாட்டக்காரர்கள் (தகல்பாஜிகள்) என்று பேசி இருக்கிறார். அவர் சொல்லுகிறார்: 'ஸந்த்களே! நீங்கள் எவ்வளவு பெரிய பித்தலாட்டக்காரர்கள்! இன்று கடவுளை ஒரு விதமாக வருணிக்கிறீர்கள்; நாளையோ வேறு விதமாக காந்தியும் இப்படி முழுக்க முழுக்க ஓர் ஏமாற்றுக்காரர் என்று பேச வே ண் டி யி ரு க் கு ம். அவர் என்றும் ஒரே சொல்லைப்பற்றி நின்றவரல்லர். யாரும் நிச்சயமாக நம்ப முடியாது, இன்று அவர் மேற்கொண்டிருக்கும் திருப்பம் நாளை எப்படி மாறும் என்று! அதற்கு காரணம் அவர் மலர்ச்சி அடைந்து வரும் பண்பினராக இருந்தமையே அவர் எப்போதும் சத்தியத்தைச் சார்ந்து நின்றவர், சோதித்து வந்தவர். தன் சொற்களை எப்படிப் பற்றி நிற்பது என்பதில் அவர் சிக்கிக் கொள்பவர் அல்லர். என் கருத்து, அவர் மாறுதலடைந்து வந்தவர், அவ்வியல்புடையவர் என்பதாகும். ஆதலால் நாம் இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு சுதந்திர மாகவே சிந்திக்க வேண்டும்.

கடவுளின் அலகிலா விளையாட்டைப் பாருங்களேன்! எந்தக் கால கட்டத்தில் காந்தி நமக்கு மிகவும் தேவையாக இருந்தாரோ—இன்றியமையாதவராக இருந்தாரோ அந்த

வேளை பார்த்து நம்மிடமிருந்து அவரைப் பறித்துக் கொண்டு விட்டார். இதன் பொருள் என்ன? கொஞ்சம் யாரையும் சாராமல் சிந்தியப்பா சிந்தி! என்பதே

தேவதூதர் (பைகம்பர்) போனார்; அல்லாமட்டும் நிரந்தரமாக இருக்கிறார்

மகமத் பைகம்பரின் மரணம் என் நினைவுக்கு வருகிறது. பைகம்பர் இறந்து போனார். ஆனால் மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை. பைகம்பர் எப்படி இறக்க முடியும்? யார் நம்புவார்கள்? பைகம்பர் இறந்த பிறகு செய்ய வேண்டிய காரியங்கள் மக்களுக்கு எத்தனையோ உண்டு. ஆனால் அவற்றைச் செய்ய மக்கள் தயாராக இல்லை. இறந்ததையே நம்புவதாக இல்லை என்பது விசித்திரமான விஷயம் தானே. இந்நிலையில் என்ன செய்ய? அபுபக்கர் மசூதியின் மீது ஏறி நின்றார். அவர்பால் மக்களுக்கு நிரம்ப பக்தி உண்டு. அவர் எப்போதும் உண்மையே பேசுவார். மசூதியின் மீது நின்றவாறு "பைகம்பர் போயாயிற்று; அல்லா மட்டும் நிரந்தரமாக இருக்கிறார்" என்று கூவினார். அபுபக்கரே இவ்வாறு கூறிவிட்டார். என்ற பிறகு மக்கள் எல்லோரும் பைகம்பர் மறைந்தார் என்பதை ஒரு வழியாக நம்பினர்.

சாதாரணமாக் மகான்களைப் பின்பற்றுகிறவர்கள் விஷயம் எல்லாம் இப்படித்தான் இருக்கிறது. மகான்களின் ஸ்தூல வரலாற்றை அவர்கள் பற்றிக் கொண்டிருப்பதால் சுதந்திரமாக, தற்கால நிலைக்குத் தக்கவாறு அவர்களால் சிந்திக்க முடிவதில்லை. எப்படியும் ஒரு தனி மனிதனைச் சாராது சிந்தித்துத்தான் ஆகவேண்டும்! உருவத்தைவிட பெயர் சிறந்தது. உருவம் சிறிது நாளைக்கு மட்டிலுமே. ஆனால் பெயர் என்றென்றும் இருப்பது. உருவமாவது மனிதன்—"ஆள்"—; பெயராவது விசாரம் சிந்தனைப்பாங்கு.

ஒரு மனிதர் பெரியவர் என்பதுமே அவர்தம் சிந்தனை உயரியது என்ற காரணத்தால் தான். இது நமக்கு அனுபவ பூர்வமாகத் தெரிந்த விஷயம். ஒரு மனிதர் உயிரோடிருப்பது அவர் சிந்தனைக்குச் சாதகமாக இருப்பது போலவே பாதக மாகவும் கூடும். மனிதரினின்று விலக விலக அவருடைய சிந்தனை தெளிவாகத் தெரிகிறது.

ஆதலாலேயே துளசிதாசர் சொன்னார், 'இராமனை விட வும் அவன் பெயர் பெரிது' என்று. இதன் பொருள் இராமச் சந்திரன் என்ற மனிதர் (வியக்தி) செய்ய முடிந்ததைவிட அவன் பெயர் செய்தல் இயலும் என்பதாகும். வீழ்ச்சியுற்ற எத்தனைபேரை இராமன் உயர்த்தினன் என்பதை நாம் எண் ணிக் கணக்கிடலாம். ஆனால் அவன் பெயர் எத்தனை பேரை உத்தாரணம் செய்திருக்கிறது. இனிமேலும் செய்ய இருக் கிறது என்பதை கணக்கிட முடியாது. இராமன் அயோத்தி நகரை மட்டும்தான் சொர்க்கமாக மாற்றினன். ஆனால் அவன் பெயரோ ஒவ்வொரு கிராமத்தையும் அயோத்தி யாக்கிற்று. ஊர் தோறும் இராமகதை நடந்தது ''காவ் (ங்) அஸ ஹோயி ஆனந்தா'' (ஊர்தோறும், ஊர்தோறும் இப்படி ஆனந்தம் ஆயிற்று). இராம இராஜ்யத்தின் சித்திரத்தை துளசிதாசர் வரைந்து காட்டியுள்ளார். ''வைர் நகர் காஹூபென் கோயி; ராமப்பிரதாப்விஷமதாக்கோயி'' ''ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டாதீர்; ராமன் புகழின் ஆற்றலால் விஷமத்தனம் சக்கையாய்ப் போகும்) என்றார். உடல் தாங்கிய இராமன் அப்படி எவ்வளவுதான் செய்திருப்பான்? அவன் பெயரோ எங்கும் பரந்துள்ளது.

சொல்லுக்கு அழிவில்லை.

பெருந்தகையாளர்களின் ஆற்றல் அவர்கள் வாழ்நாளில் இருந்ததைவிட அவர்கள் மறைந்த பிறகு மிகுதி. அவர்களு டைய பருவுடல் அழிவதோடு அவர்களுடைய குற்றங் குறைகளும் அழிகின்றன. பிறகு அவர்கள் முழுதாக, தூயோ

ராக, திவ்ய அம்சம் எய்தி தெளிவாகக் காட்சி தருகின்றனர். ஒருவர் வெளியிட்ட சிந்தனை அவர் இறப்பதால் வீண் போவதில்லை; நேர்மாறாக அச்சிந்தனை ஒளிபெற்றுத் தெளி வாகத் தெரிகிறது.

உடலை விட்டபிறகு, பெருந்தகையாளர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்தைவிட மிகுதியாகச் செயல்படுகின்றனர். அத்தகையோர் உடல் விடும்போது அவர்களுடைய சிந்தனை காற்று மண்டலத்தில் பரவுகிறது; எல்லோருக்கும் ஊக்கம் தருகிறது. இத்தகு பெருந்தகையாளர்களின் குரலைப்பிடிக்க வல்ல வானொலிப் பெட்டி வைத்திருப்பவர்களால் அந்தக் குரலை காற்று மண்டலத்திலிருந்து கிரகித்து கேட்க முடியும். காற்றில் ஒலி கலந்துள்ளது. ''சப்தோ நிதய:'' விஞ்ஞான நூல்வல்லார் கூறுகின்றனர், ஒலி அழிவில்லாதது; நித்திய மானது; அதன் கிளர்ச்சி காற்றுமண்டலத்தில் பரவி இருக் கிறது என்று. நம்மிடம் ரேடியோ இருந்தால் அதை இயல் பாகவே கேட்பது சாத்தியம். சிந்தனை அலைகளைப் பிடிக்கும் சாதனத்தை உடைய இதயத்தாருக்கு அவ்வலைகளைப் பற்ற முடியும். ஊக்கம் என்பது மனிதர்களுக்கு இவ்வாறு தான் உண்டாகிறது. பாபு என்னுடையவும் உங்கள் எல்லோர் உடையவும் உடலுக்குள் புக எளிதாகும் பொருட்டே மரணம் எய்தினர். அவர் பெயர், அவர் சொல், அவர் விசாரம், சிந்தனை ஆகிய யாவும் நம் எல்லோருக்கும் இடைவிடாது ஊக்கம் தந்து கொண்டே இருக்கின்றன.

4 சரியான ஞாபகச் சின்னம்

பாபு இறந்த உடனேயே அவசர அவசரமாக நினைவுச் சின்னம் பற்றிய பேச்சு துவங்கிற்று. மக்கள் பலவகையான ஞாபகச் சின்னங்கள் நிறுவுவது பற்றி நினைப்பராயினர். காந்தியின் நினைவுச் சின்னமாக அசோகஸ்தம்பம் போன்ற ஒன்றை எழுப்பினுல் என்ன என்று ஒருவர் வினவினுர் என்னை. ''சாதாரண மனிதனிடம் போய் இந்த அசோகஸ்தம்பத்தைப் பற்றிக் கேட்டு அவனுக்கு எவ்வளவு தெரிந்திருக்கிறது என்று பாருங்கள். சாதாரண மனிதன் அசோகனின் பெயரைக்கூடக் கேள்விப்பட்டிருக்கமாட்டான். வரலாற்றில் எத்துணையோ அரசர்கள் வந்துபோனுர்கள். அவர்களுள் அசோகனும் ஒருவன். அவர் மிகப் பெரிய அரசர், தயை மிகுந்தவர் என்பது உண்மை தான். ஆனுல் எங்கே அவரைப் பற்றி மக்களுக்குத் தெரிந்திருக்கிறது? மக்கள், கபீர், நானக், துளசிதாஸ் இத்தகையோரை அறிந்திருக்கிறுர்கள். காந்திக்கும் மக்கள் மனதில் இப்படி ஓர் இடம் கிடைத்து இருக்கிறது. அப்படி இருக்கும் போது, அவர் நினைவைக் காக்க ஒரு ஸ்தம்பம் தேவையா என்ன? அவருடைய சிந்தனையை மக்களிடையே பரப்புவதே நாம் செய்ய வேண்டியது'' என்றேன்.

காந்தியின் வாழ்க்கை பல துறைகளில் பரந்திருந்தது. வாழ்க்கையின் பல துறைகளிலும் அவர் ஈடுபாடு கொண்டு இருந்தார்; பற்றுக் கொண்டிருந்தார். அதனுல் தான் மக்களுக்குப் பல வகையான நினைவுச்சின்னங்கள் எழுப்பும் எண்ணமும் அரசினருக்குச் சிறந்ததொரு ஞபாகச்சின்னம் எழுப்பும் நோக்கமும் உண்டாயிற்று. ஆனுல் இந்த ஸ்தூல நினைவுச்சின்னங்கள் எல்லாம் அவருடைய நினைவை உண்மையாக நிலைபெறச் செய்ய இயலாதவை. நேர்மாருக இத்

தகைய நினைவுச்சின்னங்கள் முக்கியமான செய்திகளைப் பார்வையிலிருந்தும் மறைத்து விடக் கூடும் என்ற அச்சமும் இருக்கிறது.

உணர்ச்சி வேகம்

சாதாரணமாக நம்மை வெகுவாகப் பாதிக்கிற சொந்த விஷயங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் போது நம் உணர்ச்சிகள் பொங்கியெழுவதுண்டு. பிறகு அந்த உணர்ச்சியைத் தணிக்க ஏதேனும் ஒன்றைச் செய்து விடுகிறோம். வந்த வேகம் மெல்ல மெல்லச் செரிக்கப்பட்டு விடுகிறது. துன்பத்தின் உணர்ச்சிப்பெருக்கு வரும்போது சான்றோர் அந்த உணர்வின் வேகத்தை இதயத்துக்குள்ளேயே அடக்கி விடுகின்றனர். அதனின்றும் வலிமை பெறுகின்றனர். அப்படியொரு சான்றாண்மை இல்லாதவிடத்து அவ்வேகம், அழுது புலம்புதல் அல்லது கண்ணீர் சிந்துதல் என்னும் உருவில் வெளியாகிறது சித்தம் இவ்வாறு அமைதி பெறுகிறது.

இவ்வாறுதான் ஒருவர்பால் வைத்துள்ள மதிப்பு காரணமாகவும் சிலர் சிறிது நேரம் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு வசமாகி பிறகு அதை வெளிக்காட்டி அமைதியடைகின்றனர். இது போன்ற சந்தர்ப்பங்களில் இரவெல்லாம் பஜனை செய்வோரை நான் பார்த்திருக்கிறேன். பஜனையும் ஒருவகையான கொந்தளிப்பே. அதுவும் வாழ்க்கையில் ஏதேனும் உண்மையான மாறுதல் விளைவிப்பதாகத் தெரியவில்லை. அதில் சத்ய பாவனையின் அம்சம் இல்லையென்றால் அந்த உணர்ச்சி வேகமுமே வெறும் போலியாக இருக்கும். பஜனை இந்தப் போலி உணர்ச்சி வேகத்தை வெளிக்கொணரும் ஒரு சாதனம் ஆக அமையும். இப்படித் தான் நினைவுச் சின்னத்தைப் பொறுத்த விஷயமும்.

நாம் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று அக்காலத்தில் பலருக்குத் தோன்றிற்று. நான் கேட்பது என்ன

பிராயச்சித்தம்? இம்சையில் கூட ஏதோ லாபம் உண்டு என்று மனத்தின் ஏதோ ஒரு மூலையில் கலக்கம் அல்லது ஐயப்பாடு இருப்பின் அதை மனத்தினின்றும் களைந்தெறிவதே உண்மையான சிறந்த பிராயச்சித்தம். இதெல்லாம் சொல்லித் தெரியவைக்கின்ற காரியமன்று. வெறும் பேச்சினுல் விளக்கு வதும் சாத்தியமில்லை. ஒரு சிறு அளவாவது அகிம்சையை வாழ்க்கையில் கொண்டு வர முடியவில்லையென்ருல் ஏதோ ஒரு ஸ்தூலமான நினைவுச்சின்னம் நிறுவுவது நகைப்புக்கிட மாகிவிடும். ஆதலால் நாம் ஆத்ம விசாரம் செய்து ஆத்மாவைக் கடையலாம். அடிப்படையிலிருந்தே வாழ்க் கையில் மாறுதல் உண்டாக வேண்டும்.

ஒவ்வோர் ஊரிலும் காந்தி இல்லம் நிறுவலாம்:

காந்தி நிதியினர் சில ஊர்களில் காந்தி இல்லம் நிறுவி யுள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் காந்தி இல்லம் உண்டாக வேண்டும் என்பது என் கருத்து. இந்தக் காந்தி இல்லம் கல்லாலும் மண்ணுலும் கட்டப்படுவதன்று. இவை சத்தியபிரேம-கருணையால் கட்டப்படும். செங்கல்,சுண்ணும்பு, கருங்கல் ஆகியவை கொண்டு சாதாரண இல்லங்களைத்தான் கட்ட முடியும். காந்தி இல்லங்களை அல்ல. ஆனுல் மக்கள் செங்கல்லாலும் சுண்ணும்பாலும் வீடுகட்டி அதன் பேரில் எழுதி வைக்கின்றனர்—காந்தி இல்லம் என்று. பெயரின் பெருமை பெரிதே தான். அதைப் பற்றி வாதிடவில்லை. அவற்ருல் மக்களுக்கு ஊக்கமும், கிளர்ச்சியும் கிடைக்கிறது. அவை நல்லனவும் கூட. ஆனுல் உண்மையான ‘காந்தி இல்லம்’ இப்படிக்கட்டுவதன்று. அவற்றைக் கட்டவேண்டியது சத்ய—பிரேம கருணையினுல். அவையே பயன் தரும்.

இதையே பாருங்களேன். இப்புது தலைமுறைக்குக் காந்தியைப் பற்றிக் கண்கூடாக ஒன்றும் தெரியாது. காந்தியைப் பார்த்தவர்கள், அவரோடு பணிசெய்தவர்கள்

எல்லோரும் வருகிற 15—20 ஆண்டுகளுக்குள் இவ்வுலகை விட்டுப் போய்விடுவர். ஆற்றில் எப்படிப் புதுப்புனல் வருவதும் பழைய நீர் வடிந்துவிடுவதுமாக இருக்கிறதோ அதேபோலத்தான் பல மனிதர்கள் வருகின்றனர். பலர் போகின்றனர். ஆதலால் இந்தத் தலைமுறைக்குக் காந்தியை அவர் சிந்தனை மூலம் தானே அறிமுகம் செய்தல் வேண்டும்? இன்றைய யுகத்துக்குத் தக்கவாறு அந்தச் சிந்தனையை, விசாரத்தை நடத்திக் காட்ட வேண்டியதுண்டு.

புது யுகத்துக்குத்தக்க புது"மிஷன்"

காந்தி ஒரு புரட்சிச் சிந்தனையாளர். வெகுதூரம் பார்க்கும் பார்வை அது. எதிர்காலத்தை ஊடுருவி வெகு தூரம் பார்த்து அதற்கு வேண்டியதையும் சிந்தித்து வைத்தார். ஆதலால் புதுயுகத்துக்கு ஒத்ததாக ஒரு புது 'மிஷனை' — ஒரு புது சுவிசேஷப் பிரசாரத்தைச் சிந்தித்துச் செப்பம் செய்து தயாராக வைத்திருந்தார். சுயராஜ்யம் கைக்கு வந்த பிறகு சுயராஜ்யம் என்ற சொல் அவ்வளவாக அவர்கள் மனத்தில் கிளர்ச்சியை உண்டாக்காது, அவர்களுக்கு உற்சாகம் அளிக்காது என்று காந்திஜி உணர்ந்து இருந்தார். சுயராஜ்ய லட்சியம் கண்முன் இருந்தபோது அப்போதிருந்த நிலைகாரணமாக மக்களுடைய சங்கல்பசக்தி அதிகமாக இருந்தது. சுயராஜ்ய லட்சியத்தை அடைவதையே புருஷார்த்தம் எனக் கொண்டு அதற்குத் தயாராய் இருந்தனர். அதுபோலவே சுயராஜ்யம் கிடைத்த பிறகு மக்கள் மத்தியில் ஏதாவது ஒரு பரந்த இலட்சியம் இருந்தால் தான் அவர்களுடைய ஆற்றல் வளரும். அதில்லையென்றால் மக்கள் சோம்பேறிகளாகி விடுவர் என்பதோடு அவர்களுடைய ஆற்றலும் குன்றிவிடும்.

சுயராஜ்யம் வந்த பிறகு மக்கள் முன்னிலையில் வைக்க ஒரு புதுச்சொல் வேண்டும், ஒரு புதுச் சிந்தனைப் போக்கு வேண்டும், புதிய ஒரு குறிக்கோள் வேண்டும் என்றெல்லாம்

காந்திக்கு தெரிந்திருந்தது. ஆதலால் தான் பழைய குறிக்கோள் முற்றுப்பெறும் முன்னரே புதிய குறிக்கோள் ஒன்றை அவர் மக்கள் முன் வைத்தார். பழைய சொல் நிறைவெய்து முன்னரே புதுச்சொல் ஒன்றைத் தந்தாக வேண்டும் என்று கருதிப் புதுச்சொல்லை உருவாக்கினார்—''சர்வோதய''. சுயராஜ்யக் குறிக்கோள் கைக்கெட்டிய பிறகு தம் புதியலட்சியம் சர்வோதயம் என்று கூறினார். சர்வோதயம் என்றால் எல்லோருடையவும் உதயம், என் ஒருவனுடைய உதயம் மட்டும் அன்று—எல்லோருடையதும். சர்வோதயம் உண்டாகாத வரை நலிவு இருந்து கொண்டே இருக்கும். ஆட்சியாளரின் பிடி நிரந்தரமாக இருக்கும். ஆதலால் சுயராஜ்யம் கூட அதன் உண்மையான உருவில் வரவேண்டுமென்றால் சர்வோதயம் உடனடித் தேவையாகும். இந்த யுகத்துக்கு ஒத்த ஒரு புது 'சுவிசேஷத்தை' - ''சர்வோதய மிஷன்'' -காந்தி நம் முன் வைத்துச் சென்றுள்ளார். இந்த மிஷனைப் பூர்த்தி செய்வதன் மூலமாகத்தான் புதுத் தலைமுறையினருக்குக் காந்தியின் உண்மைச் சொரூபத்தை நாம் காட்ட முடியும்.

இந்தச் சர்வோதய லட்சியம் நாட்டில் மெல்ல மெல்ல விழிப்புற்று வருகிறது. இத்தகைய குறிக்கோள்கள் ஒரே மூச்சில் விழித்தெழுவதில்லை. குறிப்பாகத் தியாகம் செய்கிற லட்சியத்தை விழித்தெழச் செய்வதற்குச் சற்று காலம் வேண்டும். என்றென்றும் நின்று வாழும் பெருமையுடைய சிந்தனைப்போக்குகள் மெல்ல மெல்லத்தான் முளைவிடும். நேர் மாறாக, நிரந்தரமாக வாழும் இயல்பில்லாதவை புல்லைப்போல முளைத்து அதைப்போலவே விரைவில் நலிந்தும் போகும். பாபு நட்ட சிந்தனை வித்து இன்று முளைத்து வந்து கொண்டு இருக்கிறது. இன்றைய தேவை, செயல் திறனோடு பணியாற்றி அதற்கு ஊட்டம் கொடுப்பதேயாகும். இந்தச் சர்வோதய லட்சியம் நாடு முழுவதும் பரவுமேயானால் மக்களுக்கு அதன் அழகும் பெருமையும் புரியும். அப்போது தான் நாமும் பாபுவுக்குச் சரியான நினைவுச்சின்னம் எழுப்பியவர்கள் ஆவோம்.

5 இந்த யுகத்தின் பிரம்மம்

சர்வோதயச் சிந்தனையைச் செயலாக்க நாம் முயல மட்டும் தான் முடியும், அதை முற்றும் செயலாக்குதல் இயலாது என்ற அளவுக்கு அந்தச்சிந்தனை பரந்து கிடக்கிறது. சர்வோதயம் முழுவதும் அமலாவதற்கு கடவுள் தரிசனமே தேவைப்படுகிறது.

'நான் வாழ்வதும், சாதனை, சத்தியாக்கிரகம் முதலிய செயல்கள் செய்வதும் எல்லாம் கடவுளைத் தேடி அடைகிற நோக்கத்தோடு தான்' என்று தம்மைப் பற்றிப் பாபு சொல்லுவார். சாதாரணமாகக் கடவுளைக் காண வேண்டும் என்போர் ஏகாந்தத்தைத் தேடிச் செல்வர். பாபு ஏகாந்தத்தைத் தேடிப்போகவில்லை. மக்களிடையில் இருந்தே அவர் பணிசெய்தார் தியானம், பிரார்த்தனை இவற்றிற்காகப் பதினைந்து இருபது நிமிடங்கள் எடுத்துக் கொள்வார். 'தியானம் நம் வேலையில் ஒவ்வொரு கணமும் நிகழ்தல் வேண்டும். ஏகாந்தமும் மக்கள் மத்தியில் பணி செய்யச் செய்ய ஒவ்வொரு கணமும் கிடைப்பதாக வேண்டும்' என்றும் சொல்வார்.

ஏகாந்தத்தைத் தேடிப்போக வேண்டின் நம் மனம் பயப்படுகிறது, பதறுகிறது. இது என்ன ஏகாந்தம்? நாம் மனத்தினின்றும் விலகி இருக்கும் நிலைதான் உண்மையான ஏகாந்தம். 'மனதினின்றும் தனியாக விலகி மக்கள் சேவையில் ஈடுபட்டு அதிலேயே ஏகாந்தத்தை எப்போதும் அனுபவிப்பதும், இறைவனை அடைவதும். அவனைக் காண்பதுமே என் வாழ்க்கை'' என்று பேசி வந்தார்.

வாழ்க்கையில் வேண்டுமளவு ஈடுபடுங்கள் ஆனால் மனத்தை என்பால் வையுங்கள்

ஈசுவர தரிசனம் என்பதுதான் என்ன? இறைவனை எப்படி அடைதல் இயலும்? சத்யம், அன்பு, கருணை முதலிய மங்கள குணங்களின் முழுமையே கடவுள், ஈசன். கடவுளின் ஒவ்வோர் அம்சம் ஒவ்வொரு வடிவில், ஒவ்வொரு மனிதனிடமும் வெளிப்படுகிறது. எல்லோருடைய இயல்பைப்பற்றிய முழுக் காட்சியும் கிடைத்தாக வேண்டும். எல்லோரையும் கடவுளின் ஒவ்வோரம்சமாகப் பார்க்கப் பார்க்க,குணங் களைக் கிரகிக்க கிரகிக்க நம் இதயங்கள் குணங்களின் கருவூலமாகிவிடும். அப்போது கடவுளின் முழுஉருவமும் நமக்குக் காணக் கிடைக்கும்.

நமது தியானம், சேவை, தியாகம், சத்தியாக்கிரகம் முதலிய செயல் முறைகள் எல்லாம் கடவுளின் கரந்துறை யும் ஆற்றலைக் (அவ்வியக்த சக்தியைக்) காண்பதற்குரிய சாதனங்களே. சத்தியாக்கிரகத்தில் நாம் செய்வது என்ன? சுகதுக்கங்களைத் தாங்குகிறோம். எதிரியிடம் உள்ள நல்ல அம்சத்தை வெளிக் கொணர்கிறோம். சத்தியாக்கிரகத்தில் எதிரியிடமுள்ள நல்ல அம்சம் இருந்தேதீரும் என்ற நம்பிக்கை உண்டு. இதுவேதான் குணதரிசனம். இந்தக் குணதரிசனத் தின் மீதுதான் சத்தியாக்கிரகமே நிற்கிறது. இந்தக் குண தரிசனத்தின் நம்பிக்கையின் மீதாகத்தான் தானத்தின் — ஈகையின் செயல்முறைகள் வகுக்கப்படுகின்றன ; அதாவது சர்வோதயத்தின் செயல்முறைகள் குணதரிசனத்தை ஆதார மாகக்கொண்டுள்ளவை. இந்தக் குணதரிசனம் இருக்குமானால் கடவுள் காட்சியும் தானே உண்டாகும், முழுக் காட்சியும் ஒரேயடியாகக்கிடைப்பதில்லை. இன்றுஒருஅம்சத்தின்தரிசனம் கிடைக்கும். நாளை மற்றொன்று, உடல் உள்ளளவும் இம் முயற்சி நடந்துகொண்டேயிருக்கும். ஆதலால் தான் பாபு

என்சோதனை—இறைவனைத் தேடும் பணி—நடந்துகொண்டே இருக்கிறது. இந்தத் தேடலுக்காகத்தான் வாழ்க்கையே இருக்கிறது'' என்று கூறிவந்தார். இப்படிப் பாபுவின் எல்லாப்பணிகளுக்கும் பின்னணியாக ஆன்மீகம் அமைந்திருக்கிறது.

அவருடைய செல்வாக்கு முழுதும் பாரதத்தில் பரவிற்று. அச்செல்வாக்கோ ஒழுக்கம் சார்ந்ததாகும். வேறொன்றையும் சார்ந்ததன்று. ஒவ்வொரு நாட்டிற்கும் குறிப்பிட்ட ஓர் இயல்பு மீதூர்ந்து நிற்கும். பெருந்தகையாளர்களின் ஆற்றலுக்கும், செல்வாக்கிற்கும் ஆட்படுதல், அவற்றை மதித்தல் பாரத நாட்டின் சிறப்பியல்பு. பெரிய பெரிய ராஜாக்கள், மகாராஜாக்கள், சேனாதிபதிகள், பெரு வணிகர்கள், செல்வந்தர்கள் ஆகியோரை எல்லாம் ஒவ்வொரு காலம் அச்சம் வந்து பற்றிக் கொள்கிறது. மக்கள் எப்போதும் அவர்களிடம் மரியாதை வைப்பதில்லை. அவர்களுடைய பெயர்களைப் போலும் நினைவில் வைத்துக் கொள்வதில்லை. மக்கள் இதயத்தின் மீது அவர்களுக்குச் செல்வாக்கில்லை. பாரத நாட்டு மக்களுடைய இதயத்தின் மீது செல்வாக்குச் செலுத்த வல்லார் பெருந்தகையாளர் மட்டும் தாம். இந்நாட்டு மக்கள் சங்கரர், புத்தர், மகாவீரர், நானக், கபீர்ஆகியோரை நினைவில்வைத்துக்கொள்வர். அக்பர், அசோகர் ஆகியோரை மறந்து விடுவர். காந்தி வந்தார் அவர் பேச்சுக்கு மக்கள் செவிசாய்த்தனர். அதற்குக் காரணம் அவருடைய வரலாறு மகாபுருஷர்களின் வரலாற்றை ஒத்திருந்தது, அவருடைய செயல்களின் அடிப்படை ஆத்மீகம் பற்றியது என அவர்கள் தெரிந்து கொண்டமையே.

ஸ்தூல விஷயங்களின் சிக்கல்களுக்கிடையே 'அசலை' மறவாதீர்

காந்தியைப் புரிந்து கொள்வதற்கு இவ்வாக்கியத்தை எப்போதும் மனத்திலிருத்திக் கொள்வது மிகவும் தேவை.

இல்லையேல் ஸ்தூல விஷயங்களின் குழப்பத்திற்கிடையில் காந்தியின் அசல் உருவம் கண்ணை நிறைத்து நில்லாது. எந்தப்பணியை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் கூடவே அதில் இதயசுத்தி (ப்யூரிஃபிகேஷன் அப்ஹார்ட்) வேண்டும் என்று அழுத்திச் சொல்லுவார். வேலையைச் செய்யும்போது கண்முன் இதய சுத்தியும், சித்தசுத்தியும் உண்டாகிக் கொண்டிருக்க வேண்டும். அப்படி இதயசுத்தி இல்லையானால் கோஸம்ரக்ஷிணை யார் செய்வார்? உழவர்களின் இதயத்துள் எப்படிப்புக இயலும்? கதரை யார்கட்டுவார்கள்? ஆதலால் ஒவ்வொரு பணியோடும் இதயசுத்தியை இணைக்க வேண்டும். இதைக் காந்தி எப்போதும் அழுத்தி அழுத்திச் சொல்லுவார். நம் நாட்டில் ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தோர் அத்வைதச் சிந்தனையால் தூண்டப்பெற்று முழு அன்புமயமான தொண்டு செய்தலைத் துவங்கினர், அது போலவே காந்தி முதன் முதலாகப் பக்திமார்க்கத்தின் உருவில் சமூகசேவை செய்யத் தொடங்கினார். இராம கிருஷ்ணரின் சீடர்கள் அத்வைத மார்க்கத்தில் நின்று அன்பின் பெருக்கைச் சேவை வாயிலாகக் காட்டினர் காந்தி, கடவுள் பக்தியின் முழுச்சாரமும் சேவையில்தான் இருக்கிறது என்று போதித்தார்.

இப்படி பாபுவின் கருத்துப்படி கர்மமும் ஓர் உபாசனை வழிபாடு ஆகும். ஸ்தூல செயல்களிலேயே பெருமை இருப்பதாக அவர் கொள்ளவில்லை. அச்செயல்களுக்குப் பின் இருக்கும் உணர்வில் தான் (பாவனையில் தான்) பெருமை இருப்பதாகக் கருதினார். வெளித்தோற்றத்துக்கு அவர் ஸ்தூலமான காரியங்களில் கழுத்தளவு மூழ்கி இருப்பது போலத் தோன்றும். ஆனால் எல்லாப் பெருந்திட்டங்களி னின்றும் தாமரையிலைத் தண்ணீர் போல் அவர் ஒட்டாமல் நிற்பார். ஒருகால் ஒரு பணியைப் பற்றிப் பாபு என்னிடம் கேட்டார், அப்போது நான், 'இந்தப் பணியில் பெரிதாக விளைவு, மாற்றம் ஒன்றும் வரப்போவதாக எனக்குத் தோன்ற வில்லை என்றேன். அப்போது அவர் பெரியதாய்ச்

சிரித்துக் கொண்டே 'இதோ பார் விநோபா, இது நல்லதா? தீயதா? இவ்வளவு தான் பார்க்க வேண்டியுள்ளது. நம் எல்லாச் செயல்களின் மொத்த விளைவும் 'சுன்னம்' தான் என்று எனக்குத் தோன்றுகிறது' என்று கூறிக் காற்றில் தன்கையால் ஒருபூஜ்யத்தை வரைந்து காட்டினார். இந்த உலகில்கடவுளைத் தவிர வேறு ஒருவரும் சிரிப்பதில்லை. நாம் நம் மகிழ்ச்சிக் காகப் பணிசெய்கிறோம். அதன் விளைவுகளைப் பற்றியெல்லாம் பார்த்தால் நம் எல்லாச் செயலின் விளைவும் சுன்னம் தான். இந்தப் பூஜ்யத்தில் தான் பாபுவின் ஆன்மீக அடிப்படை அமைந்திருக்கிறது.

ஆதலால் தான் காந்தி நம்முன் வைத்திருக்கும் சொற்கள் சிலவே என்றாலும் முற்றும் ஆன்மீகச் சார்புடையவையாய் இருக்கின்றன. அவை பிற இயல்களில் உள்ளனவல்ல. ஐந்தாகப் பேசப்படும் அகிம்சை, சத்தியம், சர்வோதயம் முதலிய இயமங்களோடு தாமும் சில சொற்களைச் சேர்த்து ஏகாதச விரதங்களாக (பதினொரு விரதங்களை) நம் முன் வைத்தார். இவை யாவும் புதியன அல்ல. பழையனவே. சத்தியம், அகிம்சை முதலியவை வெற்றுச் சொற்கள், போலிச் சொற்கள் ஆகாமலிருந்தால் அவை எல்லாச் சமயங்களின் சாரமேயாகும். மனித வாழ்க்கையின் உறுதிக்காக நிகழ்ந்துள்ள ஆன்மீக சிந்தனை முழுவதின் சாரமும் அடிப்படையான இந்த ஐந்து விரதங்களுக்குள் அடங்குமென நம் முன்னோர் சொல்லிச் சென்றுள்ளனர். அவற்றை நாம் ஐந்து மஹாவிரதங்கள் என்று குறிப்பிட்டு வந்தோம். பதஞ்சலியின் சாஸ்திரத்தில் அவை இயம நியமங்கள் என்ற பேரில் வழங்கி வருகின்றன. புத்தர், மகாவீரர், இந்துக்கள், வைதிகர்கள் ஆகியோர் யாவரும் இவற்றைப் பெரிதும் போற்றி வந்துள்ளனர்.

நடைமுறை, சாதனம் ஆகிய இரண்டின் இணைப்பு

இவ்வாறு நோன்பு மேற்கொள்ளுதல் என்ற கருத்து ஒன்றும் புதிது அல்ல. ஆனால் சமூக சேவைக்கும் இந்த

நோன்பு மேற்கொள்ளல் மிகவும் அவசியம் என்ற கருத்தைக் காந்தி தான் முதன் முதலாகத் தோற்றுவித்தார். இந்த இயம நியமங்கள் எல்லாம் ஆன்மீக உயர்வுக்கு என்று ஆதி முதலே கருதி வந்துள்ளனர். ஆன்மீக உயர்வைப் பெரிதாக மதிக்கும் யோகிகளும், சாதகர்களும் இவற்றை நோற்று வந்தனர். ஆனல் இந்த இயம நியமங்கள் சமூகத் தொண்டுக்கு மிகவும் தேவை, அவை இன்றித் தொண்டு நடவாது. தொண்டின் எதிர்மறையே நிகழும் என்ற ஒரு சித்தாந்தப் பார்வையை முதன் முதலாகத் தோற்றுவித்தவர் பாபுவே. சத்தியம், சுயராஜ்யம் இவை இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொன்னல் நான் சத்தியத்தையே தேர்ந்தெடுப்பேன் என்று கூடச் சொல்லலானர். இந்தக் கருத்தை அவர் கூறிய கால கட்டத்தில் சுயாட்சிப் பசி மிகவும் தீவிரமாக இருந்தது. சத்தியத்தால் தான் சுயாட்சி வரும் என்று சொல்லிவிட்டார். இப்பார்வையின் தீட்சண்யத்தில் அவர் எத்தகு மேதை என்பது வெளிப்படுகிறது.

அன்று வரை தொண்டு செய்து வந்த பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தோர் பலர் சமூகத்துக்குப் பல வகைகளில் தொண்டு செய்து தான் வந்தனர். தொண்டுக்கு ஏதோ நல்ல பண்புகள் வேண்டும் என்று அவர்களும் கூறி வந்தனர். நாட்டுப் பணிக்காகச் சத்தியம், அகிம்சை, பிரம்மசரியம் இவையெல்லாம் கூட அவசியம் என்று யாருமே இன்று வரை கொள்ளவில்லை, நேர்மாருகத் தனிப்பட்ட நபர் வாழ்க்கையில் தான் இவை தேவை என்று அவர்கள் கூறினர்—எடுத்துக் காட்டாகத் தியானயோக இயலில் தனி ஒருவரின் மலர்ச்சிக்கு சேவை என்ற சொல் தானும் அவர்களுடைய பேச்சில் இடம் பெறவில்லை. இத்தகைய ஒரு சித்தாந்த அடிப்படையில் மனித சமுதாயத்தைச் சீர்திருத்தலாம் என்று அவர்கள் கற்பனை கூடச் செய்ததில்லை. இந்த அடிப்படையில் சமூகப்புரட்சி தொடங்கும் என்று அவர்கள் வாதிடவும் இல்லை. பிரம்மசரியத்தின் அவசியத்தை

அவர்கள் போற்றினர், கையாண்டனர், உறுதியோடு அதை மேற்கொண்டு நோற்றனர் என்பது உண்மையே. ஆனால் சமூக விஷயத்தில் அதைக் கையாளுதல், ஈடுபடுத்துதல் என்றெல்லாம் யாரும் நினைக்கவில்லை. ஆனால் உபதேசம் செய்வோர், சமயப்பிரசங்கியர், பக்திமார்க்கத்தார், ஞான மார்க்கத்தினர் ஆகியோருக்கு இயமநியமங்களை அவரவர்கள் சௌகரியப்படி மதித்துப் போற்றி வந்தனர். அவர்கள் இயம நியமங்களின் நடுவே தீயவை பலவற்றைத் தோற்று வித்து நுழைத்தனர். இயமநியமங்களுக்கே கெட்ட பெயர் உண்டாகும் வகையில் அவற்றை ஏதோ நீர் கலந்து விளாவிய சரக்காக்கித் தத்தமக்கு எளிதாக அமைத்துக் கொண்டனர் வேறு!

இவ்வாறாக, சமூகத் தொண்டு செய்தோர் இந்த விரதங்களின் பெயரைக் கூடச் சொன்னாரில்லை. ஆனால் இந்த விரதங்களின் பெருமையை மதிக்க மட்டும் செய்தனர். சமூகத்தை மாற்றியமைத்துப் புத்துருவம் கொடுக்கின்ற பேச்சை அவர்கள் எடுத்ததே இல்லை, இப்படி ஒரு "தனக்குள் தானே முரணாகி நிற்கும்" (ஸ்ப்ளிட் பெர்ஸனாலடி) தன்மையராகச் சமைந்து ஒழுகினர். தனிப்பட்ட வாழ்க்கைத் தூய்மைக்கு ஒரு சிந்தனை, சித்தாந்தம்; சமூக வாழ்வின் தூய்மைக்கு மற்றொன்று என்று இருந்தனர் பிறர். இவ்விரண்டையும் காந்தி ஒத்திணைத்தார். சமூகசேவை, அரசியல், ஆக்கப்பணித் திட்டங்கள், சமூகஒற்றுமை, மக்கள் கல்வி ஆகிய பல புறக்காரியங்களிலும் சத்தியம், அகிம்சை ஆகியவை அவசியம் என்ற கருத்தைக் காந்தி துவக்கி வைத்தார். "சத்தியம், அகிம்சை முதலியன அடிப்படையானவை. அவற்றை அடிக்கல்லாகக் கொண்டே சமூகத்தை நிமிர்த்த முடியும்; சமூகத் தொண்டுக்கு அவை இன்றியமையாதவை; சமூக சேவைக்கு அவை உரைகல்லுமேயாகும்" என்றார் அவர். சமூகம் அரசியல் முதலிய பிரச்சனைகளின் சிக்கவிழ்க்க அவர் ஆன்மீகத்தின் ஆற்றலை இவ்வாறு கையாண்டு

காட்டினார் என்பதே அவருடைய சிறப்பு எனப் போற்றப் படும். தனிவாழ்க்கையில் ஆத்தும வலிமை புகழ் தரும் என்பதைச் சமூக வாழ்வில் நிறையப் பார்த்துத்தான் இருக்கி றோம். அதற்கு மேல் சமூக இயலிலும் பரந்த ஆளவில் கூட இந்தச் சக்தியை (ஆத்ம சக்தியைப்) பயன்படுத்தலாம் என்பதைக் காந்திஜி காட்டினார்.

சமூகச் சாதனையின் மிஷன் (சுவிசேஷம்)

விஞ்ஞானச் சோதனைக் கூடத்தில் ஒரு விஞ்ஞான உண்மை அல்லது செயல்முறை வெளிப்படுவது போலத் தான் சத்தியம் அல்லது பிறதத்துவங்களின் விஷயம் தனி மனிதனில் வெளிப்படுகிறது. தனிமனிதன் வாழ்க்கை ஒரு விஞ்ஞான சோதனைக் கூடம் அதில் செய்து கண்ட சோதனை உயர்வு தருவதானால் அதைச் சமூகத்தைத் தேடும் வகையில் பரந்த அளவில் அமலாக்க வேண்டும். எந்தக்குணம் தனிமனி தன்வாழ்வில் வெற்றி தருகிறதோ அதைச் சமூகம் முழுதிலும் பரந்த குணமாக்க வேண்டும், பரந்த அளவில் சத்தியம், பரந்த அன்பு, பரந்த கருணை—இவற்றில் அவர் ஈடுபட்டார். ஆனால் ''நான் முழுமை எய்தாதவன்'' என்று அவர் சொல்லி வந்தார். வெறும் தனிமனிதன் வாழ்க்கைச் சோதனையா யிருந்தால் அவர் எப்போதோ அச்சோதனையில் முழுமை எய்தியிருப்பார். வெற்றி கண்டிருப்பார் சமூகத்தில் அச் சோதனையைச் செய்து பார்க்கும் போது ஒருவர்க்கு முழுமை முழுவெற்றி கிடைக்காமல் போகும் தான். அவருக்குப் பிறகு வருவோர் அதை மேலும் முழுமையின் பால் நகர்த் துவர். இப்படி ஆக ஆக எப்போதாவது முழுமையின் தரி சனமும் கிட்டும் பாபு இப்படி ஒரு சமூக இயல் சாதனை யைப் பற்றிய கருத்தை நம்முன் வைத்துள்ளார். அக்கருத் தையே தம் வாழ்நாள் முழுவதும் சோதனை செய்து பார்த் தார். சர்வோதயம் என்ற பெயரில் அவர் நம்முன் வைத் திருக்கும் மிஷன் (சுவிசேஷம்) இத்தகு சமூக இயல் சாதனை யின் மிஷன் ஆகும்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் முனைப்பாக இருக்கிற பாவனை தான் அது அந்த அந்தக் கால கட்டத்தின் பிரம்மம். காலத்தை ஒட்டி அப்பிரம்மம் மாறுகிறது. ஒரு காலத்தில் நம்முன் சுயாட்சியின் பிரம்மம் இருந்தது. இப்போது சர்வோதயத்தின் பிரம்மம் இருக்கிறது. இப்படி காலத்துக் கொப்ப நம்முன் வேறு வேறு பிரம்மங்கள் வந்து போயிருக் கின்றன. வேதத்தில் கூறியிருக்கிறது. அசித்தம் ப்ரஹ்ம ஜுஜீஷீர்யுவான: தெரியாமலிருப்பதைப் பார்த்து விடுவதில் முடிவில்லாததின் முடிவைக் கண்டு விடுவதில் இளைஞர் களுக்கு ஓர் இன்பம் உள்ளது. இது வரைக்கும் யாரும் சிந்தித்துப் பார்க்காதவையே இளைஞர்களுக்கு உகப்பான பிரம்மமாக அமைகிறது. அவர்களுக்கு ஒரு புதுப் பிரம்மம் தேவை. பழைய பிரம்மம் அவர்களுக்கு அழகாய்த் தோன்றவில்லை. புதுப்பிரம்மம் பிரத்தியக்ஷமாகிறது. அதற் காக மக்கள் புதுத்தவம் மேற்கொள்கின்றனர். இந்தக் காலத்துக்கு, இந்தயுகத்துக்குக் காந்தி ஒரு புதுப் பிரம்மத் தை உணர்த்திக் காட்டிவிட்டுப் போயிருக்கிறார் — அதுவே 'சர்வோதயம்'.

6 நீ விரும்பாதே ஆட்சி

பாரத நாட்டுப் பண்பாட்டில் உள்ளார்ந்த வலிமை ஒன்றுண்டு. அதையே அன்றாடப் பொது வாழ்வில் வெளிப் படுத்தும் வாய்ப்பு காந்திக்குக் கிட்டிற்று. இந்த நாடு தன்னாட்சி பெறும் முயற்சியையே மனித இனத்துக்குச் செய் கிற சேவையாக அவர் உருவாக்கினார். அரசியலுக்குக் கூட ஒரு தார்மீக, ஆன்மீக வண்ணத்தைப் புகட்டினார். ஆதலால் அவர் இயக்கம் வெறும் அரசியல் இயக்கம் என்பதோடமைய வில்லை. அரசியலில் சற்றும் பற்றில்லாத மக்கள் எண்ணி றந்தோர் அதில் பங்கு கொண்டனர். பாபுவின் சொந்த வாழ்க்கையுமே அரசியல் வாழ்க்கை அல்லாதிருந்தும் இறக் கும் வரை அவர் அரசியலில் ஈடுபட வேண்டி வந்தது. ஆனால் அவரைப் பொறுத்த வரையில் அது அரசியலாக இருக்கவில்லை. அவர் பார்வையில் அவருடைய அரசியல் முற்றும் தம்முடைய பரந்த சாதனையின், தம் சத்திய நாட் டத்தின் ஓர் அம்சமாகவே இருந்தது.

அரசியலில் சத்தியமாவது ஒன்றுவது என்ற போக்குத் தான் இப்போது வேர் ஊன்றி இருக்கிறது. ஒருகால் எப் போதும் அப்படியே இருக்கவும் கூடும் என்ற கருத்தை காந்தி தீவிரமாக எதிர்த்தார். மேலுலக மேம்பாட்டுக்கும் சமயவாழ்க்கைக்கும் தேவையான அளவு சாதனை இவ்வுலக வாழ்க்கைக்கும் வேண்டும் என்றார் அவர். வாழ்க்கையை இரண்டு துண்டாய்ப் பிளக்கவா இயலும்! அதனால் தான் ஆரம்பத்திலிருந்தே அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து மக்கள் பணியைத் தொடங்கி மேலும் தொடர்ந்து நடத்தினார். நம்மையறியாமலும், சிந்திக்காமலும் நாம்

பலவற்றைச் செய்ய நேரலாம். பொய்யான சொல் எதேனும் நம் வாயிலிருந்து வெளிவருவதாகலாம். சத்தியத்தைப் பற்றிச் சோதனை செய்து பார்த்ததில் நம் சத்தியத்தின் தரம் குறைந்ததாகத் தெரியலாம். இவற்றையெல்லாம் எப்போதும் மனதில் கொண்டே அவர் அரசியல் விவகாரங் களில் ஈடுபட்டார். அதைப் பற்றிய அக்காலத்து இலக்கிய தவத்துக்கு ஈடு இணையே இல்லை.

சத்திய நாட்டத்தில் ஈடு இணையற்றதொரு லட்சியம்

அவருடைய அரசியல் சத்தியத்தில் ஊன்றி நின்றபடி யால் எதிரியின் அரசியலும் அப்படியே அமைய வேண்டிய தாயிற்று என்பதே அரசியல் அரங்கில் அவருக்கு வெற்றி கிட்டியதன் காரணம். சத்தியத்திற்கு முன்னால் அசத்தியம் நிற்கமுடியாது. அவர் பிறரை விடத் திறமைசாலி என்ப தன்று, அவரிடம் சத்தியம் இருந்தது, சத்தியம் யாவற்றினும் மிகத் திறமுடையது என்பதே ரகசியம். ஏதோ மெருகு போட்ட கெட்டிக்காரத்தனம் போலப் பலர் அசத்தியத்தைக் கைக்கொள்கின்றனர். ஆனால் அந்தக் கெட்டிக்காரத்தனம் கடைசி வரையில் நிலைத்து நிற்பதில்லை. பார்க்கப் போனால் கெட்டிக்காரத்தனம் என்பது சத்தியத்தைக் கடைப்பிடிப் பதில் தான் இருக்கிறது. இது காரணமாக நமக்கு மிகுந்த பாதுகாப்பு உண்டாவதோடு, பல துன்பங்களினின்று நாம் தப்பவும் ஏதுவாகிறது.

உண்மையாளர்களின் சொற்களில் எதிரிகள் உட்பட உலகத்தோர் எல்லோருக்கும் நம்பிக்கை உண்டாகிறது, காந்தியின் சிந்தனையைப் பிறர் ஏற்றுக் கொண்டார்களோ இல்லையோ குறைந்த பட்சம் அவர் தம் மனத்திலுள்ளதை மறைக்காமல் பேசுகிறார் என்பதையாவது மக்கள் கட்டாயம் நம்பவேண்டும் என்ற ஒரு நிலை இருந்தது. இது மிகப் பெரிய விஷயம். அவர் பேச்சில் இரு பொருள் இராது.

எது சொல்லாக வெளிப்படுகிறதோ அது அவர் மனத்திலும் இருக்கும். பாரத நாட்டு மக்கள் மனத்தில் எல்லாம் இந் நம்பிக்கை பிறந்தது. அந்நம்பிக்கை காரணமாகவே பாரத நாடு முன்னேறியது.

மக்களுக்கு அவர் பேச்சில் நம்பிக்கை இருந்தது

காந்திக்கு முன்ஞல் பாரதநாட்டில் நல்ல நல்ல தலைவர் கள் பலர் இருந்திருக்கிருர்கள். அவர்கள் மக்கள் மனத்தை நாட்டு விடுதலையின் பால் திருப்பி இருந்தார்கள். ஆனுல் அந்தத் தலைவர்கள் பேசுவதேதாஞ அவர்கள் மனத்தில் இருப்பதும் என்ற முழு நம்பிக்கை மக்களுக்கு இருந்ததில்லை. அரசியல் தலைவர்கள் எப்போதும் இருபொருள் படத்தான் பேசுவார்கள் என்றே மக்கள் கருதிவந்தனர். மனத்தில் உள்ளதை உள்ளபடியே பேசுகின்ற வழக்கத்தைக் காந்தி தான் தொடங்கி வைத்தார். இந்த மனிதரின் மனத்தில் உள்ளது தான் வாய்ச் சொல்லாகவும் வரும் என்று மக்கள் மனத்தில் படிய ஆரம்பித்தது. இப்படியாக அவர் சொல் தான் வலிமை பெற்று நின்றது. அச்சொல்லின் வலிமையே அவருடைய முழு வலிமையுமாயிற்று.

ரௌலட் சட்டத்துக்கு எதிரான இயக்கத்தை ஒட்டி பாபு பஞ்சாப் போவதற்கிடையில் தடை செய்யப்பட்ட நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. பஞ்சாபில் அப்போது கலகம் நடந்து நாடு முழுவதும் பதறி எழுந்திருந்தது. அகமதாபாதிலும் மக்கள் அடிதடி, அழிவுவேலை என்று ஆரம்பித்திருந்தார்கள். சிலவீடுகளுக்குத் தீயும் வைத்தார்கள். இவற்றையெல்லாம் கண்டு காந்தி மிகவும் வருந்திஞர். இவையாவும் அகிம்சை வழிக்கு முற்றிலும் மாருக இருந்தன.

அப்போது நான் சபர்மதி ஆசிரமத்தில் இருந்தேன். கிட்டத்தட்ட இருபத்தைந்து வயதிருக்கும். நாங்கள் சிலர்

துணைசேர்த்துக் கொண்டு அகமதாபாத் நகரத்திலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் மக்களிடையே கருத்து விளக்கம் செய்யத் தலைப்பட்டோம் ''நண்பர்களே, நீங்கள் இப்போது செய்கிறதெல்லாம் காந்திக்குப் பிடிக்கிற காரியமன்று. நேர்மாறாக அவருக்கு வருத்தத்தைத் தருகிறது. நீங்கள் இப்படிச் செய்யவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. அவர் பேரில் இம்சைச் செயல்கள் நடப்பதையோ வீட்டுக்குத் தீவைப்பதையோ அவர் என்றுமே விரும்பியதில்லை. இப்படியெல்லாம் செய்யும்படி அவர் என்றேனும் சொன்னதுண்டா?'' என்கிறோம்.

''நீங்களெல்லாம் இன்னும் பொடியன்களடா; பொடியன்கள். உங்களுக்கு என்ன புரியும்! காந்தி என்ன சொல்கிறார் என்பதை எங்களுக்குப் புரியவைக்கவா வந்தீர்கள் இங்கே? அடே கேளுங்கடா தருமபுத்திரன் என்ன சொல்கிறான் என்பதை பீமன் புரிந்து கொள்ளுவான், பீமன்! யுதிஷ்டிரன் அமைதியாகத்தான் பேசுவான். ஆனால் அவர் பேச்சின் பொருள் என்ன என்பது பீமனுக்குத் தான் தெரியும்''. என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

அரசியல் தலைவர்களின் பேச்சுக்கு வேறுவிதமாகத்தான் பொருள் கொள்ள வேண்டும் என்பது தான் அது வரைக்கும் நிலவி வந்த கருத்து என்பது இதனால் தெரிகிறதல்லவா? எத்தனை விதமாகப் பொருள்படப் பேசுகிறாரோ அந்த அளவுக்கு அவர் பெரிய அரசியல் தலைவர். மனத்தில் வைத்திருப்பது ஒன்று. வெளிப்படையாகப் பேசுவது மற்றொன்று. இதைச் செய்யவல்ல தலைவனை உண்மையிலேயே பெரிய அறிவாளி என்று மக்கள் போற்றுவர். காந்தி விஷயத்திலும், ''அவருடைய அகிம்சை பற்றிய பேச்சு மேற்போக்கானது தான். மக்கள் இம்சையில் இறங்க வழிவகை இல்லாததினாலும், சட்டத்துக்கு முன்தனக்குத் தலையிறக்கம் வரலாகாது என்பதற்காகவும் அவர் அகிம்சைப்

பேச்சுப் பேசவேண்டியிருக்கிறது. நாம் என்னவோ முழு மூச்சாக இம்சையில் ஈடுபடவேண்டியதே அதுவே சரி'' என்று சாமானிய மக்கள் எண்ணி வந்தனர்.

சொல்லின் வலிமை குன்றுமாயின் ஆயுதம் தாங்கல் அன்றி வேறு வழியில்லை

இம்சையின் பாற்பட்ட இந்தச் செயல்களுக்குப் பிராயச்சித்தமாக அவர் உண்ணுவிரதம் இருந்து, தனிப்பட்ட வகையில் அவர் துன்பங்களைத் தாங்க முற்பட்ட பிறகே இவர் மற்றத் தலைவர்களினின்றும் முற்றிலும் வேறுபட்டவர் என்பதை மக்கள் புரிந்து கொண்டனர். இவர் என்ன சொல்கிருரோ அதுவே இவர் மனத்தில் இருப்பதும் என்ற கருத்து காந்தியைப் பற்றி மக்கள் மனத்தில் உதித்தது. இப்போது தான் சொல்லின் வலிமை வேலை செய்யத் தொடங்கிற்று. அதுகாறும் சொல்லின் வலிமை வேலை செய்யவில்லை. காந்தி தவம் செய்து சொல்லின் பெருமையை வளர்த்தார். சொல்லின் வலிமை மக்களாட்சிக்கு மிகவும் தேவையானது. இதற்குக் காரணம் ஒரு தரம் சொல்லின் வலிமைக்குப் பங்கம் ஏற்பட்டால், நம்பிக்கை அதோடு நாசமாகி விடும். பிறகு ஆயுதத்தின் வலிமையைச் சார்வதன்றி வேறு வழியில்லையாகிவிடும்.

சத்தியநாட்டமும், உறுதியும் காந்தியிடம் இருந்த அளவு நம் எல்லோரிடமும் இல்லாது போயிற்று என்பதை வருத்தத்துடன் கூறவேண்டி உள்ளது. ஆதலால் வர வரக் காந்தியின் சொற்களில் எல்லோரும் நம்பிக்கை வைக்கவில்லை. காந்தி சொல்வதென்னவோ இப்படித்தான். ஆனுல் அவர் மனத்தில் வேறு எண்ணம் இருக்கும் என்று மக்கள் மனத்திலும், அரசினர் மனத்திலும், எதிர்த்தரப்பினர் மனத்திலும் ஓர் ஐயம் உண்டாயிற்று. இந்துக்கள் நம்பிக்கை இழந்த போதே காந்தியின் சொல்லில் இஸ்லாமியர் வைத்திருந்த நம்பிக்கையும் பறந்து போயிற்று சொல்லின்

வலிமை குன்றாமல் என்ன செய்யும்? அதன் விளைவை நாம் பாரதநாட்டில் கண்டோம். சுயராஜ்யம் வந்தபோது கடைசியாக நடந்தவையெல்லாம் தாம் அதன் விளைவு

அந்தக் காலத்தில் காந்தி மாறாத வருத்தத்தில் ஆழ்ந்து போனார். மக்கள் அவர் சொல்லை மதிக்கவில்லை. வர வர இது மிகுந்து வந்தது. ஆனால் வெளிப்படையான அன்றாட நடவடிக்கைகளில் வியத்தகு சத்திய நாட்டத்தைக் காட்டி வந்தார். சொல்லின் நாணயத்தை அவர் காத்து வந்தார். அரசியல் வாழ்வைத் தூய்மையாக்கப் பாபு முயன்ற அளவு வேறுயாரும் முயன்றிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அரசியலில் இருந்தாலும் உண்மையின் பால் எப்போதும் பார்வையை ஊன்றி வாழ்ந்தவர் அவர்.

காந்தி என்றும் அரசியலை நடத்தியவர் அல்லர்

உண்மையாகப் பார்த்தால் காந்தி அரசியலை நடத்தவே இல்லை என்பேன் நான். அவருடைய பணியெல்லாம் சமூக இயல் பணியே—மக்கள் பணியே ஏனெனில் அவர் பணி மக்களை விழிப்படையச் செய்யும் முயற்சியே. நாடு தன்னாட்சி அடைவதற்காகச் செய்த பணியுமே சமூக இயல் சார்ந்ததேயாம்; அரசியல் அன்று. காந்தி அரசியலில் பங்கெடுத்தார். அதற்குக் காரணம் அப்போது நாட்டின் முக்கியமான பிரச்சினை நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பது தான். சாஸ்திரவாக்கு 'ஸ்வதந்தர: கர்த்தா' என்பதாகும், சுதந்திரமில்லாதவன் செயலற்றவன். சுதந்திரம் இல்லாதவன் இருந்தும் இல்லாதவனே. ஆதலால் தான் நாட்டு விடுதலைக்காகக் காந்தி அரசியலில் இறங்கினார்.

வாழ்க்கையைப் பற்றியும், சமூகத்தைப் பற்றியும் உள்ள சிந்தனையை அவர் ஆய்ந்தார், விமரிசித்தார். அதில் அரசியலுக்கு இயல்பாகவே ஓர் இடம் இருந்தது. ஆனால் அதற்கு முக்கியத்துவம் இல்லை. வாழ்க்கைச் சிந்தனையில் அரசியலுக்கும் ஏதோ சற்று இடம் உண்டு என்ற அளவில்

தான் அவர் அரசியல் பிரச்சினைகளை அணுகினார், அந்தக் காரணத்தால் ஆக்கப் பணி இயக்கம் வாயிலாகவே நாட்டு விடுதலை இயக்கம் நடத்துவதைத் தம் அரசியல் வாழ்க்கையாக அவர் அமைத்துக் கொண்டார்.

அரசியல் அறவடிவானதாக ஆக்கும் ஒரு குறிக்கோள்

அரசியலை ஆன்மீக மயமாக்குதல், அதை ஒழுக்க மேம்பாடுடையதாக்குதல் என்ற கருத்துக்களையெல்லாம் முன்பு கோகலே கூறியிருந்தார். இப்படி ஓர் உயர்ந்த குறிக்கோளை அவர் தந்திருந்தார். வரலாற்றில் இதற்கு முன்பு முகம்மது பைகம்பர் இதே போன்று ஒரு முயற்சியை செய்தார். ஆனால் அவருக்கு வெற்றிப் புகழ் கிட்டாது போயிற்று. அரசியலை அத்தகு ஆன்மீக அந்தஸ்து உண்டாகும் வகையில் அதை விழுமியதாக்குதல் என்ற நோக்கத்தைத் தாம் தோற்றுவித்த 'ஸர்வன்ட்ஸ் அஃப் இந்தியா' சொஸைட்டியின் குறிக்கோள்களில் ஒன்றாகக் கோகலே சேர்த்தார். அரசியலை அறவழி இயங்குவதாக்கி, ஒழுக்கம், சட்டம் ஆகியவற்றிற்குட்பட்டதாக்குதல் என்பது அவர் லட்சியம்.

காந்தி இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு அதை மேலும் விரிவாக்கினார்—மலர்வித்தார். அரசியலுக்கு ஆன்மீக உருவம் தரும் சிந்தனையை காந்தி மேலும் தெளிவு பெறச் செய்தார். அவர் செய்த காரியங்களில் எல்லாம் அரசியலும் தான் உட்படும். சத்தியம், அகிம்சை ஆகியவற்றின் அடிப்படையில்தான் அரசியலும் நடக்கவேண்டும் என்று அவர் கூறினார். வெறும் ஆன்மீகம் என்பதால் மட்டும் தெளிவு பிறக்காது என்று அவர் அதற்கு மேலும் விளக்கம் தந்தார். தம்மைப் பொறுத்த வரையில் அரசியலை ஆன்மீக வடிவாக்க அவர் எப்போதும் முயன்றார். ஆட்சி கைக்கு மாறுவதற்கு முற்பட்ட காலமாதலால் இம்முயற்சியில் அவர் ஓரளவு வெற்றியும் புகழும் பெற்றார்

அப்போது தன்னாட்சியைக் கொண்டு வருவது விஷயம்

பாபு பங்கு பெற்ற அரசியல் எப்படிப்பட்டது? அக் காலத்தில் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருவது என்றால் எதேச்சதிகார ஆட்சியாளர்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டியிருந்தது. இப்போது காங்கிரஸில் அங்கத்தினராகச் சேர இழப்பது என்று ஏதாவது உண்டா? ஒருக்கால் ஈட்டுவது மட்டும் இருக்கலாம். அக்காலத்தில் அங்கத்தினர் ஆவதில் தியாகமும் பொறுமையும் இருந்தன. நாட்டு விடுதலைக்காக முழுக்க முழுக்க முயல்வதில் ஆத்மீயப் பண்புகள் இயற்கையாகவே கலந்து இருந்தன. ஏனெனில் அவர்கள் பால் உள்ள ஒரு பெரிய சத்தியம் அவர்களைத் தாங்கி நின்றது. அதில் நற்றகையாளர், நற்பண்பாளர் பலரும் கலந்திருந்தனர். அப்போது அகிம்சை என்ற கருத்து உருவாகி அதே பேச்சாக ஓங்கி வந்து கொண்டிருந்தது. நாடு முழுவதையும் உண்ணாவிரதம் இருக்க ஒரு வேண்டுகோள் கிளம்பிற்றென்றால் ஒரே நாள் நாடு முழுவதும் உண்ணாவிரதம் இருப்பர். நூல் நூற்பீர்களாக என்றால் நூலையும் நூற்றுக்கொண்டு பிரார்த்தனையும் செய்வர். ஆதலால் தான் இது அரசியல் அல்ல, சமூக இயல், மக்கள் வாழ்வியல் என்பது. அடிமை நாட்டைச் சுதந்திர நாடாக்குவது அரசியலில் வைத்தெண்ணப்படுவதன்று. அது சமூக இயல் எனக் கொள்ளல் வேண்டும். அதே காரணத்தால் தான் அதில் ஆன்மீகத்தின் அம்சம் கலக்கிறது. அதுவே பற்றற்ற சேவை (நிஷ்காயம் கர்மம்) என்று கூட போகிற போக்கில் ஒரு தோற்றமும் உண்டாகிறது.

தன்னாட்சி வந்த பிறகு வழி வேறாகி விட்டது

ஆனால் ஆட்சி கைக்கு மாறுவதற்கான குறி வெகு தூரத்தில் - ஏதோ அசப்பில் தெரிந்த உடனேயே அரசியல் ஆன்மீகமயமாவது போல் கண்ட தோற்றமெல்லாம் பறந்தே போய் விட்டது. அந்த ஆன்மீகமயமாக்கும் முயற்சியின்

வலிமை எல்லாம் முடமாகிப் போயிற்று. ஆட்சி அதிகாரம் இதோ கைக்கு வந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்த வுடன் ஆட்சியை ஆன்மீகமயமாக்குகிற விஷயத்தை மெல்ல மெல்லக் கைவிட்டனர் என்பதன்றி "இப்போது எம்வழி முற்றிலும் வேறாகி விட்டது" என்று காந்திக்கே சவால் விடத் தயாராகி விட்டனர். "பார்ட்டிங் அஃவேஸ்" வந் தாயிற்று என்றனர். காங்கிரஸ் செயற்குழுவில் காந்தியிடம் தெளிவாகச் சொல்லி விட்டனர். ஆங்கிலேயர் குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு உட்படுவதாக இருந்தது. நாம் அவர் களுக்குப் போரில் உதவுவோம் என்றனர். அடுத்துப் பிற வகைகள் எல்லாவற்றிலும் உதவுவோம். அகிம்சை முதலிய வேறு ஏதேனும் பேச்சுக்கள் இருந்தால் அவற்றையும் விட்டுக் கொடுப்போம் என்றனர். இப்படிக்கூறி அவர்கள் காந்தியைப் புறக்கணித்தனர்.

அப்போது மகாபாரத நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வந்தது. போர் வருவது உறுதியென்றாயிற்று. கண்ணனின் உதவிகோர அர்ச்சுனனும் துரியோதனனும் அவனை நாடிச் சென்றனர். கண்ணன் உறங்கிக் கொண்டிருந்தான். அர்ச் சுனன் அவன் பாதத்தருகே அமர்ந்தான். பகவானின் விழி கள் திறந்தன. எதிரே அர்ச்சுனன் இருப்பது பார்வையில் பட்டது. வந்த காரணம் யாதென வினவினான் கண்ணன். அர்ச்சுனன், போர் வருகிறது. தங்கள் உதவியை நாடி வந்து இருக்கிறேன் என்றான். துரியோதனனும் சொன்னான் "நானும் அதையே கோரித்தான் வந்து உட்கார்ந்திருக்கி றேன்" என்று. அப்போது கண்ணன், இரண்டு வகையான உதவி கிடைப்பது சாத்தியம், ஒருவனுக்கு யாதவ சேனை முழுவதும் மற்றவனுக்கு ஒன்றும் இல்லாத நான் மட்டும் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்க" என்றான். அப்போது அர்ச்சுனன், "எனக்கு ஆயுதம் இன்றித் தீராது தான் ஆனாலும் நீங்கள் தான் வேண்டும்" என்றான். கண்ணன் நீங்கலாகப் படையைப் பெற்றதில் துரியோதனன் பெரிதும்

மகிழ்ந்தான். இந்தப் படையின் வலிமையால் போரில் வெல்லலாம் என்று அவனுக்குத் தோன்றிற்று. (மோரோ பந்த் சொல்கிறுர் ''பஹீமேளவுனி பல்லவ அஜ்ஜுபளத்ய கிருஷ்ண ஸோனே) அதே போல இவர்கள் எல்லோரும் காந்தியை விட்டு விட்டுப் படை முதலியவற்றை விரும்பிச் சென்றனரோ அப்போது மகாபாரதத்திலுள்ள இச்செய்தி நினைவுக்கு வந்தது. அதிகார மாற்றம் நெருங்கி வரவரக் காங்கிரஸ் காந்தியிடமிருந்து விலகி விலகிச் சென்று கொண்டிருந்தது. இருவர் போக்கிலும் வேற்றுமை தோன்றத் தொடங்கிற்று. காந்தியின் கடைசி நாட்களைப் பற்றிய ஒரு சித்தாந்தத்தைப் பியாரிலால்ஜி ''லாஸ்ட்ஃபேஸ்'' என்ற தம் இணையற்ற நூலில் வரைந்து காட்டியுள்ளார். அதில் கீழ்க்கண்டவாறு வருணித்திருக்கிறது. மக்களுக்காக எவ்வெவற்றில் நான் அக்கறை காட்டினேனுே அவையெல்லாம் கிட்டத்தட்ட வேரோடு துடைத்தெறியப் பட்டிருக்கிறது என்று அவர் தம் கடைசி நூலில் கூறினுர். இங்கே தில்லியில் விடுதலை தினவிழாவுக்கு முன்னேற்பாடு நடக்கிறது. அவர் அப்போது வெகு தொலைவில் சென்று தன் தவத்தை மேலும் தீவிரமாக்கிக் கொண்டு இருந்தார். லக்ஷோப லக்ஷம் மக்கள் எந்தப் பெயரைச் சொல்லிக் கொண்டே தியாகங்கள் புரிந்தார்களோ அந்தக் காந்தி தன் கடைசி நாளில் வியாசமுனி சொன்னது போல் ''ஊர்தவ பாஹீர் விரோம்யேஷா நசகஸ்ச்சித் ச்ருணோதிமே'' (நான் கையை உயர்த்தி அழுது அரற்றிக் கொண்டிருக்கிறேன், ஆனுல் என் பேச்சைக் கேட்போர் யாரும் இல்லை) என்று சொல்லிக் கொண்டிருந்தார். வியாச முனியைப் போலவே காட்டில் கதறிய கதறல் ஆயிற்று காந்தியின் விஷயமும். ஆதலால் தான் அரசியல் ஆன்மீகமயமாக வந்தது போன்ற ஒரு தோற்றம் உண்டானது கூட அதிகாரம் வருவதற்கு முன்னர் என்று கூறினேன் அல்லவா? ஆனுல் அதிகாரம் கைக்கு வரும் அறிகுறி தெரிந்தவுடன் ஆன்மீகத் தோற்றம் ஒரேயடியாய்ப் பறந்து போயிற்று.

எனக்கோ என்றால் அரசியலை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும் என்று தோன்றுகிறது

காந்தி அரசியலை எப்படி ஆன்மீகமயமாக்க முயன்றாரோ அது போலவே நீங்களும் செய்யவேண்டும் என்று என்னிடம் பலர் கூறுகிறார்கள். அப்போது நானோ அரசியலை அடியோடு ஒழித்துக் கட்ட விரும்புகிறேன் என்று பதில் சொல்கிறேன். கல்லைக்கடவுள் என்று படைத்து வைத்து அதற்கு வழிபாடு செய்ய என்னால் ஆகாது அதைச் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளுங்கள். நம் உள்ளே வாழும் கடவுளுக்குப் பூசனை செய்யுங்கள் என்கிறேன் நான். கல்லை ஆன்மீகமயமாக்குகிற காலம் ஒன்றிருந்தது. அதை நான் போற்றத்தான் செய்கிறேன். சந்தனத்தை அரைத்துப் பூசி பாறுங் கல்லுக்குப் பூசனை ஒரு பக்கம் செய்து மற்றொரு பக்கம் பசியால் தவிக்கும் மக்களை எட்டிக் கூடப் பார்ப்பதில்லை. என்பதெல்லாம் இக்காலத்தில் எடுபடாது. கல்லுக்குப் பூசை செய்வதெல்லாம் பழங்காலத்துச் செய்தியாகி விட்டது பாகவதத்தில் அழகாகச் சொல்லி இருக்கிறது. ''கலௌஃ கலு பவிஷ்யந்தி நாராயண்பராயண:''—கலியுகத்தில் மக்கள் நாராயணனால் பரவிப் போற்றப்படுவர். இதன் பொருள் பக்தி இராது என்பதன்று. பக்தி வைக்கும் இடம் மாறுகிறது அவ்வளவே.

அரசியலை ஆன்மீகமயமாக்கும் செயலில் அரசியல் எஞ்சுவதில்லை. அழிந்தே போகிறது என்பது என் கருத்து. சமூக இயல் மட்டுமே மிஞ்சுகிறது. சுதந்திரம் (தற்காப்பு), மக்களாட்சி, அணுயுகம் என்றிவ்வாறு மூன்று கருத்துக்களும் ஒரே மூச்சில் வந்த நிலையில் அரசியலை ஆன்மீகமயமாக்கும் போது அரசியல் அழிந்து போகிறது. விறகுக் கட்டையை ஒளிவிடச் செய்ய முயலுங்கால் விறகு எரிந்து போகிறது. விறகின் விறகுத் தன்மையை நிரந்தரமாகக் காத்து, அதில் நெருப்பையும் புகவைப்பது என்பது-விறகும்

அழியாதிருக்கும் நெருப்பும் நிரந்தரமாக இருக்கும் என்ற பொருளில் — நடக்கிற காரியம் அன்று. நெருப்பு பரவுகிற அளவுக்கு விறகு அழிந்தே படும். அதன் அழிவோடொத்து வெளிப்படுவது ஒளி.

சிறுபான்மை பெரும்பான்மை என்றிவ்வாறு பிரிந்து அதிகாரமும் ஆட்சியும் (தர்பார்) நடக்கும் இடத்தில், அரசியலை நிரந்தரமாக்கி வைத்து அதை ஆன்மீகமயமாக்கப் போனால் இரண்டும் ஒட்டுவதாயில்லை என்பது தான் கருத்து. 'அரசியலை ஆன்மீகமயமாக்குதல்'— இந்தத் தொடரைச் சொல்கையிலேயே முதல் சொல் இரண்டாவதை வெட்டும்; இரண்டாவது முதல் சொல்லை வெட்டும். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரணான சொற்கள். அணுயுகம், மக்களாட்சி (ஜனநாயகம்), சுதந்திரம் ஆகிய மூன்றும் ஒன்றாக வந்ததன் விளைவு இது. ஆதலால் என் கருத்துப்படி இதை இப்படிச் சொல்ல வேண்டியதாகும். பாலிடிக்ஸ் இஸ் அவுட் டேட்டட் — அரசியல் என்பது காலங்கடந்து போன செய்தி இப்போது அதை "கச்சந்தி" என்ற கணக்கில் சேர்க்க வேண்டியது தான்.

'ராஜ', 'நீதி' என்ற இவ்விரண்டு சொற்களும் ஒன்றையொன்று வெட்டுகின்றன. 'நீதி' என்ற சொல்லை 'ராஜ' என்ற சொல்லும், 'ராஜ' என்ற சொல்லை 'நீதி' என்ற சொல்லும் வெட்டுகின்றன. நீதி வந்தால் அரசும் சட்டமும் தாமாகவே வீழ்கின்றன. அரசும் 'கட்சியும் வந்தால்" நீதியும் அழிந்து படுகிறது. இப்போது நமக்கு ராஜ்யம் வேண்டாம் ''ப்ராஜ்யம்'' வேண்டும். இதற்கு எவ்வளவு நாள் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியாது. பிறகு செய்யக் கூடிய காரியமாக ஏதாவது இருக்கிறது என்றால் இது ஒன்று தான் உண்டு''. மேரேதோ முக் ராம நாம் துஸ்ரா நகோயி'' — என் வாயில் இருந்து இராம நாமம் அன்றி ஒன்றும் வெளி வருவதில்லை — அதாவது

கட்டுப்பாடான சர்வோதயத்தைப் படைத்தாக வேண்டும் என்பதே.

வேரிலேயே இருக்கிறது அதிகாரமோகம்

உலகில் இப்போது பெரியதொரு மோகம் புகுந்து வேலை செய்து வருகிறது-அது தான் அதிகார மோகம். சத்துக்கள் (நல்லோர்) கூட அதிகாரம் இன்றித் தம்மால் பணி செய்ய இயலாது அல்லது அதிகாரத்தின் உதவி கொண்டு மேலும் அதிகமாகப்பணி செய்ய இயலும் என்று நினைக்கின்றனர்.

காந்தியின் தோழர்கள் பலருமே இந்த மோகத்துக்கு உள்ளாகி ஏமாந்திருக்கிறார்கள். இப்போது இருப்பதாகத் தமக்குத் தோன்றும் சூழ்நிலையில் இந்நாட்டின் ஆட்சியை நடத்தும் பொறுப்பு தம் மேல் சுமந்திருப்பதாக இவர்கள் நினைக்கிறார்கள். நானுமே ஒப்புக் கொள்கிறேன். ‘ தாங்கள் தன்னாட்சியைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற நிலையில் நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாவிடில் பிறகு தன்னாட்சியைக் கொண்டு வந்ததன் பலன் தான் என்ன?'' என்று அவர்கள் கேட்பது சரியே. ஆனால் நான் சொல்வது, ''நாம் சுயராஜ்யத்தைக் கொண்டு வந்தது உண்மை. ஆனால், அதிகாரத்தைக் கையில் வாங்கி அதை அழித்துவிடும் பணியை மறுகணமே மேற்கொள்ள வேண்டும்'' என்பதாகும். முழுவதும் அழிந்து தீர்வதற்கு ஐம்பதாண்டுகளாவது வேண்டும் தான். ஆனால் அதை இன்றே தொடங்கி வைக்க வேண்டும்.

இந்தச் சிந்தனையை நீங்கள் எவ்வளவு சலித்துப் பார்த்தாலும் சரி, அது மிக எளியதே, சிறியதே, சமதர்மம் பேசுவோருமே அரசின் ஆட்சி, அம்சம் குறைய வேண்டும் என்று தான் நினைக்கின்றனர். ஆனால் அவர்கள் கூறுவது இன்றைய நிலையில் அரசு இயன்ற அளவு ஆட்சியதிகாரம் உடையதாக இருக்கவேண்டும். உள்ள ஒன்றிரண்டு எதிர்ப்புச்

சக்திகளை அதிகாரத்தின் உதவி கொண்டு ஒழித்து விட்ட பிறகு ஆட்சியின் வலிமை குறையத் தொடங்கும் என்கின்றனர். ஆனால் சமதர்ம வாதிகளின் பேச்சில் வருவது, அரசின் அதிகாரத்தை அதிகப் படுத்துகிற காரியம் கையிலே ரொக்கமாக; ஆனால் நான் சொல்லும் கருத்து அரசின் அதிகாரத்தைக் குறைக்கிற காரியம் கடனைப் — பற்றுக் கணக்கில். இந்தக் கடன் எப்போது செல்லாகித் திரும்பி வரும் என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம். 'எனக்கு இன்று எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக அதிகாரம் தரமுடியுமோ அவ்வளவுக் கவ்வளவு தாருங்கள்'! என்பது அவர்கள் பேச்சின் பொருள். இனி நாளை என்ன நிகழும் என்பதை யார் கண்டார்கள்?.

இன்று காந்தியின் ஆட்கள் என்ன சொல்கிறார்கள்? (காந்தியின் பேரால் பேசுகிறார்கள் என்பதால் அவர்களைக் காந்தியின் ஆட்கள் என்கிறேன்) ஆட்சி அதிகாரம் எந்த நிலையிலும், எந்த வகையிலாவது தேவைப்படுவது தான். அது குறைவாக இருக்கலாம்—வரைந்ததாக—பரவலானதாக —இருக்கலாம். நன்மை செய்வதாக இருக்கலாம்; எல்லாம் மெய்யே ஆனால் அது இருக்கும் என்பது நிச்சயம். இது அவர்களுடைய நம்பிக்கை; இதுவே பலர் நம்பிக்கையுமாகும். இப்படி ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டு இருக்கின்றனர். அதிகாரத்திலிருந்து வேறாகிவிட்டால் இன்றைய சூழ்நிலையில் மக்களுக்குத் தொண்டு செய்யும் ஒரு பெரிய கழகத்தை இழந்து விடுவோமே என்று அங்கலாய்க்கிறார்கள். ஆதலால் இடைக்காலத்துக்காவது இப்படி அதிகாரத்திலிருப்பது அவசியம் ஆகிறது என்கின்றனர்.

எல்லாச் சேவையும் அதிகாரம் வாயிலாகவே நிகழ்த்தலாம் என்று தான் சமதர்மக் கொள்கையினர் கருதுகின்றனர். அவர்களைப் பொறுத்த வரையில் அதில் பிரச்சனை ஒன்றும் இல்லை. ஆனால் மனப்பூர்வமான சேவை செய்வதில் ஆத்மார்த்தமாக ஈடுபட்டோரும், தனி நபர் சுதந்திரத்தையும்,

அகிம்சையை முக்கியம் எனக் கருதுவோரும் கூட அல்லவா இடைக்காலத்திலாவது அதிகாரம் இருந்தாக வேண்டும்; அதன் வாயிலாகத் தான் தொண்டு செய்தல் சாத்தியம் என்று கருதுகின்றனர். இடைக்காலம் என்பது எப்போதும் என்றே தான் இருந்திருக்கிறது, எப்போதும் என்று இருக்கிறது, தொடர்ந்து அவ்வாறே இருக்கும் என்று தான் கூற விரும்புகிறேன். செய்தே ஆகவேண்டியது என்று மட்டும் மனத்தில் இருக்குமானால் அதை இன்றே செய்யவும் வழி இருக்கும். வாழ்க்கை விஷயத்தில் ''அப்படியும் இப்படியும்'' என்று — காம்பரமைஸ் செய்து கொள்ளும் — போக்கு இருப்பவர்களால் அகிம்சையைக் கடைப்பிடிக்க இயலாது.

இது காந்தி விசாரம் அன்று

காந்தி ஆட்களையும் இந்த அதிகார மோகம் விட்டபாடில்லை. சாதாரணமாக நான் காந்தியின் பெயரை முன் வைத்துப் பேசுவதில்லை. காந்தியின் பெயரைச் சொன்னால் அவருடைய சொற்கள், கூற்றுக்கள், நூல்கள் ஆகியவற்றை நாம் தலைகீழாகப் புரட்ட வேண்டிவரும். அதில் இருந்து வாதப்பிரதி வாதம் தோன்றும். எல்லாவற்றிற்கும் மேலாகப் புத்தரின் சீடர்கட்கு என்ன நிலை வந்ததோ அதனிலும் மோசமான நிலை உண்டாகும். ஆதலால் தான் காந்தியின் பெயருக்கு மதிப்புக் கொடுப்பதைவிட அதிகமாக அவருடைய சிந்தனையையும் தத்துவத்தையும் மதிக்கிறேன். அப்படியும் காந்தியின் பெயரால் இப்படிப்பலர் பேசும் போது, ''ஐயன்மீர் இது காந்தி சிந்தனையன்று'' என்று சொல்ல வேண்டி இருக்கிறது.

அரசியல்வாதிகள் இப்படிச் செய்வார்களா?

அரசியலில் காந்தி ஒரு கட்சிச் சார்புடையவராக உங்களுக்குத் தோன்றினால், அவருடைய கடைசிச் செயலை ஒரு கண்ணோட்டம் விட்டால் விஷயம் விளங்கி விடும். தன்னாட்சி வந்த பிறகு முகம்மதலி ஜின்னாவைப்போல் அவர்

பாரத நாட்டின் கவர்னர் ஜெனரல் பதவிக்கு வருவதைத் தடுக்க யார் இருந்தார்கள்? ஆனல் அவரோ வென்றல் நவகாளிக்குப் போகும் பாதையில் விரைந்தார். இங்கே சுதந்திரத்திற்கான முன்னேற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது அவர் அங்கே பாதயாத்திரை செய்து கொண்டிருந்தார்.

மற்றேர் எடுத்துக்காட்டு. காந்தி சொன்ஞர் வைஸ்ராய் மாளிகை மருத்துவமனையாக மாற்றப்படும் என்று. இந்தச் சொல் அகிம்சாபூர்வமான புரட்சியின் சாரத்தையே தன்னுள் அடக்கி உருக்கொண்டு வந்துள்ளது. இம்சை அடிப்படையான புரட்சியில் விஷயம் இதற்கு நேர்மாருக நடக்கும். எந்த இடத்திலிருந்து எதேச்சதிகார ஆதிக்கம் விலகுகிறதோ அந்த இடம் பெரிய பீரங்கிக் குண்டுகளால் தகர்க்கப் பெற்றிருக்கும் அல்லது இப்படி ஆதிக்கம் செலுத்துபவர்களின் தலைமையகத்தில் இருந்து ஆதிக்கக்காரர்களின் கொடியை அகற்றி விட்டுத்தம் கொடியை ஏற்றுவதில் தான் வல்லமை முழுவதும் அடங்கி இருப்பதாக வெற்றி பெற்றேர் எண்ணுவர். இம்சை, அரசியல் அதிகாரம் ஆகியவற்றின் போக்கு இப்படி இருக்கிறது. காந்தி இத்தகைய அரசியல் வாதி அல்லர். அவருடைய இடையருச் சாதனை சமூக இயல் சார்ந்தது. அதனல் தான் அவர் நாட்டு விடுதலைக்குப் பின் வைஸ்ராய் மாளிகையை மருத்துவமனையாக மாற்றி அமைக்கும் பேச்சை எடுக்க முடிந்தது.

இப்போக்கு தொடக்கத்திலிருந்தே அவரிடம் காணப் பட்டது. மற்றுமொன்றை எடுத்துக் காட்டுகிறேன். வட்ட மேசை மகாநாட்டில் காந்தி என்ன கூறிஞர்?. “நான் மிகுந்த பணிவுடன் சுயராஜ்யம் வழங்கும்படி கோருகிறேன்” என்ருர். இது அவர்களுக்கு ஒரு விசித்திரமாகத் தோன்றிற்று. காரணம் என்னவென்ருல் அப்போது சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம் என்று தான்

பரக்கப் பேசப்பட்டு வந்தது. ஆனால் இந்தத் தலைவரோ, "சுயராஜ்யம் தரப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன். ஏனெனில் அது கிடைத்ததன்றிப் பாரத நாட்டின் ஏழை மக்கள் கடைத் தேறமாட்டார்கள் என்பது என் திடமான நம்பிக்கை. எங்களுக்குத்தான் சுயராஜ்யம் எதற்கு? நாங்கள் சுதந்திரர்கள் என்று மீசையை முறுக்குவதற்கல்ல. சுதந் திரம் இன்றி ஏழைகளுக்குத் தொண்டு செய்வது நடவாது" என்கிறார். சுயராஜ்யம் கேட்பதற்கு காந்தி ஒரு காரணத் தையும் காட்டினார். இப்படி ஒரு காரணம் காட்டுவதன் அவசியம் தான் என்ன? இது தான் ஆரம்பத்திலிருந்தே காந்தியின் போக்காக இருந்திருக்கிறது. இது அரசியல் வாதியின் பேச்சா அல்லது ஒரு சமூகவாதியின் சொல்லா என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

அவரே அரசை நடத்திச் செல்ல வேண்டியிருந்தால்

பாபுவே அரசியலை நடத்த நேர்ந்திருந்தால் கடைசியில் காங்கிரஸை லோக்சேவைச் சங்கமாக உருமாறும்படி ஒரு ஆலோசனையைக் கூறியிருப்பாரா என்பதை மட்டுமாவது சிந்தித்துப் பாருங்கள். அவர் மறைவுக்கு முன் சுயராஜ்யம் பெறும் காங்கிரஸின் தன்னாட்சி பெறும் முயற்சி நிறை வெய்தி விட்டது. இப்போது அது இந்நாட்டு மக்களின் சேவையில் இறங்கவேண்டும் என்ற ஒரு செய்தியைக் காந்திஜி நாட்டுக்கு வழங்கினார் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். மேலும் உலகச் சேவைக்கு ஒரு சங்கம் நிறுவவேண்டும் காங்கிரஸைப் பொறுத்த வரையில் இதுவே அவர் எழுதி வைத்த **'உயில்'** சாசனம். தம் மறைவுக்கு முன் தினம் அவர் அதைத் தயார் செய்தார். காங்கிரஸுக்கு அரசியல் சுதந் திரம் கைக்கெட்டியுள்ளது. ஆனால் இந்நாட்டுச் சாமானிய மக்களின் பொருளாதாரச் சுதந்திரம், சமூகச் சுதந்திரம் அவர்களுடைய ஒழுக்கம் சார்ந்த சுதந்திரம் ஆகியவை பற்றிய பணி இன்னமும் செய்ய வேண்டி இருக்கிறது என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார். இப்பணிக்காக லோக சேவக்

சங்கம் இயங்க வேண்டும், அதில் காங்கிரஸ் என்றொரு நிறுவனம் முற்றிலுமாக இணைந்து விடவேண்டும்! அவர்கள் நிறுவிய கதர், கிராமக் கைத்தொழில், புதுமுறைக் கல்வி, மகளிர் சேவை இந்து முஸ்லிம் ஒற்றுமை, சாந்தி சேனை நிறுவுதல், பொருளாதார சுதந்திரம் முதலிய காரியங்களுக்கு எல்லோருமே அதில் சேரவேண்டும் என்றார். நாட்டுச் சேவைக்கு கட்சிச் சார்பு, கொள்கைச்சார்பு ஆகியவற்றி னின்றும் முற்றிலும் விடுபட்ட ஒரு குழு இருக்க வேண்டும் என்றும் அது கிராமங்களின் தன்னிறைவுடையதாகச் செய்யும் விஷயத்தில் கச்சை கட்டிக் கொண்டு பணிசெய்ய வேண்டும் என்றும் விரும்பினார்.

அரசியல்வாதிகளுக்கு இந்த ஆலோசனை முற்றும் நகைப்புக்கிடமானதாகவே தோன்றிற்று. காங்கிரஸ் லோக் சேவக் சங்கமாகிவிட்டால் நாடு என்ன என்ன ஆகித் தொலையுமோ யாருக்குத் தெரியும் என்று அஞ்சினர். யார் அறிவார் எந்தக் கட்சியின் ஆட்சி நிலவும் என்று. நாடு துண்டு துண்டாகிப் போகும். கட்சிகளுக்கிடையே வன்முறை தொடங்கும் என்றனர். பிறகென்ன? எதிர்ப்புத் தத்துவங் களும் ஆதிக்கம் பெற்று அடக்குமுறை மேற்கொள்ளும் ஆதலால் தேர்தல் வாயிலாக ஆட்சியைக் காங்கிரஸ் கைப் பற்றுதலே நாட்டுக்கு உடனடித்தேவை என்றனர். சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் இப்படி வாக்கு வாதத்தில் இறங்கினர். காந்தியின் ஆலோசனையைப் பரிசீலிப்பதில் அப்போது இருந்த காங்கிரஸ் தலைவர்கள் பொறுப்புணர்ந்து சிந்திப்பது போன்ற ஒரு தோற்றம் இருந்தது. லோகசேவச் சங்கத்தை நிறுவுவது ஆபத்தானது என்று அவர்களுக்கு அப்போது தோன்றிற்று. இன்று இருக்கும் ஒழுங்கெல்லாம் குலைத்துக் குளறுபடியாகி விடும். லோக சேவச்சங்கத்தை அமைப்பது எப்போது, அவர்கள் கிராமங் களில் செல்வாக்குப் பெறுவது எப்போது? அதற்கிடையில் நாட்டில் உள்ள எதிர்ப்புச் சக்திகள் தில்லியின் ஆதிக்கம்

பெற்றுவிட்டால் அவர்கள் தாமாகவும் இழுபட்டும் ஜமீன் தார்களுக்கு நண்பர்களாகிவிடுவர். பிறகு நாடு விடுதலை பெறவே இல்லை என்பதைப்போல் மேலும் அடிமையாகவே இருக்கும் என்றெல்லாம் அஞ்சினர். இவ்வாறு சிந்தனைசெய்து காங்கிரஸ் ஸ்தாபனத்தை நிரந்தரமாக்கினர்.

அரசியல் அதிகாரத்துக்குக் கீழ்மட்டப் பதவியையே தர விரும்பினர்

மேற்கண்டவாறன்றி, காந்தியின் ஆலோசனையை ஏற்று லோக சேவச் சங்கம் நிறுவியிருந்தால் அந்த அந்தப் பிரதேசங் களில் அச்சங்கத்தின் நன்மை பலருக்கும் செல்வாக்குப் பரவி யிருக்கும். மக்களுக்குச் சரியான திசையில் வழிகாட்ட, பற்றற்று கட்சிச் சார்பற்ற செயல்களால் மக்களுக்குத் தொண்டுசெய்ய, ஒழுக்கம் பற்றிய சிந்தனையைப் பரப்ப, மக்கள் அல்லது அரசினரின் தவறுகள் மறதிகள் ஆகியவற் றைப்பற்றி நடுநிலைமையில் நின்று அக்குறைகளை அவர்கள் முன்வைக்க, உயர் ஒழுக்கத்தை வலியுறுத்தும் சக்தி ஒன்று நாட்டில் தோன்றியிருக்கும். இத்தகு சிறப்பின் விளைவாக நாட்டில் சேவா சங்கத்துக்கு முக்கியத்துவம் உண்டாகி இருக்கும். அதோடு அரசை நடத்துபவர்களின் அதிகார அமைப்பு கீழ்ப்பதவியுடையதாகி இருக்கும். அதற்குப் பதிலாக இன்று என்ன நடந்திருக்கிறது? அதிகாரவர்க்கம் முக்கியமாகி இருக்கிறது. எங்கு பார்த்தாலும் அவர்களதே பேச்சு. சேவைக்கான சிறு சிறு நிறுவனங்கள் ஆங்காங்கே தோன்றி அரசதிகாரத்தை அண்டி வாழ்ந்து பணி செய் கின்றன. இதற்கு நேர்மாறாக, அதிகாரவர்க்கத்தில் அதிகாரம் குறைந்தும், மக்கள் அதிகாரம் மேலோங்கியும் நிற்கவேண்டும் எனக் காந்தி கருதினர்.

காங்கிரஸை லோகசேவச் சங்கமாக உருவாக்கும் ஆலோ சனையைக் காந்தி தந்தார். நீங்கள் மக்கள் தொண்டர் களாக மாறினல் அதிகாரவர்க்கத்தின்மீது உங்கள் நற்செல்

வாக்கு உண்டாகும். அதிகாரவர்க்கத்தின் நம்பர் இரண்டு என்றாகும். முதன்மைப் பதவி லோகசேவைக்கு — மக்கள் தொண்டுக்கு சேவை அரசியாக அமையும்; அதிகாரவர்க்கம் பணிப்பெண்ணாக அமையும்.

பார்க்கப்போனால் இந்த ஆலோசனை காங்கிரஸுக்கே ஓர் நல்லாசி வந்ததற்கொப்பாகும். அந்த ஆசியின் பயனாகக் காங்கிரஸ் யுக யுகாந்திரமாய் சிரஞ்சீவியாய் வாழ்ந்திருக்கும். அவர் காங்கிரஸை உருவாக்க விரும்பியதுபோல் அது உருவாகி இருந்தால் அது அவர் திட்டத்துக்கு உள்ளாகி அந்தக் காரணத்துக்காகவே அமரத்துவம் எய்திவிட்டிருக்கும். ஓர் அமரஸ்தாபனமாகியிருக்கும். உருவத்தைவிடப் பெயர் பெரியது. பாபு காங்கிரஸின் உருவை அழித்துவிட்டு அதன் பெயரை வளர்க்க விரும்பினார். உலகநாடுகளின் தன்னாட்சி இயக்கத்தின் வரலாற்றில் நம் காங்கிரஸுக்கு ஒரு சிறந்த இடம் கிடைத்திருக்கும். காங்கிரஸின் தன்னாட்சி இயக்கத்தில், காங்கிரஸ் இயற்றிய நற்பணி — தொண்டுபோலப் பிறி தொன்று உலக வரலாற்றிலேயே காணக் கிடைக்காது. காங்கிரஸ் அகிம்சைப்போர் நடத்தியது—என இப்படிக் காங்கிரஸின் பெயர் சுடர்விட்டுப் பிரகாசித்தாகவேண்டும் என்று காந்தி விரும்பினார்.

அற்புதமான கற்பனா சக்தியுள்ளவர்க்கன்றி இத்தகைய ஓர் காட்சி (உபநிஷத்தை ஒத்த ஒருகாட்சி) கிட்டாது.

அவருடைய யோசனையை ஏற்றிருந்தால் காங்கிரஸ் இந்நாட்டின் பிறசேவா ஸ்தாபனங்கள் யாவற்றுள்ளும் மிகப் பெரியதாகி இருந்திருக்கும். எந்த அரசியல் பணிக்காகக் காங்கிரஸ் அமைக்கப் பெற்றதோ அப்பணி பூர்த்தியாகி இருக்கும். அதற்குமேல் காங்கிரஸ் தன் உருவை மாற்றிக் கொண்டு நாட்டின் ஆக்கப்பணிகளை மேற்கொண்டு இருந்தால் அந்த நிறுவனம் ஏற்கனவே சேர்த்துள்ள புண்ணியம் அதற்குத் தங்குவதோடு மேலும் ஒரு புண்ணியம் சேர்ந்து

வளர்ந்திருக்கும். இத்தகையதொரு பரந்த திவ்யமான அழகார்ந்த சங்கற்பத்தை மனத்திற் கொண்டிருந்தார் அவர். அவருடைய இந்தச் சங்கற்பம் மிகவுயர்ந்தது. அது அவர் உடைய ஒப்பமிக்கதொரு காட்சியாகும். இந்தச் சங்கற் பத்தைப்பற்றி நினைக்க நினைக்க இது உபநிஷத்தின் காட்சி போல் இருக்கிறது. அற்புதமானதொரு காட்சித்திறனின்றி இத்தகைய ஒரு சங்கற்பம் மனதில் உதிக்காது.

சாதாரண தர்க்கம் ஒரு வகையானது. சங்கற்பசக்தி-ப்ரதிபை-முற்றும் வேறு ஒரு வகை. வெறும் தர்க்கத்தை நிலைக்களனாகக் கொண்டு சொல்பவற்றைத் தர்க்கவாதத்தால் தகர்க்க முடியாது. அது தர்க்கவாதம் என்ற நிலைக்களத் தைப் பொறுத்துச் சரியே எனக் கொள்ளப்படும். பாபு வுக்குத் தோன்றுவது சாமான்ய அறிவுடையவர்களுக்குத் தோன்றுவது போலன்று. இதன் பொருள் - காந்திக்கு 'காமன் ஸென்ஸ்'—'சாமான்ய அறிவு' — இல்லை என்பதன்று. அது இருக்கத்தான் இருந்தது. அவரிடம் ஒரு 'அன்காமன் ஸென்ஸ்'—ஓர் சாதாரண அறிவும் இருந்தது. அந்த அறிவின் துணைகொண்டு ஆய்ந்து, காங்கிரஸ் வாயிலாக அரசியல் செயல் ஏதேனும் நிகழ்ந்தால் அது அரசநீதியின் பால் பட்ட தாக இருக்குமானால் அது இதுகாறும் நிகழ்த்திய செயல்கள் சமூக நீதியின் பாற்பட்டவை என்று தேர்ந்தார்.

ஆனால் இத்தகையதொரு சங்கற்பத்தைச் செரித்துக் கொள்ளும் மனப்பக்குவம் அக்காலத்தில் நம்மிடமில்லை. ஒரு கால் இப்போதுமே இல்லையாகலாம். ஒன்று தெய்வீகக் காட்சி, மற்றையது ஊனக்கண்ணால் காணும் காட்சி. பாபு மக்களை ஆன்ம நிறைவுடையவர்களாகச் செய்ய விரும்பினார். காங்கிரஸ் தன் ஆற்றலை அச்செயலில் ஈடுபடுத்த வேண்டும் என்று விழைந்தார். காங்கிரஸ் நீலாக சேவைச் சங்கமாக உருமாறி இருந்தால் மிகப்பெரிய அளவில் மக்கள் சக்தி மலர்ந்திருக்கும்.

இப்படி நடக்காமல் போயிற்று. அதனுல் காங்கிரஸுக்கு உண்மையாகவே இருந்த செல்வாக்கும் பெருமையும் இப்பால் பெரிதும் குன்றிவிட்டது. அதன் பேராற்றல் இப்போது தளர்ந்து போயிருக்கிறது. காங்கிரஸைப் பற்றி இனிவரலாற்ருசிரியர்கள் எழுதுவார்கள். "க்ஷீண புண்யே மர்த்தயலோகே விசாந்தி" — புண்ணியம் குன்றிய பிறகு சுவர்க்கத்திலிருந்து மீண்டும் மானமுடைய மனிதர்களே உலகத்தில் தொப்பென்று போட்டது போல் ஆயிற்று — என்று. இது ஒரு பெரிய தீங்கே ஆயிற்று. சுயராஜ்யம் வந்த பிறகு காங்கிரஸ் வேண்டிய அளவு பெரிதாக இருந்தும் அது ஒரு கட்சியாகச் சமைந்தது. 'பார்ட்டி' என்ற சொல் 'பார்ட்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. 'பார்ட்' என்ருல் துண்டு. எவ்வளவு பெரிதாக இருந்தால் தான் என்ன? அது பூரணம் அன்று. காந்தியின் காலத்தில் காங்கிரஸ் ஓர் அரசியல் ஒற்றுமைப் பரிஷத் போல் இயங்கி வந்தது. அதன் வாயிலாக அரசியல் ஒருமைப் பாட்டுக்கான பெரும் பணி நடந்து வந்தது. ஆனுல் நாட்டு விடுதலேக்குப் பிறகு வெறும் அரசியல் கட்சியாகி விட்டது. அதோடு அதன் பெரும் பெரும் தலேவர்களும் ஒரு காலத்தில் நாடு முழுமைக்கும் தலேவர்கள் ஆகியிருந்த நிலேபோய் ஒரு கட்சிக்குத் தலேவர்கள் ஆகித் தீர்ந்தனர்.

ஆதிக்கத்தை அழிப்பது போய் அது ஆற்ருேடு அடித்துச் செல்லப்பட்டு விட்டது

அதன் விளேவென்னவாயிற்று என்பதை நீங்கள் பார்த்தாயிற்று. தர்மத் திசையில் ஒருவர் குரல் எடுக்க உடனே நாடு முழுவதும் அவர் பின்னுேடு வரும், அவர் சொல்லேக் கேட்கும் என்னுமாறு ஒரு நிறுவனமோ அல்லது ஒரு தலேவர் தானுே இன்று நாட்டில் இல்லே என்ற நிலே வந்தாயிற்று. வெவ்வேறு கட்சிகளேச் சேர்ந்த தலேவர்கள் மக்களிடம் சென்று ஒருவர் மற்ருெருவர் கூற்றைக் கண்டித்துப் பேசி வருகின்றனர் செயலற்றிருக்கும் மக்களிடையே இத்தகு கண்டனப் பேச்சு

செயல் திறத்தைத் தோற்றுவிப்பதில்லை. அறவாழ்க்கையில் தலைமை என்பதொன்று முற்றுமே இல்லை. இதனால் நாட்டில் ஒரு சோம்பல், வெறுமை, கையறுநிலை தோன்றியுள்ளது. எங்கே போவது என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் தவிக்கின்றனர், திகைக்கின்றனர். காந்தியின் யோசனையைக் கேட்டிருந்தால் இத்தகைய நிலை வந்திராது.

காந்தியின் மறைவுக்குப் பிறகு தத்தம் தார்மீக வாழ்க்கையின் உயர்நோக்கத்தால் அரசியலை விழுமியதாக அதிகாரம் உடையதாக்குவதற்குப் பதிலாக நாமே நம் சொந்த வாழ்க்கையில் உயர்ந்தோம். அந்தப்பகட்டில் சொக்கிப் போனோம். அரசியலின் அதிகாரவேகம் நம்மை இப்படிக் கொஞ்சம் இழுத்துச் சென்றது. நாமாகவே பாதி அதன் போக்கோடு போக்காக மிதந்தது பாதி என்றாயிற்று. இன்று நம் வாழ்க்கைச் சிந்தனையின் உயர்வு அரசியலைப் பாதிக்கவில்லை. அதற்குமாறாக அரசியலின் பெருமை நம் வாழ்க்கைச் சிந்தனையைப் பாதித்திருக்கிறது, வாழ்க்கையின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. காந்தியவாதி என்று அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் இன்று காந்தியின் வழியைக் கடைப்பிடிக்கவில்லை. அதன் விளைவாகப் பிறரை வாழவைப்பதற்குப் பதிலாக நாமே வழிவிலகிச் சென்று கொண்டிருக்கிறோம்.

வழிஏது? காந்தியினுடையதா? நானாஃபட் நவீஸினுடையதா?

ஆங்கிலேயர் படையெடுப்பதாக இருந்தது அவர்கள் போர்கட்டை எட்டியிருந்தனர். பேஷ்வா படையுடன் பூனாவில் தயாராக இருந்தார். உயிரைப் பணயம் வைத்துப் போராட வேண்டியிருக்கும் என்று தெரிந்தது. பூனாவை எதிர்த்துப் பொசுக்கி நிர்மூலமாக்கிவிட நானாபட் நவீஸைத் தயார் செய்து வைத்திருந்தார். ஸிந்தே எவ்வளவு போர்ப் படையினரைக் கொண்டு வருவார், போன்ஸ்லே எத்தனை பேரைக் கொண்டு வருவார், ஹோல்கார் எவ்வளவு படையைத் திரட்டி வருவார் என்பதே எங்கும் பேச்சு.

''நாங்கள் இத்தனை பேரைக் கொண்டு வருகிறோம் அதற்குப் பதிலாக எங்களுக்கு என்ன கிடைக்கும்'' ''காந்தேஷின் இன்ன பகுதி உங்களுக்குக் கிடைக்கும்'' ''நாங்கள் இத்தனை பேரை அழைத்து வருவோம் எங்களுக்கு பதிலுக்குக் கிடைப்பதென்ன?'' ''உங்களுக்கு இன்ன பகுதி''. இப்படித்தான் இந்த நிமிடம் வரை நடந்து வருகிறது. நாஞ்ஃபட் நவீஸ் காலத்தில் எப்படிப் பேச்சு நடந்ததோ அதே பேச்சுத் தான் இன்றும். ''எனக்கு எந்த இடம் (ஸீட்) கிடைக்கும்? எனக்கு என்ன பதவி கிடைக்கும்?''

காந்தி வந்தென்ன போயென்ன? நிலைமை அதே மேனி யாகத்தான் இருக்கிறது. இப்படித் தான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. நாஞ்ஃபட் நவீஸின் காலத்தில் நடந்த அரசியலின்றும் வேறுபட்ட அரசியல் இங்கே எப்போது நடந்திருக்கிறது? அரசியலின் வலிமை தான் என்ன? 'க்ஷய காரிணி சக்தி' சேர்த்து வைத்த புண்ணியம் கரைந்து கொண்டு வருகிறது. நாட்டுக்குத் தன்னாட்சி வந்த பிறகு அரசியலை நடத்தியவர்களில் எத்தனை பேர் வாழ்க்கைவசதி அரசியல் காரணமாக வளர்வதற்குப் பதிலாக தேய்ந்து இருக்கிறது? மிகக் குறைவாகத் தான் இருக்கும் அத்தகை யோர் எண்ணிக்கை. இவர்கள் ஜனகரைப் போல் அதிகாரத்தை விழுங்கிச் சீரணித்துக் கொண்டவர்கள்! மற்றையவர்கள் எல்லாம் சேர்த்தபுண்ணியத்தைக் கரைத்துக் கொண்டிருப்பவர்கள்.

காந்தி அகிம்சையை அரசியாக்க விரும்பினார்.

பாபு இவ்வளவெல்லாம் பயிற்சி தந்தபிறகும் பாரத நாட்டில் எப்போதும் நடந்தது போலவே அரசியல் நடந்து வருமானால் பாபு வந்து என்னத்தைச் சாதித்து விட்டுப் போனார் என்று எனக்குப் புரியவில்லை. அவர் அவதாரத்தில் நமக்கு ஓர் இலாபமாவது வந்திருக்க வேண்டாமா? காந்தி வந்துபோன பிறகும், இன்னமும் அரசியல், பொருளாதார

இயல், சமூக இயல் ஆகியவற்றில் நம் சிந்தனையின் அடுக்குகள் அப்படி அப்படியே பண்டிருந்த மேனியே இருந்து நம்முடைய எல்லாப்புகழும், பொறுப்பும் படையாளிகள், போலீஸ், அரசாங்கம் தாம் என்ருகி விட்டால் பிறகு காந்தியைப் போல் ஒருவர் வந்தார்; வந்ததுபோல் போனுர் இவ்வளவு தானே நடந்தது விஷயம் என்ருகிறது. காந்தி வந்ததனுல் இலாபம் தான்என்ன நமக்கு?

இன்றைய விஞ்ஞானயுகத்தின் இன்றியமையாத் தேவையும், நம் பிரார்த்தனையும் இதுவே: கருணை கொஞ்சமாவது அரும்ப வேண்டும். அகிம்சை வெறும் பணிப்பெண்ணுக இருப்பதன்றி அரசியாகக் கொலுவிருக்க வேண்டும் என்பதே. வன்முறைச் சக்தி (தண்டச்சக்தி)யின் ஆட்சியில் அகிம்சை வாழவேண்டுமென்பது இந்த நிமிடம் வரை நடந்து வந்திருக்கிறது. பல பத்தாண்டுக் காலங்கள் கழிந்தாயிற்று. தண்டச்சக்தியின் ஆட்சி நடந்து கொண்டு தான் இருக்கிறது. அதன்வேடம் மாறியிருக்கிற தென்பது உண்மை. இப்போது மக்களாட்சி நடக்கிறது. ஆனுல் ஆட்சி தண்டச்சக்தியினதுதான். அகிம்சை எப்போதும் போல இருக்கிறது. ஆனுல் அதன்தரம் ஒருபணிப் பெண்ணின் நிலையில் இருக்கிறது.

போரில் செஞ்சிலுவைச் சங்கம் முதலியவற்றைச் சேர்ந் தோர் காயம்பட்ட போர்வீரர்களுக்குத் தொண்டு செய்ய விரைகின்றனர். அதில் கருணையும் பரிவும் இருக்கின்றன. ஆனுல் அது போரை ஒழிக்க இயலாது. அதற்குமாருக அது போரின் சுவையை அதிகப்படுத்துகிறது. போரின் பாவத்தை குறைப்பதன் மூலம் ஒருவகையில் போருக்கு ஆதரவாகக் கூட அமைகிறது. இந்தவகையானது பழங்காலத்துக் கருணை.

இதுவன்று காந்தி விரும்பிய கருணை. மனித சமூக அமைப்பையே உருவாக்கலாம், உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை மனிதனிடத்தில் உண்டாக்கவில்லை. ஓர் அரசி

போன்ற கருணையையே அவர் விரும்பினர். இனி மெல்ல மெல்ல' 'ஒறுத்தலாற்றல்' (தண்டச்சக்தி) வலிமைகுன்றி வந்து, பிறகு அது முற்றிலுமே உருமாறிப்போகும். ஒறுத்தலாற்றல் மெல்ல மெல்லக் குறைந்து வர சுதந்திரமான கருணையையும், சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட மக்கள் குலம் வளரும் தழைக்கும், நாம் இம்சைச்சக்திகளுக்கு எதிராக மாற்ருகத் தண்டச் சக்தியினின்று வேறுபட்ட மக்கள் சக்தி ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும். அகிம்சையை மலர் விக்கப் பட்டம் பதவி முதலிய வேற்றுமை பாராட்டமை வேண்டியிருக்கும்.

சிந்தனை என்று கருதுவதில் இன்றைய ராஜ நீதியை (ஆட்சி முறையை) முற்றும் மாற்ற வேண்டும் என்ற கருத்து வருகிறது. ஒரு புதிய சமூக நீதியை மலர்விக்க வேண்டி உள்ளது. அரசாங்கம்(அரசநீதி)என்ற சொல்லும் 'அரசாட்சி' என்ற கருத்தும் இருக்கும் வரை அதை ஆன்மீகமயமாக்குகிற காரியம்-'ஸ்பிரிச்சுவலைஸேஷன்' நிகழாது என்பதை நிச்சயம் புரிந்து கொள்ள வேண்டும். அதனுல் சமயமும் வலிமையும் குன்றும். அரச நீதியை (அரசியலை) சத்தியமயமாக்குவது ஒன்றே உபாயம். அதுவே அரசாங்கத்தைச், சமூக இயலைச் சார்ந்ததாதல் என்பதும்; 'நான் பிராமணன்' நான் இன்ன மொழி பேசுபவன்! 'நான் இன்ன சமயத்தைச் சார்ந்தவன் நான் இன்ன அரசியல் கட்சியைச் சேர்ந்தவன் என்றிவ்வாருன் உபாதிகளின் தலையைத் தளர்த்தியன்றி அஹிம்சையை மலர்விப்பதில் அறிவு வேலை செய்யாது. அஹிம்சையின் ஆற்றலை மலர்விக்க வேண்டுமாயின் எல்லாவிதமான பதவி வேற்றுமைகளினின்றும் விடுபட்டாக வேண்டும்.

அப்படி இல்லையென்ருல் இம்சையின் பிடியிலிருந்து இவ்விசுவம் விடுபடுவது நடவாது

மேற்கண்ட கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத வரைக்கும், அதைச் செரித்துக் கொள்ளாத வரைக்கும்

அல்லது சேரித்துக் கொண்ட பிறகும் இடையிடையே அப்படி இப்படியென்று வழிவிலகி ஏதேனும் செய்தாக வேண்டும் என்று தோன்றுவது நில்லாத வரைக்கும் இம்சையின் பிடியிலிருந்து இந்த விசுவம் விடுபடுதல் இயலாது. இதை அடைய நாமெல்லாம் உடலை வளைத்துப் பயில வேண்டியிருக்கும். அத்தகைய ஒரு யோகத்தால் உலகத்திலிருந்து இம்சை கொடுத்தாக வேரோடு பிடுங்கப்படும். அதற்கு காலம் வேண்டும். காலம் அதிகமானாலும் பரவாயில்லை.

ஆதலால்தான் "இந்த அரசியலைத் தூய்மையாக்க முயலாமல் இருக்கிறீர்கள்" என்று என்னை யாரேனும் கேட்கும்போது "இந்த அரசியலைத்தான் அழித்தொழிக்க அல்லவா விரும்புகிறேன்" என்று பதில் சொல்கிறேன். இந்த விஞ்ஞான யுகத்தில் அரசியலே காலாவதி ஆகிவிட்டது— "பாலிடிக்ஸ் இஸ் அவுட்—டேட்"

தன்னாட்சி வந்த பிறகு எல்லாக் காரியங்களையும் ஒரு புது. வழியில் நடத்துவது பற்றிக் காந்தியின் மனத்தில் தீவிரமான சிந்தனை நிகழ்ந்து கொண்டிருந்தது. சேவாகிராமத்துக்குத் தம்மைச் சேர்ந்தோர் எல்லோரையும் அழைத்து ஒரு கூட்டம் போட்டு அவர்களுக்கெல்லாம் புரியும்படி விளக்கிச் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்தார். அப்படியொரு யோகம் கைகூடாமற் போயிற்று.

பைபிளில் வரும் செய்தியொன்று பலர் அறிந்தது ஏசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த பிறகு அடக்கம் செய்தனர். பிறகு அவர் கல்லறையினின்று உயிர் பெற்றெழுந்து தம் சீடர்கள் சிலருக்குக் காட்சிகொடுத்து "நான் இப்போது கலிலேயாவுக்கு செல்கிறேன். நான் உங்களை அங்கே சந்திக்கிறேன் இங்கே அன்று" என்று அருளிச் செய்தார். முற்றிலும் அதுபோன்றதே காந்தியின் செய்தியும் அவர் தில்லியை விட்டாயிற்று. அவர் பட்டிதொட்டிகளுக்குப்போய்ச் சேர்ந்து விட்டார். "தில்லியில் என்னை அடக்கம்

செய்தனர்—அழவிட்டனர். அதுவே போதும். இனிமேல் எனக்கு அங்கே வேலையில்லை'' இவ்வாறெண்ணி அவர்பட்டி தொட்டிகளுக்குப் போய்ச்சேர்ந்து விட்டார். ''கிராமத்துக்கே திரும்புங்கள்''. இது வே காந்தியின் மந்திரமாயிருந்தது. ஆதலால்தான் அவர் தில்லியை விட்டுப் போனார்.

மரம் வெட்ட நினைப்பவன் அதில் ஏறி உட்கார்ந்து கொள்ள மாட்டான்

தன்னாட்சி என்று ஒன்று ஒருதரம் வந்து விட்டால் பிறகு அரசாட் ்டை ஆன்மீக மயமாக்குதல் என்பது ஆட்சி அதிகாரத்தை வெட்டி எறிவது என்பதுதான். இதையே வேறுவிதமாகச் சொல்வது. ஆனால் அதிகாரத்தைப் பரவலாக்குதல் என்று சொல்ல வேண்டியதாகும். இரண்டு வகைக்கூற்றும் சேர்ந்து ஒருமுழுப் பொருளையுணர்த்தும். ஒரே கூற்றால் பொருள் முழுமை பெறுவதில்லை. 'சுயராஜ்ய சாஸ்திரம்' என்று ஒரு சிறுநூலை எழுதியிருக்கிறேன் அதன் முன்னுரையில் உள்ள வாக்கியம் இவ்வாறு. ''நத்வஹம் காமயே ராஜ்யம்'' (நீயும் விரும்பாதே ஆட்சியை) அதிலேயே மற்றுமொரு வாக்கியம் உள்ளது. ''யதேமஹி ஸ்வராஜ்யாய'' (நமக்கு ராஜ்யம் வேண்டாம். நாம் சுயராஜ்யம் பெற முயலுவோம்) ராஜ்யம் என்றால் அரசாங்கத்தின் அதிகாரம்! ஆட்சியை நடத்துகிற அதிகாரம். ஆனால் சுயராஜ்யம் என்றால் ஒவ்வொருவருடையவும் அதிகாரம் ஒவ்வொருவருக்கும் அதிகாரம் தன்னுடையதாகி விட்டதுபோல் தோன்றும் போதுதான் எல்லோருடையவும் ஆட்சி அதிகாரம் வந்ததாகப்பொருள். இது முற்றும் வேறானதொரு செய்தி. அதற்குத் தன்னாட்சி என்றோ எல்லோரது ஆட்சி என்றோ பெயரிட்டுக் கொள்ளுங்கள். ஆனால் அது சமூக சியலே அன்றி அரசியல் ஆகாது. அந்தச்சமூக நீதியைக் கொண்டுவர அரசியலை அழிக்க வேண்டியிருக்கும். மரத்தை வெட்ட விரும்புபவன் மரத்தில் ஏறிஉட்கார்ந்து கொள்ளமாட்டான்.

ஆம்! ஒருகிளையை மட்டும் வெட்டுபவன் மரத்தில் ஏறுவான் என்பது சரியே. ஆனால் நமக்கோ மரத்தை அடியோடு வெட்டிச் சாய்க்க வேண்டியுள்ளது. ஆதலால் அரசியலில் இருந்து விலகி நின்று அதை அழிக்க வேண்டி இருக்கும். இந்தக்கருத்து பாரத நாட்டுக்கு மட்டுமன்று. உலகம் முற்றுக்கும் சொல்கிற செய்தி. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் கையில் அதிகாரம் சிக்கியிருக்கிறது. அதைப்பறித்து விடவேண்டும்; அதிகாரத்தைப் பரவலாக்கிவிட வேண்டும்.

காந்திச் சிந்தனையைப் போற்றுகிறவர்களுக்கு இதே குறிக்கோளாதல் வேண்டும். மக்களை விழிப்படையச் செய்வதும், அரசியலுக்குள்ள வலிமையைக் குறைப்பதுமே குறிக்கோள். மக்களின் ஆற்றல் விழிப்படைந்து அரசின் சக்தி குன்றியன்றி காந்தி கற்பனை செய்த சமூகத்தைத் தோற்றுவிப்பது நடவாது. சர்வோதயத்தை ஆதரிப்பவர்களின் புரட்சிக் குறிக்கோள் இதுவே என்பது கருத்து.

7 சத்தியாக்கிரகம்

எந்த நாடாயினும் சரி பிறர் கையில் சிக்கி விடுமாயின் ஒன்று, அந்நாட்டு மக்கள் யாவரும் ஒரேடியாய் அடங்கி ஒடுங்கி, ஒரு சொல் தானும் மூச்சுவிட முடியாதவர்களாகி விடுவர். அல்லது கலகக்கொடி உயர்த்தி எந்த வகையிலாவது, இயன்ற இடங்களிலெல்லாம்; முடிந்தபோதெல்லாம் தொல்லை கொடுக்கத் தலைப்படுவர். பல இடங்களில் இவ்விரண்டு எதிர் விளைவுகளுமே உண்டாகக் காண்கிறோம். ஆனால் இந்திய நாட்டில் ஆங்கிலேயரின் கை ஓங்கிய போது இவ்விரண்டுமே நடக்கவில்லை. அதன் எதிர் விளைவு, இவ் இரண்டும் அல்லாத மூன்றாவதோர் உருவில் வந்தது. அந்தக் காலத்தில் இங்கு தோன்றிய பெரியார்கள் அடங்கி ஒடுங்கிப் போவதை விரும்பவில்லை என்பது போலவே படைக்கலன் பூண்டு போரிடுவதையும் விரும்பவில்லை. அவர்கள் விரும்பியது மூன்றாவதொரு வழியாகும். இவ்வளவு பண்பாடு நிறைந்து, விரிந்து பரந்த ஒரு நாடு நம் கண் முன்னாலேயே வேற்று நாட்டுக்கு அடிமைப்பட்டுத் தொலைவதைக் கண்ட பிறகு, அதன் காரணத்தைப்பற்றிக்கருத்தூன்றி ஆய்தலே வேண்டும் என அவர்களுக்குத் தோன்றி இருக்கிறது. நம்பால் என்ன உண்டோ கேடுகள், குறைபாடுகள். அவற்றை உற்றுப் பார்த்து சோதித்து, குறைநிறைகள் தேர்ந்து அல்லவை தள்ளி ஆய்வு செய்தல் வேண்டும் என அவர்கள் துணிந்து இருக்கின்றனர். இப்படித்தான் நம்மிடையே 'உள்ளம் தூயது ஆக்குதல்' தொடங்கியுள்ளது. இழிந்து, வலிவற்றவர்களாகி, கோபத்தால் தம்மை மறந்து ஆங்காங்கே கலகம் செய்யவில்லை என்பதற்குக் காரணம் அவர்கள் ஆத்மீய ஆராய்ச்சியைத் தொடர்ந்தனர். அதில் ஈடுபட்டனர் என்பதே.

மிகப் பெரிய விஷயம் தான் இது. உலகில் எங்குமே இதைப்போன்றதோர் எடுத்துக்காட்டு கிடைப்பதாயில்லையே! ராஜாராம் மோஹன்ராய், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமண மகரிஷி, ஸ்ரீ அரவிந்தர், லோகமான்ய திலகர், நீதிபதி ரானடே, ரவீந்தர நாத தாகூர், மகாத்மா காந்தி ஆகியோர் போன்று, அந்தச் சிந்தனையின் எல்லையை எட்டிய பெருமக்கள் யாவரும் இக்காலத்தவரே. அவர்கள் சிந்தனையையே ஆய்வுக்குள்ளாக்கி, உலகச் சிந்தனைக்கு ஆக்கமும் வளர்ச்சியும் தரும் வகையில் தம் பங்கையும் வழங்கியுள்ளனர். சுதந்திரமில்லாத நாட்டினர் சிலர், சிந்தனைச் சுதந்திரத்தோடு இயங்கி, உலகத்திலேயே பல மாற்றங்களைத் தோற்றுவிக்கவல்ல சிந்தனையை உருவாக்குவர் என்றோ உலகின் சமூகச் சிந்தனை இயலுக்கு புதுப் புதுக் கருத்துக்களை வழங்குவர் என்றோ, புது ஊக்கத்தைத் தருவர் என்றோ சற்றுமே எதிர்பார்க்க முடியாது. ஆயினும் அப்படி இங்கே இவ்வாறு நடந்திருக்கிறதே. அரசியலடிமைப்பட்ட பாரதநாட்டின் சுதந்திரச் சிந்தனையாளர்களால் உலகத்துக்கு வழங்கப் பெற்ற கருத்துக்களில்—சிந்தனைப் போக்குகளில்—மூன்று, மிகவும் விழுமிய சிந்தனைத் தொகுதிகளாகும்,

பாரதம் வழங்கிய முப்பெரும் கொடைகள்

1) சர்வ சமய ஒருமைப்பாட்டை, சொல்லளவில் அல்லாது அனுபவத்தோடு ஒட்டிய சிந்தனையாக இராம கிருஷ்ண பரமஹம்சர் உலகுக்கு வழங்கினார். எல்லா சமயங்களிலும் நல்ல அம்சங்கள் உள்ளன என்றுதான் பேசுவோரும், எழுதுவோரும், பேசியும், எழுதியும் வந்திருக்கின்றனர். வெவ்வேறான சமயங்களின் மாறுபட்ட உள்ளியல்புகளை (வாசனைகளை) அவற்றின் இடம் அறிந்த சிந்தனையாலும், உள்ளார்ந்த முழு அன்புப் பார்வையாலும் அனுபவமாக மாற்றி, அவற்றின் அடிப்படைகளையே உணர்ந்து போதித்து, அவற்றின் உள்ளுறை ஆத்தும்தநின் உருவைத் தெளிந்து,

அடிப்படையில் ஒப்புமை உண்டு' ஒருமைப்பாடுண்டு, அவை யாவும் அத்துவிதம், வேறுவேறல்ல என்று வெளிப்படையாகச் சொன்னமை உலகத்துக்கு வழங்கிய மிகப் பெரிய கொடையே தான்.

2) இரண்டாவது, அரவிந்தரின் சிந்தனை. விஞ்ஞான யுகத்தில் இந்தச் சிந்தனை ஒன்றே நிலைபெறும்; வேறொன்றும் நிற்காது என்பதே என் கருத்து. இந்தச் சின்ன மனதைக் கடக்க, மீற, முடியாதவரை, அல்லது அதைக் கடந்த பிறகு பரமாத்துமம் என்பதைச் சுவைத்தறிய, அதற்குத் தொண்டு செய்ய, அத்தொண்டுக்காகக் கீழிறங்கிவர முடியாதவரை, உலகத்துக்கு உண்மையான தொண்டு செய்ய இயலாது. இப்படியொரு தீவிரச் சிந்தனையை அரவிந்தர் உலகுக்குத் தந்துள்ளார். அப்படியும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனத்தை வேரோடு களைந்து விடுவது என்ற கருத்தும் கற்பனையும் இங்கே வேரோடியவைதாம். யோகியர்கள் அதற்காக பலவகையில் முயன்றும் உள்ளனர். ஆனால் மனித சமுதாயம் முழுதிலும் இப்படியொரு முயற்சி நிகழும், அவ்வினம் அவ்வாறு முயலும், அப்போதுதான் மனித இனமே கடைத்தேறும் என்று பேசுகிறார் ஸ்ரீ அரவிந்தர்.

3) மூன்றாவது, சத்தியாக்கிரகம் பற்றிய கருத்தை—சிந்தனையை—வழங்கியவர் மகாத்மாகாந்தி. நம்மிடையே கருத்து வேற்றுமை உள்ள நிலையில், அதைத்தீர்க்க, "புற" வழிகளையும், உபாயங்களையும் பற்றியே நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் வரை, சண்டை, சச்சரவு, போர் போன்ற பருப்பொருளாகிய (ஸ்தூல) கருவிகளைக் கடந்தும் மீறியும் சிந்திக்காத வரை உலகத்தைத் தலையிட்டிருக்கும் விலங்குகள் அகலா; உலகத்தில் அமைதியை நிலைபெறவைக்கும் முயற்சிகள் கைகூடமாட்டா. இதற்குத்தேவை சத்தியாக்கிரகமே. இது காந்தியின்சிந்தனை.

முதன் முதலாக காந்தி தென்ஆப்பிரிக்காவில் சமூக மட்டத்தில் சத்தியாக்கிரகத்தைக் கையாண்டார் சத்தியாக்கிரகம் என்ற சொல்லும் கூட இந்த நிகழ்ச்சியிலிருந்து உருவானதே. இந்தச்சொல்லாக்கத்துக்கு முன் இம்முயற்சிக்கு 'ஆயுதம் இல்லாத எதிர்ப்பு' என்றுதான் பெயர் வழங்கிற்று. முக்கியமாக இந்தச்சொல் அர்த்தத்தை அனர்த்தமாக்கும் வகையில் அமைந்து விட்டது. அதனால்தான் சத்தியாக்கிரகம் என்ற சொல்லை ஆராய்ச்சி செய்து கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று. இவ்விரண்டு சொற்களுக்கும் உள்ள வேற்றுமையை காந்தியே கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார்.

1) ஆயுதம் இல்லாத எதிர்ப்பில் அன்பு என்ற பேச்சு இடம் பெறவில்லை. சத்தியாக்கிரகத்திலோ பகைமைக்கு இடமே இல்லை.

2) ஆயுதம் இல்லாத எதிர்ப்பு பலவிடங்களில் ஆயுதம் தாங்கிய எதிர்ப்புக்குப் பூர்வாங்கமாக அமைகிறது. சத்தியாக்கிரகத்தில் இவ்வாறு அமையாது.

3) ஆயுதம் இல்லாத எதிர்ப்பை வேண்டியவர்களுக்கும் அன்புடையோருக்கும் எதிராகக் கையாள முடியாது அன்பு உடையோர் பாலும் சத்தியாக்கிரகம் செய்தல் இயலும்.

4) ஆயுதம் இல்லாத எதிர்ப்பில் எதிராளிக்குத் துன்பம் தருதல், தொல்லை தருதல் ஆகிய போக்குகள் உள்ளன. சத்தியாக்கிரகத்தில் பிறருக்குத்துன்பம் விளைப்பதென்பதற்கு இடமே இல்லை.

இவற்றைச் சிந்தித்தோமானால் 'சத்தியாக்கிரகம்' ஒரு "மையவழி" என்பது புலனாகும். "சத்தியாக்கிரகம்" எனின் சத்தியத்தின்பால் அகிம்சை சார்ந்த உறுதிப்பாடு, விருப்பம் சத்தியாக்கிரகம் என்பது அகிம்சையைச் செயலாக்குவதே என்பது தெளிவு.

பின்னணி ஆன்மீகம்; இன்றியமையாமை வரலாற்றின் பால் பட்டது

பாரதநாட்டின் ஆன்மீகப் பின்னனி காந்திக்குக் கை கொடுத்துதவியது. இந்நாட்டின் பண்பாட்டுக்கு உகந்ததாக அகிம்சையைப் பற்றிய விஞ்ஞான பூர்வமான ஒரு சிந்தனைத் தொகுதியை அவர் வழங்கினார். இந்நாட்டில் ஆன்மீக நிலைகளைப்பற்றிய ஆராய்ச்சி முன்பும் நடந்திருக்கிறது. இப்படி நடந்திருக்கவில்லை என்றால் மக்கள் காந்தியின் அகிம்சை பற்றிய பேச்சுக்குச் செவிசாய்த்திருக்க மாட்டார்கள். அகிம்சை ஒன்றினால் மட்டும் ஒரு சாம்ராஜ்யம் அடியோடு அழிந்ததாக வரலாற்றில் ஓர் எடுத்துக்காட்டுதானும் இல்லை. ஆன்மீகப் பின்னணி ஒன்றிருந்தாலேயே அகிம்சையைப் பற்றிய சிந்தனையை மக்கள் ஏற்றுக்கொண்டனர். காந்திச் சிந்தனையின் விதை முளைவிட இந்நாட்டின் 'மனபூமி, பக்குவமாய் இருந்தது. இந்நாட்டின் சூழலிலேயே—அதன் காற்றுமண்டலத்திலேயே—இந்த ஆன்மீகப்பாங்கு உண்டு. உயிர்களின்பால் பரிவும் உயிர்ப்பினம் யாவற்றுள்ளும் ஆத்தும் உள்சாந்துறைகிறது என்ற நம்பிக்கையும் இந்நாட்டில் உள்ளன. ஆதலால் காந்தியின் செயல் இந்நாட்டில் பயன்தருவதாயிற்று. இப்படிச்சொல்வது காந்திக்கு எவ்வளவு பெருமை என்பதைவிட இந்நாட்டுக்குப் பெருமை என்பதே சிந்தனைக்கு உரியது. காந்தி ஒரு கருவியாய் அமைந்தார். அவர் இல்லாவிட்டால் மற்றொருவர் தோன்றித்தான் இருப்பார். எப்படியாவது இந்த ஆற்றல் வெளிப்பட்டே இருக்கும். வெளிப்பட்டது இந்நாட்டுக்கு இயல்பான அகிம்சைச் செயலாற்றலே எனலாம்தான். அவ்வாறு வெளிப்படுதற்கு ஒத்ததொரு சூழல் இங்கிருந்தது; அதனால் அவர் நமக்குக் கிடைத்தார் என்பதுமே பொருந்தும்.

வேறு எந்த நாட்டிலும் நிகழாத ஒன்றை ஆங்கிலேயர் இந்நாட்டில் செய்து முடித்தனர். இந்நாட்டுக் குடிகளுக்கு ஆயுதம் தாங்கும் உரிமை மறுத்தனர். இப்படி ஆயுதம்

அற்றோருக்குள்ள வழி இரண்டே. ஒன்று என்றென்றைக்குமாக அடிமைத்தளையை ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது பரம்பரையாக வந்த ஆயுதங்களின்றும் முற்றும் வேறுபட்ட புதியதொரு ஆயுதத்தைக் கண்டு பிடிக்கவேண்டும். இப்படி வரலாறு தோற்றுவித்த ஒரு தேவையும் இருந்தது. கடவுள் சித்தம் எனும் படியாக காந்தி என்றொருவர் நமக்குக் கிடைத்தார். ஆன்மீகத்தின் ஆற்றலையே கையாண்டார். வேற்றுநாட்டரசோடு ஒத்துழைக்க மறுத்து விடுங்கள். போதும் அந்த அரசு தானகவே இற்று வீழும் என்று நமக்கு போதித்தார்.

காந்தியின் அகிம்சை அல்லது சத்தியாக்கிரகத்தின் சிறப்பாக, அதை அவர் சமூக இயலிலே புகுத்திக் கையாண்டார் என்பதைச் சொல்லலாம் தான். பலர் அதைத் தனி வாழ்க்கையில் மட்டும் கையாண்டனர். அவர்களினின்று அதுகாறும் வேருக, ஒரு தனிதத்துவம் வாய்ந்ததாக காந்தியின் சிந்தனை அமைந்தது என்பது ஒரு கருத்து. இந்த வேற்றுமையை பல வகையிலே புதியதாய் அமைந்த ஒரு சூழலின் விளைவு என்பது மற்றொரு கருத்து. ஒரு யுகத்தில் நமக்குத் தேவை என்றொன்றும், இயல்வது இவ்வளவே என்றென்றும் இருக்கலாமல்லவா. அந்த அந்தக் காலத்து மஹாபுருஷர்களுக்கு இவை எவை என்பது தெரிந்திருக்கும். ஒரு பரந்த அரங்கில் இந்த அளவுக்கு அகிம்சையைக் கையாளும் வாய்ப்பு நம் முன்னோருக்கு இல்லாமல் போயிற்று. அந்தத் தேவை நம் காலத்தவருக்கு வந்துள்ளது. இதற்குக் காரணம் விஞ்ஞானமே. விஞ்ஞானம் பெருமளவுக்கு வளராத காரணத்தால் நம் முன்னோர் காலத்து உலக மக்கள் நெருங்கி வருதல் சாத்தியமில்லாதிருந்தது இப்போது நெருங்கி வந்துள்ளனர். ஆதலால் நம் முன்னோர் காலத்தில், ஆன்மீகத்தைப் பயன்படுத்துதல், தனியார் கையாள்வதாகவும், குடும்பம் என்னும் எல்லையில் நின்று விடுவதாகவும் அமைந்தது. இந்த ஆத்துமச் சக்தியை பரக்கப்

பயன்படுத்துதலும் இயலும் என்று கண் கூடாகக் காட்டி நம்மை உணரச் செய்தவர் காந்தியே. அதை இப்படி நடத்திக் காட்டும் ஒருவாய்ப்பை இறைவன் பாரத நாட்டிற்கு அருளினர். அது காந்தியின் வாயிலாக நிறைவேறிற்று.

சத்தியாக்கிரகம் ஒரு வாழ்க்கை முறை

சத்தியாக்கிரகம் நாம் எப்போதும் கையாண்டு வர வேண்டிய ஓர் ஆற்றல். பல சந்தர்ப்பங்களில் சத்தியாக்கிரகம் என்பதன் பொருளை நாம் சரியாக உணர்வதில்லை சத்தியத்தோடு ஒட்டி இருத்தலே சத்தியாக்கிரகம். வாழ்க்கை முழுவதையும் சத்தியாக்கிரக நிஷ்டையாக அமைத்துக் கொள்ளுதலும் எவ்வளவு துன்பம் வந்தாலும் நாம் சத்தியம் எனக் காண்பதில் உறுதி பூண்டு நிற்றலுமே சத்தியாக்கிரகம். அதற்காக எவ்வளவு துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள நேரினும் பரவாயில்லை. ஆனால் விஷயம் இதோடு நிற்பதன்று. நாம் துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வும் இருத்தல் கூடாது. சத்தியத்தைப் பாவிக்கிறவர்களுக்கு அந்த முயற்சியே ஆனந்தம்.

இவ்வாறு ஆபத்தின் போதும் சத்தியத்தில் ஊன்றி நிற்கும் ஆற்றல் மக்களுக்கும் இருத்தல் வேண்டும். இம்சையிலிருந்து நம்மைக் காக்கும் ஆற்றல் இதொன்று தான். முக்தி தருமவற்றுள், உலகுக்காகச் சத்தியாக்கிரகம் செய்வதையும் விட மற்றொன்று இல்லை கருவி என்றே நான் கருதுகிறேன். எந்தச் சமூகத்திலாயினும் சரி, எந்தப்பிரச்சினையாயினும் சரி, அவற்றைச் சிக்கறுக்க இந்த ஆற்றலைக் கையாண்டால், அம்முயற்சி கைகூடும். மாணவர்களிடையே இந்தச்சத்தியாக்கிரகச் செயலைத் தோற்றுவிக்க அவர்கள் பாடத்திட்டத்திலேயே இது இணைக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு செயல்முறைக் கல்வி என்று ஏதோ கற்பிக்கிறோம். அவர்களிடையே கட்டொழுங்கின்பால் விருப்பத்தை வளர்க்க முயலுகிறோம். அதற்குமேல் நாம் ஒன்றும் அவர்

களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. கட்டொழுங்கு ஐயமற ஒரு சிறந்த பண்புதான். அனால் அதுவே நற்பண்புகளின் தொகை என்பதோ, பண்புகளில் சிறந்ததென்பதோ இல்லை. யாவற்றுள்ளும் சிறந்த குணம் யாது என்பதற்கு விடை காணுதல் கடினம். ஆனால் கீதையில் 'அபயம்' எனப்பெயர் தரப்பட்டுள்ளது. ஆதலால் அஞ்சாமை என்ற தூண்மீது தான் கல்வி நிறுவப்படுதல் வேண்டும். சமூக அமைப்பும் அரசியல் நடைமுறையும் இவ்வடிப்படையில் தான் அமைதல் வேண்டும். அஞ்சாமை வந்தன்றி சத்தியத்தின்பால் உறுதி பூணுதல் மலராது. சத்தியத்தில் ஊன்றி நிற்கும் ஆற்றல் கைவருவதும் இல்லை.

அஞ்சாமை என்பதன் பொருள் நாம் யாரையும் கண்டு அஞ்சுவதில்லை என்பதோடு யாரையும் அச்சுறுத்தலும் இல்லை என்பதாகும். இரண்டும் சேர்ந்ததே அஞ்சாமை. அப்படித் தான் இவ்வுடலினின்றும் தன்னை வேறாகப்பார்ப்பதும் அஞ்சாமையாகிறது. தன்னையே தன் உடலினின்றும் வேறாகப் பார்ப்போன் பிறரையும் அவ்வண்ணமே வேறாகப்பார்ப்பான். அக்காரணம் பற்றியே அவன் யாருக்கும் அடங்கிப்போவதில்லை; பிறரை அடக்க முயல்வதும் இல்லை. அச்சம் இல்லாதவன் பிறரை அஞ்சச் செய்வதும் இல்லை. தன் உடலினின்றும் தன்னை வேறாகக் காணும் இந்த ஆன்ம ஞானமே சத்தியாக்கிரக ஆற்றலின் தூண்கள்—அதன் இருப்பிடம். உண்மைக்காக வேண்டி துன்பத்தைத் தாங்கவேண்டி வருகிறபோது மானத்தையும் தழுவிக்கொள்ள நேரிடுகிறது. பரிபூரணமான அஞ்சாமையை ஆன்மஞானத்தின் மீதே எழுப்புதல் இயலும்.

சத்தியம், அகிம்சை, சமத்துவம்

சத்தியாக்கிரகத்தில் அகிம்சையின் பெருமையும் தெளிவாகத் தெரிகிறது. எதிரெதிராக நிற்கும் பகைக்கட்சியினர் இருவருமே சத்தியத்தின் பேரால்தான் போராடுகிறார்கள்

இருவருடைய சத்தியத்துக்கும் போட்டி. இருவருமே தத்தம் பக்கம் வெற்றி பெறவேண்டும் என்று மனதில் பக்தியோடு பிரார்த்தனை செய்து மன்றாடுகின்றனர், —"கடவுளே! என் எதிரியை ஒழித்தருள்" — என்று இவ்வாறு மனமுருகி இறைவனிடம் இறைஞ்சிய, பரிவுணர்ச்சி மிக்க கிறிஸ்தவர்களை கடந்த இரண்டு பெரும் போரின் போது ஆங்காங்கே காணக் கிடைத்திருக்கிறதே. ஆதலால் நியாயம் யார் பக்கம் என்பதைத் தீர்மானிக்கிற காரியத்தை கடவுள் கையில் ஒப்படைத்துவிட்டு அகிம்சையைக் கையாள்வதே பயனுடையதாகும். ஆம்; எப்போதாவது இருதரப்பாரும் அகிம்சையைக் கையாண்டு, ஒருவருக்கெதிராக மற்றவர் உண்ணுநோன்பு, தின்னுநோன்பு என்றேதாவது ஒன்றைக் கருவியாகக் கொண்டு போராடுவதாகலாம். அப்போது சத்தியம் அகிம்சை இரண்டையும் ஒதுக்கிவிட்டு சமத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எங்கே சமத்துவம் உண்டோ அங்கேதான் சத்தியம்; அங்கேதான் அகிம்சையும். இதை உரைகல்லாகக் கொண்டுதான் மேற்கண்ட நிலையில் சோதனை செய்து பார்க்க வெண்டும் பார்க்கப்போனால் சத்தியம் அகிம்சை சமத்துவம் ஆகிய மூன்றும் சிந்தனையில் ஒன்றாயிணைந்தவை என்பதே உண்மை.

யாருக்கெதிராக சத்தியாக்கிரகம் செய்யலாம் என்பது வியாக்கியானத்துக்குரிய விஷயமாக இப்போது முளைத்து இருக்கிறது. சத்தியாக்கிரகத்தில் மாறுபாடு வேறுபாடு என்றெல்லாம் ஒன்றும் இல்லை. பார்க்கப்போனால் யாருக்கு **எதிராக, எதிர்ப்பாக** என்றல்ல யார் **முன், யாரோடு** என்பது தான் விஷயம். சத்தியாக்கிரகத்தில் முக்கிய விஷயம் எதிரில் உள்ளவனுடைய மனமாற்றம் தான். நம் எண்ணத்தில் தூய்மையை எதிரில் உள்ளவர் உணரும் வகையில் எடுத்துச் சொல்லி, அவர் தொண்டை வழியாக அச்சிந்தனை இறங்கும் படிச்செய்தல்; அவர் தன் கட்சியை,—சிந்தனையை— நம்மோடு பரிவர்த்தனை செய்து கொள்ளும் போது, நம் சிந்தனையில்

ஏதேனும் குறை இருக்கக் கண்டால் அதை ஆராய்தல்;—இவற்றின் மொத்தமே உண்மையான சத்தியாக்கிரகத்தின் உரு. தன் சுயநலத்தாலோ கோபம் அல்லது மயக்கத்தினுலோ எதிரில் இருப்பவர் செவிசாய்க்க அல்லது புரிந்து கொள்ள மறுக்கலாம். அதனுல் ஏற்படுகிற இடைக்காலத்தில் துன்பம் பொறுத்தல் முதலிய அஹிம்சைக் கூறுகளைக் கையாளலாம்; அதாவது அவ்விடைக்காலம் தவத்துக்கு வாய்ப்பளிக்கிறது. இந்நடவடிக்கை வாயிலாகவோ நடவடிக்கை இன்றியோ அவர் நம் சிந்தனையைப் புரிந்து கொள்ளும் மனநிலையை அடைந்த பிறகுள்ள வேலையும் சிந்தனையின்பால் பட்டதே யாகும். ஆதலால் சிந்தித்தல், அச்சிந்தனையை இடைவிடாது சொல்லிக் கேட்பித்தல், — செலிச் சொல்லல், — பிறர் சிந்தனையைக் கேட்க எப்போதும் சித்தமாயிருத்தல் இவையே சத்தியாக்கிரகத்தின் முக்கியமான உறுப்புக்கள். தலையும் கடையும் சிந்தனை; இடையும் சிந்தனையே. இது சத்தியாக் கிரகத்தின் அன்ருடக் கடமை—'நித்திய தர்மம்'. முதலும் கடைசியும் சிந்தனை இடையே அஹிம்சை நோன்பு—இது சத்தியாக்கிரகத்தின் 'நெருக்கடி நடைமுறை'—ஆபத்தர்மம்' —என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

சத்தியாக்கிரகம் என்ருல் இடைஞ்சல் விளைப்பது என்று பொருளில்லை

எப்போதாவது சத்தியாக்கிரகம் ஆரம்பமாகி இருக்கிறது என்று கேள்விப்பட்டால் உடனே மனதில் காந்தி தோன்ற வேண்டும்; ஒரேயடியாய் ஆனந்தம் நிரம்ப வேண்டும். இன்ருே அதற்கு நேர்மாருக ஒவ்வாத எதிர் வீச்சுக்கள் முன்னிட்டு நிற்கின்றன. சத்தியாக்கிரகப் பிரகடனம் செய்தவுடன் மக்கள் மனதில் அச்சம் தலைதூக்குகிறது. ஒரு சிலர் அதற்குப் பழிவாங்கும் அல்லது அதை அடக்கும் சிந்தனையில் இறங்குகின்றனர். போருக்கெதிராகக் கிளம்பும் எதிர்ப்புப் போலவே சத்தியாக்கிரகத்துக் கெதிராகவும் கிளம்புகிறது. ஆனுல் சத்தியாக்கிரகத்தின் உருவமே அப்படியன்று. அதன்

இலக்கணம் போரினின்றும் முற்றும் வேறு. போரில் ஒரு பக்கம் தோற்கிறது, மற்றொரு கும்பல் வெல்கிறது. ஆனால் சத்தியாக்கிரகத்தில் இரு தரப்பாரும் வெற்றியே பெறுகின்றனர். போரில் ஒவ்வொரு தனி மனிதனும் எதிர் தரப்பில் உள்ள ஒவ்வொருவனிடமும் பகைமை கொள்கிறான் ஆனால் சத்தியாக்கிரகத்தில் ஒவ்வொருவனும் தன் எதிரியோடு இணைந்தே நிற்கிறான். அறிவை மயக்கும் திரை விலகுகிறது. அறிவு சிந்தனையால் தூண்டப் பெறுகிறது. போரில் சிந்தனை மலைப்பெய்துகிறது; ஆனால் சத்தியாக்கிரகத்தில் துணிவோடு தத்தம் சிந்தனையை எடுத்துரைக்க முடிகிறது ஒரு வகையில் உணர்த்த முடியவில்லையென்றால் மற்றொரு வகையில் உணர்த்துதல் எவ்வகையாகச் சொன்னால் மட்டும் தான் புரியுமோ அவ்வகையிலே திறம்படச் சொல்லி விளக்குதல் —இவையே சத்தியாக்கிரகத்தின் மிக உயர்ந்த, மிகத் தூய உருவமாகும். ஞான சக்தியின்பால் விசாரத்தின் ஆற்றலின் பால் நாம் நம்பிக்கை வைக்கிறோமல்லவா அதன் பெயர் தான் சத்தியாக்கிரகம். சத்தியாக்கிரகம் என்பது ஏதோ இடைஞ்சல் விளைவிக்கிற காரியம் என்பதோ நெருக்குகிற, அச்சுறுத்துகிற காரியமோ அன்று.

கைத்துப்பாக்கியைப் பின்னுக்கிழுத்துக் கொண்டது போல்!

இப்போதெல்லாம் உண்ணாவிரதம் — 'தின்னா' விரதம் என்பதையெல்லாம் சத்தியாக்கிரகம் என்றுபேசுவது வழக்கில் வந்துள்ளது. இது தாளத்தை பலமாகத் தட்டி, உரத்த குரலில் கத்திப்பாடிப் பஜனை பண்ணுவதே பக்தி என்று பேசுகிற கணக்குத்தான், மேற்கண்டவற்றை சத்தியாக்கிரகம் என்பதும் தூக்கத்தை வேண்டுமானால் கெடுக்கலாம். தூங்காமலிருப்பதுவே பக்தி என்றாகி விடுமானால் உலகெங்கும் பதினாறு மணி நேரம் பக்தி தான் நடந்து கொண்டு வருகிறது என்று சொல்ல வேண்டியிருக்கும். தாளம் தட்டுவது பக்தியின் அறிகுறி அல்ல என்பதோடு நிற்கவில்லை. அக்கம் பக்கத்

தாருக்கு அது தொல்லை கொடுக்குமானால் அது பக்திக்கு எதிர்மறையான செயலுமே ஆகலாம். உண்ணா நோன்பு துன்பம் பொறுத்தல் முதலியவை ராஜஸ, தாமஸ குணங்களால் தூண்டப்படுங்கால் அவை சத்தியாக்கிரகத்துக்குப் பதிலாக துராக்கிரகச் செயலாகித் தீரும் ஒருவருக்கு எதிராக நீட்டிய கைத்துப்பாக்கியைப் போன்றதாகிவிடும்.

பல்வேறு பகுதிகள், மொழிகள் இனங்கள் பழக்கங்கள் சமயங்கள் என்றிவ்வாறமைந்திருக்கும் இவ்வளவு பெரிய நம் நாட்டில் எண்ணிறந்த பிரச்சினைகள் ஆங்காங்கே தோன்றி தொல்லை தருவதாகலாம். மக்களில்ஒவ்வொரு தரப்பாருக்கும் உள்ள இடைஞ்சல்கள் துன்பங்கள் ஆகியவை கணக்கிலடங்கா. ஆங்காங்கே அவை பெரும் பிரச்சினையாக உருவாகி ஒவ்வொருவரும் அரசுக்கெதிராக உண்ணாநோன்பு இருப்பது என்று தொடங்கி விட்டால் அது அமைதியைக் குலைப்பதாகும் மேலும் இப்படி ஒவ்வொரு உண்ணாவிரதத்துக்கும் அரசு வளைந்து கொடுத்துக் கொண்டுவந்தால் அது அரசு என்ற பெயருக்கே தகுதியற்றதாகி விடும்.

நாட்டுக்கு சுதந்திரம் வந்தாயிற்று. ஜனநாயகமுறைப் படி ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. மக்களை நெருங்கி, தத்தம் கருத்துக்களைப் பிரசாரம் செய்து மக்களை இணங்கச் செய்ய ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. அந்தச்சுதந்திரத்தை விட்டு விட்டு, உண்ணாநோன்பு மேற்கொள்வது முறையன்று. முதலில் உங்கள் சிந்தையை மக்கள் உணரச் செய்யுங்கள். வன்முறைக்கான போர்க்கருவிகள் கையில் இல்லை என்ற நிலையில் உண்ணாநோன்பு சிறந்ததொரு போர்க் கருவி என்று கண்டுகொண்டதால் அதுவே அன்றாடக்காரியமாகி விடுவது உசிதம் அன்று. அது குற்றமும் ஆகும். சத்தியாக்கிரகம் ஆளை மிரட்டுகிற காரியம் அன்று. அது அன்பின் உச்சியில் இருப்பது. 'எதிரியை அடித்து நொறுக்க வழியில்லை; சரி நட! உண்ணாநோன்பை மேற்கொள்வோம்' என்கிற காரியம் அன்று.

பொறுமை சத்தியாக்கிரகத்தின் இயல்பு என்பதன்று

ஒரு சிக்கல் உண்டாகி இருப்பதாகவும் அதில் உண்மை என்பக்கலில் இருப்பதாகவும் எனக்குத் தோன்றுகிறது என்றும் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் என் எதிர்த்தரப்பினன் நான் சொல்வதொன்றையும் கேட்பதாக இல்லை. தொடங்கி விட்டேன் சத்தியாக்கிரகத்தை — சத்தியாக்கிரகமென்றால் உண்ணாமை! உடனே எதிர்த்தரப்பினனும் உண்ணாமலிருக்கத் தலைப்படுகிறான். இந்நிலையில் உண்மை யார் பக்கலில் இருப்பதாகத் தீர்மானிப்பது? உண்ணாமலிருக்கும் ஆற்றல் என்பால் சற்றே குறைவு என்றும் மாற்றானுக்கு அது கூடுதல் என்றும் வைத்துக்கொள்வோம். அப்போது அவன் பக்கலில் தான் உண்மை இருக்கிறதென்று முடிவு கட்டுவதா என்ன? பட்டினி கிடக்கும் வல்லமையின் பேரில்தான் சத்தியத்தைத் தீர்மானிப்பது என்றால் மற்போர் செய்யும் ஆற்றலின் பேரில் ஏன் செய்தல் தகாது? எதிர் தரப்பினன் ஜைனசமயத்தினன் ஆகஇருந்து விட்டால் என்னைத் தோற்கடித்தே தீருவான்— அச்சமயத்தாருக்கு உபவாசம் இருந்து பழக்கம். உண்ணா நோன்பு விஷயத்தில் அவன் என்னை வெற்றிகொண்டு விடுவான். உண்ணாநோன்பின் ஆற்றலை அடிப்படையாக வைத்து அவன் முன் நான் நிற்கவே முடியாது. இது காரணமாக என்பக்கலில் சத்தியம் இல்லை என்றும் அவன் பக்கலில் தான் இருக்கிறது என்றும் முடிவு கட்டுவது சரியாகுமா? அவன் பொறுமையுள்ளவன் என்பதுமே உறுதி; துன்பம் தாங்க வல்லான்என்பதும் தெளிவு. பொறுமையாளன் என்றால் உண்மையாளன் என்று எங்கே பொருள் சொல்லி இருக்கிறது? யார் கையில் போர்க்கலன்கள் மிகுதியோ அவர் பக்கலில்தான் சத்தியமும் என்று சொல்லலாகாதல்லவா? பொறுமையில் அல்ல சத்தியாக்கிரகத்தின் ஆற்றல் சத்தியாக்கிரகத்தில் பொறுக்க வேண்டியவை வந்தால் அவற்றைத் தாங்கிக்கொள்ளச் சித்தமாய் இருக்க வேண்டும் என்பது வேறு விஷயம். ''துன்பம் பொறுத்தல் ஒன்றையே ஆயுதமாகக்

கொள்வது என்று வந்துவிட்டது; ஆதலால் நான் இதோ துன்பம் தாங்குகிறேன்' என்பது சரியன்று. உண்ணுநோன்பை எதிரியைத் தோற்கடிக்கும் ஒரு பீரங்கியாக்கி அதை அவன் மேல் திருப்புவது என்பதெல்லாம் சத்தியாக்கிரகத்தின் இலக்கணமன்று. துன்பம் பொறுக்க நேரலாம் என்பது ஒன்று, துன்பம் பொறுப்பேன் என்பதுவேறு. சத்தியத்தை வலியுறுத்த துன்பம் தாங்குதலை ஒரு செயல்திட்டமாகக் கையாளுவது பொருந்தாது. சத்தியத்துக்கு உறுதிதரும் ஆற்றல், விசாரத்துக்கும் சிந்தைக்கும் அன்றி மற்றென்றுக்கும் இல்லை.

மேற்கூறியதன் பொருள், சத்தியாக்கிரகத்தில் உண்ணுநோன்பு இருக்கும் வாய்ப்பே உண்டாகாது அல்லது உபவாசத்துக்கு உரிய இடமே அதில் இல்லை என்பதன்று. உண்ணுநோன்பு சத்தியாக்கிரகத்தின் ஓர் உயர்ந்த கருவி என்றே கருதுகிறேன். இந்தக்கருவி இத்தகையதாக இருப்பதாலேயே அதைத்தக்க வழியில் கையாண்டால்தான் அது பயன் தருவதாகிறது. எதிர்பாராத விதமாக அரசு ஒரு தவறான வழியில் இறங்கலாம்; அல்லது மக்கள் செவிசாய்க்கச் சித்தமில்லை என்று நேரலாம், தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம், என்ற நிலையில் மிகுந்த மனத்துன்பம் உண்டாகி, சான்றோர் இறைவனிடம் மனமுருகி வேண்டுவதற்கு உண்ணுநோன்பை மேற்கொள்வதுண்டு. இதுபோன்ற உண்ணுநோன்பு தம்பட்டம் அடிக்கிற காரியமாக இராது. அன்பின் உச்சநிலையிலுள்ள ஒரு செயலாக அது உருக்கொள்ளும்.

காகம் மயிலிறகை ஒட்ட வைத்துக் கொண்டு மயிலாதல் இயலாது

காந்தி அடிகள் தம்முடைய சத்தியாக்கிரகத்தில் உண்ணுவிரதத்தின் உதவியையும் நாடினார் என்பதை மறக்க வேண்டாம். ஆனால் அவர் எவ்வளவு பெரியவர்? அவர் எவ்வளவு தொண்டாற்றியவர்? இதயத்தின் வியாகூலத்தை

துன்பத்தை வெளிப்படுத்த உண்ணு நோன்பைக் கையாண்டார். அன்பு, பரிவு, சமத்துவம் ஆகியவற்றின் சின்னமாக உண்ணுநோன்பு அமையும் போது அது ஆக்கமுடையதாகும். அத்தகைய சூழலில் அது தக்கது என்றும் கருதப்படும். பக்தி மிக்கோர் தாளங்கள் தட்டுவதைப் பார்த்து நாமெல்லோரும் தாளங்களைத் தட்டி முழக்கத் தலைப்பட்டோமானால் கொஞ்சமாவது பக்தர்களாக மாற முடியுமா? ஜால்ராவைத் தட்டுவதால் இறையன்பு உண்டாவதில்லை. இறையன்பின் வசமாகிவிட்ட நிலையில் ஜால்ராவைத் தட்டும் போது இறையன்பு வெளிப்படுகிறது. ஆனால் நாம் ஜால்ராவே பக்தியின் தந்திரம்—'டெக்னீக்'—என்று நினைத்து விட்டோமானால் அது தவறாகிப் போகும். இறையன்பு மிக்கோர் கூத்தாடுகின்றனர், பாடுகின்றனர். ஆனால் கௌரங்கபிரபு ஆடுவதற்கும் பிறர் ஆடுவதற்கும் வேற்றுமை இருக்கத் தானே செய்கிறது. சங்கரன் 'ஆடினால் அது தாண்டவ நிருத்யம் அவன் பூதகணங்கள் ஆடினால் அது 'பிசாச்ய நிருத்யம்' என்று—பேய்க்கூத்து — சமஸ்கிருதத்தில் ஒருசொல் வழக்கு உண்டு. கூத்துக்கும், கூத்துக்கும் இடையே கூட வேறுபாடு. இரண்டின் பரிணாமவளர்ச்சியும் வெவ்வேறு. இதுபோலவே, உண்ணாவிரதம் கருணை முதலியவற்றின் இயல்பான பரிணாமமாக அமைகிற போது தான் அதன் தோற்றமும் விளைவுகளும் அன்பு, பரிவு ஆகியவற்றினின்றும் வேறுபடுவதில்லை.

சத்தியாக்கிரகம் நாள்தோறும் மலர்ச்சி பெற்று வரும் ஓர் இயல்

இவ்வாறு சத்தியாக்கிரகத்தின் பல்வேறு கூறுகளைப் பற்றியும் சீரிய விழுமிய சிந்தனை நிகழ வேண்டும். மெல்லிய நுட்பத்தையெல்லாம் சலித்தெடுத்தாக வேண்டும். அதை மேலும் நாம் வளர்த்தாக வேண்டும். ஆண்டாண்டுகளாக நான் இதைப்பற்றிச் சிந்தித்து வருகிறேன். சில கருத்துக்கள் தோன்றியதும் உண்டு. ''சத்தியாக்கிரகம்

நாள்தோறும் வளர்ந்து வரும் ஓர் ‘எண்ணியல்’ — நூல் —’’ என்று காந்தி எப்போதும் சொல்வதுண்டு. இந்த இயலை நாம் இதுகாறும் உருவாக்க இயலவில்லை. அது மெல்ல மெல்ல உருவாகி வரும்’’ என்று அவர் சொல்லுவார். அதன் காரணம் அவர் நெடுநோக்கு, புரட்சிச் சிந்தனை ஆகியவை உடையவர் என்பதாகும்அவர். வாழ்ந்த காலத்தில் அதன் எல்லைகளை நமக்குக் காட்டி வந்தார். வருங் காலத்தில் அது எப்படி எப்படி வளரும் என்பதைப் பற்றிய ஒரு காட்சியும் அவருக்கிருந்தது. அதனால் தான்‘ காந்தியம்’ என்றொன்று இருத்தலாகாது, இருத்தல் இயலாது. காந்தியம் என்ற சொல்லே மிகத் தீயது—விஷத்தன்மையுடையது என்று அவர் சொல்லுவார். ஏன் எனில் காந்தி என்னும் பெயரோடு சத்தியாக்கிரகம் என்ற சொல்லையும் இணைத்த லால் அதற்கு ஏதேனும் அதிகப்படி செல்வாக்கு உண்டாகு மானால் அந்த அளவு சத்தியாக்கிரகத்துக்கே ஓர் எல்லை கட்டி விட்டது போலாகும். ‘‘காந்தி’’ என்ற சொல், ‘‘சத்தியாக்கிரகம்’’ என்ற சொல்லுக்கு அடைச்சொல்லாக அமைந்து அதற்கு எல்லை கட்டிவிடும். ஆதலால் அவ்விரண்டு சொற்களையும் இணைக்காதீர்கள். காந்தி என்று ஒருவர் இருந்த வரலாறே வேண்டாம். சத்தியாக்கிரகத்தை ஒரு சிந்தனை மரபு என்றே கொள்ளுதல் வேண்டும். இவ்வழியில் சிந்தனை இயங்குமாயின் சத்தியாக்கிரக இயலின் வளர்ச்சிக்கு மிகுந்த உதவியும் ஆக்கமும் உண்டாகும்.

ஒன்றை நாம் எல்லோரும் செவ்வனே புரிந்து கொள்ள வேண்டும். சத்தியாக்கிரகம் காந்தியின் காலத்தில் இருந்த அதே உருவில் இன்றும் இருத்தல் இயலாது. காந்தியின் காலத்துக்கும் இன்றைய காலத்துக்கும் இடையில் பெரிய மாறுதல் உண்டாகியிருக்கிறது. அம்மாறுதல் மேற்போக் கானதும் அன்று அடிப்படையிலேயே ஓர் மாற்றம். பாரத நாட்டில் உள்ளூர—அதன் உயிரமைப்பிலேயே—ஒரு மாறுதல் நிகழ்ந்திருக்கிறது. அதுபோலவே அனைத்துலக அரசியல்

சூழலிலும் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. இதை நாம் மனத்திலிருத்திச் சிந்திக்க வேண்டும்.

பாபுவின் காலத்துக்கும் இக்காலத்துக்கும் இடையில் காலச் சூழலில் மாறுதல்

பாபுவின் காலத்துக்கும் இன்றைய காலத்துக்கும் இடையே மூன்று வேறுபாடுகள் உள்ளன. பாபுவின் காலத்தில் நாம் சுதந்திரர்களாக இருக்கவில்லை. இன்று சுதந்திரம் அடைந்துள்ளோம். இது முதல் வேறுபாடு. அக்காலத்தில் பாரதத்தில் மக்களாட்சி இருக்கவில்லை; இன்று மக்களாட்சி நிறுவப்பட்டுள்ளது. இது இரண்டாவது மாறுதல். அக்காலத்திலிருந்ததைவிட இப்போது விஞ்ஞானம் மிகவும் முன்னேறியுள்ளது. முன்பு புது விஞ்ஞானம் இல்லை. காந்தி காலத்தில் புது விஞ்ஞானம் என்பது சமீபத்தில் தோன்றிய ஒன்று என்ற நிலையில்தான் இருந்தது. இப்படி மூன்று புதுச் சூழ்நிலைகள் தோன்றியிருப்பது நமது ஆராய்ச்சியைத் தூண்டுவதாக உள்ளது. ஆதலால் சத்தியாக்கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சிச் சிந்தனையை நாம் வருங்காலத்தில் வளர்க்க வேண்டியுள்ளது. இன்றைய சூழலில், சத்தியாக்கிரகத்தின் புறத்தோற்றம்—உரு—வேறாக இருக்கலாம் என்பதை நாம் மனத்தில் இருத்த வேண்டும். எது எப்படி ஆனாலும் அதன் அடிப்படை உருவமாக—வேராக — அமைந்துள்ள அதன் அன்புருவம் மாறாமல் நிலைபெற்றிருக்கும்.

ஆனால் காந்தியின் காலத்தில் சத்தியாக்கிரகத்தை மதித்தது போலவே இன்றும் மதித்தோமானால் அது தவறாக முடியும். அவருடைய காலச்சூழல் ஒரு வகை. அச்சூழலே அலாதி—ஒரு சிறப்புச் சூழல். அப்போது ஆற்றிய பணியெல்லாம் எதிர்மறைப்பாங்கில்—'நெகடிவ்' ஆக — அமைந்தது. அப்போது ஆங்கிலேயர்களை இந்நாட்டிலிருந்து விரட்டியடிக்க வேண்டியிருந்தது. ஆதலால் தன்னாட்சி வருவதற்கு முன் இருந்த சத்தியாக்கிரகம் எதிர்மறைத் தன்மையதாக

அமைவது அவசியமாயிற்று. அதில் அகிம்சையின் உந்தும் ஆற்றலைக் கலந்து வேற்று நாட்டவர் ஆட்சியை அகற்ற வேண்டியதாயிற்று. அது அப்படி ஓர் உருவமைப்புப்பெற்றது. நமக்கு அப்படி ஒரு வேலை இல்லை. இன்று நமக்குள்ளதோ மக்கள் சமுதாயத்தையே புத்துருக் கொள்ளச் செய்யும் பணி. காந்தி எப்போதும் சொல்லுவார்—''என்ட் ஆர் மென்ட்''— ''திருந்து அல்லது செத்துமடி''—என்று. அது அவர் பேசிய பாங்கு. இன்று நாம் பேசும் மொழி அவ்வாறமைவது ஒவ்வாது. அவர் ஆங்கிலேயரைப் பார்த்து 'க்விட் இண்டியா' —இந்திய நாட்டைவிட்டு ஓடிப்போ-என்று அவரால் சொல்ல முடிந்தது. இன்று நாம் வணிகர்களையும், ஜமீன்தார்களையும், சிற்றரசர்களையும், செல்வந்தர்களையும் பார்த்து 'இந்தியாவை விட்டு வெளியேறுங்கள்' என்று சொல்ல முடியுமா? அவர் களால் யாரும் அப்படி ஓடிப்போகிறவர்கள் இல்லை. ஆதலால் இப்போது எல்லோரையும் ஒரே இடத்தில் சேர்த்து வைத்துக் கொண்டு சாதனை செய்யும் யுக்தி ஒன்றைக் கண்டு பிடித்து ஆகவேண்டும்.

காந்தி இருந்தால் சத்தியாக்கிரகத்தின் உருவைக் கட்டாயம் மாற்றியிருப்பார்

காந்தி இன்றுவரை உயிர் வாழ்ந்திருந்தால் அவர் நிச்சயமாக சத்தியாக்கிரகத்தின் உருவை மாற்றியமைத் திருப்பார். இதில் எனக்கு ஐயமே இல்லை. காந்தியின் காலத்தில் நடந்த சத்தியாக்கிரகம் பற்றி இக்காலத்தவர் போற்றுகின்ற அளவுக்கு காந்திக்கே சத்தியாக்கிரகத்தின் பால் விருப்பமும் மதிப்பும் இல்லாதிருந்தது. பாபு சத்தியாக் கிரகத்தை எப்படி நடத்திச் சென்றார், அதிலிருந்து எத்தகைய ஆற்றல் வெளிப்பட்டது, எப்படி அதில் எல்லா அம்சங்களும் நல்லதல்ல என்று புலப்பட்டது என்பதெல்லாம் ப்யாரிலால் எழுதியுள்ள 'த லாஸ்ட் ஃபேஸ்' என்ற நூலில் காணக் கிடக்கிறது. அது வலிமையற்றவர்களின் சத்தியாக்கிரகம்

என்பதே காரணம். 'தன்னுட்சி வரவேண்டும் என்பதற்காக இறைவன் என் கண்களைக் கட்டியிருந்தார்; ஆதலால் கண்ணிருந்தும் சத்தியாக்கிரகத்தின் குறைகளை நான் கண்டு கொள்ள இயலாது போயிற்று' என்று காந்தி சொல்வதுண்டு. காந்தி இன்றிருந்தால் கூட சத்தியாக்கிரகத்தின் உரு 'இது' அல்லது 'இதுவே' என்று ஒன்றையே நிரந்தரமாக வலியுறுத்தியிரார் என்பதே என் கருத்து.

ஆதலால் தான் இக்காலத்துக்குரிய சத்தியாக்கிரகம் உயர்ந்த இயல்புகள் உள்ளதாக அமையவேண்டும் என்பது. நாட்டு விடுதலைக்குப் பிறகு தோன்றியிருக்கும் ஜனநாயகத்தில் நடக்கும் சத்தியாக்கிரகம் நன்மை பயப்பதும் மேலும் தெளிவானதும், முன்னையைவிட ஆற்றல் மிக்கதும் ஆக்கம் தருவதுமாக அமைதல் வேண்டும். ஆக்கபூர்வமான சத்தியாக்கிரகம் என்றால் அதில் அன்பு இருந்தே தீரும். மாற்றான் மீது ஸ்தூலமான அழுத்தம்—நிர்ப்பந்தம்—எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சத்தியாக்கிரகத்துக்கு வலிமை என்ற எண்ணமே தவறு. அதற்கு நேர்மாறாக அத்தகைய நிர்ப்பந்தம் —நெருக்குதல்— எவ்வளவுக் கெவ்வளவு குறைந்து அன்பின் அம்சம் மிகுந்து நிற்கிறதோ அவ்வளவுக்கு வலிவடைகிறது. அவ்வாறன்றி இந்த விஞ்ஞானயுகத்தில் மனக் கொதிப்பை உண்டாக்குகிற ஏதாவதோர் அம்சம் சத்தியாக்கிரகத்துக்குள் புகுமானால் எல்லாம் குளறுபடியாகிவிடும் மக்களும் சிந்தனைத் திறனை இழந்து விடுவர்.

இது காரணமாகவே "சத்தியாக்கிரக இயல்" என்றென்று என்னால் எழுத இயலவில்லை; அது மெல்ல மெல்ல மலர்ந்து வருவது" என்று பாபுவே கூறினார் இதன் பொருளாவது, சத்தியாக்கிரகத்தின் செயல் முறை நம் பொறுப்பில் விடப்பட்டுள்ளது என்பது தான். அவர் காலத்தில் நடந்தபோது சத்தியாக்கிரகத்துக்கு இருந்த தரத்தை உயர்த்துவதற்குப் பதிலாக அதை மேலும் கீழ்த்தரமாக்கி வருகிறோம்!

சத்தியாக்கிரகத்தைப் பற்றிய ஒரு ''எதிர்மறை'' -நெகடிவ்—இலக்கணம் மக்கள் மனதில் நிரந்தரமாகப் பதிந்திருப்பதே இதற்குக் காரணம். சத்தியாக்கிரகம் என்ருல் இடைஞ்சல் விளைக்கிற ஒரு செயல் முறை, ஒருவகையான நெருக்குகிற திட்டம்—இந்த அளவே மக்கள் மனதில் இருக்கும் கருத்து. இதே காரணத்தால் தான் ஒரு சிலருக்கேனும் அதன் பால் விருப்பமும் கவர்ச்சியும் இன்னமும் இருந்து வருகிறது.

ஜனநாயகத்திலுமே சத்தியாக்கிரகத்துக்கு நிச்சயமாக இடம் உண்டு

இவை எல்லாவற்றின் விளைவாக ஒரு எதிர்க்கிரியை — எதிர் வீச்சு வேறு உண்டாகி இருக்கிறது. பலர் ஜனநாயகத்தில் சத்தியாக்கிரகத்துக்கு இடமே கிடையாதென்று கூடத்தான் கூறுகிருர்கள். இந்தக்கருத்து முற்றும் தவருகும் சத்தியாக்கிரகம் ஒரு வாழ்க்கை முறை, ஒரு செயல் முறை அதற்கும் மேலே குறிப்பிட்ட சில நிலைகளில் ஒரு உபாயம்-உத்தி-என்பதுண்மையாஞல் சத்தியாக்கிரகத்துக்கு இன்னமும் இடம் உண்டு. எப்போது ஒரு நடவடிக்கைக்கு எல்லோர் இசைவும் உண்டோ அப்போது மட்டும் சத்தியாக்கிரகத்துக்கு உரிமை இல்லைதான். எல்லோர் இசைவையும் பெற்றுள்ள ஒரு சமூக அமைப்பில் சுதந்திரமான சமூக சத்தியாக்கிரகத்துக்கு அவசியம் இராது. அப்போது மகனுக்கெதிராக தாய் சத்தியாக்கிரகம் செய்வதாகலாம் அண்டை அயலாக வாழ்வோர் ஒருவருக்கெதிராய் ஒருவர் சத்தியாக்கிரகம் செய்வதாகலாம். இங்கே 'முன்ஞல்', எதிராக என்று வரும் சொற்களுக்கு இம்சை சார்ந்த பொருள் கொள்ள வேண்டியதில்லை. குறிப்பிட்ட ஒருவரைச் செம்மைப்படுத்த-திருத்த—அவருக்கு உதவும் வகையில், அவர்பால் அன்பு பூண்டு தியாகவழியில் என்ன செய்யப்படுகிறதோ அதைக் குறிக்கத்தான் 'எதிராக' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. அக்கம் பக்கமாக வாழ்வோரில் ஒருவன் மற்ருெருவன் பால் உள்ள

அன்பைக்காட்ட தனி நபர் சத்தியாக்கிரகம் செய்யலாம். ஆனால் சமூக இயல் சார்ந்த சத்தியாக்கிரகம் நடவாது. ஆனால் இந்நிலை எல்லோருடைய திட்டவட்டமான சம்மதியைப்பெற்ற ஒரு சமூக அமைப்பில்தான் சாத்தியம்; ஏனைய ஜனநாயக அமைப்புகளில் எல்லாம் சத்தியாக்கிரகத்துக்கு இடம் நிச்சயமாக உண்டு. அதன் உருவம் வேறுபட்டு இருக்கலாம். இத்தகையதொரு சூழ்நிலையில் சத்தியாக்கிரகத்தையும், அதைப்பற்றிய விஞ்ஞான பூர்வமான அறிவையும் வளர்க்கும்—மலர வைக்கும்—பொறுப்பு நம் தலை மேல் தான் அமர்ந்திருக்கிறது.

பாபு இயற்றிய சத்தியாக்கிரகங்களின் இலட்சியங்களை நாம் பொருட்படுத்துதல் ஒவ்வாது

பாபுவுக்கும் எனக்கும் பல தடவை வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்ததுண்டு. குறிப்பாக, நடந்தேறின ஒவ்வொரு சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் எனக்குத் தோன்றியவற்றை அவரிடம் கூறியும், மேலும் ஏதாவது தெரிந்து கொள்வது அவசியம் என்றவிடத்து அவரிடம் பணிவோடு உரையாடியும் இருக்கின்றேன். பல சத்தியாக்கிரகங்களில் அவர் குற்றத்தை வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார். ராஜ்கோட் சத்தியாக்கிரகத்தில் வன்முறை நிகழ்ந்தது. அகமதாபாத் தொழிலாளர்களின் சத்தியாக்கிரகத்தில் சில இடங்களில் வன்முறை நிகழ்ந்தது என்பதை அவர் ஒப்புக் கொண்டார். அம்பேத்காரின் பிரச்சினையைப் பற்றி பாபுவுடன் அதிகமான சர்ச்சை செய்ய எனக்கு வாய்ப்புண்டாகவில்லை. கம்யூனல் அவார்டை ஒட்டி பாபு உண்ணாவிரதம் இருந்தது ஒரு தனிமனிதன் மீதுள்ள மன உளைச்சல் காரணமாக ஏற்பட்டது என்ற ஒரு தோற்றம் இருக்குமானால் அது ஒரு தனி நபர் பொறுப்பு என்பதோடு போயிருக்கும். ஆனால் அந்த தவற்றுக்கான பொறுப்பு ரவீந்திரநாத்தாகூரின் மீது சுமந்தது. பாபுவை (மரணத்தினின்றும்) மீட்க முதலில்

அவர் அப்படிச் சொன்னார். சில நாட்களுக்குப் பிறகு வெளியான செய்தியில் அப்படிக் கூறியது தன்பிசகு என்று ஒப்புக் கொள்ளவும் செய்தார்.

இவ்விஷயத்தில் ரவீந்திரநாத் ஒரு சாதாரண குடிமகன் என்ற நிலையில் தன் சொந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இருக்கிறார் என்பதற்கில்லை. அவரோ இந்தியாவின் 'சென்டினல்' — பாராக்காரர்—எனும் பெயர் பெற்றவர். இயக்கத்தின் விஷயம் குறுகியதாகத் தோன்றிய போது அதைத் தடுக்கும் வகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார். குறுகிய நாட்டுப் பற்றிலிருந்து பாரத நாட்டைக் காக்க எப்போதும் முயன்று வந்தவர் தாகூர். இந்த அளவில் அவர் ஒரு பெரியவர். அப்படி இருந்தும் பாபுவைப் போன்ற ஒரு மனிதர் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற பற்றோ, கருத்து மயக்கமோ அல்லது பரிவோ அவரை உந்தியது. ஆதலால் அவர் இப்படி ஒரு கருத்தை வெளியிட்டார். அது தவறென்று அவருக்கு அப்போது தோன்றவில்லை. பிறகு அது தவறென்று அவரே ஒப்புக் கொள்ளவும் செய்தார். பாபுவின் அந்தச் சத்தியாக்கிரகத்தால் விளைய இருந்த மனமாற்றச் செயலுக்கு ஒரு மலைப்புத் தட்டிற்று என்பதே இதன் பொருள்.

ஆதலால் முன்பு நடந்த சத்தியாக்கிரகங்களின் குறிக்கோள்களை இப்போது நாம் போற்றத் தேவையில்லை. சத்தியாக்கிரகத்தின்பால்பட்ட செயல்களுக்கு ஜனநாயகத்தில்மிகுந்த செல்வாக்கும் ஆற்றலும் உண்டு. அந்த காரணத்தாலேயே அத்தகு செயல்கள் ஆக்கம் தருவன ஆதல் வேண்டும்.

காந்தியின் சிந்தனைப் போக்கு எதிர்மறையே அன்று.

அடிப்படையில் காந்தியின் சிந்தனை ஆக்கபூர்வமானதே. அவ்வாறன்றெனின் முதலில் தேர்ந்தெடுத்த சொல்லான

'பாஸிவ் ரெஸிஸ்டென்ஸ்' (passive resistance) என்பதையே அவர் வைத்துக்கொண்டிருப்பார். ஆனால் அதில் முழு அன்பின் சாயல் இல்லை என்றபிறகே 'சத்தியாக்கிரகம்' என்ற சொல் வழக்கில் வந்தது. ஆதலால், காந்தியின் சத்தியாக் கிரகச் சிந்தனை ஒருகாலும் எதிர்மறைப் பாலதன்று. எதிர் மறைப்பாங்கு இருக்குமாயின் சத்தியாக்கிரகச் சிந்தனையில் ஆக்கப்பணிகளோடும் தொண்டோடும் சத்தியாக்கிரகத்தை இணைத்திருக்க மாட்டார்.

காந்தி செய்த செயல்களின் புறத்தோற்றத்தை மட்டுமே நாம் கண்டிருக்கிறோம் ஆனால் இன்று நாம் அதோடு அமைவ தற்கில்லை. அக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை அகற்று வதான எதிர்மறைச் செயல் மட்டுமே தேவையாக இருந்தது. அப்படி இருந்தும் அவ்வேலையோடு அவர் ஆக்கபூர்வமான வேறுபல பணிகளையும் இணைத்தார். எதிர்மறையான செயலுடனேயே ஆக்கப்பணிகளையும் இணைக்கவில்லை யென்றால் எதிர்மறைச் செயல்களின் நோக்கம் நிறைவேறிய பின், பிற அச்சங்கள் பல தோன்றும் என்பதை அவருடைய வளமான உணர்வின் வழி அவர் கண்டார். ஆதலால்தான் ஆக்கப்பணிகளையும் தம்முடைய இயக்கத்தோடு இணைத்துக் கொண்டார். இதுவே அவர்மாட்சி

'ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றக் கதர், தீண்டாமை ஒழிப்பு, கிராமக்கைத்தொழில் சீரமைப்பு ஆகியவை தேவையா என்ன? என்று பலர் அவரைக் கேட்டுள்ளனர். சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருந்த தற்கிடையிலேயே தீண்டாமை பற்றிய ஓர் உண்ணாவிரதத்தை அவர் மேற் கொண்டார். இதெல்லாம் என்ன? என்று பலர் முணு முணுக்கவும் செய்தனர். "சுதந்திரத்துக்கான போராட்டத்தில் தீண்டாமையையும் ஆலயம் புகுவதையும் பற்றிய பேச்சை ஏன் புகுத்த வேண்டும்? அதனால் சத்தியாக்கிரக வேலையின் வலிமையும் தீவிரமும் குன்றவில்லையா?" என்றெல்லாம்

கேட்டனர். இவையெல்லாம் கூட சத்தியாக்கிரகத்தின் கூறுகள்தாம் என்றே காந்தி அவர்களுக்கு பதில் தந்தார்.

இவ்வாறன்றி, காந்தியின் உணர்வு எதிர்மறைப்பால தாயிருந்திருந்தால், 'தனிநபர் சத்தியாக்கிரகி' என்று என் (விநோபாவின்) பெயரை முன்மொழிந்து பொருளற்ற தாகிறது. மக்களுக்கு என்னைத்தெரியாது. அரசியல் பணி ஒன்றும் என்பெயரோடு இணைந்திருக்கவில்லை. அப்படி இருந்தும் என்பெயரை அவர் குறிப்பிட்டார். அவ்வாறு குறிப்பிடுங்கால் என்னுடைய பிறபண்புகள் சிலவற்றை நல்லவையென்று அவர் போற்றியிருத்தல் கூடும். ஆனால் நிச்சயமாக ஒன்றை அவர் எண்ணியிருப்பார்- இவன் சிந்தனை ஆக்கத்தின் சார்புடையது; கண்டனச் சார்புடையதன்று' என்று அவர் கருதியிருக்க வேண்டும். சத்தியாக்கிரகத்துக்கு ஆக்கவேலை மிகவும் தேவை என்றே அவர் கருதினார். ஆக்கப்பணி முழுமைபெற்றபிறகு சத்தியாக்கிரகத்துக்குத் தேவை இல்லாமல் போய்விடும் என்றே அவர் கூறி வந்தார். அவர் இக்கருத்தில் ஊன்றி நின்றார். அவர் சிந்தனையில் ஆக்கப்பணிகளுக்கு முக்கியமான ஓர் இடம் இருந்தது. சத்தியாக்கிரகத்தில் எதிர்மறைத்தன்மை என்ற கருத்தே காந்தியின் சிந்தனையில் இல்லையென்பதே இதன் பொருள். ஆதலால் அவர் எவ்வெவற்றைச் செய்து வந்தார் என்பதைப் பார்த்துச் சிந்தித்து நாமும் உரியவகையில் நடந்து கொண்டோமானால் நாமும் மலர்ச்சி அடையலாம்.

அன்பின் அளவே சத்தியாக்கிரக உரிமையின் அளவு

உண்ணா நோன்பு அல்லது பிறரால் வரும் துன்பம் பொறுத்தல் என்பவையெல்லாம் கூட விஜஸ தாமஸ உந்தல் களால் ஏற்படுமாயின் அவை சத்தியாக்கிரகம் அல்ல; துராக் கிரகத்தின் சாயலுடையவையாகும். இந்தத் தெளிவு முதலி லேயே உண்டாகிவிடுவது அவசியம். சத்தியாக்கிரகத்தில் 'துன்பம் பொறுத்தல்' இடம் பெறுவது சிந்தனையை—

விசாரத்தை தூண்டுவதற்கு மட்டும் தான். அடிப்படையில் சத்திய சோதனைச் சிந்தையே சத்தியாக்கிரகத்தின் வித்து எனலாம். சிந்தனையில் ஊன்றி நிற்றல் சத்யாக்கிரகத்தின் சக்தி; பகைமையின்மை சத்தியாக்கிரகத்தை கட்டி வைக்கும் முளை. அவசியமானபோது அறிவுக்கொத்த வகையில் துன்பம் பொறுத்தல் என்பது கூட அவசியமான போது பகை யின்மையை வெளிக்காட்டத்தான். அன்பு எந்த அளவோ அதே அளவு தான் சத்தியாக்கிரகம் செய்வதற்கான உரிமையும்.

அன்பின் பெருமையை எல்லாச் சமயங்களும் பாடிப் பரவுகின்றன. ‘‘நாம் எல்லோர் பாலும் அன்பு செய்தல் வேண்டும், எல்லோரும் நம் மீது அன்பு பூணுவர்; நட்புணர் வோடு நாம் உலகத்தைப் பார்க்க வேண்டும், அப்போது நட்புணர்வுடனேயே உலகம் நம்மைப் பார்க்கும்’’ என்ற வாக்கியம் வேதத்தில் உள்ளது. நாம்தாம் உலகத்தின் பால் அன்பு காட்டவேண்டும் என்று விதித்திருக்கிறது. அன்றி, நாம் அன்பு காட்டியும் உலகம் நம்பால் அன்பு காட்டவில்லையென்றால் என்ன செய்வது என்பது பற்றி ஒரு விளக்கமும் அங்கே காணோம். நாம் உலகத்தின்பால் அன்பு காட்டினால் உலகமும் அன்பு காட்டும் என்று எதிர்பார்க் கிறோம், அவ்வளவே. வேதத்தில் மானுடச் சிந்தனையின் தொடக்கம்தான் குறிக்கப்பட்டுள்ளது. முதலில் இவ்வளவு தான் தோன்யிருக்கிறது—உலகத்தின்பால் அன்புப்பார்வை வேண்டும் என்று. ஆனால் இவ்வளவு தோன்றியிருக்கிறதே ! அது ஒன்றும் சின்ன விஷயமன்று.

முன்னர் தோன்றினார் ஒரு பெருமகன். பகையால் பகை என்றும் குறைவதில்லை, பகையின்மையாலேயே பகையை வெல்லல் வேண்டும் என்றார் அவர். சிந்தனை இப்படி ஓர் அடி முன்னால் நகர்ந்திருக்கிறது. பிற்காலச் சிந்தனை அடிமுதல் முடிவரை உருமாறியிருக்கிறதென்றால் புத்தரின் மேற்கண்ட

சொற்கள் எவ்வளவு தூரம் சிந்தனையை உருமாற்றியிருக்கிறது என்பது விளங்கும். பகையால் பகை குறைவதில்லை, இப்படி ஓர் உண்மையை உணர்ந்தமை வாயிலாக வாழ்க்கையின் தரிசனத்தில் ஓர் உறுப்பு கண்ணுக்குத் தெரிவதாயிற்று.

அதன் பிறகு வந்தார் ஒரு மகான். அவர் சொன்னார் "பகைவனுக்கு அன்பு காட்டு" என்று. அதற்குப் பிறகு எல்லாம் மாறிற்று ஏசுவின் இச்சொற்களால் மானுடம் வெகுதூரம் முன்னேறி விட்டது". பகைவன்பால் பகைமை கொள்ளாதீர்" என்பதோடு நிற்கவில்லை; "பகைவன் பால் அன்பே செய்வீர்" என்றார் அவர்.

இப்பேருண்மையை மக்கள் போற்றினரெனினும் "சிந்தனை உயர்ந்தது தான்; ஆனால் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ......"என்ற தயக்கமும் இருந்தது "எதிரே இருப்பவன் பகைமை பாராட்டுகிறான்; அதுவே 'குறிப்பிட்ட சூழ்நிலை' அந்நிலையிலேயே அவன் பால் அன்பு செய்" என்பதே அவர் கூறிய ஆலோசனை. சூழ்நிலை ஏதோ அப்படி இப்படி இல்லையென்றால் பகைவனிடம் அன்பு காட்டு, தேவையானால் ஒரு நெருக்கடியில் கையைச் சுருட்டி ஒரு குத்து விடவுமே செய்யலாம்" என்று அவர் கூறவில்லை. எதிரே நிற்கிறான் பகைவன்; அவன் பகைத்துக் கொண்டு நிற்கிறான் இதுதான் குறிப்பிட்ட சூழ்நிலை நிலைமை அவ்வாறு இருப்பதால் தான் ஏசு இந்த ஆலோசனையைக் கூறினார். அப்படிச் செய்தன்றி எவ்வகையில் வெற்றி கொள்ளப் போகிறீர்கள்? எதிரியை அன்பால் வெல்லலாம் என்று தானே பேச்சு அடிபடுகிறது,

அதன் பிறகு வந்தார் காந்தி. பாலிலிருந்து வெண்ணெய் கிளம்புவது போல அடிப்படையான சமூகத்திலிருந்தே அவர் ஆரம்பித்தார். பாலின் சிறந்த தத்துவங்கள் வெண்ணெயில் திரட்டப் பெற்றுள்ளது. வெண்ணெய் எப்படி பாலினின்றும் வேறுபட்டதன்றோ அது போலவே மகான்களும் சமூகத்தி

னின்றும் மாறுபட்டோர் அல்லர். சமூகத்தினின்றும் வேறுபட்டோரும் அல்லர். பாரதநாடு அப்போது ஆயுதம் இன்றி இருந்தது. இந்தச் சூழ்நிலையில் தான் காந்தி வந்தார். அவர் சொன்ன யோசனை "பகைவன் பால் அன்பு காட்டு; அது தனிப்பட்ட ஒருவருக்கு மட்டும் செய்யப்படுவதன்று. எதிரியின் சமூகத்தின் பால் அன்பு ஒன்று தானே செய்ய இயலும். நான் செய்வதெல்லாம் ஏதோ பாரத நாட்டிடம் கொண்ட அன்பினுல் தூண்டப்பட்டுச் செய்கிறேன் என்பதில்லை' ஆங்கில நாட்டின்பால் உள்ள அன்பு காரணமாகவும்தான்,; என்ருர் அவர். அவர் சத்தியாக்கிரகம் செய்தார். மற்றும் என்னென்ன செய்தாரோ, அவை எல்லாம் அன்பினுல் தூண்டப்பெற்றவையே.

8. சாந்தி சேனையின் அழிவில்லா வித்து

மகாத்மா காந்தி பகலவனைப்போல் பலகதிர்கள் பரப்பித் திகழ்ந்தவர். அவர் சிந்தனையின் வளர்ச்சி காரணமாக முளைத்த பணிகள் பல. அவர்தம் அசாதாரணமான கற்பனை யாற்றலுக்கு ஒரு கவிஞனின் கற்பனு சக்தியைத்தான் ஒப்புமை காட்டவியலும். ஒரு கவிஞனின் கற்பனையைப் போன்ற புதுப்புது எழுச்சியும், கிளர்ச்சியும் உடையது அவருடைய கற்பனை வளம். முதுமையிலும்கூட அவருடைய கற்பனை வளம் நிறைந்த மூளையில் ஒன்றையொன்று மிஞ்சுகிற கற்பனைகள் தோன்றிக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று தான் 'சாந்திசேனை'.

பெரிய கற்பனைகள் அழியாத விதைகள் போன்றவை நாட்பட முளைவிடுபவை. வெகுவிரைவில் முளை விடுபவை விரைவிலேயே இறந்தும் போகின்றன. நீண்டகாலம் வாழும் மரங்கள் முளைவிடக் காலம் அதிகம் வேண்டும்; அவை வளருவதும் மெல்ல மெல்லத்தான். அதுபோலவே வலிமை யுடைய, சிரஞ்சீவியாய் வாழப்போகின்ற, எண்ணங்களும் மககள் மனத்தில் வேர்விட, வளர, நாள் ஆகிறது. நாம் விரும்புமளவு வேகமாக அவை வளர்வதாகத் தெரிவதில்லை. அது அவற்றின் குறை என்பதன்று பொருள். அவை பூமிக் கடியிலே உருவாகி வருகின்றன. மண்ணுக்கு அடியிலே அவற்றை இறைவன் உருவாக்கியருள்கிறுர்.

சில எண்ணங்கள் அழியாதவை; சில வலிவற்றவை. வலிவற்றவை விரைவில் முளைப்பதுபோலத்தோன்றும், ஆனுல் அவை முளைத்தவுடனேயே அழிந்தும் போகும். வரலாற்றில் அவற்றிற்கு இடமில்லை. அந்த அந்தக்காலத்தின் சிறிய, பெரிய

வரலாற்றுசிரியர்கள் அவற்றை அதிகமாகவோ குறைவாகவோ பாராட்டி எழுதுவார்கள், வாசகர்களும் அவற்றைப் போற்றி வாசிப்பார்கள். ஆனால் அவை நீண்டநாள் நிலைத்திருப்பதில்லை. எண்ணம் என்ற பேரியலில் இந்தச்சிறிய, வலிவற்ற கருத்துக்களுக்கும், எண்ணங்களுக்கும் தாக்குப் பிடித்து நிற்கும் தெம்பு இருப்பதில்லை.

விசாரம் என்னும் எழில் ஆலயத்தின் கருவறையிலே அமர்ந்திருப்பது அக்கோவிலின் அதிதேவதை. அந்தத் தேவதையின் சுற்றுச்சூழலில் உயர்ந்த சிந்தனையின் சாந்நித்தியம் இருக்கும். வாழ்க்கையின் சின்னச்சின்ன இனங்கள், சிறுசிறு விசாரங்கள் கோவிலுக்கு வெளியே முற்றத்தில் கிடக்கும். கோயில் கருவறைக்குள் அவற்றிற்கு நுழைவு கிடையாது. அழிவற்ற எண்ணங்கள் பிற நக்குத்தெரிந்தோ தெரியாமலோ குகைக்குள் ஒளிந்துதான் கிடக்கும். உடனே வெளியே தெரிவதில்லை. ஆயினும் பிற்காலத்தில் அவை மெல்ல வெளிப்படும். காந்தி விதைத்த அத்தகைய அழிவில்லா விதையாகும் 'சாந்தி சேனை' என்ற கருத்து.

"சாந்தி"யோடு ஒப்ப "சேனை" என்ற சொல்லையும் இணைத்து வைத்தார்

காந்திஜி பெரிய புலவர் அல்லர். அவருக்கு விஞ்ஞானம் தெரியாது. ஆனால் அவர் சொற்கள் பாரதநாட்டுப் பழம் பெரும் சாஸ்திர நூல்களினின்றும் புறப்படுபவை. சாதுக்களின் ('ஸந்த்' என்பாரின்) வாக்கிலும் இவ்வாறு பல இடங்களில் வேதச்சார்புடைய சொற்கள் வருவது போலத் தோன்றுவதுண்டு. 'சாந்திசேனை' என்ற இந்தச்சொல்லும் அப்படித்தான் இருக்கிறது. காந்திஜி நமக்குத்தந்து சென்று இருக்கும் ஒரு பத்து சொற்களுக்குள் இதுவும் ஒன்று. இந்தச் சொல்லும் மனத்திலிருத்திக்கொள்ள வாய்ப்பாகவும் அமைந்திருக்கிறது. இப்போதெல்லாம் சாந்தியைப்பற்றியே எங்கும் பேச்சு. ஆனால் அந்தச்சொல் 'யாருமற்ற அனாதையாய்'

நிற்கிறது. அதில் படையின் வலிமை ஒன்றும் இருக்கக் காணோம். காந்திஜியின் சாந்தியும் அகிம்சையும் இப்படி ஒன்றும் தெருப்பொறுக்கி அனுதையாய் இருக்கவில்லை. ஆதலால்தான் அவர் சாந்தி என்ற சொல்லோடு சேனையையும் இணைத்தார். வேதத்திலேயே சேனை என்ற சொல் வருகிறது.

(அஸேன்யாவ : பண்யோ வசாம்ஸி)

ஏ! கையாலாகாதவர்களே உங்கள் சொல் வெறும் அஸேன்யம் —படை வலிமையற்றது'' என்பது இதன்பொருள். அதாவது ''உங்கள் பேச்சில் வலிவில்லை அல்லது உங்கள் வாக்கில் பொருளில்லை, துணிவில்லை, உறுதியில்லை; உங்கள் பேச்சு வெற்றுப் பேச்சு'' என்பது கருத்து. சேனை என்ற சொல்லுக்குப் பொருள் ''வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டோரிடமே - வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தோரிடமே விஷயம் உண்டு, சங்கதி உண்டு'' என்பதாகும். சாந்தி சேனைக்கு எவ்வளவு சாந்தமான பொருள் கொண்டாலும் ''உரிய சந்தர்ப்பத்தில் புறமுதுகிட்டு ஓடாமல் உயிர் கொடுக்கச் சித்தமாய் இருக்கும் படையாளிகளின் அணி'' என்ற அளவுக்கு அச்சொல்லில் கருத்துண்டு.

வன்முறையின் வலிமை எதில் அடங்கி இருக்கிறது? ஏதோ ஓரிடத்தில் ஆபத்து இருக்கிறதென்றால் இரண்டு அல்லது நான்கு அல்லது பத்து, ஆயிரம் வரைக்கொண்ட அணிவகுப்பை ஒரே அடியாய்க்குவியச் செய்யும் தந்திரம் வன்முறையாளர்களிடம் முன்கூட்டியே சித்தமாக இருக்கிறது. அதோடு அந்த அணிவகுப்பு (சமூகம்) ஒரே மனிதனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து முன்பின் பாராமல் பணிசெய்கிறது 'சேனை' யின் வலிமை அதில் அடங்கியுள்ளது.

ஞானபூர்வமாக இராமன் செய்ய முடிந்ததை அனுமன் சிரத்தா பூர்வமாக (பக்தியால்) செய்ய இயலும்

சரி, அகிம்சையில் இதுபோன்ற வலிமைவருதல் இயலுமா? இது போன்ற மோதல்களில் சாந்தி சேனை தாக்குப் பிடிக்க முடியுமா? யாரோ ஒருவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டுப்

பலியாகுமளவு ஈடுபாடு வருதல் கூடுமா? அந்நிலையிலும் பலி கொடுக்கத் துணிந்தோரின் இதயத்தில் அன்புணர்ச்சி ததும்பி வழியுமா? இத்தகைய காரியம் கட்டளை நிறைவேற்றுவதில் இருத்தல் இயலும்மா? சுதந்திரச் சிந்தனையோடு செயலாற்றுங் கால் இது எவ்வளவு சாத்தியமோ அந்த அளவு கட்டளையை நிறைவேற்றும் போதும் இது சாத்தியம் என்பதே என் பதில். இராமன் ஞான பூர்வமாக என்ன என்ன செய்ய இயலுமோ அதே அளவு வலிமையுள்ள காரியத்தை அனுமன் சிரத்தையினாலே செய்வது இயலும். சாந்தி என்ற சொல் லோடு சேனை என்ற சொல்லையும் பாபு இணைத்த போது அதன் பொருளில் மோதல், நெருக்கடி, கட்டளை, ஒரு தலைவனுடைய விருப்பப்படி, ஆலோசனைப்படி பணிசெய்தல் என்ற பேச்சுக்கெல்லாம் இடம் இருக்கத்தான் செய்கிறது.

இவ்விஷயத்தில் காந்திக்கும் எனக்கும் நிகழ்ந்த விவாதத்தைச் சுருக்கமாகச் சொல்கிறேன். 1942 ஆம் ஆண்டின் புரட்சிக்கு முந்திய செய்தி இது. இந்தத் தடவை ஜெயிலுக்குள் கால் வைத்ததும் உபவாசம் செய்தல் வேண்டும். ஜெயிலில் சிக்கிக் கொள்வதென்பது பழங் கதையாகி விட்டது. ஆங்கிலேயர்களின் அரசுக்கு மதிப்பும் போய் விட்டது. அவர்களும் இந்நாட்டை விட்டு வெளி யேறுவதாகத்தான் கூறிவருகிறார்கள். அதனால் இப்போது சிறைக்குப் போனால் உடனே உபவாசம் செய்தல் வேண்டும். இப்படியெல்லாம் அவர் உள்ளூர எண்ணமிட்டிருந்த காலம் அது.

இது யாரால் இயலும்? மனத்தில் அன்பின் நிறை வுள்ளவன் தான் உயிர்ப்பலியாகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள இயலும். யாரோ ஒரு தனி மனிதனும் இதனைச் செய்வது சாத்தியம் தான் என்றாலும் அவனால் புரட்சி நடக்குமா? அன்பின் நிறைவோடு உண்ணா நோன்பிருந்து சாவைச் சந்திப்பது மக்கள் புரட்சியாக மாறுமா? படையில் லட்சக்கணக்காக மக்கள் சேர இயல்கிறது. அது போலவே

இதிலும் சாத்தியமா? இப்படி நிகழ்வது இயலும் என்றும் அது தன்னிடமிருந்தே துலங்கும் என்றும் அவருக்குத் தோன்றிற்று. பாபுவே உண்ணுநோன்பைத் தொடங்குவார் என்ற பேச்சைக் கேட்டு எல்லோரும் பதறிப் போனார்கள். இப்படி நிகழ்வதை எவ்வழியிலேனும் நிறுத்த வேண்டும் என்பது எல்லோர் இதயத்திலும் தோன்றி விட்டது. அம் மட்டுக்குக் காந்திஜி உண்ணுநோன்பை மேற்கொண்டிருந்த சமயம் அல்ல. மேலும் சங்கிலித் தொடராய் உண்ணுநோன்பு நிகழ்கிற காரியம் இன்னும் வரவில்லை. அதாவது உண்ணு நோன்புக்கு ஒரு பட்டாளம் என்று அதுகாறும் உண்டாகவு மில்லை. கட்டளையின் வலிமையால் இத்தகைய காரியம் நிகழ்வது சாத்தியம் இல்லை. இது விஷ்ஃபுல் திங்க்கிங்—ஆசைவயப்பட்டு அது கை கூடினது போலவே எண்ணுதல்—என்ற வகையைச் சேர்ந்தது என்று காந்தியைச் சூழ இருந்தோர் கருதினர்.

இச்சூழ்நிலையில் காந்திஜி என்னைக் கூப்பிட்டனுப்பினர். தாம் செய்ய எண்ணுவதை எனக்கு விளக்கிக் கூறினர். பிரச்சினை இதுதான். ஞானி ஞானபூர்வமாகச் செய்கிற அதே காரியத்தை அவனைப் பின்பற்றுகிறவனும் சிரத்தையால் (பக்திகாரணமாக) செய்வது சாத்தியமா? 'ஆம்; சாத்தியமே' என்பது என் பதில். அதற்கு உதாரணமாக, இராமன் ஞான பூர்வமாகச் செய்கிற காரியத்தை அனுமன் சிரத்தையால் செய்ய இயலும், செய்வது சரி என்று கூறினேன். பேச்சு முடிந்தது. இவ்வளவுதான் பாபுவுக்கும் எனக்கும் இடையில் நிகழ்ந்த பேச்சு. என்னை ஒரு கட்டளையால் கட்டுப்படுத்தவும் இல்லை. இந்நிலையில் நான் செய்ய வேண்டியது என்ன?

அதற்குப்பிறகு ஆகஸ்டு ஒன்பதாம் தேதி வந்தது. பாபு சிறை செய்யப்பட்டார். ஆனால் அவர் மனத்தில் அதற்குள் உபவாசம் தொடங்குவதாக எண்ணம் இல்லை. அதற்கு உரிய காலம் வரும்போது செய்யலாம். அதற்குமுன் அரசினரோடு

கடிதப்போக்கு வரவு நிகழும் என்று அவர் எண்ணினர். அப்போதிருந்த நிலையில், சிறைக்குச் சென்றதும் உண்ணு நோன்பு துவங்க வேண்டும் என்று முன்பு பேசியதுதான் என்னைப்பொறுத்து நிகழ்ந்திருந்த விஷயம்.

பாபு எண்ணியது இவ்வாறு

அப்போது பியாரிலால் வெளியில் இருந்தார். அவரிடம் "பாபுஜி சிறைக்குச் சென்றதும் உண்ணு நோன்பு மேற் கொள்வதாக இல்லை என்று வினேபாவுக்குத் தெரிவித்து விடுங்கள்!" என்று கூறியிருந்தார். "இந்த மனிதர் (வினேபா) இவ்வளவு என்னிடம் பேசிவிட்டுப் போயிருக்கிறார். ஆதலால் ஜெயிலில் காலடி வைத்ததும் உண்ணுவிரதம் மேற்கொள்ளத் தான் போகிறார்" என்று காந்தி கருதியிருக்கிறார். அவர் கட்டளையொன்றும் இடவில்லைதான். இப்படிச் செய்தல் பொருந்துமா என்று என் ஆலோசனையை மட்டும் தான் கேட்டார். நானும் செய்தல் பொருந்தும் என்று பதில் கூறி யிருக்கிறேன். அதில் கட்டளையைவிட யோசனை கூறுதலின் அம்சம் தான் அதிகம். அது எவ்வகையிலும் கட்டளையை விட—சுமான்டைவிடக் குறைந்தது அன்று.

அதே நாள் நானும் சிறை புகுந்தேன். சிறைக்குச் சென்றவுடன் ஜெயிலரிடம் "உங்களுக்குத்தான் என்னைத் தெரியுமே. சிறையின் சட்ட திட்டங்களையெல்லாம் கருத்தோடு பின்பற்றுகிறவன் என்பது போலவே பிறரையும் அவற்றைக் கடைப்பிடிக்கச் செய்பவன் நான். ஆனல் இந்தத் தடவை அப்படிச் செய்வதாக இல்லை. காலையில் நான் உணவு அருந்தியாயிற்று. ஆதலால் மதிய உணவைப் பற்றிய பேச்சே இல்லை. மாலையிலிருந்து நான் உண்ணப்போவதில்லை. ஆனல் எது வரை உண்ணுமலிருப்பது என்பது எனக்குத் தெரியாது. உங்கள் கட்டுப்பாட்டை மீறுவதற்கு நான் இதைச் செய்யவில்லை. எனக்கென்று ஒரு கட்டுப்பாட்டை

நான் வகுத்துக் கொண்டிருக்கிறேன். அதை நான் மேற்கொள்கிறேன்' என்று கூறி உள்ளே போனேன்.

இரண்டு மணி நேரத்துக்குப்பிறகு என்னைக் கூப்பிட்டனுப்பினார்கள். பாபு பியாரிலால்ஜியிடம் சொல்லியிருந்த செய்தியை அவர் கிஷோர்லால்பாயிக்கு அனுப்பியிருக்கிறார். கிஷோர் அப்போது வார்தாவிலிருந்ததன் காரணமாகக் கிஷோர்லால் டெபுடிகமிஷனரிடம் கேட்டார். இப்படி ஒரு செய்தியை விநோபாவுக்கு அனுப்பலாமா என்றுகூட கமிஷனர் கவர்னரைக் கேட்டிருக்கிறார். கவர்னர் கூறினார் "அப்படிச் செய்தி அனுப்பலாம்தான். ஆனால் ஒரு நிபந்தனை. அதற்கு மேல் ஒரு சொல்லும் கூடாது; குறைக்கவும் கூடாது. இவ்வளவு மட்டுமே சொல்லலாம். 'உண்ணாநோன்பு மேற்கொள்ளவேண்டாம் என்பது பாபுவின் கட்டளை! டெபுடி கமிஷனர் கூறினார்—'சரி நீங்கள் சொன்ன செய்தி தெரிவிக்கப் படும்'.

கிஷோர்லால்பாயி சொன்னார் 'நீங்கள் புரிந்து கொண்டிருக்கிற பாங்கில் அதைச் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. எங்களில் ஒருவர் போகவேண்டும்.

கடைசியில் பாளுஞ்ச்கர் வந்து பாபுவின் உத்தரவைத் தெரிவித்தார். இவ்விதமாக என்னுடைய அந்த உண்ணாநோன்பு நிகழாது போயிற்று. பிறகு பாபு உண்ணாநோன்பு மேற்கொண்ட போதெல்லாம் நானும் உண்ணாநோன்பு மேற்கொண்டேன். என் இதயத்தில் உள்ளதை நான் இங்கே கூற ஆசைப்படுகிறேன். பாபுஜி எந்த அளவு ஆனந்தமாக அந்த உபவாசத்தை மேற்கொண்டாரோ அதில் கொஞ்சம் கூடக்குறைந்திருக்க வில்லை என் ஆனந்தம். இது என்னுடைய கட்சி.

இப்போது பார்ப்போம். ஞானமோ என்பால் இல்லை; அது காந்தியின் பால்தான் இருந்தது. நான் சிரத்தை

காரணமாக (பக்திகாரணமாக) அதை—ஞானவிஷயத்தைப் போற்றினேன். நான் அதை ஆலோசனையாகவே மதித்தேன். பக்தி காரணமாக அதைக் கட்டளையே எனக்கொண்டு மிகுந்த ஆனந்தத்தோடும், அன்பின் நிறைவோடும் சுயமாகவே என் உயிரைப் பலிகொடுக்க என்னால் இயலும் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயம் இல்லையென்று கூறவிரும்புகிறேன். கட்டளையால்—இம்சை சார்ந்த ஆணையால் இப்படிப்பட்ட காரியம் ஆகலாம் என்பதைப் பற்றி எனக்கு ஐயப்பாடே இல்லை. அகிம்சையும் இதே போன்ற ஆற்றலைக் காட்ட வேண்டியிருக்கும். அதனால்தான் 'சேனை' ஒன்று தோன்ற வேண்டும் என்பது. சாந்தி சேனையின் கற்பனையை நம் முன் வைத்து அகிம்சையின் சேனை ஒன்றை எழுப்ப வேண்டும் என்பதே காந்தியின் கருத்து. அகிம்சையின் முழு ஆற்றலையும் வெளிக்கொணரவே அவர் விரும்பினார்.

காந்திஜியின் அகிம்சை தனிநபர்ச்செயல் அன்று

சமையல் அறையையும், உண்ணும் இடத்தையும் தூய்மையாய் வைத்துக் கொள்கிற காரியத்தோடு அமைய வில்லை காந்திஜியின் அடிமை. கக்கூஸ் சுத்தம் செய்தல், தேவையானால் நோயாளிகளுக்குச் சேவை செய்தல், முடிந்த வரை பிறருக்கு உதவி செய்தல் என்ற ஒரே எல்லைக்குள் அவர் அதை நிறுத்திக் கொள்ளவில்லை. அகிம்சையில் வீரத்தையும் சேர்த்தார். அதனால்தான் முன்னால் கலகம் நடக்கிறது என்றால் அவ்விடத்தை நோக்கி ஓடவேண்டும். அதுவும் கையில் ஆயுதம் ஒன்றும் எடுக்காமல் ஓடவேண்டும் என்ற கருத்து அவருடைய அகிம்சையில் தோன்றி வளர்ந்தது. அன்பு, அச்சமின்மை ஆகிய இரண்டையும் கைக்கொண்டு பணியாற்றி, சந்தர்ப்பம் வந்தால் உயிரைக் கொடுக்கவும் வேண்டும் என்றிப்படியொரு பெருந்துணிவை காந்திஜி கற்பித்தார்.

இப்போது நாட்டின் சூழலிலேயே இம்சை பரவி இருப்பதைப் பற்றியும், எந்தக் காரியத்தையும் இம்சையைக் கொண்டு சாதித்துவிடலாம் என்ற நம்பிக்கை வளர்ந்து விட்டிருப்பதைப் பற்றியும் பெரிதும் பேசப்படுகிறது. பல காரியங்கள் இம்சையால் நடந்தேறுவது உண்டு தான். முன்பு கூட அப்படி நடந்திருக்கிறது. இன்றும் நடக்கிறது. அப்படிச் சொல்லி அமைவது முற்றும் பொருளற்ற வாதம். மேலும் அவ்வாறே நடந்து கொண்டு போனால் நாட்டுக்கு விளைவது என்னவோ தீமையே. மேற்கண்டவையெல்லாம் கூட அகிம்சை பற்றிய சிந்தனையில் இடம் பெற்று வருகிறது. அத்தகையை கருத்துப் போக்கைக் கண்டிப்பது சமீப காலத்தில் அகிம்சாவாதிகளின் வழக்கமாகியிருக்கிறது. பேச்சளவில் எல்லோரும் அகிம்சையை ஆதரிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் உண்மை என்னவோ பாரதநாட்டின் மனப்பாங்கில் இப்போது பெரிய குழப்பம் விளைந்திருக்கிறது என்பதே உண்மை. காந்தி தோற்றுவித்த பக்தி சிரத்தை இப்போது இரண்டு வகையில் அழிந்துபட்டிருக்கிறது. சிலர் இதைத் தனிப்பட்ட மனிதனின் விஷயம் என்று பேசி பக்தி சிரத்தையைக் கைவிட்டு வருகின்றனர். சிலர் தமக்கு அனுகூலமாகப் பொருள் கொள்ளும் சர்ச்சையில் இறங்கி வியாக்கியானம் செய்வதில் முனைந்திருக்கின்றனர். இப்படி முனைந்திருக்கும் அதே ஆட்கள் மேலும் ஒருபடி சென்று காந்தியின் சிந்தனையை நடைமுறைக்கு ஒத்த வகையில் தாம் பின்பற்றி வருவதாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர் வேறு.

அரியநாயகம்ஜி பைபிள் பிரசாரத்தைப் பற்றி ஒரு விஷயம் என்னிடம் கூறியிருக்கிறார். ஒவ்வொரு போர் வீரனிடமும் ஒரு பைபிள் இருக்கும் இது அப்பட்டமான பித்தலாட்டம் என்று எப்படிச் சொல்வது? போர் செய்தல் நாடு விடுத்த அழைப்பின் பேரில். அது நாட்டின் தேவை என்று தான் நினைக்க வேண்டியுள்ளது. போரில் ஈடுபட்டுள்ளோரில் பரிவுடைய நெஞ்சினரும் இருப்பார்களல்லவா?

அவர்கள் பைபிளேயும் படிப்பார்கள், படையில் சேருவது தம் கடமை என்றும் நினைப்பார்கள். மனத்தில் கரவொன்று மின்றி அப்படி ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

காந்தி நமக்குத் தந்துள்ள அகிம்சைச் சிந்தனை விஷயமும் இப்படித்தான். ஆரம்பத்திலிருந்தே பலர் அச்சிந்தனையைத் தனிமனிதர் விஷயமென்று சொல்லி வந்து இப்போதும் அப் படியே கூறி அதைக் கைவிடவும் செய்கின்றனர். மற்ெருரு பக்கம் பலர் அச்சிந்தனையை நல்லது, உயரியது என்று முன்பும் போற்றி வந்து, இப்போதும் நல்லது என்றே போற்றி வருகின்றனர். ஆயினும் நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் தான் கையாள முடியும் என்று கருதி அதை நழுவ விடுகிருர்கள்,

காந்தியச் சிந்தனையின் உப்பைத் தின்கிறவர்களின் கடமை

இப்படியெல்லாம் அகிம்சை ஒருக்காலும் வளரப் போவ தில்லே. ஒரு பக்கம் லட்சியத்தை அடையும் வழியின் தூய்மைக் குறிக்கோளும், அடையும் வழியும் ஒத்திருத்தல் முதலிய தத்துவஞானப் பேச்சு காந்தியின் பேரால் நடந்து வருகிறது. மறுபக்கம் நடைமுறை உலகில் சந்தர்ப்பத்தை நேரில் சந்திக்கத் தேவை வந்தபோது நாம் எல்லோரும் வாய் மூடிக்கைகட்டி வாளாவிருப்பதும், எல்லாக் காரியத் தையும் போலீஸும் பட்டாளமும் செய்யட்டுமே என்றி ருப்பதும் என்ன நியாயம்? யாரோ ஒருவன் கல்லெறிகிருன் என்ருல் அதற்குப் பதில் மற்ெருரு தரப்பு குண்டு போட்டுச் சுடுகிறது. அகமதாபாத்தில் கலகங்கள் நடக்கும்; நாம் கையைக் கட்டிக் கொண்டு வீட்டில் உட்கார்ந்திருப்போம். அப்படியும் நாம் காந்தியவாதி என்று பெயர் சொல்லிக் கொண்டிருப்போம் வேறு. ''என்ன காரியம் செய்கிறீர்கள்'' என்றுஒருவனுவது எழுந்து குரல் கொடுக்க நாதியில்லே. ''ஊரில் பேசிக் கொள்கிருர்கள், அகமதாபாத்தில் கும்பல் கிளம்பிக் கதர்க்கடைக்குத் தீவைத்தனர் என்று''. ''நல்லது குடிமகனே

கதரைக் கொளுத்து முன் என்னைக் கொளுத்து'' என்று ஏன் ஒருவன் எழுந்து நின்று சொல்லவில்லை என்பது தான் எனக்குப் புரியவில்லை. தேசத்தின் எல்லாப் பொறுப்பும் முதலில் மாநில சர்க்காருக்கு பிறகு மத்திய சர்க்காருக்கு என்று எல்லாவற்றையும் போலீஸிடமும், படையினரிடமும் ஒப்புக் கொடுத்து விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு வீட்டில் உட்கார்ந்து கொள்வதா? இப்படிச் செய்தால் அகிம்சை நிலைக்குமா?

உண்மை என்னவெனில் காந்தியின் கதர், கிராமக் கைத்தொழில், அரிசன சேவை முதலிய ஆக்கவேலைகளுக்குப் பின்னால் ஒரு சிந்தனை இருக்கிறது. கதர் ஒரு துணிமட்டு மன்று. அதற்குப் பின்னணியாக இருப்பது அகிம்சைச்சிந்தனை. அந்நிலையில் காந்திச்சிந்தனையின் உப்பைத்தின்கிறவர்கள் இந்த அமைதிப்பணியைத்தாமே மேற்கொள்ளாமல் இருத்தல் எப்படி முடியும்? அமைதி நிலவச்செய்யும் பொறுப்பை ஏற்காதவர்கள் எல்லோரும் காந்திச்சிந்தனையின் உப்பைத் தின்கிறவர்கள் அல்லர் அதாவது அவர்கள் காந்திச்சிந்தனையின் உப்புக்குத் துரோகிகள்—(நிம்மக் ஹராம்)

காந்திச் சிந்தனையென்ற கருத்துக்குப் பின்னணியாக உள்ள பரந்த காட்சி

அகிம்சை வீரர்களுடையதாதல் வேண்டும் என்று காந்தி எப்போதும் சொல்வதுண்டு. சுயராஜ்யம் பெரும் முயற்சிக் கிடையில் எல்லோரும் குருட்டு இம்சையைப்பற்றிப் பேசவும், ஆயுதம் இன்றி ஒன்றுமே நடவாது என்று பன்னிப்பன்னிச் சொல்லவும் தலைப்பட்டபோது, "கடவுள் என் கண்களைக் கட்டி சுயராஜ்யத்தைத் தாங்குகிற வேலையை என்னைக் கொண்டு செய்வித்தார்; மற்றபடி நான் வழிதவறித்தான் போயிருக்கிறேன்'' என்று காந்தி சொன்னார். அகிம்சை வீரர்களுடையதாகவே இருக்க வேண்டும். நம் அகிம்சையோ வலிமையற்றவர்களின் அகிம்சையாக இருந்தது. அதனால்

அது செயற்கையாய், போலியாய்ப்போயிற்று என்று காந்தி சொல்ல நேர்ந்தது. இதனால் அவரைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்கிற நாம் எல்லோரும் உண்மையான அகிம்சையை நடைமுறையில் செய்து காட்ட வேண்டி இருக்கும். இப்போது அகிம்சையும், கருணையும் பணியாளராக சமைந்திருக்கின்றன. அதிகம் போனால் 'ரெட் கிராஸ்' வேலையைச்செய்வதோடு சரி. அரசு இம்சையின் அடிப் படையில்தான் நடக்கிறது. காந்திக்கு அது உகப்பன்று. அவர் விருப்பம் அகிம்சை, கருணை ஆகியவற்றின் ஆளுகை எங்கும் பரவ வேண்டும் என்பதாகும். அதனால் போர் முற்றிலும் ஒழிக்கப்படுமானால் அதுவே உண்மையான கருணை எனத்தகும். உலகம் முழுவதையும் கருணைமயமாக்கும்—அகிம்சை மயமாக்கும்—தெம்பை நமக்கு ஊட்டுவதாக அமைய வேண்டும் நம் அகிம்சையும் கருணையும். நம் கருணையாலே அணு—ஹைட்ரஜன் குண்டுகளையே தோற் கடிப்போம். நமக்கு இப்படி ஒரு தெம்பும், வீரமும் கருணையின் பயனாய்த்தான் விளையும். கருணை, அகிம்சை ஆகியவற்றின் இத்தகு வலிமையைத் தோற்றுவிக்கவே நாம் விரும்புகிறோம். அதனால்தான் சாந்திசேனை என்ற இவ்வமைப்பும் உள்ளது. அக்கருத்துக்குப்பின்னால் இப்படியொரு பரந்த லட்சியம் இருக்கிறது.

படை ஒழிப்பின் முதல் சீட்டு

படை ஒழிப்பு பற்றிக் காந்தி பேசி வந்தார். அதற்கு வழி கூறும் வகையில் சுயராஜ்யம் வந்த பிறகு நாம் படைச் செலவைப் பாதியாகக் குறைப்போம் என்றும் சொன்னார். இந்நாட்டை அடிமைத் தனத்தினிலே பிணைத்து வைக்க ஆங்கிலேயருக்குப் பெரிய படை தேவையாயிருக்கிறது. ஆனால் நாடு விடுதலை பெற்றபின்நாம் படையைக் குறைப் போம். ஆங்கிலேயரின் பட்ஜெட்டில் படைச்செலவு அதிக மாக இருப்பதால் நாடு ஏழையாகிக் கொண்டு போகிறது நாம் நம் நாட்டை அந்நிலையிலிருந்து காப்போம் என்று

காங்கிரஸ் பேசி வந்தது. இப்போதைய பேச்சு என்ன? சுயராஜ்யம் வந்த பிறகு படைக்கான ஒதுக்கீடு எவ்வளவு? பாதியாயிற்று? வளர்ந்துள்ளதா?

ஆனால் இப்போது இவ்வாறெல்லாம் நினைத்துப் பார்க்கக் கூட நமக்குத் தைரியம் வருவதில்லை. அதற்குக் காரணம் நாம் நம் மனத்தளவில் இன்னும் சுதந்திரர்களாகவில்லை என்பதே. ஓரளவு அச்சமும் காரணமாக இருக்கிறது, இருக்கவேண்டிய அளவு உள்ளார்ந்த அன்பு பாரத நாட்டில் இல்லை. இந்திய நாட்டில் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் இருந்தால் நாட்டின் வலிமை வெளிப்படும். இப்போது, எல்லா வகையிலும், எண்ணற்ற வேற்றுமைகள் பாரத நாட்டை உள்ளிருந்தே குடைந்து வருகின்றன. காந்தியின் முயற்சியால் ஓரளவாவது ஒற்றுமை தோன்றிற்று. அதன் விளைவாகச் சுயராஜ்யம் என்ற ஒரு குறிக்கோள் பிறந்தது. ஆனால் அந்த ஒற்றுமை மேலோட்டமானது மட்டுமே. நாட்டுக்குச் சுதந்திரம் கிட்டிய பிறகு எப்படியெல்லாம் பூசல்கள் உண்டாகி வருகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இப்படிச் சில "பயஸ்தான்"கள் தாம் நாட்டின் மனத்துக்குள் கிடக்கின்றன. எல்லோரும் இப்படி இருப்பதால் படைச் செலவைக் குறைக்கும் தைரியம் யாருக்கும் உண்டாகவில்லை.

இன்றே இப்போதே படையைக் கலைத்துவிடுவது சாத்தியமில்லை என்றால் அது நன்றாக இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் நாளை மறுநாளாவது கலைக்கப்பட்டாக வேண்டுமா? இல்லையா? என்பது தான் என் கேள்வி. ஆனால் ஒன்று, நாம் படைக்கலங்களைச் சார்ந்து இருக்கும் வரை அது நடக்கவும் போவதில்லை. ஆதலால் நாட்டின் உள்ளார்ந்த அகிம்சையின் வலிமையை — ஆற்றலை எழுப்ப வேண்டும். உள்நாட்டு அமைதியைக் காக்கப் போலீஸாரோ படையினரோ தேவையில்லை என்ற நிலை கொஞ்சமாவது உருவாகுமானால் பிறகு சர்வதேச அரங்கில் அகிம்சை எவ்வழியில்

புகும் என்பதைப் பற்றிய ஒரு காட்சி கிட்டுவதாகும், நேர் மாருக நாட்டில் பூசலும், கலகமுமாகக் கொந்தளிப்பு உண்டாகிற இடங்களில் எல்லாம் போலீஸ் வந்தால் தான் அமைதி உண்டாகும் என்ற நிலே இருக்குமாஞல் படை ஒழிப்பு என்றுமே நடக்கப் போவதில்லே. இதை நன்ருகப் புரிந்து கொண்டு விடுங்கள். பாதுகாப்புக்கான வலிமை அகிம்சைக்கு இல்லே எனின் அகிம்சை அரசியாகச் சமைந்து இருக்க இயலாது, பணிப்பெண்ணுகப் புழுக்கை வேலே செய்து காலங் கழிப்பதுதான் இயலும். ஆதலால்தான் சாந்திசேனே நிறுவப்பட வேண்டும் என்பது. அதோடு சாந்தி சேனே வாயிலாகக் காத்தலும் இயலும் என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் உண்டாகிவிடுமாயின் உள்நாட்டு அமைதி காப்ப தற்குப் போலீஸின் உதவி தேவையற்றதாகிவிடும். போகப் போக படைச் செலவின் பளுவைக் குறைப்பதற்கு மக்கள் இசைவும் கிடைக்கும். ஆதலால் சாந்தி சேனே 'அமைப்பது இப்போதைய தலேயாய அவசியமாகிறது.

எப்போதும் அது தொண்டர் படையாகவே இருக்கும்

இதுவே சாந்தி சேனேயைப் பற்றிய கனவு. இக்கனவை அவர் நனவாக்க இயலாது போயிற்று. இதில் வியப்பு ஒன்றும் இல்லே. இதற்கான அடிப்படை அப்போது இல்லே. அப்படி ஓர் அடிப்படை அமைப்பதற்கு எல்லாவற்றுக்கும் முதலாக நாடு நெடுக பரவலான ஒரு சேவா சேனே (தொண்டர் அணி) தோன்றியிருக்க வேண்டும். சாந்தி சேனேக்கு முதல் தேவை தொண்டர் படை. தொண்டர் படை இன்றிச் சாந்தி சேனேக்குச் சாதகமான சூழல் இராது.

சாந்தி சேனேயே எப்போதும் சேவா சேனேயாக—தொண்டர் படையாக இருக்கும். அவ்வமைதிப் படையினர் இடைவிடாது தொண்டு செய்து வருவர்; ஒழுங்காகத் திட்ட மிட்ட பயிற்சி செய்து கட்டொழுங்கை வளர்ப்பர். அமைதி குன்றியவிடத்து, அமைதிக் குறைவைப் போக்க முனேவர்.

எங்கெங்கெல்லாம் அமைதிக் குறைவு உண்டாகிறதோ அங்கங்கே சென்று அமைதியின் பணியிலே தேவையானுல் தம் உயிரையும் கொடுக்க வேண்டும் என்பதுமே இந்தச் சங்கல்பத்தில் அடங்கியுள்ளது. இவ்வளவோடு நிற்பதன்று சாந்திப் படைவீரனுகிற விஷயம் அவன் எல்லோருக்கும் தாயன்பு பூண்ட ஒரு தொண்டனுகவும் அவன் இருப்பான். எப்போதும் அன்பின் நிறைவோடு அவன் பணி செய்வான். அன்பு காரணமாகத் தன்னை யொத்த படையினருக் கிடையிலோ மக்களிடையிலோ எப்போதாவது ஒரு கடுமை யான நெருக்கடி தோன்றினுல் உயிரை ஒரு பொருட்டாகக் கருத மாட்டான். தியாகம் அவனுக்கு இயல்பு. தான் தியாகம் செய்வதாக அவனுக்குத் தோன்றுதலும் இல்லை. அதையெல்லாம் அன்புச் செயலாகவே அவன் கருதுவான். ஆதலால் சாந்தி சேனை கடைசி வரையிலும் தொண்டர் படையாகவே இருக்கும்.

மக்கள் சம்மதம் இன்றியமையாதது

இச்சேனை எதை ஆதாரமாகக் கொண்டு நிற்கும்? அரசினர் படையை அமைத்திருக்கின்றனர் என்ருல் அதற்குக் காரணம் நாம் இசைவு கொடுத்திருப்பதாகும். கொள்கை யளவில் அதற்குக் கிடைத்திருக்கிற ஆதரவு மக்களின் ஒட்டு மொத்தமான இசைவு. பொருளாதார ரீதியாக அதற்குக் கிடைக்கிற ஆதரவு நாம் வரி என்ற பெயரில்—உருவத்தில்—தருகிற பொருள். சாந்திசேனைக்கும் இது போன்ற ஆதரவு ஒன்றிருக்க வேண்டும். நாம் பரிவினுல் தூண்டப் பட்டு இயங்குவதாகலாம். சேவையின்பால் விருப்பம் இருப்பது காரணமாகலாம். ஆனுல் இவை போதாது. அமைதிப் படையில் அங்கமாகி எல்லோருக்கும் பணிசெய்ய நான் ஆசைப்படுகிறேன் என்றவிடத்தும், உங்கள் சம்மதம் இல்லாமல் செய்தேன் எனில் ஒரு வகையான ஆற்றலும் எனக்கு உண்டாகாது. மக்களிடையில் சென்று பலியாவது ஒன்று மட்டும்தான் ஆசை என்பதோடு நிற்கவில்லை. மக்க

ளிடையே அமைதியை நிலைபெறச் செய்து வாழ விரும்பு கிறேன் என்பதுமே உண்டு. ஒருவனால் அமைதி பேணப்படும். நெருக்கடி நிலைமைக்கு ஈடு கொடுப்பான் என்ற எண்ணம் அப்பகுதியில் வாழும் மக்கள் மனத்தில் உண்டாக வேண்டும். இப்படி ஒரு மாறுதல் உண்டாகவேண்டுமென்பது என் ஆசை. இந்தச் சேவையுல் அதிகார தோரணை இல்லை. தார்மீக (ஒழுக்கம் பற்றிய) அதிகாரம் மட்டுமே உள்ளது. ஏதாவது ஒரு வகையில் மக்கள் ஒப்புதல் பெற்றவன் என்ற தகுதி ஒருவனுக்கு இருக்கவேண்டும். "தங்கள் தொண்டு எங்களுக்கு மிகவும் உகப்பாயிருக்கிறது, அதற்குப் பிரதியுபகாரமாக நாங்களும் ஏதேனும் செய்தே தீருவோம்" என்பது போன்ற ஓர் இசைவு. அதற்காகவே சர்வோதயப் பாத்திரம் என்ற அமைப்பையும் முன் வைத்திருக்கிறேன். அது மக்கள் சம்மதத்தின் ஒரு குறியீடு—மக்கள் மனமொப்பித்தந்த நம் பணிக்கு ஒரு "சாங்க்ஷன்" (இசைவு). அவ்விசைவு காரணமாகச் சாந்தி சேனைக்கு ஆங்காங்கே பொருளாத ஆதரவும் கிடைக்கும். உண்மையிலேயே மக்கள் தோற்று வித்த ஒரு படையாக அது அமையும்.

மக்களுக்கு உண்டாக வேண்டியது பாதுகாப்பல்ல தற்காப்பு

சாந்தி சேனையைப் பற்றிய ஒரு கருத்து மனத்திலிருத்திக் கொள்ள வேண்டியதுண்டு. படை வலிமையின் அடிப் படையில் மக்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பைப்போன்றதே சாந்தி சேனையின் வாயிலாகக் கிடைக்கும் பாதுகாப்பும் என்று கூறமுடியாது. இன்று அமலில் உள்ள நிலையில் போலீஸ் உதவியால் மக்கள் பாதுகாக்கப்பட்டவர்களாக இருப்பார்களேயன்றித் தற்காப்புடையவர்களாக இரார். இது போன்ற சூழ்நிலை இருக்கும் வரை உண்மையான அமைதி என்பது என்ன என்பதை யாரும் அனுபவபூர்வமாக அறிவதில்லை. கடைசியில் அந்த அந்த ஊர் அல்லது நகரத்தின் அமைதி காக்கும் பொறுப்பு அங்கங்கே குடியிருப்பவர்கள் மீதே சார்ந்திருக்கும் அமைதிப் படையாளியும் ஒரு பகுதியில்

குடியிருப்பவர் என்ற நிலையில் அமைதி காப்பது அந்த அளவுக்கு அவர் பொறுப்பும் ஆகிறது.

ஆதலால் ஒவ்வொரு ஊரிலும், நகரத்திலும், பேட்டையிலும் அமைதிப் படையின் கட்டுப்பாடான அமைப்பு முறைகள் இருக்க வேண்டும், ஐயாயிரம் மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு சாந்திப் படையாளி தோன்ற வேண்டும் என்பது என்னுடைய கணிப்பு, அவர் அந்த அந்தப் பிரதேசத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். ஒரு பகுதியின் அமைதிப் படையாளியை மற்ருெரு பகுதிக்கு அனுப்ப வேண்டிய வாய்ப்பு அந்த அமைப்பில் உண்டாகாது. அது இயல்பன்று, செயற்கையான ஒரு நடவடிக்கை, ஆம், பல சந்தர்ப்பங்களில் வெளியே இருந்து ஓர் அமைதிப் படையாளி வந்து அவ்விடத்துச் சாந்திப் படையாளிக்கு உதவி செய்தல் கூடும். அமைதிப் படையின் அடிப்படை நோக்கம் மக்கள் தற்காப்புடையவர்களாக இருத்தலேயன்றி பாதுகாக்கப்பட்டவர்களாக இருத்தல் அன்று. சாந்தி சேனையின் பணி போலீசாரின் அல்லது சிப்பாய்களின் பணி அன்று. அது மக்கள் தம்மிடையில் தாமாகவே உருவாக்கும் ஓர் அமைப்பாக இருத்தல் வேண்டும். போலீஸும் படையும் நம்மை நாகரீக வாழ்க்கையில் இருந்து விடுதலை வாங்கித் தரும் அமைப்புக்கள். இந்த விஷயத்தை மக்கள் புரிந்து கொள்ளுமாறு எடுத்துக் கூறி இப்பணியை நாம் செய்ய வேண்டி இருக்கும்.

நோய் வராமல் காத்துக் கொள்ள ஆரோக்கிய சாஸ்திரம் (உடல் நல நூல்) சில கருத்துக்களையும் விதிகளையும் கூறுகின்றன, அவற்றை மீறுவதால் உண்டாகும் நோயை விலக்க மருந்தைக் கையாள்வது போலத்தான் சாந்தி சேனையும் பணியாற்றும். அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் காரணங்கள் முளைக்காதவாறு பார்த்துக் கொள்வது அமைதிப்படையாளியின் முதல் காரியமாக இருக்கும். அப்படி அமைதியின்மை தலை தூக்குமானுல் தன் தலையையே பணயம்

வைக்கவும் அவன் சித்தமாயிருப்பான். அது போன்ற சந்தர்ப்பங்களில் அன்பின் நிறைவோடு தன் உயிரையே கொடுக்கவும் சித்தமாக சண்டையிடுவோரிடையே சென்று அவர்களைச் சமாதானப் படுத்த முனைய வேண்டும். துவேஷமின்மை மட்டும் போதாது. அசல் அன்பே வேண்டும் அதுவும் இருதரப்பார் மீதும் வைத்துள்ள அன்பாக இருக்க வேண்டும் நாம் அவர்களைத் தவறான வழியிலிருந்து காக்க ஆசைப்படுகிறோம். அப்படி அவர்களைக் காக்கமுடியாவிடின் முதல் நடவடிக்கையாக நம் உயிரையே பலியாகக் கொடுக்கத் தயாராக இருப்போம்.

அமைதிப் படையின் பணிகளில் ஆண்களை விடவும் பெண்கள் பயனுடைய பங்கு பெறமுடியும். போர் முனையின் மோதலிலே ஜான்ஸிராணியைப் போல் யாரோ ஒருத்தி தான் போராடமுடியும். ஆனால் அமைதிப் படையில் ஒவ்வொரு பெண்ணும் பணியாற்ற இயலும். பெண்களின் இதயத்தில் பரிவுண்டு; அவர்கள் எளிய உள்ளம் படைத்தவராவார்கள். ஆதலால் பரிவின்றிக் கொன்று குவிக்கிற காரியத்தை அவர்கள் செய்யமாட்டார்கள். இந்த அமைதிப் படையின் வேலை தான் அன்பின் வேலையாயிற்றே. ஆதலால் பெண்கள் இப்பணியை வெகு நன்றாகச் செய்வார்கள். காந்திஜிதான் பெண்களிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்! ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிறகு பெண்களிடம் ஆற்றலை எழுப்பியவர். அவர்களிடம் அன்பைப் பேணியவர் காந்திஜி ஒருவரே. பாபுவின் அந்த அன்பு ஸ்பரிசம் பெண்களுக்கு உண்டாகுமானால் அவர்கள் நிறையப்பணி செய்யும் வல்லமை பெற்று விடுவர்.

சாந்தி சேனையின் தனிமை தளபதியும் சாதாரணப் படையாளியும்

சாந்தி சேனை பற்றிய காந்தியின் ஆசை நிறைவெய்தாமலே போயிற்று. இந்தக்கருத்தை அவர் முன்வைத்த போது

அவரைப் பின்பற்றிய நம்மைப் போன்ற வலிவற்றவர்களுக்கு அது அசாத்தியம் என்றும், அமலுக்கு வரப் போவதில்லை என்றும் தோன்றிற்று. இத்தனைக்கும் தம் பணித்திட்டச் செயலாளர்கள் வடிவில் அதற்குத்தக்க ஒரு பெரும்படையை அவர் திரட்டித்தான் வைத்திருந்தார். இவ்வேலைக்குப் போதிய அளவு பெரிய எண்ணிக்கையில் தொண்டர்கள் இருந்தும், சாந்தி சேனை என்ற பேச்சு வந்தபோது யாரும் அதற்கு அவ்வளவாகச் சித்தமாயிருக்கவில்லை. உண்மையான அமைதிப் படையாளிகள் கிடைக்கவில்லை. அது அமலுக்கு வரவில்லை யென்று காந்தியும் கவலைப்படவில்லை. அதற்குக் காரணம் அவரிடம் ஓர் உண்மை இருந்தது. என்னுடைய பேச்சைச் செயலாக்கக் குறைந்தது ஓர் ஆளாவது திண்ணமாய்க் கிளம்பு வான். அந்த ஒரு மனிதன் சாஷாத் நானே (காந்தியே) தான்! சாந்திசேனையின் தளபதி என்ற ஹோதாவில் அவ்வுத்தரவைப் பிரகடனம் செய்தார். பிறகு தாமே சாந்தி சேனையைச் சேர்ந்தவர் என்ற தகுதியில் அந்த உத்தரவை அமல் செய்யக் கிளம்பினார். இவற்றை யெல்லாம் நாம் நேரில் கண்டு இருக்கிறோம். ஆதலால் சாந்திசேனைத் தளபதியின் ஆணையைச் சிரமேற் கொண்டு ஒழுகிய ஒரு படையாளியும் கிளம்பவில்லை என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. ஒரு படையாளியாவது புறப்படவே செய்தான். அவன் தொண்டு செய்து தான் வகுத்த வழியில் போகவும் செய்தான். அவன் உயிர் பரமாத்மாவின் பாதங்களில் பலியாக அர்ப்பணமும் ஆயிற்று; அவன் விதைத்த இந்த அழிவில்லா வித்து வளர்ந்து பரவும் என்பது உறுதி.

9 அகிம்சையின் ஆற்றல்

உலகத்தின் பிற பகுதிகளில் போலவே பாரத நாட்டிலும் ஞானியரும் பக்தர்களும் அவ்வப்போது பிறந்துள்ளனர். ஆன்மஞானப் பெற்றியை—அடிப்படையை—அவர்கள் மக்களுக்குப் போதித்துள்ளனர். மக்களும் அவர்கள் சொல்லுக்குச் செவி சாய்த்துள்ளனர்; இயன்ற அளவு புரிந்து கொண்டு செயலாக்கவும் முயன்றுள்ளனர்; செய்ய இயலாத போது, அதற்குத் தம் குறையும், சோர்வும் காரணமே என்று கருதி அடிப்படைக் கருத்துக்களைப் போற்றினாலும், அவை நடக்கிற காரியம் அல்ல என்ற நிலையை மேற்கொண்டுள்ளனர்.

காலத்தின் இன்றியமையாத் தேவையும் சான்றோர்களின் அறிவுரையும் ஒன்றாக இணையும் போது புரட்சி தோன்றுகிறது. காந்தி விஷயத்தில் நாம் இதைக் காணலாம். இம்சையை அகிம்சையால் எதிர்த்து விடுங்கள், பொய்யை மெய்யால் தாக்குங்கள் என்று பேசி படைக்களன்கள் இன்றி எப்படி எதிர்ப்பது என்பதை அவர் நமக்குப் போதித்துள்ளார். அப்படியும் இது ஒன்றும் பழைய செய்தி அன்று. இது பாரத நாட்டின் பண்பாட்டில் மலர்ந்து பழுத்த கருத்து. இதுவே இந்நாட்டின் உண்மை உருவம். புத்த பகவானும் மகாவீரரும் சான்றோர் பலரும் இதையேதான் போதித்தனர். ஆனால் காந்தியின் சொல்லாக இது வெளி வந்த போது, புரட்சியைத் தோற்றுவிக்கும் ஆற்றலோடு வெளி வந்தது. அதற்குக் காரணம் புரட்சிக்கான வரலாற்று நிலைக்களன் ஒன்று உருவாகி இருந்தமையே.

அரிய ஒரு வரலாற்று நிலைக்களன்

முற்காலத்தில் பாரத நாட்டில் போர்க் கருவிகள் இருந்ததுண்டு. எல்லோரிடத்தும் இருந்தன என்பதன்று. விரும்பு

வோர் ஆயுதம் வைத்துக்கொள்ள உரிமை இருந்தது. அந்தணர் கூட விரும்பினுல் போர்க்கருவிகள் வைத்துக் கொள்ளலாம். பாரத நாட்டினர் அகிம்சையின் சட்டம் ஒன்றைச் செய்தனர்—ஆயுதம் வைத்துக் கொள்வதற்கு ஓர் எல்லை வகுத்தனர். ஆயுதம் தாங்குதல் இன்றியமையாதது என்ற நிலையில் என்ன செய்வது? அந்நிலைக்கு ஒரு வரையறை செய்தனர் எல்லோரிடத்தும் ஆயுதம் இருக்க வேண்டியதில்லை; குறிப்பிட்ட ஓர் இனத்தவரிடம் ஆயுதம் இருந்தேயாக வேண்டும், ஏனையோர் ஆயுதம் வைத்துக் கொள்வதை விட்டு விட வேண்டும் என்பது பாரத நாட்டின் சட்டம் ஆயிற்று. இதன் விளைவாக பாரத நாட்டில் அகிம்சை பற்றிய சிந்தனை தலையெடுத்தது. ஆனுல் "ஆயுதம் வாயிலாகப் பாதுகாப்பு" என்ற கருத்து நிலையூன்றி விட்டது. ஆதலால் அகிம்சைக்கு ஆற்றல் குறைவாகவே இருந்து வந்தது.

பிற்காலத்தில் ஆங்கிலேயர் வந்தனர். இதற்கு முன் ஒருவரும் செய்யாத—ஒப்பற்ற—ஒரு காரியத்தை அவர்கள் செய்தனர். ஆயுதங்களைப் பறித்து, பாரத நாட்டு மக்கள் அனைவரையும் நிராயுத பாணிகளாக்கி விட்டனர். அதற்கு முன் ஓர் அரசனுவது இப்படி ஒன்றை எப்போதுமே செய்ததில்லை இதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, அவ்வரசர்களுக்கு அவ்வளவு அதிகாரம் இருக்கவில்லை என்பது. மற்றொன்று மக்களிடமிருந்து படைக்கலன்களை அகற்றி விட்டால் வெளிநாட்டுப் படையெடுப்பின்போது அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசன் ஒருவன் மீதே சுமந்து விடும் என்பது. அவ்வாறு பாதுகாக்கும் வல்லமை அவர்களுக்கு இருக்கவில்லை. ஆதலால்தான் அவர்கள் ஒருவரும் மக்களை முற்றும் நிராயுதபாணிகளாக்கவில்லை. ஆனுல் ஆங்கிலேயர்கள் இதைச் செய்து முடித்தனர். யாரும் படைக்கலன் வைத்திருக்கலாகாதென்று பிரகடனம் செய்தனர். தக்க காரணம் இருந்தாலும் அனுமதி பெற்றல்லாது ஆயுதம் வைத்துக்

கொள்ள யாருக்கும் உரிமையில்லை என்ற நிலை வந்தது. இந்தச் சூழ்நிலையில் ஒன்று பாரத நாட்டினர் என்றென்றைக்கும் கொத்தடிமைகளாக இருக்கவேண்டும் அல்லது புதிய கருவி ஒன்றைக் கண்டு பிடிக்கவேண்டும் என்ற ஒரு பிரச்னை எழுந்தது. மக்கள் கையிலோ போர்க் கருவிகள் இல்லை இந்நிலையில், ஆயுதம் இல்லாமலேயே எதிர்க்க வழி இல்லையேல் பாரதநாடு மீளாஅடிமையாக இருக்கவேண்டியது தான் என்ற நிலை வந்தது. ஆதலால் ஆயுதம் தவிர்த்த வழிகளை ஆராய வேண்டிய வரலாற்றுத் தேவை ஒன்று உருவாயிற்று. இந்தக் கட்டத்தில்தான் மகாத்மா காந்தி தோன்றினர். அவர் போதனையையும், அவர் தோன்றிய சமூகத்தின் இயல்பையும் பண்பாட்டளவிலே ஆய்ந்தால், அவர் வருகைகூட இயற்கைக்கு ஒத்ததாகவே தோன்றுகிறது.

காந்தி: குஜராத் மாநிலப் பண்பாட்டின் பழுத்த பழம்

இயல்பிலேயே காந்தி குஜராத்திப் பண்பாட்டின் பழுத்த பழம் எனலாம். குஜராத் மாநிலத்து மண் செய்த தவத்தின் விளைவு என்னுமாறு காந்தி அங்கே பிறந்தார். ஏதோ தற்செயலாக அங்கே பிறந்தார் என்பதோ அல்லது அதிருஷ்ட வசமாகக் கிடைத்த ஆசியாக அவர் பிறந்த பெருமை அந்நாட்டுக்குக் கிடைத்தது என்பதோ அன்று. அதற்குப் பின்னணியாக ஒரு தத்துவம் உண்டு. இத்தகைய ஒரு வெண்ணெய் திரள்வதற்கான ஒரு தனி இயல்பு குஜராத் என்ற தயிரிலேயே உள்ளது. குஜராத்தைப் பார்க்குங்கால் எடுப்பாகத் தெரிவது ஒன்றுண்டு. அந்நாட்டுப் பாமர மக்கள் கூட முழு அகிம்சையைக் கடைப்பிடிக்கின்றனர். அதனாலேயே குஜராத் காந்தியின் பிறப்பிடமாயிற்று என்று கருதுகிறேன்.

குஜராத்தில் சாமானிய மக்கள் கூட ஊன் உண்ணாதவர்கள் என்பது அப்படி ஒரு பெரிய செய்தியாகத் தோன்றாது

தான்; ஆனால், இப்படி ஒன்றை உலகில் மற்றெங்கும் காண்பதரிது. ஊன் விலக்கும் இயக்கங்களை நம் முன்னோர் களும் நடத்தியுள்ளனர். பல்லாயிரம் ஆண்டுகளாக அவ்வியக்கங்கள் நடந்துள்ளன. இவ்விஷயத்தில் இந்நாட் டினர் உண்மையாகவே தவம் மேற்கொண்டுள்ளனர். அதன் விளைவாகத்தான் இன்றும் ஊன் உண்போர் கூட அதைத் தரம் குறைந்ததாகக் கருதுகின்றனர். அதை உயர்வு என்று அவர்களுமே கருதுவதில்லை. இதன் பொருள் பாரத நாட் டினர் மரக்கறி உணவை நிரந்தரமாக ஏற்றுக் கொண்டுள் ளனர் என்பதுதானே. இப்படி ஓர் உயரிய மரபு பாரத நாட்டில் தோன்றியுள்ளது. இதைப் பாரத நாட்டின் சிறப்பு எனல் வேண்டும். இச்சிறப்பு குஜராத்தைப் பொறுத்த வரையில் ஒரு தனிச் சிறப்பாக அமைந்துள்ளது. அங்கே பாமர மக்கள் கூட ஊன் உண்பதில்லை.

இது ஒரு சின்ன விஷயம் என்பதற்கில்லை. முற்றும் புதிதான ஓர் எதிர்ப்புச் செயலால் உலகனைத்தும் உள்ள துன்பத்தைப் போக்கலாம் என்ற அரிய ஓர் இலட்சியத்தைத் தந்த அவதாரம் தோன்றுவதற்கு நிலைக்களனான அகிம்சை யல்லவா அங்கே நிலவி இருக்கிறது!

யுகத் தேவையின் வலிமை

இது நிற்க, ஆயுதம் இல்லாமல் எதிர்க்கும் வழி ஒன்றைக் கண்டு பிடிக்கும் வரலாற்று நிர்ப்பந்தம் ஒன்று தோன்றி இருந்தது என்றும், அக்கால கட்டத்தில்தான் காந்தி வந்தார் என்றும் மேலே கூறினேன் அல்லவா? அப்படியும் இலட்சக் கணக்கில் மக்கள் அவர் சொல்லுக்குச் செவி சாய்க்கவில்லை. அதிகம் போனால் அவருக்கு என் போன்ற நான்கைந்து சீடர்கள் கிடைத்திருப்பார்கள். ஆனால் நாடெங்கிலும் இத்தகைய ஒரு சுதந்திரச் சிந்தனை—விசாரம்-பரவி இருந்தது. ஆங்காங்கே இச்சிந்தனை அரை குறையாகச் செயலையும் தூண்டியிருந்தது. ஆங்கிலேயர் ஆயுதங்களை அகற்றி விட்டு

இருந்தமையால் ஒரு தனிச் சூழ்நிலையும் உருவாகி இருந்தது. ஆதலால் காந்தியின் அகிம்சைச் செய்திக்கு ஆதரவாகக் காலத்தின் தேவை என்ற அழுத்தமும் சேர்ந்து கொண்டது.

ஆங்கிலேயரின் ஆட்சியோ வலிமை மிக்கது. அவர்கள் பிடியும் இறுகிய பிடி; அத்தகையோரை எதிர்ப்பது எவ்வாறு? இதற்கு அகிம்சா யுக்தி ஒன்றைக் காந்தி கையாண்டார்: "நாம் பகைமையும் கொள்ளோம்; எதிர்க்கவும் செய்வோம்" என்றார் அவர். இப்படி ஒரு புதுச் சிந்தனை உலகுக்கு எட்டிற்று. அதில் பகையின்மையும் எதிர்ப்புச் செயலும் ஏககாலத்தில் இருந்தன. சமூகத்துக்கு ஒரு புதுப் பாதை தானாகவே திறந்து கொண்டது. பகையின்மையால் எதிர்ப்பாற்றல் வளர்ந்தது. எதிர்ப்பாற்றலால் பகையின்மையும் வளர்ந்தது.

பெரும் பெரும் ஆயுதங்களை எல்லாம் வேலை இல்லாமல் அடித்து விடும் வழியை காந்தி நமக்குக் காட்டினார். இந் நாட்டை ஆள ஆங்கிலேயர்களுக்குச் சில ஆயிரக்கணக்கான குடிகளின் ஒத்துழைப்பும், இசைந்த வாழ்வும் தேவையாய் இருந்தது. அவ்வொத்துழைப்பை மறுப்பதே மேற் சொன்ன உத்தியாகும். இப்படிச் செய்தால் ஆங்கிலேயர் அரசு எவ்வளவு தான் வலியதாயிருந்தாலும் அது இங்கே நடவாது. நாம் ஒத்துழைக்க வில்லையாயின் அவர்கள் நம்மை அடிப்பார்கள்; நமக்குத் தொல்லை விளைவிப்பார்கள். அவர்கள் அடித்தாலும் நாம் ஒத்துழைக்க மறுக்கவேண்டும். "உயிர் போனாலும் போகட்டும் உங்கள் சொற்படி நடவோம்" எனல் வேண்டும். இப்படி ஆன்ம வலிமையைக் காட்டும் யுக்தி ஒன்றை அவர் நமக்குப் போதித்தார்.

"இல்லை" என்று அஞ்சாமல் மறுக்கும் ஆற்றல்

ஒருவனை அரக்கர்கள் பிடித்துக் கொண்டனர். அவனிடம் நிறைய வேலை வாங்கினர். ஓய்வு ஒழிவு என்ற பேச்சே

இல்லை. சற்றே "இம்" என்றாலும் போச்சு. அரக்கர்கள் அதட்டுவார்கள், "தின்று விடுவோம் தின்று" என்று. இப்படி எத்தனை நாள்தான் கழிப்பது என்று எண்ணமிடலானான். கடைசியில் ஒரு நாள் "போய்யா நான் வேலையே செய்யப் போவதில்லை. தின்பதாயிருந்தால் ஒரு வழியாய்த் தின்றே தீர்த்து விடு" என்றான். அரக்கர்கள் அவனை ஒன்றும் தின்னவில்லை. "இவனைத் தின்று விட்டால்பிறகு வேலைக்கு ஆள் யார்? என்ற எண்ணம் வந்துவிட்டது அவர்களுக்கு. பிறகு அம்மனிதனுக்கு தைரியமே பிறந்துவிட்டது. "கூலி கிடைத்தன்றி வேலை செய்யப் போவதில்லை" என்றான். பிறகு அரக்கர்கள் அவனுக்குக் கூலி வேறு போட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று

கருத்து இது தான்: இல்லை என்ற மறுப்பின் ஆற்றல் "உன்னுடைய தவறான காரியங்களில் நான் ஒத்துழைப் பதில்லை" என்று சொல்லும் ஆற்றல், நமக்கு வரவேண்டும் தேவையானால் நாம் இறக்கவும் சித்தமாயிருப்போம். மரணத்திற்கு நாம் அஞ்சுவதில்லை. இத்தகைய அஞ்சாமை மனிதனுக்கு உண்டாக வேண்டும். அன்பினால் எல்லோரும் ஒன்றுபட்டு, அஞ்சாமை காரணமாக எதிரில் இருப்போனைப் பார்த்து "உன்னுடைய தவறான காரியங்களில் நான் உதவ மாட்டேன்" என்று சொல்ல வேண்டும். இதுவே உண்மை யான அகிம்சை அஞ்சி அஞ்சி வீட்டில் உட்கார்ந்திருப்பதும், போருக்குப் போவதில்லை என்பதுமே அகிம்சை ஆகிவிட்டது போரிலும் பங்கு கொண்டு "நான் சாகத் தயார். ஆனால், நான் யாரையும் சாகடிக்கிறதில்லை" எனல் வேண்டும். அகிம்சையின் வலிமை இத்தகையது. இதுவே உண்மையான ஆற்றலுங் கூட. ஒரு சிறுவன் கூட ஓர் அரக்கனை அகிம்சையின் ஆற்றலைக் கொண்டு எதிர்க்கலாம். அதற்கு, குறைந்த பட்சம் "இறந்து போனால்தான் என்ன" என்ற துணிவு வந்தாக வேண்டும்—கடவுள் குறித்திருக்கும் ஒரு நாளில்

இறப்பது திண்ணம். அப்படிக் குறிக்கவில்லையென்றால் இறப்பது இல்லை என்ற துணிவு.—இத்தகைய அகிம்சையின் ஆற்றலை எதிர்த்து அணுசக்தியுமே ஒன்றும் செய்ய இயலாது இந்த யுக்தியைத்தான் காந்தி நமக்குக் கற்றுத் தந்தார். இது மிகப் பழையதொரு யுக்திதான்—நம் ரிஷிகளும் முனிவர்களும் கையாண்ட யுக்தி. காந்தி அதையே நம்முன் மேலும் ஒரு படி எடுத்துப் போனார். பெரும் பெரும் பிரச்னைகளையும் சிக்கல்களையும் கூடத் தீர்க்கவல்லது அகிம்சையின் பேராற்றல் என்று நமக்குப் போதித்தார். அரசியலிலும் அகிம்சையைக் கையாளலாம் என்று காட்டினார்.

நமக்கு அகிம்சை இன்னமும் ஆத்மானுபவமாகவில்லை

நமக்குத் தன்னாட்சி கிடைத்தது வெறும் அகிம்சையின் ஆற்றலால் அன்று என ஓர் ஐயப்பாடு உலகோர் மனத்திலும் ஏன் பாரதநாட்டு மக்கள் மனத்திலுமே இருந்துவருகிறது. உலகத்துச் சூழ்நிலையில், தன்னாட்சி பெறுவதில் ஓரளவு இம்சை சம்பந்தப்பட்டதாகவே உள்ளது என்பது இம்மனப் போக்குக்குக் காரணமாகலாம். விஷயத்தின் அடிப்படை அதுவன்று. அகிம்சையின் அவசியம் இன்னமும் நமக்கு வேண்டிய அளவு உள்ளார்ந்த அனுபவமாக மாறவில்லை. அகிம்சை வீரர்களுக்கு அழகு இது என்னுமாறு நாம் அகிம்சையுடன் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். நாம் கையாண்டதோ வலிவற்றவர்களின் அகிம்சையாக இருந்தது. காந்தி விரும்பியது போல் நம் எதிர்ப்புச் செயல் அமையவில்லை. மக்கள் அவர்பால் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர்; ஆதலால் அவரைப் பின்தொடர்ந்தனர். ஆனால் அவர்கள் அகிம்சை வலியோரின் அகிம்சையாய் அமையாமல் எளியோரினதாக ஆகித்தீர்ந்தது. காந்தியின் தலைமையில் இங்கு நடந்த அகிம்சைப் போரில் நாம் அகிம்சையை அரைகுறையாகத்தான் கையாண்டிருக்கிறோம். மனத்தளவிலாவது பகைமை இருக்கத்தான் செய்தது, எல்லாம் மேலோட்டமான அகிம்சை; அதன் விளைவுதான் தன்னாட்சி வந்தும் அது

அகிம்சையால் வந்தது போன்ற தோற்றம் தரவில்லை. இது காரணமாக அகிம்சையின் 'சுவை' அழிந்து போயிற்று. அகிம்சையின் ஆற்றலுக்குள்ள சதுரப்பாட்டை — சமத்காரத்தை — சிறு அளவில் தான் என்றாலும், பார்த்தோம் என்பதொன்றுண்டு; ஆனால், அவ்வாற்றலின் உள்ளார்ந்த ஓர் ஆத்மானுபவம் நமக்குக் கிட்டாமலே போயிற்று.

ஆதலால்தான் இன்றும் கூட அகிம்சை எது, இம்சை எது என்ற பிரச்சினைகளில் திட்ட வட்டமான ஒரு தெளிவு நம் மனதில் பிறக்கவில்லை. ஒரு சிலர் அகிம்சையைக் காக்க வேணும் சிறிது இம்சையைக் கையாள வேண்டியிருக்கும் என்று கருதுகின்றனர். பழைய தலை முறையின் பெரும் பெரும் புள்ளிகள் கூட இப்படி நினைத்தது தான் தெரியுமே. இன்றும் கூட— காந்தி வந்து போன பிறகும் கூட—மக்கள் இக்கருத்தையே மனதில் வைத்துக்கொண்டு, முன்போலவே விஷயத்துக்கு முடிவு கட்டுகின்றனர் நம் முன்னோர்கள் தமக்குத் தெரிந்த தர்மத்தைக் கொண்டு தம் கருத்தை அமைத்தனர் ஆனால் அது தனி நபர் வாழ்க்கையில்தான் இயல்வது. சமூக விஷயத்தில் இம்சையும் சற்றே "அனுசரித்துக் கொண்டு போகத்தான் வேண்டும்" என்பது அவர்கள் சிந்தனையின் போக்கு. அத்தகைய போக்கு இல்லையென்றால் ஞாயிற்றுக் கிழமையன்று பைபிளை முழு பக்தியோடு படித்து விட்டு ஏனைய நாட்களில் புதுப் புதுப் போர்க் கருவிகளைச் செய்து மலை மலையாய்க் குவிக்க உழைப்பதெப்படி? இனி வர இருக்கும் சமுதாயத்துக்கு அகிம்சை மிகுந்த பயன் தர வல்லதுதான். ஆனால், இன்று நம் கண்முன் உள்ள சமுதாய நிலையில் இம்சை முதலியவற்றைக் கையாளத்தான் வேண்டும் என்பது அவர்கள் கருத்து. காந்தி நமக்குப் போதித்தவற்றின் தரத்தை இவ்வாறு குறைத்துப் பேசி வருகின்றனர். அறிவுணர்ச்சி சம்பந்தப்பட்ட சாதனைகள் சமூகத்தில் இன்னமும் வலுப் பெறவில்லை என்பதே இதன் காரணம்

யாரைப் பின்பற்றி? காந்தியையா? திலகரையா?

நாமெல்லாம் காந்தியின் உண்மைச் சீடர்கள் எனக் கூறிக் கொள்கிறோம். நுணுகிப் பார்த்தால் நம்முள் பலரும் திலக் மகராஜைப் பின்பற்றுவோராக இருப்போம். இந் நிலைதான் இன்று நிலவுவது என்று மீண்டும் மீண்டும் சொல்கி றேன். லோகமான்யர் கீதா ரகஸ்யத்தில் அகிம்சையை நிறையப் போற்றித்தான் இருக்கிறார். பிறகு அவரே ''அதற்குரிய இடம் தனிமனித வாழ்க்கை; பிரத்தியட்ச உலகில் அகிம்சை எல்லாம் நடக்கிற காரியம் அன்று'' என்கிறார். நம்மில் பலர் லோகமான்யரின் இக்கருத்தையே நடைமுறையில் கைக்கொள்கிறோம். சமூக விஞ்ஞான இயலில் அகிம்சையைச் செயலாக்கும் பிரச்சினை எழும்போது இம்சை-அகிம்சை விஷயத்தில் ''அனுசரித்துக் கொண்டு'' போகிற போக்கையே ஆதரிக்கிறோம்.

இது காரணமாகத்தான் ரைஃபிள் கிளப் (துப்பாக்கிக் குழு) ஒன்றைத் தொடங்குவதைக் கூட காந்தி பெயரில் தொடங்குகின்றனர்! ''பயந்து சாவதை விட தைரியமாகச் சாவது மேல்'' என்று கட்சியாடுவது வேறு. மற்றுமொரு விசித்திரத்தைப் பாருங்கள்: தில்லியில் காந்தியின் சொந்தச் சமாதிக்கருகில் நிற்கிறான் துப்பாக்கி ஏந்திய காவலாளி! அகிம்சையின் பூசாரியை ஒத்த இவனுடைய வேடத்தாலும் நடவடிக்கைகளாலும் தீமையே வந்து சேரும். ஆனால் நான் இதையெல்லாம் தமாஷாகத் தட்டிக் கழிக்கிறேன். மராத்தியில் ஒரு சொல் ''அதி ஜாலே ஹஸூ(ங்) ஆலே'' (அளவு கடந்து போனால் சிரித்து மழுப்ப வேண்டியது தான்). அப்படி ஒரு வேடிக்கையாகத் தான் சொல்கிறேன் இதை. காந்தி ஒரு தப்புச்செய்தார். தில்லியில் உயிரை விடுவதல்லவா அவருக்கு உகப்பாயிருந்தது! பின்னே தில்லிக் காரியங்கள் தில்லி போல் அல்லாமல் எப்படி இருக்கும்? ஆம், இந்தப் போர்வீரன் சமாதிக்கு மரியாதை காட்ட ஆயுதத்தைத் தலைகீழாகப் பிடித்து நிற்கிறான். ஒரு குறியீடு என்ற அளவிலே

பார்த்தால் இம்சை அகிம்சையின் சந்நிதியில் தலை கவிழ்ந்து நிற்கிறது என்று கூடப் பொருள் கொள்ளலாம் தானே!

சவுகரியம் போல சமயாசாரத்தை வைத்துக் கொள்வது போலவா?

உண்மை என்னவென்றால் நமக்கு இன்னமும் அகிம்சையின் ஆற்றலில் மனம் நிறைந்த நம்பிக்கை உண்டாகவில்லை என்பதே. உண்மை நிலை அது அல்லவாயின் காந்தியின் பெயரால் இப்படி ஒன்றும் நடவாது. அகிம்சை தனிநபர் வாழ்க்கைக்கு மட்டுமே என்பது முற்றும் தவறு; சமூக இயலிலும் அதற்கு இடம் உண்டு என்பதை அவர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி இருக்கிறார். அகிம்சையை எந்தச் சமயமாவது குறைத்துக் கூறி இருக்கிறதா? ஜைன (சமண) சமயந்தான் எவ்வளவு நுட்பமாகத் தனி நபர் வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்து வைத்திருக்கிறது! அச்சமயத்தோர் உயிரினம் ஒன்றுக்கும் ஊறுசெய்யலாகாது என்று சிந்தித்திருக்கின்றனர். உயிரினங்களை அழிப்பதைப் பொறுக்க மாட்டார்கள். ஆனால் அவர்களே படையைப் போற்றுகின்றனர், வாழ்விக்கின்றனர், காப்பாற்றுகின்றனர். அவர்களுக்கு ஊன் உண்ணுதல் விலக்கு; ஆனால் சேனையும் வேண்டும். இப்படிச் சமய விஷயத்தில் எல்லோரும் முன்னுக்குப் பின் முரணான காரியங்களைச் செய்து வருகிறோம். அதற்குச் சப்பைக் கட்டாக மேலும் சொல்கிறோம், சமயம் நடைமுறைக்கு ஒத்து இருக்கவேண்டும் என்று. சுயம்புவான முழுச் சமயத்தைச் 'சரிப்படுத்திக் கொண்டு வந்த' ஒரு சமயநெறி சவுகரியமான சமயநெறி. நாம் சவுகரியப்பட்ட போது அனுசரிக்கக் கூடிய ஒன்று தான் நடை முறையில் இருக்கும். ஒரு சமயத்துக்காக இடர்பாடுகளைத்தாங்க நாம் ஒன்றும் தயாராய் இல்லை.

மற்றவர்கள் யார் வேண்டுமானாலும் இப்படிச் சொல்லிக் கொள்ளட்டும். காந்தியவாதிகளே இப்படிப் பேசத் தலைப் பட்டால் காந்தி வந்ததும் போனதும் வீண் என்று தான்

நான் சொல்கிறேன். காந்தி கருத்துக்கு இப்படியெல்லாம் நாம் பொருள் கொள்வோமானுல் நாம் பாபு விஷயத்தில் பெரிய அநீதி இழைத்தவர்கள் ஆவோம்.

உண்மையாகவே இம்சை—அகிம்சை விஷயத்தில் இன்னமும் நம் மனத்தில் ஒரு தெளிவு பிறக்கவில்லை. மக்கள் மனதில் இன்னமும் இம்சை இருந்து வருகிறது, காந்தி, சுபாஷ்பாபு ஆகிய இருவர் வழியும் அவர்கள் மனத்தில் உள்ளன. ''இரண்டுமே நாட்டுக்குத் தேவை; இரண்டும் ஒன்ருக இணையும், அவ்வாறு இணைந்த பிறகே பணிசிறக்கும்'' என்று மக்கள் கருதுகின்றனர். ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் (நீரகமும் பிராணவாயுவும்) தம்மிற் கலந்து நீர் தோன்றுவது போல நாட்டின் பணி பூர்த்தியாக காந்தி, சுபாஷ்பாபு ஆகிய இருவர் வழியும் தேவை என்று எண்ணுகின்றனர். இவ்விருவர் வழிகளும் இணைந்து சிறந்த வகையில் பணி செய்யும் என்ற ஒரு மயக்கம் மக்கள் மனதில் இருந்து வருகிறது.

அணுயுகத்தில் விஞ்ஞானம் விடுக்கும் அறைகூவல்.

உண்மையாகவே இன்று உலகம் அகிம்சையின்பால் வெகு தீவிரமாகத் திரும்பி இருக்கிறது. முன் என்றும் இல்லாத பிரச்சினை ஒன்றை இன்று அகிம்சை மக்கள் முன் தோற்றுவித்துள்ளது. முன்பு இம்சையின் சாதனங்கள் பல இருந்தன. அவற்ருல் சில பிரச்சினைகள் தீர்ந்தனவாதலால் இம்சைக்குச் சாதகமான பிரச்சாரம் இருந்ததுண்டு. இம்சையால் லாபம் இருந்தது போலவே கேடும் விளையலாயிற்று. இம்சையால் லாபம் கிடைக்க கிடைக்க அதற்கு ஆதரவும் பெருகிவந்தது. ஆனுல் இன்று அணு ஆயுதங்கள் வந்தாயிற்று. ஒன்று, அகிம்சை சார்ந்த சமூகம் அமைய வேண்டும்; அல்லது, மனித இனமே அழிய வேண்டும் என்ற ஒரு பிரச்சினையை விஞ்ஞானம் மனித இனத்தின் முன் நிறுத்தி வைத்திருக்கிறது. அணு ஆயுதங்கள் வந்த பிறகு மிக உயர்ந்தபட்ச இம்சையும் மிக

உயர்ந்தபட்ச அகிம்சையும் ஒன்றையொன்று எதிர்நோக்கிக் கைநீட்டி நிற்கின்றன. இந்த அணு ஆயுதங்கள் எல்லாம் மனித இனத்தை அகிம்சையின்பால் உய்க்கும் என்றே நம்பு கிறேன். அவ்வாறு நிகழவில்லையெனின் மனித இனம் அழிந்து விடும். கடவுளுக்கு அழிக்க விருப்பம் இல்லையென்றால் அகிம்சை சார்ந்த சமூகம் உருவாவதைத் தவிர்க்க முடியாது. அகிம்சையை நோக்கி உலகம் முன்னேறி வருவதாகவே கருதுகிறேன்

காந்தியின் மறைவை ஒட்டி வந்த இரங்கற் செய்திகளில் மக் ஆர்தர் அனுப்பிய ஒன்றும் இருந்தது. "என்றாவது ஒரு நாள் காந்தியின் சொல்லை உலகம் பின்பற்றவேண்டியிருக்கும். அதைத்தவிர வழியில்லை" என்று கூறியிருந்தார். ஒரு படைத் தலைவனுடைய பேச்சு இது. அவருக்கு இப்படிச் சொல்லத் தோன்றியதன் காரணம் அணு ஆயுதங்களால் முற்றும் ஒரு புதிய சூழ்நிலை தோன்றியிருப்பதேயாகும்.

மேற்கண்ட காரணத்தால் இம்சை பழைய தலைமுறை யினரின் காரியமாகிவிட்டது. காந்தியின் அகிம்சைக் கருத்தே இக்காலத்துக்கு முற்றும் பொருந்துவது. ஆதலால் நாம் நம்முடைய அரசியல், பொருளாதாரச் சுதந்திரத்தின் சிக்கல்களை அகிம்சையின் ஆற்றல் கொண்டு தீர்த்தால் ஆயுதம் தவிர்த்த செயலும் எதிர்ப்பும் வளரும். அவ்வாறு உலகுக்கு ஒரு வழி பிறக்கும். உலகம் இம்சையையே செய்து செய்து தளர்ந்து அதைக் கைவிடத் தயாராகி இருப்பது போல் தோன்றுகிறது. ஆதலால் அகிம்சையின் சதுரப் பாட்டை, செய் நேர்த்தியை எல்லாம் சமூகக் களத்திலும் பொருளாதாரக் களத்திலும் செய்து காட்ட வேண்டி யிருக்கிறது. அகிம்சை வாயிலாக சமூகப் பிரச்சனைகளின் சிக்கவிழ்ப்பது இயலும் என்று உலகத்துக்குக் காட்ட வேண்டும். காந்தியின் தலைமையின் கீழ் தன்னாட்சி அடைந்த பிறகு வேண்டியுள்ளது இப்பணியே.

சொந்த வாழ்க்கையில் மக்களுக்கு இக்கட்டுகள் தோன்றுவதுண்டு. அப்போது சித்தத்தில் உண்டாகும் ஒன்றுக்கொன்று முரணான பல சிந்தனைகளுக்கிடையே ஒரு முடிவுக்குவர நேர்கிறது. இப்படியே ஒரு நாட்டின் வாழ்க்கையிலும் நிகழ்வதுண்டு. அப்போது அறிவுடைய மக்களின் சிந்தனையில், வேறுபட்ட என்றென்ன, முற்றும் முரணான எண்ணங்களே உண்டாகலாம்.

இரண்டாவது போரின் போது நிலவிய நான்கு "நிலைகள்"

இரண்டாவது உலகப்போரின் போது நம்முடைய உலகியல் தலைவர்களும் ஆன்மீகத் தலைவர்களும் ஒருவருக்கொருவர் வேறுபட்ட கருத்துக்கள் கொண்டிருந்தது தெரியலாயிற்று. பாரத நாட்டின் மிகப்பெரிய தலைவர்கள் நான்கு விதமான நிலைகளை மேற்கொண்டனர். ஒன்று சுபாஷ்பாபுவின் நிலை. "இப்போர் பாரத நாட்டின் விடுதலைக்கு ஒரு சிறந்த வாய்ப்பு. ஆங்கிலேயருக்கெதிராக கலகக் குரல் எழுப்பி அவர்களுடைய பகைவர்களின் உதவியைத் திரட்டுதல் வேண்டும்"என்று அவர் கூறினார்.

இரண்டாவது பண்டித நேரு, சர்தார் வல்லபாய்படேல் போன்றோர் மேற்கொண்ட நிலை. "ஆங்கிலேயர் பாரதத்துக்குச் சுதந்திரம் வழங்குவதாயிருந்தால், நாம் எல்லாவகையிலும் அவர்களுக்கு உதவ வேண்டும்" என்பது அவர்கள் கருத்து.

மூன்றாவது, காந்தி மேற்கொண்ட நிலை. "நாமோ ஆட்சியாளார்களோடு ஒத்துழைப்பதில்லை. ஆயினும் பாரத நாட்டுக்குத் தன்னாட்சி வழங்குவார்களானால் நாம் அவர்களுக்குத் தார்மீக ஆதரவு தருவோம். வேறு யாருக்கும்

உதவ மாட்டோம். நம்முடையது தார்மீக ஆதரவு மட்டும் தான்; ஆயுதம் தாங்கிய உதவி அன்று'' என்றார் அவர்.

நான்காவது அரவிந்தர் மேற்கொண்ட நிலை. ''இப்போது தெய்வீக சக்தி ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் ஆகியோர் பக்கம் பெருமளவில் உள்ளது தெளிவு. ஆதலால் நம் அனுதாபம் அவர்கள் பக்கம் இருத்தல் வேண்டும். அவர்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதை விட்டு உதவியே செய்தல் வேண்டும்'' என்று பேசிய அரவிந்தர், தம் ஆதரவின் சின்னமாக பாண்டிச்சேரி ஆசிரமத்தின் சார்பில் ஒரு செய்தியை ஆங்கிலேய அரசினருக்கு அனுப்பி வைத்தார்.

இவ்வாறாக அரவிந்தரின் நிபந்தனையற்ற ஆதரவு, சுபாஷ் பாபுவின் நிபந்தனையற்ற எதிர்ப்பு காந்தியின் நிபந்தனைக்குட்பட்ட தார்மீக ஆதரவு பண்டித நேருவின் நிபந்தனைக்குட்பட்ட படை உதவி என்ற ஒன்றுக்கொன்று முற்றும் வேறான நான்கு சிந்தனைப் போக்குகள் தோன்றின. அவை, குறிப்பிட்ட ஒரு நெருக்கடியில் உதவி பற்றி, தவிர்க்க முடியாத ஒரு பிரச்சினை எழுமானால் அப்போது அவர்கள் மேற்கொள்வதாக இருந்த நிலைகள்.

வீரர்கள் ஆதங்கள்; மாவீரர்களாதங்கள்

சீனர்கள் பாரத நாட்டின் மீது படையெடுத்த போது மீண்டும் இப்படி ஒரு நெருக்கடி தோன்றிற்று. ஆட்சிப் பதவியில் இருந்த காந்திய வாதிகள் வெவ்வேறாகப் பிரிந்து நின்றனர். அது போலவே ஆக்கப்பணிகளில் ஈடுபட்டோரும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டனர். இம்மோதலைப் பற்றிய செய்தி எனக்கு எட்டியவுடனேயே ''இது சீனாவின் அப்பட்டமான வன்முறைத் தாக்குதல்; இது சற்றும் யுக்தமல்லாத செயல்'' என்றும் கூறினேன். ''இது பாரத நாட்டின் மீது தொடுத்த போராகும். இது போன்ற தாக்குதலை ஒரு

நாடும் பொறுத்துக்கொள்ளாது. அதைத் தாங்கிக் கொள் வதால் நாடு முன்னேறுவதும் இயலாது. ஆதலால் இது பாரத நாட்டுக்கு ஒரு தர்ம யுத்தமாக உருக்கொண்டிருக் கிறது' என்றும் கூறினேன். மக்களை மனதில் கொண்டு "வீரர்கள் ஆகுமின்! மாவீரர்களாகுமின்." என்றேன். குரூரத் தனம் இல்லாதவன் என்பது போல் அச்சமும் இல்லாதவன், அதாவது அஞ்சாமல் எதிர்க்கின்றவன் வீரன். அதற்கும் மேல், ஆயுதம் ஒன்றும் எடுக்காமல், சாவை எதிர்கொள்ளத் தயாராக, மாற்றானைக் கொல்லும் கருத்து துளியும் இல்லாமல் எதிர்க்கிறவன் மாவீரன்" என்றேன். சீனர்கள் பாரதத்தின் மீது படையெடுத்த போது இதுவே நான் மேற்கொண்ட நிலை.

உண்மையான நெருக்கடி வந்தபோது ஒன்றுமே செய்ய இயலவில்லை; சீனர்களின் ஆக்கிரமிப்பின் போது அகிம்சா பூர்வமான எதிர்ப்புக் காட்ட இயலவில்லை என்ற ஒரு மனக் குறை பலருக்கு உண்டாயிற்று. சிலர் அதனோடு காந்தியின் பெயரையும் இணைத்தனர். காந்தி இருந்திருந்தால் அவர் அப்படிச் செய்திருப்பார், இப்படிச் செய்திருப்பார் என்றனர்.

காந்தியின் பெயரை இப்படி இழுப்பது சரியன்று. காந்தி இப்போதிருந்தால் அவர் இப்படிச் செய்வார் என்று பேசு வோர் காந்தியின் 'அந்தர்யாமி'-ஆத்துமாவாகவே இருந்திருக்க வேண்டும். "லேகோத்தாரணாங் சேதாம்ஸி சோஹி விஞ்ஞான மர்ஹதி" (உலகுய்விக்கும் பெரியார்களின் சித்தத்தை அறிய வல்லார் யார்?) என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். காந்தியோ நாள்தோறும் மலரும் இயல்பினராக இருந்தார். சத்தியத்தைப் பற்றி ஒவ்வொரு நாளும் ஒரு புதிய தரிசனம் அவருக்குக் கிடைத்து வந்தது. சூழ்நிலையைக் கணித்தறிந்து மிகவுயர்ந்த நிலையிலேயே நின்று உணரும் ஆற்றல் உடையவர் அவர். ஆதலால் காந்தி இப்போதிருந்தால் என்ன செய்வார் என்று அனுமானிப்பது சரியன்று. காந்தி அன்று சொன்ன

வற்றிலிருந்து வழி தெரிந்து கொள்ள முடியாத அளவு இன்றைய சூழ்நிலே மாறிப் போயிருக்கிறது. அவரோ என்றுல் அவ்வப்போது மாறி வந்தவர் என்பது வேறு.

ஒரு காலத்தில் காந்தி கத்தியவார் பாணியில் உடை அணிந்து வந்தார். அப்போது அவர் முறுக்கிய தலைப்பாகை அணிவதுண்டு. அக்காலத்தில் அது தேசீய உடை என்றும், மதிப்புக்குரியதல்ல என்றும் மேளுட்டார் பாணியில் உடை அணிவதே மதிப்புக்கு உரியதென்றும் ஒரு கருத்து நிலவி வந்தது. ஆனுல் அவர் அக்காலத்து நாட்டுப் புறத்தானைப் போல உடை அணிந்து வந்தார். பின்ஞெருகால் தலைக்கு மேல் ஒரு பாரத்தைச் சுமந்து திரிவது வீண் என்று அவருக்குத் தோன்றிற்று. உடனே தலைப்பாகையை எடுத்துவிட்டு காந்தி குல்லா அணிந்தார். பிறகு தொப்பியையும் அகற்றிவிட்டார். இப்படியாக அவர் நிலை அவ்வப்போது மாறி வந்திருக்கிறது.

போர் பற்றி காந்தி சிந்தித்ததன் வரலாறு

போர் பற்றிய அவருடைய மானசீக வரலாற்றையே ஆய்வு செய்துபாருங்கள். 1906ஆம் ஆண்டு அவர் ஜுலுப் போரில் காயம்பட்ட போர் வீரர்களுக்குத் தொண்டு செய்தார். அப்போரில் அவர் பங்கு பெற்ற விதம் அது. தொண்டு செய்தல் அருட் செயலாகும்; ஆனுல் அப்படிச் செய்வோரும் போருக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் அளிப்பவரேயாவர்.

பிறகு பாரத நாட்டிற்கு வந்தார். அப்போது நடந்து கொண்டிருந்த முதல் உலகப் போருக்கு ஆள் திரட்டும் பணியை மேற்கொண்டார். "நம்மக்கள் வீரம் இழந்து உள்ளனர். நம்மவர்களுக்கு வாளெடுத்துப் போர் செய்யும் தெம்பும் இல்லை, துணிவும் இல்லை. ஒரு தரம் படையில் சேர்ந்துவிட்டால் பிறகு வீரம் தாஞகவே பிறக்கும். பிறகு நம் குரல் எடுபடும்" என்றுர். அக்காலத்தில் பாரதநாட்டுக்கு

அவர் எவ்வாறெல்லாம் தொண்டாற்றினர் என்பதை நேரில் பார்த்தவன் நான். அலைந்து அலைந்து நோய்வாய்ப்பட்டார். அவருக்கு குஜராத்தில் ''லிக்ரூட்''கள் கிடைத்த பாடும் இல்லை. கடைசியில் அவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது ''வைணவமும் சமணமும்'' சேர்ந்து குஜராத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டிருக்கின்றன. ஒன்று பக்தியைப் போதித்திருக்கிறது; மற்றையது அகிம்சையைப் போதித் திருக்கிறது. அந்த பக்தியும் அகிம்சையும் சுத்த உதவாக்கரை'' என்றார். இது 1918ம் ஆண்டுச் செய்தி.

பிறகு 1940 ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப்போர் சம்பந்தமாக பாபு மேற்கொண்ட நிலை, ''அரசு தன்னாட்சி வழங்குமெனின் நாம் இப்போரில் தார்மீக ஆதரவு தருவோம்; ஆனால் பொருள் படை முதலியன தாரோம்'' என்பதாகும்.

பிறகு வந்தது தன்னாட்சி 1947ல் காஷ்மீர் பிரச்சினை முளைத்தது. பண்டிதநேரு காந்தியிடம் யோசனை கேட்டார். ''நீங்கள் இப்போது படையை அனுப்புவது தவிர்க்க முடியாத காரியம்'' என்றார் காந்தி.

இப்படி, 1907 முதல் 1947 வரை, அதாவது 40 ஆண்டின் கதை இருக்கிறது. பாபுவின் மானசீக வரலாற்றில் நாமோ என்றால் அதற்குப் பிறகு மேலும் முன்னேறியிருக்கிறோம். இன்று இங்கே காந்தி இருந்தால் அவர் என்ன செய்வார் என்று முடிவு கட்டுவதும், அதைப்பற்றிய சிந்தனையில் ஈடு படுவதும் பொருத்தமற்ற செயல்களாகும். அப்படிச் செய்வதால் நாம் அவர்பால் அநீதி இழைத்தவர்களாவோம் நமக்கு நாமே அநீதி இழைத்தவர்கள் கூட ஆவோம். ஆதலால் பாபுவை அவருக்குரிய இடத்தில் இருக்க விட்டு நாமே விசாரத்தில் ஈடுபட வேண்டும்.

இதுவரைக்கும் சர்வதேச சத்தியாக்கிரகம் எங்குமே நடந்தாக வில்லை

சர்வதேச அரங்கில் சத்தியாக்கிரகத்தை எங்காவது கையாண்டிருப்பதாக, தெரிந்த வரலாற்றில் ஒரு செய்தியும் இல்லை என்பதை மனத்திலிருத்திக் கொள்ள வேண்டும். அதாவது இதுகாறும் இல்லாத ஒன்றை இனி நாம் தோற்று விக்க வேண்டியுள்ளது அதையும் இதுகாறும் இல்லாதிருந்த ஒரு யுகத்தில்—அணுயுகத்தில் செய்யவேண்டி உள்ளது. சர்வதேச அரங்கில், அணுயுகத்தில் சத்தியாக்கிரகத்தைச் சாதித்துத் தான் ஆகவேண்டும். இவ்விரண்டு விஷயங்களையும் விசாரத்துக்குட்படுத்த வேண்டும். அணுயுகத்தில் சத்தியாக் கிரகத்தின் உருவம் எப்படி இருக்கும் என்பதைப்பற்றி நாம் இனி சிந்திக்க வேண்டியுள்ளது.

இது பற்றிய விசாரத்தில், போர்க்களத்துக்கு அணி வகுத்துச் சென்று இரு படைகளுக்குமிடையே நின்று கொள்வது என்ற கருத்து எனக்கு மிகவும் "க்ரூட்" (Crude)—பண்படாத செயலாகத் தோன்றுகிறது. சத்தியாக்கிரகம் ஆன்மவலிமையின் பாற்பட்டதாகுமா அல்லாது உடல் வலிமைபற்றியதாக இருக்குமா? முதலாவதாக இமயத்துக்குப் போயாக வேண்டும். அவ்வளவு தூரம் போகத்தயராக இருப்பவர்களுள் ஆன்மவலிமையில் நம்பிக்கை உடையவர்கள் எத்தனைப்பேர் கிடைப்பார்கள்? சத்தியாக்கிரகமோ முற்றும் உடல்வலிமையைச் சார்ந்ததன்று. அது உள்ளத்தின் வலிமையின்பாற்பட்டது.

நம் சிந்தனையில் நாகரிகமற்ற இந்த சத்தியாக்கிரகம் ஒன்றுதான் இப்போதைக்கு எஞ்சியுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். சர்வதேச அரங்கில், அணுயுகத்தில் சத்தியாக்கிரகத்தைக் கையாள விரும்பினால் முதலாவதாக அதன் ஆன்மீகப்போக்கை ஆராய்ந்தறிய வேண்டும். அப்படி

அதைச்சோதித்தறியவில்லை யென்றால் இன்னும் நாம் புது முறைச்சத்தியாக்கிரகத்தைக் கண்டடையவில்லை என்பதை யாவது ஒப்புக்கொள்ள வேண்டும்.

மற்றொன்று, தீரேன்பாயி ஒரு பெருங்கருத்தை வெளி யிட்டிருக்கிறார் இம்சை சார்ந்த போரில் போர்செய்வோர் படையினர் மக்கள் அப்படையினருக்கு பக்கபலமாக நிற்கின்றனர். அகிம்சையில் போராடுவோர் மக்கள் அப்போது படை என்று ஒன்றிருக்குமாயின் அது மக்களுக்கு உதவும். அவர் அகிம்சையின் செயல்முறை ஒன்றை நமக்கு விளக்கிக் காட்டியுள்ளார். இவ்வாறு நாம் ஆய்வு செய்து கொண்டே போவோமாயின் வேறு புதுக்கருத்துக்களும் நம் சிந்தனையில் தோன்றும்.

புதுச்சூழ்நிலைக்கு வேண்டுவது புதுச்சிந்தனையே

யார்தான் போர்க்களத்தில் பாயும் குண்டை நெஞ்சில் வாங்கிக் கொள்ளச் சித்தமாயிருப்பர்? அத்தகைய ஆற்றல் வாய்ந்த அகிம்சை தோன்றப் போவதில்லை. என்றிவ்வாறு நம் மனதில் ஓர் ஐயப்பாடு தோன்றியுள்ளது. இவ்வாறு குண்டுக்கு மார்பைக்காட்டும் வாய்ப்பு எப்போது உண்டாகும் அல்லது உண்டாகாது என்பதெல்லாம்கூட சிந்தனைக்குரிய விஷயமே. மகாத்மாக்கள் பலர் சொந்த வாழ்க்கையில் இவ்வாறு துன்பம் தாங்கியுள்ளனர். வெற்றியும் பெற்று உள்ளனர். சில சந்தர்ப்பத்தில் துன்பத்தை ஏற்று அம் முயற்சியில் உயிரையும் விட்டிருக்கின்றனர். உயிர்விட்டும் அமரர்களாகியுள்ளனர். சமூகங்கள் பல ஒத்துழையாமல் இருந்ததற்கும் எடுத்துக் காட்டுகள் உள்ளன. ஒரு நாடு முழு வதும் ஒத்துழையாமல் இருந்ததற்கு நம் நாடே ஓர் எடுத்துக் காட்டு. ஆனால் இவை யெல்லாம் நடந்த சூழ்நிலையினின்று முற்றும் வேறான ஒரு சூழ் நிலை இப்போது நம்முன் தோன்றி யுள்ளது. அணுயுகத்தில் சர்வதேச அடிப்படையில் மேற்

கண்ட செயல்முறைகளைக் கையாள வேண்டிய பிரச்சினை யொன்று இப்போது முளைத்திருக்கிறது.

போர்க்கலன்களை மேலும் மேலும் செப்பம் செய்வதில் எத்தனையோ விஞ்ஞானிகளும் வீரர்களும், ஆட்சிப்பொறுப் பினரும் தம் உயிரையும் அறிவையும் காணிக்கையாகத் தந்து முயன்றுள்ளனர். அகிம்சையின் வளர்ச்சிக்காகவும் எத்தனையோ அறிவாளிகள் தொன்றுதொட்டே சிந்தனை செய்துள்ளனர். இம்சைக்கு ஓர் எல்லை வகுப்பதில் சொந்த வாழ்க்கையில் பலர் முயன்றுள்ளனர். இம்சையை ஒரு வருணத்தார்தான் கையாளலாம் என்ற வகையில் சமூகத்தை நிறுவியும் பார்த்துள்ளனர். இத்தனை பழைய அனுபவங்களும் இன்று நமக்குக் கொத்தாகக் கிடைத்துள்ளன. ஆனால் சூழல் ஒன்றும் புதிதாகத் தோன்றி நம் எதிரே நிற்கிறது. ஆதலால் நாம் புதிதாகத்தான் இப்போது சிந்திக்க வேண்டும்.

தூய மனோபாவத்தில் தியானத்தை ஊன்றிப் பழகி வரலாம்

சத்தியாக்கிரகத்தைப் பற்றி சௌமியம், மேலும் சௌமியம் அதற்கு மேலும் சௌமியம் என்றுதான் கூறி யிருக்கிறேனே. அதுபோலவே சொல்லின் ஆற்றல் குறையும் போது போர்க்கலனின் ஆற்றல் வெளிப்படும் என்றும் கூறி இருக்கிறேன். சொல்லின் ஆற்றல்-வாய்மை- தூய சிந்தனையில் பிறப்பது. அதற்கு ஸ்தூல செயல்களை வளர்ப்பது தேவை யில்லை. அது மனோபாவத்தின் தூய்மையிலிருந்து பிறப்பது ஒரே ஒரு முழுச்சத்தியாக்கிரகி இருந்தாலும் போதும். அவன் உலகம் முழுவதையும் துன்பத்திலிருந்து மீட்பான் என்று காந்தி கூறியிருக்கிறார். மேதை காரணமாக இத்தகு காட்சி அவருக்குக் கிடைத்திருக்கிறது. ஆதலால் நாம் தூயமனோ பாவத்தில் தியானத்தை ஒருமுகப்படுத்த வேண்டும்.

இதை ஒட்டியே அகிம்சா பூர்வமான எதிர்ப்புக்குப் பதிலாக ''ஸம்யக் சிந்தனை சார்ந்த அகிம்சா பூர்வமான

ஒத்து வாழ்வு'' என்ற கருத்தைக் கூறியிருக்கிறேன். எல்லா வற்றினும் முக்கியமானது சூட்சுமமான எல்லாப்பிரச்சினை களையும் தீர்க்கவல்ல ஆற்றலை வளர்ப்பதாகும். ஸ்தூலச் செயலில் இறங்கினால் அந்த ஆற்றல் வளர இயலாது. ஆதலால் மேலும் மேலும் செயல் என்ற மயக்கத்தில் வீழாமல், பதறியவிகிதம், கருமத்தின் சுமை ஆகியவற்றி னின்று விடுபட்டு— ''ஆதீ, சித்த, கர்மபார முக்தர்களாகி— இவ்விஷயத்தைச் சிந்தனை செய்யவேண்டும். அகிம்சையின் வளர்ச்சியில் நாட்டம் வைத்து அந்நோக்குடனேயே சிந்தனை செய்துவர வேண்டும். இப்படி முயன்று முயன்று காந்தி யிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ள பொக்கிஷத்தை நாம் விருத்தி செய்ய வேண்டும்.

11 தரித்திர நாராயணனின் உபாசனை

பாகவதக் கதை ஒன்று. துறவுணர்வு மேலிட விரக்தி உண்டாகிச் சுகமுனிவர் இல்லம் விட்டு வெளியேறியபோது அவரினும் பெரிய துறவியும், தலையாய ஞானியும், கல்விக் கருவூலமுமான வியாசருக்கே ஒரு பெரு மயக்குண்டாகி மகனைத் தொடர்ந்து ஓடத் தொடங்கினர். ''அப்பா மகனே இப்படிப் புறப்பட்டு விட்டாயே! எங்கேயப்பா போகிறாய் சற்று நிற்கவாவது நில்லேன்'' என்று புலம்ப ஆரம்பித்தார். ஆனால் சுகர் நிற்பதாகத் தெரியவில்லை. மேலும் நடக்கலானர். இப்படி சுகதேவர் தம் தந்தைக்கு மறுமொழி தராமற் போனமை மரியாதை தவறிய செயல் என்றாற்போல் அதற்கு ஈடுசெய்யும் வகையில், அவர் சார்பில் மரங்கள் பதிலிறுத்தன. சுகதேவருடன் 'தன்மயம்' அடைந்திருந்த மரங்கள் அவருக்குப் பரிந்து கொண்டு பதில் பேசின. அவர் எல்லாப் பூதங்களின் இதயத்துள்ளும் வியாபித்து இருந்ததால் அவருக்குப் பதிலாகப் பேசுவதும் பதில் தருவதும் மரங்களுக்குக் கூடக் கடப்பாடாயிற்று. சுகதேவரைப் பற்றிய இந்தக் கதை மிக அற்புதமான படிப்பினை ஒன்றைத் தருகிறது.

சுகதேவர் தம்முள்ளேயே இருப்பதாகப் படைப்பெல்லாம் உணர்ந்து அனுபவித்தது போலவே நம் காலத்து பாரத நாட்டுமக்கள் அனைவர் மனத்திலும் காந்தி தம் வீட்டு மனிதர்களில் ஒருவர், தமக்கு இதம் செய்பவர் என்ற உணர்ச்சி அனுபவபூர்வமாக அமைந்தது. பாரத நாட்டு மக்கள் இதயத்துள் எல்லாம் அவருக்கு நுழைவு கிட்டியிருக்கிறது என்பது பற்றி ஐயம் இல்லை. அவர் இறந்த போது தம் குடும்பத்து மனிதர் ஒருவர் போய்விட்டார் என்பது போன்ற அனுபவம் பாரத நாட்டு மக்களுக்கு உண்டாயிற்று. பாரத நாட்டு மக்களோடு இப்படி ஒன்றுபட்டமையே அவர் சாதனை.

என் தவத்துக்கான இமாலயம் இருக்குமிடத்தில் தான் நான் இருப்பேன்

சில சமயங்களில் காந்தியின் சிந்தனைப்போக்கு எனக்குப் பிடிக்காமல் இருந்ததுண்டு. அப்போதெல்லாம் யாராவது ஒருவர் ''தயவு செய்து நீங்கள் இமயமலைக்கோ அல்லது காசிக்கோ போய்விடுங்கள் அப்படிச் செய்தால்தான் நன்ருயிருக்கும்'' என்று சொல்வார். அதற்கு பாபு சிரித்தவாறே பதில் சொல்லுவார்; ''நீங்களெல்லாம் இமாலயத்துக்குப் போய்விட்டால் நானும்கூட மெல்ல மெல்ல உங்கள் பின்ஞல் இமாலயம் வந்து சேர்ந்துவிடுவேன். இல்லை நீங்களெல்லாம் இங்கேயே இருந்துவிட்டீர்களாயின் இந்த உங்கள் சேவகன் இங்கேயே இருப்பேன். ஆண்டான் எங்கே அடிமையும் அங்கே தான்'' என்று பாரத மக்களோடு அவர் அவ்வளவு ஐக்கியமாகி இருந்தார். சிரிப்புக்கிடையே இப்படியும் அவர் சொல்லுவார். துடைக்கப்பட வேண்டிய வறுமை உள்ள இடத்திலும், அகற்றப்பட வேண்டிய நலிவு உள்ள இடத்திலுமே என் தவத்துக்கான இமயம் இருக்கிறது. வாழ்க்கைத் தேவைகளைப் பற்றிக் கவலைப்படும் ஒரு மனிதன் இருக்குமளவும் என் மனதுக்கு அமைதி கிடையாது. கையைக் கட்டிக் கொண்டு இருக்கவும் என்ஞல் ஆகாது''.

இவ்வாருகக் காந்தி பாமரமக்களோடு—சாதாரணக்குடி மக்களோடு—ஐக்கியமாகும் முயற்சியில் எப்போதும் ஈடுபட்டு வந்தார். நம்மிடம் ஏதாவது இருந்ததென்ருல் அது முற்றும் ''ஜன—ஜஞர்த்தன''ஞுடைய தொண்டுக்குத்தான் அர்ப்பணமாக வேண்டும் என்பார். ஒவ்வொரு வேலையைச் செய்யும் போதும் நம் மனத்தில் இருக்க வேண்டிய விஷயம், ''இந்தப் பணியில் ஏழைகளுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமா? இல்லையா ?'' என்ற எண்ணமே என்று காந்தி போதித்தார். ஒவ்வொருவரும் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். காந்தி தந்த சிந்தனை இதுவே.

இந்தச் சார்பு காந்தியிடம் ஆரம்ப காலத்திலிருந்தே உண்டு. அவர் வட்டமேசை மகாநாட்டிற்குப் போயிருந்த போது, "நான் மிகுந்த பணிவோடு தன்னாட்சி வழங்க வேண்டும் என்று மன்றாடுகிறேன்" என்று கூறினார். இப்படி அவர் கூறியது விசித்திரமாகத் தோன்றும். ஏனென்றால் "சுயராஜ்யம் நம் பிறப்புரிமையாகும்; அதை அடைந்தே தீருவோம்" என்பது தான் அக்காலத்துப் பேச்சுப்பாணி. அந்த நிலையில் இங்கிலாந்துக்கே போய்க் கேட்கிறார் காந்தி. "நான் பணிவுடன் தன்னாட்சி வழங்கக் கோருகிறேன்—காரணம் என்னவென்றால் தன்னாட்சியின்றிப் பாரத நாட்டின் ஏழைகளை உயர்த்துதல் இயலாது என்பது எனக்கு நிச்சயமாக தெரிகிறது" என்று தன்னாட்சி நமக்கு எதற்காக வேண்டும்? நாம் சுதந்திரமாக இருக்கிறோம் என்று மீசையை முறுக்கு வதற்காக அன்று. தன்னாட்சி இன்றி ஏழைகளுக்குத் தொண்டு செய்தல் இயலாதென்பதற்காக இப்படி ஆணைப் பட்ட வட்டமேஜை மகாநாட்டிலேயே சொல்லியிருக்கிறார் காந்தி. தன்னாட்சி அவர் சிந்தனையில் ஒரு சாதனம் மட்டு மாகத்தான் இருந்தது. நன்மை செய்வதின் முக்கியத்துவம் தான் முற்றும் முடிந்த முடிவு.

துரியோதனனுடைய இனிய உணவைத் தியாகம் செய்யுங்கள்

இத்தகையதொரு சிறந்த தொண்டன் பாரத நாட்டில் முன்காலத்திலும் வாழ்ந்திருக்கிறான். இன்று எல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணனின் நாமத்தைப் பாடிப்பரவி அவனுடைய பெயரை நினைத்த உடனேயே ஆனந்தக் கூத்தாடுகின்றனர். கோபாலன் என்ற பெயருக்கு ஒரு தனிச்சிறப்பு. கோபாலன் நம்மவன் என்று எல்லோருக்கும் தோன்றுகிறது. எப்போதும் நம் பணியைச் செய்கிறவன், வயது முதிர்ந்தோரின் சேவையைச் செய்கிறவன், நம்பசுக்களின் சாணத்தைத் திரட்டி எடுத்துப் போடுகிறவன், நம் பெண்களுக்குத் தொண்டு செய்கிறவன், எவ்வளவு பெரிய ஆபத்தானாலும் தானாகவே நம்மைத் துன்பத்திலிருந்து விடுவிப்பவன்,

அரசாங்க அதிகாரத்தையும் ஏற்காதவன் என்றவாறெல்லாம் கோபாலன் நம்மவன் என்று மக்களுக்குத் தோன்றுகிறது. அவன் மிகச்சிறந்த பிரம்மஞானியாக இருந்தும் சாதாரண மனிதனைப் போல்தான் வாழ்ந்து வந்தான். அவன் பாண்ட வர்களுக்குத் தூதாகச் சென்ற போது துரியோதனன் தன் அரண்மனையிலேயே அவனுக்கு இடம் ஒதுக்கி இருந்தான். ஆனால் அவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. விதுரனின் குடிலும் எளிய உணவுமே அவனுக்கு உகப்பாயிருந்தன. அவையே அவனுக்கு ஆனந்தம் தந்தன.

ஒருகால் வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் சென்றபோது காந்தியும் இப்படித்தான் செய்தார். மிகமிக ஏழைகள் வாழ்ந்த பகுதியில், அவர்கள் மத்தியில் தான் தங்கினார். அங்கிருந்து ஒவ்வொரு நாளும் வட்ட மேஜை மகாநாட்டுக்குப் போக அவருக்கு ஒன்று முதல் ஒன்றேகால் மணிநேரம் தேவையாயிற்று. அப்படியிருந்தும் ஏழைகள் தங்கியிருந்த இடத்திலேயே தங்கினார். இவ்வாறு அவர் சாமானிய மக்களோடு ஐக்கியமாகி இருந்தார்.

உபாசனைக்குக் கூட அவர் இராமநாமத்தையே விரும் பினார். பக்தியில் கூட ஓர் உயர்ந்த வர்க்கம் இருப்பது காந்திக்கு உகப்பன்று என்று இராஜாஜி கூறியிருப்பது மிகவும் உண்மை. சாமானியர்களிலும் சாமானியர் களான ஆண் பெண் இருபாலருக்கும் எளிதில் கைக்கொள்ளக் கூடியதான இராமநாமத்தையே விரும்பினார். உயர்ந்தோர்கள் என்பவர்கள் இடையே மட்டும் ஓர் எல்லைக்குள் நிற்கும் பக்தியையும் அவர் விரும்பவில்லை. கடைசியில் அவர் போகும் போது கூட எந்த நாமத்தைச் செபித்துக் கொண்டு போனார்? 'ஹேராம்! என்று சொல்லி யல்லவா உயிர் விட்டார் அவருடைய கடைசி மூச்சு அவர் வாயிலிருந்து வெளிக் கொணர்ந்த சொல்லான 'ராம்' எல் லோருக்கும் உரியசொல். அதற்குப் பதிலாக 'ஓம்' என்று அவர்

சொல்லி உயிர் விட்டிருப்பாராயின் அவர் நாராயணனோடு ஐக்கியமானார் என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக்கும். ஆனால் கடைசிக் கணத்தில் கூட அவர் வாயிலிருந்து ராம நாமமே புறப்பட்டமை அவர் தரித்திர நாராயணனை உபாசித்து வந்தார் என்பதற்குப் பொருத்தமாக அமைந்தது.

இதுவே விவேகானந்தர் வழங்கிய சொல்

தரித்திர நாராயணன் என்ற சொல் விவேகானந்தர் தந்த சொல். முதன் முதலாக அத்வைத விசாரத்தோடு தரித்திர நாராயணன் சேவையை இணைத்த செயல் விவேகானந்தருடையது. தற்காலத்தில் சேவாயோகத்தை (யோக பூர்வமானதொண்டு) தொடங்கி வைத்தவர் விவேகானந்தரே எனலாம். சங்கரரின் அத்வைதத்தையும், ஏசுவின் அன்பு பூர்வமான சேவை மனோபாவத்தையும் விவேகானந்தரிடம் நாம் காணலாம். தரித்திர நாராயணனின் சேவை செய்வதைப் பற்றி அவர் கூறியிருக்கிறார். லோகமான்ய திலகருக்கும் தரித்திர நாராயணன் என்ற இச்சொல் மிகவும் பிரியமான சொல். தேசபந்து சித்தரஞ்சன் தாஸீம் இந்தச் சொல் கேட்டு நெகிழ்ந்தார். ஆனால் இந்தச் சொல் வீடு தோறும் பரவவும், அதை ஒட்டி ஆக்க பூர்வமான எல்லா வேலைத் திட்டங்களும் நிலைபெறவும் செய்தவர் காந்தியே. தன்னாட்சி அடையும் முயற்சிகளுக்கெல்லாம் கூட அவர் மனித சேவை என்ற ஓர் உருவம் தந்தார்.

தரித்திர நாராயணன் என்ற சொல்வாயிலாக ஆஸ்திகர்களுக்கும், நாஸ்திகர்களுக்கும் இடையில் உள்ள பேதம் விலகி ஒரே மேடையில் (பிளாட்ஃபாரத்தில்) இருசாராரும் ஒன்று சேருகின்றனர். கண்கூடாகக் காணும் வகையில் இயன்ற சேவை செய்வதன்றி வெறும் பேச்சில் ஈடுபட விரும்பாதவர்களைத்தான் நாஸ்திகர்கள் எனலாம். இத்தகைய நாஸ்திகர்களிடையே நல்லவர்களும் தோன்றியுள்ளனர். மனித இதயத்தில் நம்பிக்கை வைத்து, எல்லா

மனித இதயங்களுக்குள்ளும் ஒரு சோதி உளது என்று நம்பி அந்த சோதியினேக் கொண்டே எல்லா விதமான இருளேயும் அகற்றலாம் என்று நினேப்பவனே உண்மையான ஆஸ்திகன்.

இவ்வாறு ஒன்று மக்கள் சேவைபற்றிய விசாரம் | மற்றது இதயமாறுதல் பற்றிய விசாரம் பக்திமார்க்கம் பின்னவர்கள் (ஆஸ்திகர்கள்) சொல்கிருர்கள். "நாங்கள் மக்கள் சேவை செய்வோம். ஆனுல் எங்கள் சேவை மூலமாக அவர்கள் இதயத்தின் மாறுதலே நினேப்போம். ஆதலால் நாங்கள் நாராயணனே ஸ்பரிசிக்க வேண்டியிருக்கும். இப்படி நாராயணன் ஸ்பரிசம் ஏற்பட்ட சேவைகளில் எல்லாம் இதயமாறுதலின் துணிவு இருக்கும் என அவர்கள் கூறுவார்கள். தரித்திர நாராயணன் என்ற சொல்லால் இவ்வாறு இவ்விரண்டு விசாரங்களும் ஒன்ருய் இணேக்கப்பட்டு விடுகின்றன.

தொண்டுக்கு ஆக்க வேலேகள் என்ற உருவத்தைக் காந்தி தந்தார்

மேற்கண்டவாறு பார்த்தால் விவேகானந்தர் ஒரு பெரிய விஷயத்தைத் தான் (விசாரத்தைத்தான்) கூறிச் சென்றுள் ளார் அதன் வாயிலாக அத்துவைத தத்துவ ஞானம், அதன் சாதனேயாக அதனின்றும் வேறுபட்ட ஓர் உபாசனே, அதைப் பிரகாசிப்பிக்கும் (அதற்கு ஓர் ஒளிதரும்) வகையில் 'பூத' சேவை என்றிவ்வாருக வாழ்க்கையில் ஓர் சுவை ஒருமைப் பாட்டை உண்டாக்கும் ஒரு விசாரம் பாரத நாட்டுக்குக் கிடைத்தது. இந்த மக்கட் சேவையென்னும் இக்கருத்தை மேலும் பரவலாக்கி அதோடு உற்பத்தி பூர்வமான உடலு ழைப்பின் தேவையை இணேத்து விஷயத்தை மேலும் தெளி வாக்கினுர் காந்தி. தொண்டுக்கு நிர்மாண காரியத்தின் உருவத்தைத் தந்து அதை மேலும் வளம் பெறச் செய்தார். கண்முன்னுல் பசியால் வாடும் மனிதன் நிற்க வேண்டும்-

அவனுக்கு உண்ண உணவு தந்தால் சேவையாயிற்று. அதற்குப் பதிலாக ராட்டையைக் கொடுத்து அல்லது நிலத்தைக் கொடுத்து அவற்றைக் கருவிகளாகக் கொண்டு உற்பத்தி செய்து பிழைக்கச் சொல்லிக் கொடுப்பதும் சேர்ந்தால் அதுவே நிர்மாணம்; அப்படிச் செய்வது தான் உண்மையான சேவையும் ஆகும்.

தொண்டுக்கு நிர்மாணத் திட்டங்களின் உருவம் கிடைத்தால் அதனுல் லாபமும் உண்டு. தீமையும் உண்டு. இந்தச்சொல், கருத்து ஆகியவற்றின் நுட்பத்தை உணர வேண்டும். உயிர்ச்சேவையோடு (பூதசேவையோடு) ஆக்க வேலைச் சிந்தனையை இணையுங்கள், அதன் வாயிலாகச் சேவையின்திறம் மிகும் என்பதே இதன் லாபம். நிர்மாணப்பணி செய்யச் செய்ய சேவை பாவனையும், அத்வைத பாவனையும். ஒருபக்கமாக ஒதுங்கி ராட்டை போன்ற ஸ்தூல சாதனங்களே எல்லாம் என்று நினைக்கிறபாவனை உண்டாகும். சூட்சுமத்துவம் மறக்கப்பட்டு ஸ்தூல காரியங்களில் நாம் சிக்குண்டு மூல பாவத்தை மறப்பது பீடன்று (தக்கதன்று).

நாம் "தரித்திர" வைக்களைந்து விட்டு நாராயணனை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது

மற்ருெரு விஷயமும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். காந்தி தம் வாழ்நாளில் தரித்திர நாராயண உபாசனையின் ஓர் உத்தமமான உதாரணத்தை பூர்த்தி செய்து காட்டினுர். அதனுல் நாம் இன்று இவ்விஷயத்தில் சிந்தனையில் முன்னேற வேண்டியுள்ளது. நாம் எல்லோரும் இப்போது 'தரித்திர' என்று சொல்ல வேண்டியதில்லை, நாராயணன் மட்டும் இருக்கட்டும் என்று நாம் எல்லோரும் ஆசைப்பட வேண்டும். உலகத்தில் தரித்திரர் என்று சிலர் இருக்க வேண்டும் என்றும், அவர்களிடமிருந்து தனியாகப் பிரிந்து நின்று அவர்களுக்குத் தொண்டு செய்தல் வேண்டும்

என்பது எனக்குத் தக்கதாகத் தோன்றவில்லை. நான்வெறும் நாராயணன் சேவையே செய்ய விரும்புகிறேன். ஆதலால் யாரோ ஒருவன் தரித்திரன் என்றும் ஒருவன் செல்வந்தன் என்றும் இருக்க வேண்டியதில்லை. எல்லோரும் 'அம்ருதஸ்ய புத்திரன்' ஆகவேண்டியதே. அம்ருத புத்திரர்களிடையே சமத்துவமின்மை இருந்தால் சாலாது. பிறகு எல்லோரும் தோளோடுதோள் சேர்த்து பகவானுக்கும், அவன் படைப் புக்கும் சேவை செய்வார்கள்.

ஏசுவும் ஓர் இடத்தில் கூறியிருக்கிறார். 'தி புவர் யூ ஹ்யாவ் ஆல்வேய்ஸ் வித் யு'' (ஏழைகள் எப்போதும் உங்களிடையே இருந்தே தீருவார்கள்) என்று. ஏசுவின் இந்தச் சொல் எனக்கு வேதனையைத் தருகிறது. அப்படியே நீடிக்குமாகில் அது பெரிய துன்பமாகவே உணரப்படும். தரித்திரர்களை நாம் தரித்திரர்களாகவே வைத்துக் கொண்டு இருக்க வேண்டுமா என்ன? அதோடு அவர்களுக்குத் தொண்டு செய்கிற லாபம் வேறு நமக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கவேண்டும் போலும்! அப்படியன்று. அவர்கள் தம் தரித்திரத்தை இழக்கச் செய்வது நம் கடமை அன்றி எப் போதும் தரித்திரத்துக்குத் தொண்டு செய்யும் பாவனையை நாம் காத்து வருவோமானால் அதுவே தரித்திரம் தான்! காந்தியும் தரித்திரத்தை முற்றும் களைந்து விடவே தான் விரும்பினார். அதற்கே தான் அவர் தம் வாழ்க்கை முழு வதையும் அர்ப்பணம் செய்தார்.

12 அகிம்சா பூர்வமான சமூக அமைப்பின் தரிசனம்

ஒரு தடவை காந்தியின் படங்கள் கொண்ட பெரிய 'ஆல்பம்' ஒன்று என் பார்வைக்கு வந்தது. வெகு அழகான பெரும் பெரும் சித்திரங்கள் அதில் இருந்தன. ஆனால் நான் ஒரு நூல் சிட்டத்தைப் பார்க்கும்போது காந்தியின் ஒப்பு வமை இல்லாத ஓவியம் ஒன்றை அதில் காண்கிறேன். இவ்வளவு அற்புதமான ஒரு சித்திரத்தை நான் வேறெங்கும் காணமுடியவில்லை. காந்தியின் வாழ்க்கைச் சித்திரம் நூல் சிட்டத்தில் தெரியும் அளவு தெளிவாக அவருடைய பருவுடல் ஓவியம் ஒன்றிலும் தெரிவதில்லை.

ஸூதாஞ்சலி (நூல் சிட்டம் வாயிலாக வழிபாடு) பாபுவுக்கு நிறுவும் மிகப் பெரிய நினைவுச் சின்னம்

ஆதலால் தான் 'ஸூதாஞ்சலி'—நூல் சிட்டம் இட்டு வழிபடும்—திட்டத்தை நாட்டின் முன் வைத்திருக்கிறேன். ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 12 ஆம் தேதி நாம் நம் கையாலேயே நூற்ற நூல் சிட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இது பாபுவின் பால் நமக்குள்ள அக்கறை அல்லது ஈடுபாட்டின் தலை சிறந்த ஒரு சின்னமாகும். இதுவே பாபுவின் நினைவுச் சின்னங்கள் யாவற்றுள்ளும் மிகப் பெரிய நினைவுச் சின்னம்.

பார்க்கப் போனால் இது மிகவும் சிறிய ஒரு பொருள். இது எவ்வளவுக்கெவ்வளவு சிறியதோ அவ்வளவுக்கவ்வளவு ஆற்றல் மிக்கதுமாம். அதில் உடலுழைப்பு, அகிம்சை, அன்பு, தியாகம் ஆகியவற்றின் தீட்சை அடங்கி உள்ளது. நாம் உழைப்பில் ஊன்றி நிற்கிறோம் என்ற பாவனையின் குறியீடு சகோதரபாவத்துக்கு நாம் மதிப்புக் கொடுக்கிறோம் என்ற உணர்வு அதில் பொதிந்துள்ளது. சர்வோதய சிந்தனைக்கு

நாம் தரும் 'ஓட்டு' (வாக்கு) அது முற்றும் வளர்ந்த ஓர் அரசியலைப் பின் அழகானதோர் உபாசனை.

ஓர் அரசியல் உபாசனை

ஒரு சிறு குழந்தை கூடச் செய்ய முடிந்த ஓர் உபாசனை இந்நாட்டின் முன் இருக்க வேண்டும் என்பது பாபு சொல்லி வந்த கருத்து. இப்படித் திட்ட வட்டமான, அரசியல் சார்புள்ள சாதனை ஒன்று தேவையுமாகும். ஒழுக்கம் அல்லது சமயம் சார்ந்த உபாசனைகள் உள்ளனவென்றாலும் அவற்றால் வேற்றுமைகள் பிறக்கின்றன. நாட்டில் வேற்றுமை அற்ற மனோபாவத்தை வளர்க்கும் உபாசனை ஒன்று தேவை, நாட்டுக்கென்று ஒன்றைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எல்லோர் மனத்திலும் உண்டாக வேண்டும்.

இக்கருத்தோடுதான் ராட்டை வளர்வதாயிற்று. நூல் நூற்றல் முயற்சி அளவில் எளிதினும் எளிது; திறமை அளவில் சுலபத்திலும் சுலபம். காலையில் தோன்றும் கிஷோர்பாயிக்கு இன்று மாலைக்குள் இறந்து போவேனோ என்று; மாலையில் தோன்றும் பொழுது விடிந்து எழுவேனோ என்று இப்படி இருபத்தைந்து ஆண்டுகளைக் கழித்தவர் நாட்டுப்பற்றுக்காக ராட்டை நூற்க ஒருநாளும் தவறியதில்லை. தன் சொந்தத் தேவைக்கு வேண்டிய அளவு நூற்றுவந்தார் எனவே நினைக்கிறேன். வலிவற்றவர்களினும் வலிவற்ற குடிமக்களைக் கூட ஏதோ ஒன்றை உற்பத்தி செய்வோராக மாற்றவல்ல முழுத்திறம் சர்க்கா ஒன்றுக்கே உண்டு. இப்படி ஒரு கருவியை, புது உருவத்தில் மட்டுமல்ல, ஒரு புதிய சிந்தனைப் போக்கோடு இணைத்து, பாபு நமக்குத் தந்தார்.

வெறும் நூலாலப்பா!

ஆரம்பத்தில் அவர் ராட்டைப்பற்றி நினைத்தவரல்ல— பிறகே அவருக்கு அது உதயமாயிற்று. 1916ஆம் ஆண்டின் செய்தி இது. அப்போதைக்கு நான் ஆசிரமத்தில் போய்ச்

சேர்ந்தாயிற்று, அப்போது கோச்சாப் ஆசிரமத்தில் நாங்கள் எல்லோரும் மில்நூலால் நாடாக்களும் துணியும் நெய்து வந்தோம். என் சொந்தத் தேவைக்கு எவ்வளவு நெய்ய வேண்டி இருக்கும் எனக் கேட்டேன். இருபத்து நான்கு கெஜம் என்றனர். ஆதலால் நான் இருபத்து நான்கு கெஜம் நெய்ய முயன்று வந்தேன். ஒரு நாள் இந்த அளவு நெய்தே விடுவது என்று நெய்யத் தொடங்கினேன். இரவு ஒன்பது பத்து மணிவரை தொடர்ந்து நெய்து 24 கெஜம் நாடாவை முடித்து விட்டுத்தான் எழுந்தேன் என்பதாக நினைவு.

அந்த நாடா முற்றும் மில்நூலாலானது அது ஞானத்தை ஆய்ந்து வந்த காலம்; கர்மயோகம் அதுகாறும் தொடங்க வில்லை. சிறிது காலத்துக்குப் பிறகு நூலையும் நம்கையாலேயே நூற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. பிறகு சர்க்கா (ராட்டை) கிடைத்தது. ஆனல் பஞ்சுப்பட்டை? அதை நீள நீளமாக மில்லிலிருந்தே தருவித்துக் கொண்டிருந்தனர். பிறகு தோன்றிற்று பட்டையையும் கையாலேயே போட்டுக் கொள்ளலாம் என்று வர வர கையாலேயே பட்டை போட்டுக் கொள்வதாஞேம். இப்படித் துவங்கியது கதர். இந்தக் கதர் வாயிலாக காந்தி தம் இதயத்தின் செய்தியைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மீராபாயின் பஜனை ஒன்றை காந்தி பலகால் சொல்வ துண்டு. ''தாச்சே ரே தாந்தணே மனே ஹரியே பாந்தி, ஜேம் தாணே தேம் ரஹியேரே' (வெறும் ஒரு நூல் கயிறு அதைக் கொண்டு என்னைக் கட்டி இணைத்திருக்கிறேன். என்ன ஆச்சரியம் பாருங்கள். அதன் வலிமையால் நாங்கள் ஒருவரை ஒருவர் பற்றி நிற்கிருேம்!), இவ்வாறு பாடுகிருர் மீராபாய். இந்த வெறும் நூலாலான அன்புக் கயிற்ருல் விசுவத்தையே கட்டி இழுக்கலாம் என்பதென்ன, நாமும் இழுக்கப்படலாம் என்ற பாவனையே சர்க்காவுக்குப் பின் அமைந்துள்ள தத்துவம்.

காந்தி தம் வாழ் நாள் முழுதும் தினமும் ராட்டையில் நூற்று வந்தார். இறக்கும் நாளில்கூட நூல் நூற்ற பிறகே சென்றார். ஒரு கால் நீதி மன்றத்தில் "உம் தொழில் என்ன?" என்று கேட்டார்கள் அவரிடம். "நூற்பும் நெசவும்" என்று பதில் சொன்னார். அவருடைய அபூர்வமான வழி இது. இவ்வழியிலேயே அவர் பாரத நாட்டு மக்களோடு ஐக்கிய பாவத்தை வளர்த்துக் கொள்வது சாத்தியம் ஆயிற்று.

இவ்வாறு ராட்டைக்குப் பின்னால் உபாசனையும் யாவரும் ஐக்கியமாகும் பாவனையும் உள்ளன. அது போலவே அதற்குப் பின் ஒரு புதுப் பொருளாதாரப் பார்வையும் உண்டு. யாவரினும் அதிகமாக உதவி தேவைப் பட்டவர்களுக்கு எல்லோருக்கும் முன்னால் உதவி கிடைக்கச் செய்யும் வழி ஒன்றைக் காந்தி தேடிக்கொண்டிருந்தார். அதற்கிடையில் தான் ராட்டை புறப்பட்டது. தாம் தேடிக்கொண்டிருந்த வழியை ராட்டையில் கண்டு கொண்டமையை காந்தியின் அற்புதமான மேதை என்றே சொல்லவேண்டும். பாரத நாட்டின் கிராமச் சீரமைப்பு ஓர் உடனடித்தேவை என்பது இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் அவர் கவனத்திற்கு வந்திருந்தது. இதற்கும் ராட்டையே வழி எனக்கண்டு கொண்ட அவருடைய தரிசனம் அவருடைய தொலைநோக்குக்கு–தீர்க்கதிருஷ்டிக்கு—ஓர் எடுத்துக்காட்டாகும். அவர் ஒரு புரட்சி நோக்கம் உடையவர். "கவிக்ராநத தர்சி" என்பார்கள். வருவதைத் தொலைவில் இருக்கும்போதே காண்பவனே கவி. இந்தப் பொருளில் காந்தி ஒரு கவிஞரே.

காப்பாற்றும் பணியில் நாளைக்கு என்று கடன் சொல்வதா?

துகாராம் கூறுகிறார் "உத்தாராசிகாய உத்தாராச்சே காம்" காப்பாற்றுகிற வேலை நாளைக்கென்று கடன் சொல்லு கிறகாரியமா என்ன?) என்கிறார் அவர். ஒருவன் நீரில் முழ்கித்தவித்துக் கொண்டிருக்கிறான், அவனிடம் போய் "நாளைக்கு உன்னைக் காப்பாற்றுவேன்" என்றீர்களானால் அது பொருந்துமா? அவனோ இந்தக்கணமே மூழ்கி விடுவான்.

அவனைக் காப்பாற்றுவது என்று ஏதேனும் இருந்தால் அதை உடனே செய்தாக வேண்டும். "நாளைக்குத் தருகிறேன்" என்று பற்றெழுதிக் கொள்ளச் சொல்வதெல்லாம் உதவாத காரியம்.

ஆனால் அரசாங்க விஷயம் எல்லாம் பற்றெழுதிக் கொள்ளச் சொல்கிற காரியம்தான். உற்பத்தி பெருகினால் கீழ்மட்டம் வரை அதன் ஒரு சிறிய பகுதியாவது போய்ச் சேரும் என்ற ஒரு கருத்துதான் திட்டங்களின் அடிப்படை. இதற்கு "தியரி அஃப் பெர்கொலேஷன்"—மேலே ஊற்றிய நீர் மெல்ல மெல்லக் கீழ்மட்டத்துக்கும் கசிந்து இறங்கும் சித்தாந்தம்—என்று பெயர். இந்த "பெர்கொலேஷ"னுக்கிடையில்—கசிவுக்கிடையில் ஏதேனும் தடை இருக்குமானால் நீர் கீழே இறங்குமா என்ன? இந்தச் சித்தாந்தம் பொருளற்றதாகி விடுகிறது. இத்தனை திட்டங்கள் கழிந்தாயிற்று. உற்பத்தி பெருகியும் இருக்கிறது. வாழ்க்கைத் தரமும் ஓரளவு உயர்ந்துள்ளது. ஆனால் சமூகத்தின் அடிமட்டத்திலுள்ளவர்களுக்கு இந்தத் திட்டங்களின் பலன் போய்ச் சேரவில்லை, இதனாலேயே காந்தி சிந்தித்த வழியில் தான் சிந்திக்க வேண்டும் என்ற முடிவுக்கு கடைசிக் காலத்தில் நேருவும் வந்து சேரலானார்—மெல்ல மெல்ல.

நாட்டின் சராசரி வாழ்க்கைத் தரம் உயர்ந்ததால் மட்டும் காரியம் முடிந்து விடவில்லை. வறியோரை மனத்தில் கொண்டு, அவர்களைக் கருதியே திட்டங்கள் வகுக்கும் போது தான் அவர்கள் வரைக்கும் உதவி போய்ச் சேரும் உதவி மிகவும் தேவைப்பட்டவனுக்கு இன்றே இப்போதே ஏதேனும் ஒரு வேலை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். அதற்கு ஏதேனுமொரு கருவி — சாதனமார்க்கம் — கிடைக்குமாயின் அதையே அவன் கையில் கொடுக்க வேண்டி இருக்கும். ஆதலால் தான் பாபு சொன்னார், "ராட்டையைச் சுழற்றுங்கள்" என்று. "ராட்டை இல்லையென்றால் தக்ளியையாவது சுழற்றுங்கள்" என்றார்.

இன்றைக்கே ஏதாவது வேலை தாருங்கள்

இப்படிச் செய்ததன் மூலம் அவர் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கவில்லை. ஒரு பக்கம் தக்ளியைச் சுழற்றிக் கொண்டிருந்தார் என்றால் மறுபக்கம் நூல் நூற்கும் புது இயந்திரங்களை ஆராய்ந்து கண்டு பிடிக்கும் முயற்சிக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு தருவதாகவும் பிரகடனம் செய்தார். ஆதலால் அவர் செயலில் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கம் ஒன்றும் கிடையாது. கண்ணெதிரே தெரியும் சூழ்நிலையையும் நடைமுறையையும் ஏற்றுக்கொண்டு முன்னேற்றத்தையும் வரவேற்கிற கருத்தே உள்ளது. இன்றைக்கு இப்போது கிடைக்கும் கருவியைக் கொண்டே இன்று வேலை செய்ய வேண்டும். அதோடு முன்னேற்றப் பாதையிலே அடியெடுத்து வைக்கவும் வேண்டும்.

இவ்வாறு ராட்டைக்குப்பின் இருந்தது "ஒரு சேரப் பார்க்கும் பார்வை", (சமக்ர தர்சனம்). ஏதோ சற்று உதவுதல் அல்லது தொண்டு செய்தல் என்ற கருத்தோ பார்வையோ அன்று. அதற்கு நேர்மாறாக நம் நாட்டின் பிரத்தியட்ச சூழ்நிலைக்கு ஒப்ப அகிம்சை சார்ந்த ஒரு பொருளியல் அமைப்பை உருவாக்கும் சிந்தனையும் இருந்தது. உயர் மண்டலங்களில் வெறுமனே பறப்பவர் அல்லர் காந்தி. மண்ணில் கால் ஊன்றிச் சிந்தனை செய்பவரும் ஆவார். பாரத நாட்டுக்கிராம மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலை பற்றி நுணுகிய பார்வை ஒன்றும் அவருக்குண்டு. ஆதலாலேயே "மாஸ் ப்ரொடக்ஷனு"ல்— (குவியல் முறையில் பெருமளவு உற்பத்தியால்— வேலை நடவாது; ப்ரொடக்ஷன் பை தமாஸஸ்" —பலரின் கையால் உற்பத்தி—என்ற நிலைதான் வேண்டப் படுவது என்று அவர் கூறினார். கோடிக்கணக்கான கைகளால் அதுவும் அவற்றிற்கு எளிதில் கிடைக்கும் சாதனம் வாயிலாகவே பரவல் முறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டி இருக்கும். அப்போதுதான் பாரத நாட்டின் பட்டி

தொட்டிகள் உயரும் என்ருர். இப்படி இயங்கிற்று காந்தியின் சிந்தனை.

நான் பாரதநாடு முழுதும் சுற்றியிருக்கிறேன். நடந்தே சுற்றினேனுதலால் ஊர் ஊராகப் போகும் வாய்ப்பு உண்டா யிற்று. அப்போது காந்தி கூறியதின் உண்மையை நேரிலேயே பார்த்தேன். பல பெரிய அறிவாளிகளோடு--"ஸ்பெஷலிஸ்டு" களோடு பேசும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். பட்டி தொட்டிகள் உயர கிராமக் கைத்தொழில்களுக்கு புத்துயிர் கொடுப்பதைத் தவிர வேறுதிட்டம் ஒன்றையும் அவர்களிடமிருந்து கேட்டறியும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேனில்லை. கேட்கப்பட்டதென்னவோ கிராமக் கைத் தொழில்களுக்கான கருவிகள் செம்மை பெற வேண்டுமா என்பது பற்றித்தான்.

மின்சாரம் என்ன அணு சக்தியையே வரவேற்கிறேன்

சாதனங்களின் செப்பம் பற்றி இரு கருத்துக்கள் இருத்தல் இயலாது. சாதனங்களைச் செம்மை பெறச்செய்ய நிறைய முயன்றுள்ளனர். மேலும் முயல்வார்கள் மின்சாரம் அல்லது அணுசக்திக் கொப்ப நாம் கருவிகளைச் செம்மையுறச் செய்வதனுல் அகிம்சை வீழ்ச்சியுறும் என்ற அச்சம் எனக் கில்லை. நான் சற்று அச்சம் இல்லாதவன். என் மனதில் தள்ளாட்டம் தயக்கம் ஒன்றுமில்லை. மின்சாரத்தால் அல்லது வேறு "பவர்" வாயிலாகச் சர்க்காவை இயக்க வேண்டிய தேவை எனக்கில்லை பவனுரிலுள்ள "ஆத்மவித்யா மந்திர"த் துச்சிறுவர்களின் ஆடைக்கான "சுயதேவைப் பூர்த்தி திட்டத்தின்" கீழ் அம்பர் சர்க்காவை மின்சாரத்தால் இயக்கும் விஷயத்தில் விதிவிலக்குச் செய்திருக்கிறேன். ராட்டையைப் பவர் வாயிலாக இயக்கும் விஷயத்தில் என் நிலை, அந்தந்த இடத்துத் தன்னிறைவுக்குப் போதுமான அளவில் உற்பத்தி நிற்கவேண்டுமேயன்றி அதற்கும்மேல் உற்பத்தி செய்து வியாபாரத்துக்கு அனுப்பிக் கெடுத்துவிடக்

கூடாது என்பதாகும். ஆதலால் "பவரை"ப் பயன்படுத்துவதற்கு எதிரான கருத்து இருக்கத் தேவையில்லை என்றே தோன்றுகிறது. இப்போதோ அணுசக்தி வந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக வாழ்க்கை மேலும் பரவலாக, சுகபோக மயமாக, ஏன் அதோடு தன்னிறைவும் தற்சார்பும் உள்ளதாக அமையும். பரவல் முறை வருவதற்கு மின்சாரத்தைவிட அணுசக்தி மேலும் சாதகமாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இயந்திரங்களின் "ஆத்மதரிசன" காலம்

அதொரு பக்கம் இருக்கட்டும். சாதனங்கள் இயன்றளவு இறக்க வேண்டும் என்று கூறினேன். அதில் இக்கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆனால் இயந்திரங்கள் பற்றிய என் சிந்தனை வேறு திசையில் செல்கிறது. ஓர் இயந்திரம் தன் விலையைத் தானே ஈட்டிக்கொள்ளத் தேவையாகிற கால அளவே அந்த இயந்திரத்தின் "ஆத்ம தரிசன காலம்" என்று கணக்கிடுகிறேன். தக்ளி எட்டுமணி நேரத்தில் ஆத்மதரிசனம் பெறுகிறது. அம்பருக்கு ஒருகால் ஓர் ஆண்டு தேவையாகலாம் முதலீடு என்ற கருத்தை வைத்துப் பார்க்கும்போது இந்த "ஆத்ம தரிசனம்" இயந்திரத்தின் திறத்துக்கு ஒரு உரை கல்லாக அமைகிறது. இதன் பொருள் கால தேச நிலைகளுக்கு ஒப்ப எந்தச் சாதனத்தைப் பயன்படுத்துவது என்பது விவேக பூர்வமாகச் செய்ய வேண்டியது என்பதோடு சரி.

காந்தியின் ராட்டைக்குப் பின்னனியாக இத்தகைய ஒரு சிந்தனை இருந்தது. யாவரினும் தாழ்ந்த நிலையிலுள்ள மக்கள் பால் நம் சிந்தை செல்ல வேண்டும். இது சர்வோதயத்தின் செய்தி. நான் இங்கே என்றென்றுக்குமாக நிலைபெற வேண்டிய ஒன்றைப் பற்றிப் பேசவில்லை. குறைந்தது 30, 40 ஆண்டுகளுக்காவது மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களை முன்னேற்ற, உயர்த்த இதைத்தவிர யுக்தி ஒன்றும் புலப்படவில்லை. ஆதலால் 30, 40 ஆண்டுக்கான ஒரு பணித்திட்ட

மாகவே கதர்ப்பணியைச் செய்ய வேண்டி இருக்கும். காலப் போக்கில் வேறு ஏதேனும் யுக்தி தோன்றலாம். ஆனால் இப்போதைக்கு இதைத்தவிர வேறு பரிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை.

கதர் ''கிராம சுயராஜ்யத்தின்'' சீருடை

காந்தி கதரைப் பற்றிப் பேசியது போலவே பிற கிராமக் கைத்தொழில்களைப் பற்றியும் பேசியுள்ளார். வெறும் உழவை நம்பி கிராமங்கள் வாழ்தல் இயலாது என்பது காந்தியின் அடிப்படைச் சிந்தனையாகும். அடிப்படைத் தேவைகள் சம்பந்தமாக கிராமமே நிறைவு காண வேண்டும். இயன்ற வரை மூலப்பொருள்களைப் பயனுள்ள பொருள் களாக மாற்றுவது கிராமத்திலேயே நடக்க வேண்டும். எள்ளை விற்று விட்டுத்தெருவில் எண்ணெய் விற்கிறவனிடம் எண்ணெய் வாங்குதல், பஞ்சை விற்றுத் துணியை வாங்குதல் கரும்பை விற்று வெல்லத்தை வாங்குதல் எல்லாம் நிற்க வேண்டும். வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆதாரப் பொருள்கள் யாவும் கிராமத்திலேயே உற்பத்தியாக வேண்டும் எதை வெளியிலிருந்து கொண்டு வருவது எதை வெளியே அனுப்புவது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஒவ்வொரு ஊருக்கும் இருக்க வேண்டும். இப்படிச்செய்தால் தான் பட்டி தொட்டிகளிலெல்லாம் ''கிராம சுயராஜ்யம்'' வரும்

கதர்–கிராமக் கைத்தொழில்கள் பற்றி வழி விலகிச் சென்று சிந்திப்பதை விட்டு, கிராமப் பொருளாதாரத் தந்திரத்தில் இதுவும் ஒரு அம்சம் என்று கொண்டு சிந்தனை நிகழ வேண்டும், உழவை ஊக்குவிக்கும் அளவு இத்தொழில் களுக்கும் ஊக்கம் தர வேண்டும். இத்தொழில்களில் கதரும் ஒன்று கதர் விஷயத்தில் ஒன்றை நான் தெளிவாக்கி விட விரும்புகிறேன். வேலையின்மையைப் போக்க கதர் தவிர்த்து வேறு தொழில்கள் இருக்குமாயின் அவற்றையும் கணக்கில்

எடுக்க வேண்டும். அத்தகைய தொழில்கள் வாயிலாக எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்த பின்னும் கதர் கிராமக் கைத்தொழில் தேவைப்படும் எனக் கருதுகிறேன். கிராமங்கள் தம் கால்களின் மீதே நிற்க வேண்டும்—தற்சார்புடையவையாக இருக்க வேண்டும் என்பது நம் நோக்கம். உழவுக்கு இணையாக கதர்—கிராமக் கைத்தொழில் இருக்குமாயின் கிராமங்கள் தன்னிறைவு பெறும்.

தன்னாட்சி வருவதற்கு முன் கதர் தன்னாட்சிப்பற்றின் ஒரு சின்னமாக இருந்தது. அது சுதந்திரத்தின் "சீருடை" என்ற மதிப்பைப் பெற்றிருந்தது. தன்னாட்சி வந்ததோடு கதரின் இச்சிறப்புக்குப் புகழும் வந்தது அதற்குப் பிறகு கதர் பல திசைகளில் முன்னேறியுள்ளது. வேலை இல்லாதோருக்கு வேலை வாய்ப்புத் தருவதில் தனக்கு உரிய பங்கைக் கதர் ஏற்றும் இருக்கிறது. கதர் ஒரு பொருளாதாரச் செயல் திட்டம் என்பது மட்டுமின்றி 'கதர்' விஞ்ஞானம் ஒன்றும் தோன்றியுள்ளது. உண்மையாகவே அது கிராம சுயராஜ்யத்தின் "சீருடை" ஆகவேண்டும். நாம் பட்டி தொட்டிகளுக்குப் போக வேண்டும்; கிராமப் பண்பாட்டுக்குப் புத்துயிர் தர வேண்டும் என்று பாபு இடைவிடாது சொல்லிக் கொண்டு இருப்பார். கதர் வாயிலாகக் கிராமங்களின் வலிமையைப் பெருக்குவது அவர் கொள்கையாக இருந்தது.

பாபுவின் இந்த ஆசை இன்னும் நிறைவேறவில்லை. பொருளாதாரத் துறையில் கதர் கிராமக் கைத்தொழில் வாயிலாக மக்கள் தாமாகவே நலிவினின்று விடுபட வேண்டும் என்று எண்ணினார். ஆனால் தன்வாழ்நாளின் கடைசிக் கட்டத்தில் கதர் போன்ற ஒரு பொருள் எப்படியெல்லாமோ அமிழ்த்தப் பட்டுப் போயிற்றே என்று வருந்தினார் கடைசித் தடவையாக அவர் சிறையிலிருந்து வந்தபோது இது பற்றி அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார். கதர் விஷயத்தை மீண்டும் பரிசீலித்து. புத்துருவம் கொடுக்க வேண்டும் எனச் சொல்லலானார். பாபு இடைவிடாது உபநிஷத் மந்திரம்• போல

இரண்டு வாக்கியங்களைச் சொல்லி வந்தார் — 'நூற்றதை அணிந்துகொள்; அணிவதை நூற்றுக்கொள்' என்று கிராமங்களில் உணவு உற்பத்தி ஆவதுபோல் உடையும் உற்பத்தி ஆகவேண்டும். இப்படி நிகழ்ந்தால் பாரத நாட்டுக்கு ஒரு பெரிய பாதுகாப்புப் பணி நடந்தேறும்.

ஒவ்வொருவருக்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது போலவே நூற்கக் கற்றுக் கொடுப்பது அரசினர் கடமை என்று சாண்டிலில் பண்டிட்ஜி (நேரு) யிடம் கூறினேன். அதற்கு எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் கல்வியோடு நீச்சலும் ஓடம் செலுத்துதலும் கற்பித்தல் இன்றியமையாதது என அந்நாட்டினர் நினைப்பதைக் குறிப்பிட்டேன். ஏன் என்பீர்களோ? அவர்கள் நாடு கடல் சூழ்ந்த நாடு நீந்தத் தெரிந்திருப்பதில் பாதுகாப்பு உண்டு என அந்நாட்டு மக்கள் உணர்ந்துள்ளனர். அதில் உடற்பயிற்சி கிடைப்பதோடு ஆனந்தமும் உண்டு. முக்கியமாக அதைத் தற்பாதுகாப்புச் சாதனமாகவே போற்றுகின்றனர். அதுபோலவே கதர் உற்பத்தி செய்வது ஒரு defence measure (டிஃபென்ஸ் மெஷர்) — பாதுகாப்பு நடவடிக்கை—தான் என்று நான் நெடுக நினைத்து வந்திருக்கிறேன்.

கதரைப் புதிதாகச் சீரமைக்க வேண்டியிருக்கும்

மேற்கண்டபடிப் பார்த்தால் இன்று வரை நடந்துள்ளது மிகக்குறைவே. 40, 50 ஆண்டுகளாக அது ஒரு வழியில் இயங்கிற்று. முன்னின்று நடத்த மகாத்மா காந்தி ஒருவர் கிடைத்தார். அதோடு அரசினர் உதவியும் கிட்டிற்று. இவ்வளவு இருந்தும் கதர் இன்று எந்த அளவு உள்ளது? இத்தனைக்கும் பாரத நாட்டில் துணியின் தேவை நிறைய உள்ளது எனச் சொல்கிறார்கள். அந்தத் தேவையின் ஒரு சிறு பகுதியைத் தான் கதர் பூர்த்தி செய்கிறது—ஒரு மாற்று வகைத்துணி என்ற அளவில் மேலும் முயன்று பணி செய்தாலும் கூட இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில்

ஒன்று என்ற விகிதாசாரம் முக்கால் அல்லது பாதி என்ற அளவுக்குக் குறையும் மக்கள் தொகை வளருகிற வேகத்துக் கொப்ப கதர் வளரவில்லை. விகிதாசாரம் சுருங்கிக் கொண்டே போகும்.

கதர்ப்பணி அரசாங்க உதவியுடன் நெடுநாள் நிகழ்வது இயலாது. எந்த அளவுக்குத்தான் அரசு உதவி தர இயலும். வேலைவாய்ப்பு இல்லாதோருக்கு வேலை தரும் பணி என்ற அளவில் ஓரளவு உதவி தரலாம். உதவி என்பது ஒன்று; பாதுகாப்பு என்பது முற்றும் வேறு. அரசு கதருக்குப் பாதுகாப்பு உதவி அளிக்கலாமே அன்றி பாகாப்பு தர இயலாது. கிராம சங்கல்பம் (கிராமத்தை மையமாக வைத்த கொள்கை) ஒன்றினால் மட்டுமே கதர் பாதுகாக்கப் படுதல் இயலும். இவ்வகையான பாதுகப்புக் கிடைத்தால் தான் கதர் தாக்குப் பிடிக்கும்; நாடெங்கிலும் பரவும் ஊர் ஊராக கிராமசபைகள் வாயிலாகக் கதர்ப்பணித் திட்டத்தை ஒருங்கிணைப்பது தேவையாகலாம். கிராமத்தின் தேவைக்குப் போதிய அளவு உற்பத்தி செய்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியிருக்கும். பட்டி தொட்டிகளின் ஒருங்கிணைந்த பொருளாதார வாழ்க்கையைக் கதர் கிராமக் கைத்தொழில்கள் வாயிலாக அமைக்க வேண்டியிருக்கும். இவ்வாறு கிராமத்தை மனக்கண்முன் நிறுத்தி, கிராமத்தை மையமாக வைத்து இடப்படும் திட்டம், திட்ட ஒருங் கிணைப்பு ஆகியவை வாயிலாகவே காந்தியின் மூல மந்திரம் மூர்த்தியாக வடிவெடுத்து வந்தது என்று சொல்வது சாத்தியமாகும்.

இவ்வளவையும் புரிந்து கொண்டு ஒருங்கிணைந்த பார்வையோடு (ஸமக்கரவீக்ஷணம்) சிந்தனை செய்யவேண்டி இருக்கும். கதர் ஒரு மகாமந்திரம். அதன் அடிப்படை யான எண்ண ஓட்டம் யாது என்பதைச் சிந்திக்கவும், உருப்போடவும் (மனனம் செய்யவும்) வேண்டியிருக்கும்.

"ராட்டை என்றால் அகிம்சை என்றென்ன அகிம்சை என்றாலும் ராட்டைதான்" என்று சொல்வதில் காந்தி சளைக்கவே மாட்டார். இச்சொற்களின் மர்மம் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.

'வார்பொடென்ஷிய''லும் ''பீஸ்பொடென்ஷிய''லும்

அகிம்சா பூர்வமான சமூக அமைப்பின் கல் தூண் கதர் என்ற தரிசனம் நமக்கு இன்னமும் உண்டாகவில்லை. "இப்போது கதர் ஒன்றும் செல்லுபடியாகது இனிமேல் நாம் "இன்டஸ்ட்ரி ஃபில்ட்சய்" செய்ய வேண்டி இருக்கும் "வார்பொடென்ஷியல்" உள்ள தொழில் வளர்ச்சி தேவை. அதில் போர் வீரர்களின் சகிப்புத்தன்மை இருக்கும். கதரும் கிராமக் கைத்தொழிலும் வளர்ந்து போர் வீரர்களை தயார் செய்யப் போவதில்லை. போர் வீரர்களைத் தயார் செய்யும் தொழில்களையே நாம் வளர்க்க வேண்டும்" என்று தன்னாட்சி வந்த பிறகு நிகழ்த்திய ஒரு பேச்சில் சர்தார் வல்லபாய் பட்டேல் கூறியதை நான் காதாரக் கேட்டேன்.

"வார்பொடென்ஷியல்" உலகுக்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமாக "பீஸ் பொடென்ஷியல் தேவைப் படுகிறது என்பது என் கருத்து. அமைதியின் வலிமையும், பயனுடைமையும் செயல் திறனும் உள்ள தொழில்களை நாம் தோற்றுவிக்க வேண்டும். நீதியை வலியுறுத்தும் குரலாக இன்று உலகமெல்லாம் சர்வோதயத்தின் ஒலி பரவி இருக்கிறது. அநீதியை மட்டும் அன்றி. உழைப்புறிஞ்சிச் சுரண்டலையும் தீர்த்துக்கட்ட அறைகூவல் விடுத்தாயிற்று.

இன்றைய உலகம் தப்ப வழி

உலகம் இன்று அநியாயத்தாலும் அடக்குமுறையாலும் உழைப்புறிஞ்சி அரைக் கூலிச் சுரண்டலாலும் சோர்வுற்றுத் தளர்ந்திருக்கிறது. அதிகார வர்க்கத்தின் துர்ப்பழக்கத்தால்

அதன் மூச்சுத்தினறுகிறது. போர், பயங்கரப் போர்க்கருவிகள் ஏவுகணைகள் ஆகியவற்றின் சாபக் கேட்டால் உலகம் வருந்தி மாழ்குகிறது. விஞ்ஞானத்தின் வலிமையை செல்வச் செருக்கும் தன்னலமும் விலைபேசி வாங்கி விட்டகாரணத்தால், அவள் வரம் தரும் தேவியாக காட்சிதராமல் சாப வடிவனளாகக் காட்சி தருகிறாள். இந்த ஆபத்திலிருந்து அச்சுறுத்தலிலிருந்து விடுபடும் உபாயத்தைச் சர்வோதயச் சிந்தனை காட்டுகிறது. விஞ்ஞானம் தொழில்நுட்பம் (டெக்னலஜி) ஆகியவற்றின் வளர்ச்சி ஆட்சி அதிகாரமும் பொருளாதாரமும் குவிவதற்கு வழிகோலும் என்பதும், அப்படிக் குவிந்த அதிகாரமும் பொருளாதாரமும் மனித இனம் முழுவதையுமே அடிமையாக்கிவிடும் என்பதும் வெகு காலமாகவே காந்தியின் சிந்தனைக்கு விஷயமாகி இருந்தது. ஆதலால்தான் அவர் கிராமத்தின் தன்னிறைவு தன்னாட்சி முதலியவற்றுக்காகத் தம் குரலை உயர்த்தி முழங்கினார்.

"அகிம்சை அதாவது சுரண்டல் இன்மை, நீதி ஆகியவற்றின் திசையில் பாரதத்தை உய்க்க, மலர்விக்க வேண்டுமாயின் எல்லாவற்றையும் பரவலாக்க (விசேந்த்ரீ கரணம் செய்ய) வேண்டி இருக்கும். அதற்கு நேர்மாறாக எல்லாம் குவித்து வைக்கப் பட்டு விட்டால் பிறகு அவை தம்மை உறுதிப் படுத்திக் கொள்ள, அல்லது பாதுகாத்துக் கொள்ள இம்சையைச் சார்வது தவிர்க்கமுடியாது. அகிம்சா பூர்வமான சமூக அமைப்பை, தன்னிறைவும் தற்காப்பும் உடைய கிராமங்களை நிறுவுதல் வாயிலாகத் தோற்றுவிப்பது இயலும்" என்று காந்தி கூறினார்.

இத்தகைய கிராம சுயராஜ்யம் வரவேண்டும் என்பதற்காகவே இன்று கிராமதானமும் சர்வோதயமும் முயன்று வருகின்றன. சாமானிய மக்கள் விழித்தெழவும், கட்டுப்பாடாக ஒருங்கிணையவும், சமூகத்தில் நியாய உணர்வும் உறவு மனப்பான்மையும் வளர்வதற்குச் சாதகமான ஒரு சூழல் தோன்றவும், குவியல் அமைப்பு முறைக்கு ஒரு முடிவு

கட்டவும், அதிகாரம் பொருளாதாரம் ஆகியவற்றின் சூதாட்டத்திலிருந்து யாவரும் தம்மைத்தாமே விடுவித்துக் கொள்ளும் ஓர் ஆற்றலைத் தோற்றுவிக்கவும் இன்றைய சூழ் நிலையையே புரட்டி அமைக்க வேண்டியுள்ளது. இப் புரட்சி விருப்பமே இவ்வியக்கங்களுக்கு ஆதாரம்.

மனித இனத்துக்குக் காந்தி வழங்கிய ஒப்பரிய ஒரு கொடை

குவியல் முறை ஒழிப்பு. கிராம சுயராஜ்யம் ஆகிய வற்றைப்பற்றிய சிந்தனையே மனித இனத்துக்கு காந்தி வழங்கிய அரியதொரு கொடை. மக்களுடைய நட வடிக்கைகள் எல்லாவற்றையும் ஒரு முனையில் குவிக்கிறது என்பதே விஞ்ஞானத்தின் பெரிய சாபக்கேடு. அதை நெருங்கி எதிர்க்க மகாத்மா காந்தியின் இக்கருத்து ஒன்றே தான் வழி. மகாத்மா காந்தி ஒரு தனிநபர் அல்லர். அகிம்சைத் தத்துவத்தின் பிரதி பிம்பம் அவர். அகிம்சா பூர்வமான சமூக அமைப்பின் மங்கலான பூர்வாங்க வரை படம் ஒன்று மனித இனத்துக்கு அவரிடமிருந்து கிடைத்துள்ளது.

ஆசிரம மரபு

நல்ல சிந்தனையின் விளைவாகத் தோன்றுதொட்டே நம் நாட்டில் மூன்று ஸ்தாபனங்கள் மலர்ச்சிபெற்றுள்ளன—வீடு மடம், ஆசிரமம் என்று. அவற்றுள் வீடு அல்லது இல்லம் தொழிலை முக்கியமாகக் கொண்ட அமைப்பு. சமூக வாழ்வுக்குப் பல வகையான தொழில்கள் தேவை. வாழ்க்கைக்குப் பயன்படுகிற பல தொழில்கள் வீட்டளவில் நிகழ்ந்தவையே. கிருஹஸ்தாசிரமம் என்பது தொழில் வாயிலான ஒரு நிறுவனம்.

இருக்கு வேதத்தில் ஒரு சொற்றொடர் உண்டு. ''க்ருஹே க்ருஹே; தமே, தமே'' —வீடுகள் தோறும் சாதனை நிகழ்ந்தது என்று பொருள்படும் ஒரு சொற்றொடர். 'தம்' என்பது வீட்டைக் குறிக்கும் ஒரு மாற்றுச்சொல், பரியாயம், க்ருஹம் என்பது சற்றதிகம் பரந்த அமைப்பு அதற்குள் பாதுகாப்புள்ள ஓர் இடம் இருக்கும். அதற்கே ''தம'' அல்லது ''உள்வீடு'' என்று பெயர். க்ருஹத்தில் அதாவது வீட்டில் எல்லோருக்கும் வரவேற்புண்டு. வெளியார் எல்லோருக்கும் வரவேற்புள்ள பகுதி முழுதுக்கும் க்ருஹம் என்று பெயர். உட்பகுதியை இந்திரியங்களை அடக்கும் இடம் —'தமனம்' செய்யும் இடம் என்று பொருள்பட 'தம' என்றார்கள். மக்களுக்குக் கட்டொழுங்குக் கல்வி இவ்விடத்தில் கிடைப்பதாயிருந்தது. இளைஞர்களும் மங்கையரும் இங்கே ஒன்றாக இருப்பார்கள். அப்போது அவர்களிடையே கட்டொழுங்கு இருத்தல் அவசியம். அவ்வொழுங்கு அன்பையே அடிப்படையாகக் கொண்டது. இப்படி வாழ்க்கை ஒரு கட்டுக்குள் அடங்குவதற்கு உதவிய இடத்துக்கு 'தம' என்று பெயரிட்டார்கள். ஆங்கிலத்தில் ''மேடம்'' (Madam) என்று ஒரு சொல்லுண்டு. இச்சொல்லே

ஃபிரெஞ்சு மொழியில் 'மதாம்' என வழங்குகிறது 'மதாம்' தான் இல்லத்தரசி இச்சொல் லத்தீன் மொழியிலும் உண்டு.

உத்தியோகப் பிரதானம் (தொழில் மையம்) ப்ரயோகப் பிரதானம் (ஆராய்ச்சி மையம்) யோகப் பிரதானம் (ஆன்மீய மையம்) ஆக மூன்று நிறுவனங்கள்

முதல் நிறுவனமான 'வீடு' (இல்லம்) தொழில் முக்கியத்துவம் உடையது என்றுகண்டோம். இரண்டாவதான ஆசிரமம் வாழ்க்கைக்குப் பயனுடைய ஆராயச்சி அல்லது சோதனையை முக்கியமாகக் கொண்டது. ஆசிரமம் என்ற சொல்லே மிகுந்த சிறப்புடைய சொல். எல்லாவகையான பரி சிரமங்களும் (முயற்சிகளும்) ஒருங்கிணைந்து சமரசப் படுகிற இடமே ஆசிரமம் **சிரமம்** என்ற சொல்லடியாகப் பிறந்தது **ஆசிரமம்**. 'ஆ' என்பது பரப்பை வியாபாரத்தைக் குறிக்கிறது எல்லாவகையான முயற்சிகளும் பரந்த இணைப்புப் பெற்று நிகழும் இடம் 'ஆசிரமம்'.

ஆசிரமத்தில் சாதகர்கள் இருப்பர். வாழ்க்கை பற்றிய பல சோதனைகளை —ஆளும்முறைகளைச் செய்து பார்ப் பார்கள். சிலவற்றைச் சமூக நன்மை கருதிச் செய்வார்கள் சிலவற்றை ஆத்ம சோதனைக்காகவும், சித்த சுத்திக்காகவும் செய்வர். இவ்வாறு ஆசிரமங்களில் ஆன்மீகம், உலகாயதம் ஆகிய இருதுறைகளிலும் சோதனைகள் நிகழும். நம்மிடையே ஆன்மீகத்தைப் போலவே பௌதீகச் செயல் முறைகளும் உள்ளன. அத்தகையவற்றுள் உழவு அல்லது வேளாண்மை மிகப் பெரிய சோதனையாகும். வேளாண்மையின் முதல் சோதனை செய்து பார்த்த இடம் ஒருகால் பாரத நாடே ஆக லாம். "தேவன் வந்தார்; கையால் கோடரி தாங்கினார்; காட் டை அழித்தார்; கழனி ஆக்கினார்" என்று ஒரு செற்றொடர் வேதத்தில் ஆளப்பட்டுள்ளது, ஆதலால்தான் பாரத நாட்டை ,புண்ய பூமி' என்கின்றனர், வேளாண்மையின்

சோதனை நிகழ்ந்திருந்தாலும் உயிரினப் பராமரிப்பு என்னவோ இன்னமும் பூர்த்தியாகாத ஓர் அவசரத் தேவை யாகவே உள்ளது. வனவிலங்குகளை வேட்டையாடாதீர்கள். படைப்புக்குத் தொண்டு செய்து பிரசாத வடிவில் பலனைத் திரட்ட வேண்டும். இத்தகைய சோதனைகள் கையாளும் முறைகள் பல ஆசிரமங்களில் நிகழ்ந்துள்ளன.

மூன்றுவது நிறுவனம் மடம். இது "யோக"த்தை முக்கியமாகக் கொண்ட நிறுவனம். மடங்களை நிறுவிய வர்களுள் முக்கியமானவர் சங்கராச்சாரியர். இவ்வாறு தொழில்சார்ந்த ஒன்றும் ஒருங்கிணைந்த ஆச்சபூர்வமான சோதனைசார்ந்த ஒன்றும் யோகத்தை மையமாக வைத்த ஒன்றும் ஆக மூவகை நிறுவனங்கள் நாட்டில் இயங்கி வந்தன.

ஆசிரமக் கருத்தின் பரந்தகளம்

ஆசிரமம் என்பது சங்கிலிக் கண்ணி போன்ற இணைக்கும் இயல்புடைய ஒரு நிறுவனம். அங்கே நிகழும் ஆன்மீக (ஆந்த ரிக,உள்ளம் பற்றிய) சோதனைகளில் ஏதேனும் கைக்கெட்டும் படியான விளைவுகள் உண்டாயின் அவற்றை நடைமுறை யில் கொண்டுவரும் பணிக்கு மடங்கள் இருந்தன. மடங் ளால் ஆசிரமங்களுக்கு நிறைய உதவி கிடைப்பதாயிருந்தது. புதுச் சோதனைகளை மேற்கொள்வது ஆசிரமங்களின் பணி. அவை பிறகு மடங்கள் வாயிலாக அமலுக்குவரும். அது போலவே சமூகத்துக்குப் பயன்தரும் சோதனைகளும் ஆசிரமங்களில் நடக்கும். அவற்றின் விளைவுகள் பயனுடை யவை ஆயின் வீடுகள் வாயிலாக அவை செயலுக்கு வரும். இவ்வாறு வீடுகள் மடங்கள் ஆகிய இரண்டோடும் இணைப்புப் பெற்ற நிறுவனமாக இருந்தது ஆசிரமம்.

ஆசிரமம் என்ற கருத்துக்கு இத்தனை பரந்த களம் இருந்தது. அங்கே ஒவ்வொரு பொருளுக்கும் புறவிலக்கணம் —தடாப்த தரிசனம் —வகுக்கப்பெறும். அவற்றின்

உள்ளார்ந்த என்பது போலவே வெளியே தெரியும் இயல்புகள், அவற்றின் மலர்ச்சி, விளைவுகள், சத்தியங்கள் யாவை என்பதைக்கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் சோதனைகள் மேற்கொள்ளப்படும். சமூகத்துக்கு வழி காட்டுவதும் நிகழும். ஆசிரமத்தின் வருணனை வேதத்தில் உண்டு; உபநிஷத்துக்களிலும் காணலாம்; ராமாயணத்திலும், மகாபாரதத்திலும், பாகவதத்திலும் காணக்கிடக்கின்றன. காளிதாசன் பவபூதி முதலியோரும் ஆசிரமங்களைப்பற்றி நிறைய எழுதியுள்ளனர். இவ்வாறு வேத, உபநிஷத்துக்களில் மட்டும் சமஸ்கிருத இலக்கியத்திலும் ஆசிரமத்தைப் பற்றிய குறிப்பு உள்ளது.

வாழ்க்கையின் இரண்டு பக்கங்களும் இணைந்தே ஆக வேண்டும்

நம் காலத்தில் ஆசிரமம் நிறுவுவதை வழக்கில் கொண்டு வந்தவர் காந்தி. ஆனைப்பட்ட தென் ஆப்பிரிக்காவிலேயே ஆசிரமம் நடத்தியவர் அவர். பாரத நாட்டில் சபர்மதி, சேவாக்கிராமம் ஆகிய இரண்டு ஆசிரமங்களை நிறுவினர். அவருடைய ஆசிரமத்திலும் இருவகையான சோதனைகள் நிகழ்ந்தன. வாழ்க்கையின் இருபகுதிகளையும் (ஆன்மீகத்தையும் உலக விஷயத்தையும்) ஏககாலத்தில் கவனத்தில் வைத்து காந்தியால் வாழ முடிந்தது. வாழ்க்கையின் இவ்விரு பகுதிகளும் ஒன்றுடொன்று தொடர்பின்றி இயங்குமாயின் ஒரு பகுதி துண்டிக்கப்படும். இரண்டாக உடைந்து போன ஒரு பொருளின் நிலைதான் அத்தகைய வாழ்க்கைக்கும்.ஒன்று சமூகவிஷயத்தில் ஈடுபடும்போது ஆன்ம விசாரத்தோடுள்ள தொடர்பு அறுந்துபடுதலும் அல்லது ஆன்ம விசாரத்தில் ஈடுபடும்போது சமூகத்தொடர்பு அற்றுப் போதலும் கேட்டையே விளைக்கும். சமூகக் காரியம் நடந்துள்ளது, அதுவும் தீவிரமான செயல்மயமாக நடந்துள்ளது. ஆனல் அதோடொப்ப ஆன்மீக சிந்தனை நடக்கவில்லை எனின் தீமையே விளையும். மற்றொருபக்கம் சமூக விஷயத்தோடு

ஒட்டாத ஆன்மவிசாரம் செயலற்றுப் போகும். ஆன்ம சிந்தனை இல்லாத சமூகக் காரியம் உணர்ச்சி வேகம் கலந்ததாக அமையும், சமூகப்பணி இணையாத ஆன்ம சிந்தனை செயலற்றுப்போகும். ஒன்றில் செயல் நிகழ்கிறது. ஆனால் அது உணர்ச்சி வேகம் கலந்ததாகி விடுகிறது. மற்ற தில் செயலே மாய்ந்து போகிறது. இப்படி இரு பகுதிகளும் தனித்தனியாக நின்று இரண்டும் கெடுகின்றன.

இந்த அச்சம் காந்தியின் விசார விஷயத்திலும் உண்டு அவர் விசாரத்தில் இரண்டு அங்கங்கள் இருந்தன. அவை இரண்டும் தனித்தனியாக நின்றிருக்குமாயின் அவை இரண்டுக்கும் தீங்கு நேர்ந்திருக்கும். அப்படி நேர்ந்தாகக் கூட ஏதோ சற்று தெரிகிறது இப்போது. காந்தியைச் சேர்ந்தவர்கள் சிலர் அரசியல் பொறுப்பு தாங்க வேண்டி வந்தது; வேறு சிலர் நிவ்ருத்தி பரயாணர்கள் ஆயினர்- விட்டு விடுதலையாகி நின்றனர். இவ்விரு பகுதியினரும் தனித்தனியாக நின்றால் என்னவாகும் அதுகாறும் செயல் பட்டு வந்த ஓர் உறுப்பு செயலற்றுப் போகும்தானே. பிறகு படையைப் பெருக்குதல் வரியை அதிகரித்தல், எல்லாப் பொருள்களையும் சர்க்கார் பாதத்தில் சமர்ப் பித்தல், மக்கள் எல்லோரையும் சட்டபூர்வமாக சர்க்காருக்கு ஜவாப்தாரியாக்கி- கடப்பாடும் பொறுப்பும் உடைய வர்களாக்கி. இழுத்தல் போட்டுக் கொள்ளுதல் கட்டாய ராணுவப் பயிற்சி அளித்தல் முதலிய எல்லாம் நடக்கும். மறுபக்கம் இவற்றிற்கெல்லாம் பொறுப்பில்லாமல் இவற்றை அனுபவிக்கிறவர்களும், வெற்று ஆராய்ச்சி பண்ணுகிறவர் களுமாகச் சிலர் கிளம்புவார்கள் இரண்டு துண்டானால் இத்தகைய அஞ்சத்தக்க விளைவுகள் தோன்றும்.

சமூகச் செயலும் ஆன்ம சோதனையும்

காந்தியோடு நேரிட்ட தொடர்பு கொண்ட ஏதோ சிலரேனும் இன்னும் உயிரோடு இருக்கின்றனர். மெல்ல

மெல்ல அவர்களும் காலமாகிக் கொண்டு வருகின்றனர். அதாவது இனி ஆட்சிப் பொறுப்பில் அமர்கிறவர்கள் மீது எந்தப் போக்கின் முத்திரை பதிந்திருக்கும் - எத்தகைய சிந்தனைக்கு ஆட்பட்டவர்களாயிருப்பார்- என்பதைக் கூறுவது கடினம். மறுபக்கத்தில் காந்தியோடுண்டான தொடர்பால் சிந்தனையையே முக்கியமாகக் கொண்டவர்களும் இருக்கின்றனர். இவர்களும் சமூகம் பற்றிய பொறுப்புணர்வோடு சிந்திக்கிறவர்களே. இத்தகையோரும் இன்னும் சிறிது காலத்தில் மறைந்து போவார்கள். பிறகு வருவோர்க்கு காந்திச் சிந்தனையோடு தொடர்பு இராது. அல்லது அவர்கள் வெற்று ஆராய்ச்சியில் இறங்குபவர்களாக இருக்கலாம் (அவர்களிடம் உண்மையான ஆராய்ச்சி மனப்பாங்கு இராது) பிறகு நம் தலைமுறையினர் காலத்தில் நடந்தது போல எல்லாம் நடக்கும்.

சங்கராச்சாரியர் மிகுந்த செயல் முனைப்புள்ளவர் என்பதுபோலவே விடுபட்ட சிந்தனையாளராகவும் விளங்கினர். ஆனால் அவருடைய சீடர்களிடையே சமூக விஷயம் பற்றிய பொறுப்புணர்வு மெல்ல மெல்லக் குறைந்து போயிற்று. மக்கள் தொடர்பு அற்றுப்போயிற்று. அவர்கள் சங்கராச்சாரியரின் பாஷ்யத்தை அத்யயனம் பண்ணுவதில் ஈடு பட்டனர். ஆதலால் ஏதோ சற்று புண்ணியத்தின் பெற்றி அவர்களையும் சூழ்ந்திருந்தது. சங்கராச்சாரியரிடம் இருந்த புரட்சிகரமான புண்ணியப் பிரபாவம் —பெற்றி- அவருடைய சீடர்களிடம் இல்லாதுபோயிற்று.

இதேநிலை கௌதம புத்தர் விஷயத்திலும் தோன்றிற்று. புத்தரிடம் கருணை தீவிரமாக இருந்தது. ஆதலால் அவர் ''வாசனைகளை'' ஒழித்திருந்தார். ஆனால் அவருடைய சீடர்கள் கருணையைக் கைவிட்டு வாசனைகளிலிருந்து விடுபடும் சோதனைகளில் இறங்கினர். இந்தச் சோதனை கருணையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை அதற்கு

நேர்மாருகக் கருணையினின்றும் விலகியே சொன்றுவிட்டது. சாதனை என்னவோ நிகழ்ந்தது. ஆனால் பிறரையும் ஊக்க வல்ல அளவில் புத்தரிடம் இருந்து மடைதிறந்து பாய்ந்த அடிப்படை உணர்ச்சியான அன்பு, நட்பு ஆகியவை வற்றிப்போயின.

ஆதலால் வாழ்க்கையின் இரு முக்கிய அம்சங்களான சமூகப்பணியும் ஆன்மசோதனையும் தனித்தனி நிற்கும்போது பயனற்றவையாகின்றன;அவைஎப்போதும் ஒன்றையொன்று தழுவி நிற்கவேண்டும். காந்தியின் ஆசிரமம் இப்பணியைச் செய்தது. இத்தொடர்பு எப்படியாவது நிலைபெறவேண்டும். காந்தியின் சிந்தனையை மேலும் மலர்விக்கிற காரியத்துக்கும் இத்தொடர்பைப் பேணுதல் மிகவும் அவசியமாகிறது.

14

கல்வி-கேள்வி செலச்சொல்லலால் கவனக் குறைவு கூடாது

உயர்பணியில் சிக்குண்ட நம்மவர்கள் விசாரத்தில் ஈடு படுவதைக் குறைத்துவிடுகின்றனர் என்றுகாந்தியின் காலத்தி லிருந்தே காரியதரிசிகள் விஷத்தில் நான் ஆட்சேபக் குரல் எழுப்பி வந்திருக்கிறேன். அந்தத் ''தகராறு'' இன்னும் சற்றேறக் குறைய அதே நிலேயில்தான் இருக்கிறது. இவ்விஷ யத்தில் ஈடுபாடும் சுவையும் நம்மவர்களுக்குக் குறைவாகவே உள்ளது; நம் குழுவினரிடையே செயலுக்கு முக்கியத்துவம் என்பது செயலுக்கு மட்டுமே அதிக நேரம் செலவிடுவது என்ருகியிருக்கிறது. ஆதலால் படித்தல், சிந்தித்தல் (அத்ய யனம் செய்தல்) என்பதெல்லாம் கிருஷ்ணு,ராமா,கோவிந்தா-கோவிந்தா தான்!

முன்பெல்லாம் நான் செயலாளர்களேக் கேட்பதுண்டு, ''காந்தி சமீபத்தில் எழுதிய இன்ன கட்டிரையைப் பார்த்தீர் களா?'' என்று. ஐயா! நாங்கள் வேலே செய்துகொண்டுதான் இருக்கிருேம். கட்டுரை படிக்கிற தொல்லேயில் எல்லாம் நாங்கள் ஏன் போய் மாட்டிக்கொள்கிருேம். அப்படியும் இது வரை சொன்னதைத் தவிர என்ன அதிகமாகச் சொல்லியிருக் கப் போருகிர்— 'ராட்டை சுற்றுங்கள் அரிஜனத்'தொண்டு செய்யுங்கள்' என்பதற்குமேல். அந்த வேலேதான் ஒழுங்காக நடந்தேறுகிறதே, அதற்குமேல் கட்டுரையைப் படித்துத் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது?'' என்று உடனே பதில் கிடைக்கும்.

ஒரேயடியாகக் குறை விழுந்துவிட்ட அம்சம் அத்யயனம் மட்டுமே

கருத்து இதுதான்: அவர்கள் எல்லாம் காந்தியைக் கரைத்தே குடித்துவிட்டவர்கள்! நான் சொல்ல வந்தது என்னவோ இவ்வளவே — "உங்களுக்குப் படிக்க ஊக்கமும் விருப்பமும் இல்லையென்றால், காந்திக்கு இருப்பானேன்? எதற்காக அவர் எழுதுகிறார்? அவர் இராப்பகல் என்று பாராமல் ஏதோ நேர்த்திக்கடன் செலுத்துபவர் போல எழுதிக் கொண்டிருக்கிறார். இவ்வளவையும் நீங்கள் கவனிக்கவில்லையா" என்பது மட்டுமே. "இன்னமும் புரிந்துகொள்ளாதவர்களுக்காக — பிறருக்காக — எழுதுகிறார். நமக்குத்தான் எல்லாம் புரிந்திருக்கிறதே. மேலும், அவருடைய வேலையைச் செய்யத்தானே அலைகிறோம்". என்று அவர்கள் பதில் சொல்வார்கள்.

இவ்வாறாக, நம் செயலாளர்களிடையில் இருந்த மிகப் பெரியகுறை அத்யயனம் இல்லாமையே. கட்டிலுக்கு ஒரு கால் இல்லாததை ஒத்த குறை அத்யயனம் சம்பந்தமாக இவர்கள் காட்டிவந்த அசட்டை. அன்றிருந்த சூழ்நிலையில் மட்டுமல்ல, இக்கணம் வரைக்கும் இவ்விஷயத்தை எவ்வளவு அழுத்திச் சொல்ல இயலுமோ அவ்வளவு அழுத்திச் சொல்லி வருகிறேன். கல்வி கேள்விகளை நாம் இடைவிடாது நடத்தி வரவேண்டும். அவ்வாறு செய்தன்றி நிலைக்க, தப்ப வழியில்லை.

என்னைப்பொறுத்த வரையில் நான் காந்தியோடு அதிக நெருக்கமாக இருந்ததில்லை. தூர இருந்தே பணிசெய்ய வேண்டிஇருந்தது. அவருடைய கட்டுரைகளைக் கருத்தூன்றி வாசிப்பேன் — கேள்விபதில் பகுதி வரைக்கும். அப்பகுதியில் கேள்விகளை எல்லாம் முதலில் படிப்பேன். பிறகு மானசீகமாக அவற்றிற்கெல்லாம் பதில் சொல்வேன். கடைசியில் பாபு தந்துள்ள பதில்களைப் படிப்பேன் — எவ்வளவு தூரம் என் பதிலினின்றும் அவர் பதில்கள் வேறுபடுகின்றன, அவர் சிந்தனை

யில் என்ன சிறப்பு உள்ளது என்பதை அறியும் நோக்கத்துடன் கேள்விபதில் பகுதியை சும்மா படித்தேன் என்பதன்று. அதை ஒரு அத்யயன சாதனமாகவே போற்றி வந்தேன்.

பணியைப் போலவே மூல தத்துவ விளக்கமும் நிகழ்ந்து கொண்டே இருக்கவேண்டும்

பணி ஏதோ நிரந்தரமாக நடக்கவேண்டியதுதான் என்றாலும் அதோடொப்ப சிந்தனை, கொள்கை, கருத்து பற்றிய நம் கல்வி கேள்விகளும் நிகழ்வதன் அவசியத்தை உணரவேண்டும். வெறும் பணி வளர்ந்துகொண்டு போவதில் பயனில்லை. ஏதோ ஒருபணி விரிவடைகிறது என்றால் அதோடு அதன் அடிப்படைத் தத்துவமும் விரிவடைகிறதா இல்லையா என்பதையும் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்யுங்கால் சில பணிகளில் ஏதோ ஓர் உள்ளார்ந்த பண்பு — அவற்றின் ஆன்மா குன்றியிருப்பதையும் அதன் புற உருவம் வளர்ந்து கொண்டு போவதையும் பார்க்கலாம். உள்ளார்ந்த ஆன்ம தத்துவம் நிலைபெற வேண்டும் என்ற கவலை இருக்கவேண்டும்; அதைப்பற்றிய சிந்தனையும் நிகழ வேண்டும். நம் பணிக்கு அடிப்படையாக நிற்கும் சிந்தனை —விசாரம்— தான் அப்பணியின் ஆன்ம தத்துவம். அந்தத் தத்துவம் நாளுக்கு நாள் வளர்வதாக, மலர்வதாக, விளக்கம் பெறுவதாக இருக்க வேண்டும். அதில் சிறிதுதானும் குறை புக இடந்தரலாகாது. விசாரம் அல்லது அத்யயனம் எவ்வளவு ஆழமாகப் போகிறதோ அந்த அளவுக்கு நல்லது. இவ்விஷயத்தில் உரிய கவனம் செலுத்தாவிட்டால் பணி உயிரற்றதாகிவிடும். நிறுவனங்கள் முதலியவை தோன்றி இருந்தாலும், உருவத்தில் அவை பெரிதாக இருந்தாலும் எல்லாம் உயிரற்ற களேபரங்கள் என்பதோடு சரி.

ஸ்தாபனங்கள் உயிரற்ற உடல்களாகிப் போவது ஏன்?

இதற்கு எடுத்துக்காட்டுகள் நமக்கு நிரம்பக் கிடைக்கும் ரவீந்திரநாத், தாகூரின் 'சாந்திநிகேதன்' துவங்கியபோது

அதில் ஒரு பெரும் லட்சியமும், நிரம்ப எழுச்சியும் இருந்தன. இப்போது ஒரு சாமானிய பல்கலைக்கழகத்துக்கும் அதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? என் பாதயாத்திரையின் போது நான் காந்திநிகேதனுக்குப் போயிழிந்தேன். அங்கு நான் ''நிகேதனத்தை'' கண்டேனேயன்றி ''சாந்தி'' யைக் காணவில்லை. சாதாரணமாகக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் நடக்கும் சச்சரவுபோலத்தான் அங்கும் நடந்துகொண்டிருந்தது. ரவீந்திரபாபு காலமாகி இப்போது 25 ஆண்டுகள் ஆகின்றன. 25 ஆண்டுகளுக்குள் அவருடைய முக்கியமான நிறுவனமே இப்படித் துடிப்பிழந்து போயிருக்கிறதே!

பண்டித மாளவியா அவர்களே காசிப் பல்கலைக் கழகத்தைத் துவக்கினர். அதன் நிலைதான் இன்று என்ன? பிறகு சென்றேன் விவேகானந்தரின் இடத்துக்கு. அங்கே வெறும் சர்க்கார் மானியத்தில் பணி நடந்துகொண்டிருந்தது. பணத்தை விரலால் தீண்டினால் தேள் கொட்டுவது போல் இருந்தது இராமகிருஷ்ண பரம ஹம்ஸருக்கு. அவருடைய தலைமையிடத்தில் எழும்புவதெல்லாம் பணமயமாக இருந்தன அதுவும் அரசினர் பணம்!

ஆரிய ஸமாஜனத்தினரின் குருகுலத்துக்குப் போகும் வாய்ப்பு எனக்குப் பலதடவை கிட்டிற்று. அவர்கள் சுதந்தர மான ஸ்தாபனங்கள் பல நடத்துகின்றனர் அதோடு அவர்களே பட்டங்கள் (டிகிரி) வழங்குகின்றனர் —ஆனால் எல்லாம் அரசினர் உதவியைச் சார்ந்து. அவர்கள் தரும் பயிற்சியில்கூட சாரமான விஷயம் ஒன்றுமில்லை. ஏதோ கொஞ்சம் ''ஹோமம், ஹவனம்'' நடப்பதோடு சரி.

கிழக்குப் பாகிஸ்தானில் சுற்றிவருகிற வாய்ப்பும் கிட்டிற்று. அப்பகுதி மக்களுக்கு நோவகலி (நவகாளி) யாத்திரையின் நினைவு வந்தது. பாபுவைப் பின்பற்றுபவர்கள்

எல்லோரும் யாத்திரையில் என்னோடு சேர்ந்துகொண்டனர். காந்தி, 'மிஷன்' என்று நினைத்துச்செய்த காரியங்களில் உள்ள 'மிஷன்' பண்பு முற்றும் மறைந்து போயிற்று என்று அவர்கள் சொல்லத் தெரிந்துகொண்டேன். பாபுவின் பிற காரியங்களிலும் அடிப்படையான சுவையூற்று வற்றிப்போய்க்கொண்டிருப்பதைக் காண்கிறேன்; கண்டு மிகவும் நொந்து போகிறேன்.

காலப்போக்கில் இயல்பாகவே துடிப்பு குறையும் என்பதில் ஐயம் இல்லை. இதுவே என்முன் இருக்கும் பிரச்சினை. வேகத்தைக் குறைக்கும் இயல்பும் திறமும் காலத்துக்கு உண்டு ஆதலால் எப்போதும் நாம் உந்தித்தள்ள வேண்டியுள்ளது. உயிர்ப்பின் — சைதன்யத்தின் — ஸ்பரிசம் மீண்டும் மீண்டும் உண்டானால் வேகம் கிடைக்கிறது. கடிகாரத்துக்கு அடிக்கடி சாவி கொடுக்கவேண்டும். காலப்போக்கில் வேகம் குறையும் என்பது மேற்கண்ட வற்றினின்று தெரிகிறது. ஆனால் நாம் இப்போது காந்தியின் விஷயத்தில் காணும் அளவு மந்தம் ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை 20—25 ஆண்டுகளுக்குள் துவக்க காலத்திலிருந்த துடிப்பு முற்றும் அடங்கிப் போயிற்றே!

இதன் காரணத்தைப்பற்றிச் சிந்திக்கும்போது இரண்டு மூன்று விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன. கண்முன்னேயே நம் ஸ்தாபனங்களின் உயிர்ச்சத்து வரண்டு போகிறது. அதற்குக் காரணம் ஸ்வாத்தியாயம் — கல்வி கேள்வி ஆன்ம சோதனை — இல்லாமையே. நாம் கர்ம யோகத்தில் முனைந்திருக்கிறோம். கர்ம யோகத்தில் லாபம் இருப்பது போலவே சில தீமைகளும் உண்டு. சங்கராச்சாரியர், இராமாநுசர், புத்தர், மகாவீரர் ஆகியவர்களுடைய குறைகளை நாம் உணர்ந்திருப்பது உண்மை. நாம் கர்மயோகத்துக்கு அதிக அழுத்தம் தந்தோம். அத்தகைய உணர்வொன்று அப்போது மிகத் தேவையாகவும் இருந்தது; ஆனால் மேற்குறிப்பிட்டவர்கள் எல்லோரும் ஆன்ம ஞானத்தில் ஆழ்ந்த அளவு நாம் ஆழவில்லை. அத்தவறு

காரணமாகத்தான் புறக்காரியங்கள் வளர வளர, பரவப் பரவ நம் விசார நிஷ்டையும் தத்துவ நிஷ்டையும் தேய்ந்து கொண்டே போயிருக்கின்றன. நம் பணிகள் மதிப்பும் பெருமையும் பெற்றிருந்தது போலவே கைக்கடங்காது கனத்தும் போயின. மனிதர்கள் மறைந்து வருகின்றனர்; ஸ்தாபனங்கள் எஞ்சி நிற்கின்றன. அவையோ பொலிவிழந்து ஒளியும் சுவையும் குன்றி வெளிறி விகாரமாகி ஆழமும் அற்று நிற்கின்றன.

சங்கராச்சாரியரின் ஆசிரம மரபு

இதைப் பாருங்கள்! சங்கராச்சாரியரின் ஞான மரபை அவருடைய மடத்துப் பரம்பரையினர் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றுண்டுகளாகக் காப்பாற்றி வந்துள்ளனர். இப்போது பல்கலைக்கழகங்கள் சிலவற்றிற்கு நூற்றுண்டு விழா எடுக்கின்றனர். சங்கராச்சாரியரின் மடங்கள நிறுவி இப்போது பன்னிரண்டு நூற்றுண்டு ஆகிறது. பழங்காலத்து மக்களுக்கு அந்த மடங்களிலிருந்து அவ்வப்போது கிடைத்து வந்த வேகம் இப்போது கிடைக்கவில்லை என்பது உண்மையே. அப்படி இருந்தும், இவ்வளவு காலம் கழிந்த பிறகும்கூட அவை ஏதோ சில பணிகளைச் செய்து வருகின்றன. இன்னமும் மக்கள் அவற்றின்பால் பக்தி செலுத்துகின்றனர். அதன் காரணம் என்ன? பத்து இருபது ஆண்டுக் காலத்தில் நம் நிறுவனங்களின் பணிகளில் எல்லாம் மந்தநிலை தோன்றுவதை நாமே பார்க்கிறோம். ஆசிரமங்கள் பத்து இருபது ஆண்டு செயல்மயமாயிருந்து பிறகு செயல் வேகம் குன்றி இருப்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தர இயலும். ஆனால் சங்கராச்சாரியரின் மடத்து மரபும் பணியும் நூற்றுண்டுக் கணக்கில் தொடர்ந்து வருகின்றன. அதன் துடிப்பு சற்றுக் குறைந்திருந்தாலும் அந்த மடம் நடந்தே வருகிறது. அழியாமையால், சிரஞ்சீவியாக இருப்பதற்கான ஆற்றல் ஏதோ ஒன்று அதில் இருக்கத்தான் வேண்டும். அது என்ன ஆற்றல், என்ன சக்தி?

இந்த மடத்தை நிறுவியவருக்குத் தம் வாழ்க்கையில் ஒரு சிறந்த தரிசனம் கிட்டி இருக்கிறது என்பது தெளிவு. அந்த தரிசனமேயன்றி நல்ல நல்ல பணிகளும், தொண்டும் நடந்துள்ளன.அவை யாவும் அந்த அந்தக் காலத்துத் தேவைக்கு ஒப்ப நிகழ்ந்தவை. அவற்றிற்கும்மேல் வாழ்க்கை பற்றிய ஒரு முழுப்பார்வை — ஸமக்ர தரிசனம் — அவற்றில் உண்டு. தம் செயல்களுக்கு அவர்கள் அமைத்த அடிப்படை, காலத்தை வென்று நிரந்தரமாய் நிற்கும் அடிப்படை என்பது தெளிவு.

சங்கராச்சாரியருக்கு ஓர் அத்வைத தரிசனம் கிட்டிற்று. அதைப்பற்றிய அத்யயனம் நிகழ்த்துமாறு தம் சீடர்களை ஊக்குவித்தார். அதோடு அத்யயனத்துக்கு என்னென்ன தகுதிகள் (அதிகாரம்) ஒருவனிடம் சேர்ந்திருக்கவேண்டும் என்பதையும் சாதன சதுஷ்டயம் வாயிலாகத் தெளிவு படுத்தினர்.

அத்யயனத்தைப் போலவே விரத நிஷ்டை என்பதும் நம் அனுபூதிமான்களுக்கு விதிக்கப்பட்ட ஓர் யோக சாதனையாகும். அறிவு நிரம்பியவர்களிலும் இருவகை — 'வித்யாஸ்ஞத்" என்ற ஒரு சாராரும், "விருதஸ்ஞத்" என்று மற்றொரு வகையினரும் உண்டு. ஒரு மாணவன் பன்னீராண்டு குருவின் இல்லத்தில் தங்கி வித்தை கற்றிருப்பான். ஆனால் அவன் விரதங்களை மேற்கொண்டிரான் ஆயின் அவனைப் "பூர்ணஸ்நாதகன்" என்று மதிக்க இயலாது. இதைப்போலவே விரதங்களை மேற்கொண்டு பூர்த்தி செய்துள்ள ஒருவன் வித்தையை முழுதும் கற்றிராவிட்டால் அவனும் பூர்ண ஸ்நாதகனுகப் போற்றப்படுவதில்லை. இவ்வாறு வித்தை, விரதம் ஆகிய இரண்டின் யோகமே இச்சிறந்த பரம்பரை. சங்கராச்சாரியரே இவ்விரண்டையும் வலியுறுத்தினர்.

காந்திஜியின் வாழ்க்கையில் இந்த அளவு குறையுண்டு

சர்வோதய சிந்தனையும் முழு வாழ்க்கையை ஊடுருவி நிற்கும் ஒரு பெரிய சிந்தனையாகும், இதற்கும் விரதம் கலந்த

அத்யயனம்- கல்வி கேள்வி - தேவை. வாய்மை, கொல்லாமை, வெளவாமை (சத்தியம் அகிம்சை அபரிக்கிரஹம்) முதலிய அடிப்படை விரதங்களை காந்தி பெரிதும் வலியுருத்தியுள்ளார். அவர் இதை இடைவிடாது கூறிவந்ததன்றி தம் வாழ்க்கையி லும் அவற்றைக் கடைப்பிடித்தார். என்ன காரணத்தாலோ அத்யயனத்தை வலியுறுத்த அவருக்கு வாய்ப்பில்லாது போயிற்று. ஆனால் அத்யயனத்தின் பெருமையை அவர் நன்ருக அறிந்திருந்தார். தம் அருகிலிருந்தோருக்கு அவர் இதைப்பற்றிச் சொல்லியும் வந்தார், ஒரு பெரும் மக்களியக் கத்தை நடத்தி அதோடு பணியும் செய்து வந்தவராதலால் அவர் விரதங்களுக்குக் கொடுத்த அளவு முக்கியத்துவத்தை, வித்தைக்கு — கல்வி கேள்விகளுக்குக் — கொடுத்தாரில்லை. அதனுல்தான் அவருடைய வாழ்க்கை விஷயத்தில் கல்வி கேள்விகளுக்கு ஊக்கம் குறைந்திருப்பதாகத் தோன்றுகிறது. முழுமையுடையதும், வாழ்க்கை முற்றும் வியாபித்திருப்பது ஒரு வாழ்க்கை லட்சியத்தை மனக்கண் முன் கொண்டுவர விரும்பும்போது, அதில் நாம் போற்றி, ஊட்டம் தந்து வளர்த்துப் பெருக்கவேண்டிய சிறப்பான அம்சங்கள் எவை, நாம் அவசியம் களைந்தாகவேண்டிய குறைகள் எவை என்பதைத் தெளிவாக்கவே இந்த விளக்கத்தை மேற் கொள்கிறேன். சர்வோதய தரிசனத்தின் உள்ளார்ந்த வலிமையை உறுதியாக்கும் ஆசை இருந்தால் அருகிலுள்ள தீமையையும் குறைபாட்டையும் களைய வேண்டும்தான்.

புத்தர் தம் சீடர்களை ஆழ்ந்து சிந்திக்கவிடவில்லை. சங்கராச்சாரியரோ சிந்தனையின் ஆழத்தில் இறங்கியது மன்றி தம் சீடர்களையும் அவ்வாறு இறங்கச்செய்தார். ஆதலால்தான் பௌத்த தரிசனத்தில் பிற்காலத்தில் தோன்றிய பலவகைச் சமய வேறுபாடுகளையும், அவருடைய சீடர்களிடையே பிறந்த தவருன சிந்தனைப் போக்குகளையும், பலவகைச் சம்பிரதாயங்களையும் போன்றவை சங்கர விசாரத்தில் — சிந்தனையில் — தோன்றவில்லை.

காந்தியின் விரதநிஷ்டையும்கூட புறக்கணிக்கப்பட்டு வருகிறது

இதே அச்சம் காந்தியின் விசார விஷயத்திலும் உள்ளது. அவ்வச்சத்திற்குக் காரணம் அத்யயனம் ஆழமாக இருக்க வேண்டும் என்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதே. கவனம் விரத நிஷ்டையின்பால் அதிமாக இழுக்கப் பட்டிருந்தது. அப்படியும் காந்தி வலியுறுத்திய விரதநிஷ்டை யின்பால் உரிய அளவு கவனம் பதியவில்லை. காந்தியின் காரியங்களில் ஓர் அரசியல் சாயை இருந்தால் அவரைப் பின் பற்றியவர்கள் மீது இந்தச் சாயலின் முத்திரையே பெரிதும் படிந்தது. இதன் விளைவாக விரதநிஷ்டையின் பால் காந்தி நிறைய கவனம் செலுத்தியும்கூட அது மெல்ல மெல்லத் தொய்ந்து வருகிறது.

ஆதலால்தான் மக்கள் கவனத்தை லோகநீதி (சமுதாய நீதி) யின்பால் ஈர்க்க நான் இடைவிடாது முயன்று வருகிறேன். அதனாலேயே காந்தி செய்தது முற்றும் அரசியல் அன்று, அவ்வளவும் உலகநீதி (சமூக நீதி) என்றும் அவர் வலி யுறுத்தி வந்த விரதநிஷ்டையைப் புறக்கணிப்பது பொருந் தாது என்றும் சொல்கிறேன். மற்றொன்று, நாம் சிந்தனையில் ஆழவேண்டும், அத்யயன நிஷ்டர்களாக – கல்வி கேள்விகளில் சிறந்தோராக — மலரவேண்டும் என்பது. இவ்விரண்டு விஷயங்களும் இல்லாமையே காந்தி பரம்பரை என்று ஒன்று நிலைபெறாது என்று தோன்றுவதற்கும், அது மெல்ல மெல்ல இற்றுப்போவது போல் தோன்றுவதற்கும் காரணம்.

இவ்விரண்டு விஷயங்களின்பால் மக்கள் கவனமும் அவ்வளவாகச் செல்லக் காணோம். நமக்கெல்லாம் வேலை வேலை, வேலை மேலும் வேலை, ஓயாத செயல். கீதையிலும் தான் கர்மத்தின் பெருமையிடப் பெற்றுள்ளது. கர்மம் இன்றி ஒரு வரும் வாழமுடியாது, ஒரு கணம்கூட வாழ முடியாது. எல்லோரும் தான் வேலை செய்கின்றனர். ஆக்கப்பணி செய்கி றோம் என்று நாம் பெருமை பேசிக்கொள்கிறோம். நான் கேட் கிறேன், யார்தான் ஆக்கப்பணி செய்யவில்லை என்று? லட்சக்

கணக்கான உழவர்கள், சக்கிலியர்கள், நெசவாளர்கள், கொல்லர்கள் எல்லோரும் ஆக்கப்பணிகள்தானே செய்கிறுர்கள். அவர்கள் பணியை வைத்துத்தானே வாழ்க்கை நடக்கிறது, அந்நிலையில் நாம் ஆக்கப்பணி செய்கிறோம் என்பதில் பெரிய பெருமையொன்றும் இல்லை. நாம் இப்படியே ஆக்கப்பணி செய்துகொண்டிருப்போம், அதைமட்டும் கூர்ந்து சர்வோதய சிந்தனை என்றென்றைக்குமாக நிலை நிற்கும், அவ்வேலை ஒன்றின் வாயிலாகவே அச்சிந்தனையை உலகெங்கும் பரப்புவோம் என்று நினைப்பதெல்லாம் வீண்.

இல்லையேல் உயிரோட்டம் நிலைக்காது

சர்வோதய சிந்தனையின் அடிப்படைக்களம் யாது; அதன் தூண் போன்ற தத்துவங்கள் யாவை என்பது பற்றிய அத்யயனம் இன்றி ஏதோ நல்ல பணிகள் சிலவற்றைச் செய்வதால் ஒரு பயனும் இல்லை. காந்தியோடு சேர்ந்து பணியாற்றிய செயல் வல்லார் எல்லோரும் இன்னும் சிறிது காலத்துக்குள் சாயுஜ்யம் அடைந்துவிடுவார்கள். பிறகு அத்யயனம் இல்லையேல் அடிப்படை ஊக்கத்துக்கே ஆதாரம் இல்லாது போகும், இந்தச் செயல் வீரர்கள் கூட பெருமளவு கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் — அத்யயனம் செய்தவர்கள் — அல்ல கல்வி கேள்விகளுக்கான அத்தகைய விருப்பம் துவக்கத்திலிருந்தே நம்மிடம் குறைவு. ஆனுல் காந்தி போன்ற ஒரு மகான் தொடர்பால் அவர்கள் ஏதோ பூரணத்துவம் பெற்றுர்கள். இப்போது காந்தியோடு நேரடித் தொடர்பு கிட்டியவர்கள் கிட்டாதவர்கள் எல்லோருமாக உலகத்தைவிட்டே போய்க் கொண்டிருக்கிறுர்கள். ஆதலால் இப்போதாவது அடிப்படை விசாரம் பற்றிய அத்யயனம்—கல்வி, ஆய்வு—செய்யாது போனுல் உலகத்தின் பிரவாதத்தில் அடித்துச் செல்லப்பட்டு விடுவதோடு இந்த விசாரத்தை எல்லாம் மக்கள் மறந்து விடுவதையும் பார்ப்பீர்கள். ஆதலால், ஆழ்ந்த அத்யயனம் இடைவிடாது நிகழ்ந்து விசாரம் பெருக்கெடுத்து ஓடினுல் மட்டுமே நம் பணியில் உயிரோட்டம் நிலைக்கும்.

15 ஸ்தூலத்தை விடுங்கள் சூட்சுமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்

''காந்தி ஸ்மாரக் நிதி' 'கஸ்தூர்பா நிதி'' ஆகியவற்றின் பணத்துக்கு வட்டி வாங்குவது பொருந்துமா? ''என்று ஒரு தரம் மாவ்லங்கர் அவர்களுக்குக் கடிதம் எழுதிக் கேட்டிருந்தேன். பதில் கடிதத்தில் ''தக்க பாதுகாப்புக் கிடைப்பதோடு மிக உயர்ந்த பக்ஷ வட்டி கிடைக்கும் இடத்தில் பணத்தைப் போடவேண்டியதுதான். காந்தி எங்களுக்கு அப்படித்தான் போதித்திருக்கிறார்'' என்று கண்டிருந்தது.

இதற்குநான்என்ன சொல்ல,பேசாமல் இருந்துவிட்டேன். காந்தி இருந்திருந்தால் இது போன்ற விஷயங்களில் அவர் வேறு விதமாக நடந்துகொண்டிருப்பார். இல்லையேல் அவர் மீது பழி சுமந்திருக்கும். நிதி திரட்டுதல் அதை வட்டிக்கு விட்டுப் பெருக்குதல், செலவிட்டு அதைப் படிப்படியாகக் கரைத்தல் ஆகியவையெல்லாம் பழைய செய்திகள். காந்தி இப்போது இருந்தால் இந்த விஞ்ஞான யுகத்தில் இதுபோன்ற விஷயங்கள் எப்படி எப்படி நடக்கவேண்டும் என்பதற்கு அவரே பதில் சொல்ல வேண்டி இருந்திருக்கும். ஆனால் இறைவன் கருணை கூர்ந்து அவரை இடையிலேயே ஸ்வீகரித்துக் கொள்ளத் திருவுளம் பற்றினார். ஒரு புதுச் சூழ்நிலையில் பதில். கேட்டு இத்தகைய கடினமான கேள்விகள் அவர்முன் வைக்கப் படவில்லை. பக்தனுடைய மதிப்பைக் காப்பாற்ற வேண்டும் என்று கடவுளுக்குத் தோன்றி இருக்கிறது! புது யுகத்தின் வினாக்களை புது மனிதர்களே சமாளிக்கட்டும்.

இது எல்லாம் பழங்கதையாய்ப் போன விஷயங்கள்

ஸ்ரீ கனசாம்தாஸ்பிர்ஸி பாபுவின் நினைவு பற்றி மிக அழகான ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் பாபுவின் வியவகாரத்

திறமையை விளக்கிக்காட்ட ஒரு நிகழ்ச்சியை விவரித்திருக்கிறார். பல வேலைகளுக்கிடையே நேரம் ஒதுக்கி, குறிப்பிட்ட ஒரு "ஃபண்ட்" (fund) பொறுப்புள்ள வங்கியில் போடப்பட்டுள்ளதா, நியாயமான வட்டி வருகிறதா என்று கேட்டார், இந்த நிகழ்ச்சியை எடுத்துக் காட்டாகத் தந்து பிர்லா எழுதுகிறார், "பாபு கெட்டிக்காரவைசியர். அசட்டு வைசியர் அல்லர். சாதாரணமாக பக்தர்கள் எனப்படுவோர் அசடுகளாகத்தான் கருதப்படுகின்றனர். காந்தியோ அத்தகைய அசட்டுத்தனம் சிறிதும் இல்லாதவர் என்பதை விளக்கவே இந்த வட்டி விஷயம் இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது" என்று.

இதெல்லாம் இப்போது பழைய செய்திகளாகிவிட்டன என்று பணிவுடன் கூற விரும்புகிறேன். இன்று யாராவது ஒருவர் மகாத்துமா என்று இருந்து அவர் வட்டியைப்பற்றிச் சிந்தித்தால் அவருக்கு இந்தச் செய்தி பிற்போக்காகத் தோன்றும். இன்றோ வட்டி வாங்கலாகாதென்பது மட்டும் அல்ல, அதற்கு நேர்மாறாக எதிர்ப்பட்டவனுக்கு முதலைக் கொடுத்துவிடு என்று சொல்லத் தோன்ற வேண்டும். முதலைப் பெருக்குகிற பேச்சே இல்லை; அதைக் கரைக்கிற பேச்சுத்தான் உள்ளது. நம்மிடமிருந்து பணம் பெற்றவன் அதை யோக்கியமான வழியிலே செலவிட்டிருந்தால் அதை அவன் திருப்பித் தரும்போது அவனுக்கு மேலும் கழிவு (வஜா) தரவேண்டும். இப்படி ஒரு கருத்து யாருக்குத் தோன்றுகிறதோ, அவனே இன்றைய சூழ்நிலைக்கு ஒத்தவன் எனப் போற்றப்படுவான். காந்தியின் ஸ்தூல வரலாற்றுருவத்தின் வாலைப்பிடித்து வைத்துக்கொண்டு இருப்பது இனி கவைக்குதவாது. அவரே பழைய கிரந்தங்களின் நகல் எடுத்து வைத்தது போன்ற மனிதர் அல்லர். நித்தம் புதிய புதிய சிந்தனைகள் செய்து பேசிவந்தவர். நிலைமை இப்படி இருக்க அவரைப் பற்றிய ஸ்தூலமான செய்திகளைப் பிடித்து வைத்துக்கொள்ளும் தவற்றைச் செய்கிறோம். இன்றைய விஞ்ஞான யுகத்தில் செல்லுபடியாகாது.

காந்தியோ 'டிரஸ்டிஷிப்'பைப் பற்றி (அறங்காவலைப் பற்றி) பேசி வந்தார்

காந்தியின் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்று இந்த உலகம் பரமேச்வரனுடையது-கடவுளின் உடைமை -என்பது. இவ்வுலகில் கடவுள் வசிக்கிறார். இதிலிருந்து ஏதோ பலனை அனுபவிக்கிறவன் சமூக வடிவில் உள்ள கடவுளுக்கு அதைச் சமர்ப்பித்து பிரசாத உருவில் தனக்குக் கிடைப்பதை அனுபவிக்க வேண்டும் — உண்ணவேண்டும். இதுபற்றி ஈசாவாஸ்ய உபநிஷத்தின் முதல் மந்திரத்தை அவர் அடிக்கடி நினைவூட்டுவார். நீங்கள் சொத்துக்கு உடையவர் அல்ல என்றால் அதன் தர்மகர்த்தா -அறங்காவலர்- ஆவீர்கள். மனிதர்கள் மேலும் மேலும் சொத்து சேர்க்கும் ஆசையை விட்டுவிடவேண்டும் என்றும் அவர் சொல்லிவந்தார். செல்வந்தர்கள் தம் ஆற்றலையும் செல்வத்தையும் முற்றும் தொண்டுக்காகவே செலவிடவேண்டும் என்றும், எல்லோரும் தர்மகர்த்தா நிலையை- டிரஸ்டிப்ஷிப்பை— ஏற்கவேண்டும் எனவும் அவர் விரும்பினார் செல்வம் முற்றும் சமூகத்தினுடையது ஆகும் என்றும், செல்வர்கள் எல்லோரும் தம்செல்வத்தின் டிரஸ்டிகள் போல நடந்து கொள்வதற்கு இசைவார்கள் என்றும் நம்பினார்.

"தி லாஸ்ட்ஃபேஸ்" எனும் நூலில், மகாதேவ தேசாயும் கிஷோர்லால்பாயியும் டிரஸ்டிஷிப் பற்றி ஒரு பூர்வாங்க(நகல்) மசோதா தயார் செய்ததாகவும், நிறைய விவாதித்து அதை உருவாக்கியதாகவும் பியாரிலால், குறிப்பிட்டிருக்கிறார் இந்த வரைவு பிர்லாவுக்கு அனுப்பிவைக்கப்பெற்றது அதை பிர்லா வர்த்தகர்கள் முன் வைப்பார் எனவும், அவ்வகையில் அது முன்னேற்றம் காணும் என்றும் எதிர்பார்த்தார். பிறகு அம் மசோதாஎன்ன ஆயிற்றறென்றே தெரியவில்லை என்றும் பியாரிலால் எழுதியுள்ளார். அதைச் செல்வந்தர்கள் ஒப்பவில்லை என்பது தெரிகிறது காந்தியின் ஆசையும் நிறைவேறவில்லை.

இன்று 'தாஸ்ய' பக்தியின் சூழல் இல்லை; ''சக்ய'' பக்தியே அமுலில் உள்ளது

இவ்விஷயத்தில் என் கருத்து வருமாறு: நில உடைமை பற்றிய சமூகப் பாகுபாடு பழங்காலத்தில் உண்டாயிற்று. சிலர் நிலத்துக்கு உடையவர்கள் என்றும் சிலர் அவர்களுக்குப் பணி செய்வோர் — பண்ணையாட்கள் — என்றும் பிரித்தனர். அக்காலத்தில் தாஸ்ய பக்தி பற்றிய பிரசாரம் நிகழ்ந்தது. ஆண்டான், அடிமைக்கு அன்போடு உணவளித்து அவனைக் காத்து வருவான். அடிமை அன்போடு தன் 'ஆணடைக்குத் தொண்டு செய்வான் இதுவே அம்மகன் சமூகத்தின் ஊன்றிய கருத்து அப்போது சமூகம் செவ்வனே நடந்து வந்தது. சமூகத்தில் ஒருவருக்கும் மனநிறைவின்மை என்பதில்லை. அதிலே தீமை ஏதோ இருந்ததென்று நான் கூற வரவில்லை. அவ்வேற்பாடு உண்டான காலத்தில் அதில் தீமைஇருந்திராது ஆனல் இன்றைக்கு மேற்கண்ட கருத்து ஒவ்வாது. இப்போது சமூகம் முழுவதுமே சிறிதளவு உயர்ந்துள்ளது. இன்றைய சமூகத்துக்குத் தாஸ்ய பக்திக்குப் பதிலாக சக்ய பக்தி (தோழமை அன்பு) தேவைப்படுகிறது. ஆதலால் ஆண்டான் அடிமை என்ற பாவனை, அதன் நல்ல பொருளில் கூட இன்று மக்களுக்கு ருசிப்பதாயில்லை. அது காரணமாகத்தான் உடைமை பாவனையும் கருத்தும் இன்றைய உலகிலிருந்து மறைய வேண்டும்-அக்கருத்தை நாம் களைய வேண்டும்-என்று கூறுகிறேன்.

உடைமையை விட்டுவிடுவது என்ற பேச்சு வரும்போது சிலர் காந்திச் சிந்தனைக்கு இது பிரதிகூலம் அல்ல என்ருலும் அதனின்றும் வேறுபட்டது என்றும் அதற்குச் சம்பந்தம் இல்லாதது என்றும் கூறுகின்றர்; காந்தி இப்படி எப்போதும் கூறவில்லை என்கின்றனர். வெறும் 'டிரஸ்டிஷிப்'பைப் பற்றி மட்டும் பேசிவந்தார்; அவ்வளவே. என்பது அவர் வாதம்

சாதாரணமாக இந்தச் சர்ச்சையில் நான் இறங்குவதில்லை நானும் காந்தியுடன் இருந்தவன்தான். நான் அவர் நூல்களைப் படித்துமிருக்கிறேன். அவரோடு வாதம் செய்யும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. என்னைப்போலவே வேறு பலரும் காந்தியுடன் இருந்துள்ளனர். ஆதலால் ஒவ்வொரு வரும் காந்தியின் பெயரையும் சொல்லிச் சொல்லி வெவ்வேறு விதமாகவும் பேசுவதில் பொருளில்லை. நாம் புது யுகத்தில் இருக்கிறோம். கவனிக்க வேண்டிய புதுக் காரியங்கள் பல நம் முன் உள்ளன. காந்தி ஊதின சங்கையே நாமும் ஊதிக் கொண்டிருக்கவேண்டிய அவசியமும் இல்லை. இன்றைய சூழ் நிலையில் என்ன அவசியமோ அதைப்பற்றிச் சிந்தித்து வேலை செய்து கொண்டு போகவேண்டும். சூழ்நிலைக்கு ஒத்தவாறு மாறி வந்தார் என்பதே காந்தியின் சிறப்பு என்பது என் கருத்து விஷயம் இப்படி இருக்க "டிரஸ்டிஷிப்" என்பது என்ன, அதை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறேன்?

டிரஸ்டியின் இரண்டு இலக்கணங்கள்

காந்தி "டிரஸ்டிஷிப்" என்ற சொல்லைப் பயன்படுத்தினார். இந்தச் சொல்லால் நன்மை இருப்பது போலவே தீமையும் இருக்கிறது. முற்றுமே நன்றல்ல அச்சொல்லின் "பாவம்" விரும்பத்தகாத சில மானசீகச் சூழ்நிலைகளின் சாயலும் பக்கக் கருத்துக்களும் அதனோடு ஒட்டி வருகின்றன. இன்னமும் "டிரஸ்டிஷிப்" என்ற சொல்லுக்குப் பொழிப்புரை சொல்லிக் கொண்டிருக்கிறோமேயன்றி அச் சொல்லுக்குப் பின் உள்ள சிந்தனையைச் செயலாக்கும் பொறுப்பையும் நிர்ப்பந்தத் தையும் நாம் ஏற்கவில்லை — கணிக்கவில்லை. இந்நிலையே நீடிக்குமானால் இம்சையிலிருந்து நம்மை என்றுமே காத்துக் கொள்ள இயலாமற்போகும் என அஞ்சுகிறேன். எந்த வழியிலும் மக்களை ஏமாற்றுவது சுலபம் என்ற நிலைவரைக்கும் ஏழ்மையின் எல்லை போயாயிற்று, அவ்வேழை மக்கள் மேலும் அகிம்சைவாயிலாகவே காரியங்கள் செய்வார்கள் என்று எதிர்

பார்க்க இயலாது. ஆதலால் ''டிரஸ்டிஷிப்'' சித்தாந்தத்தை, எவ்வளவு சொத்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்ற கணக்குப் பார்க்காமல் செயலாக்குவதென்று உடனே முடிவு செய்யவேண்டும். இவ்வளவு பொருள், இவ்வளவு தட்டுமுட்டு இருப்பது உசிதம். இவ்வளவு உசிதமன்று, வரைந்த கோட்டின்படி இவ்வளவுதான் என்றெல்லாம் பேரம் பேசி இவ்விஷயத்தைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்தால் வர இருக்கும் ஆபத்தைத் தள்ளிப் போட முடியாது. ''டிரஸ்டிஷிப்'' என்ற சொல்லை ஆதாரமாக வைத்துக்கொண்டு நம்முடைய வாழ்க்கை முறை இருப்பது போலவே நீடிக்கட்டும் என்போமானால் அந்த நல்ல சொல்லுமே கெட்டுப் போகும்.

என் கருத்துப்படி டிரஸ்டிஷிப் விஷயமாக பெற்றோருக்கும் மகன்களுக்கும் இடையே உள்ள உறவைவிடச் சிறந்த உவமை கிடைக்கும் என்று தோன்றவில்லை. இவ்வுறவின் தன்மை என்ன. தங்கள் சுமையை எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் மகன் தாங்கமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரம் அவன் அதைத் தாங்கும்படி செய்யவேண்டும் என்றே பெற்றோர் முயல்கின்றனர். மகனைப்பற்றி எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதோ, அல்லது அவன் காலமெல்லாம் தம்மைச் சார்ந்திருப்பதோ அவர்களுக்கு மகிழ்ச்சி தராது. ஆட்சியைக் கையில் வாங்க வேண்டிய தகுதியை அவனுக்கு இயன்ற அளவு விரைவில் தேடித்தரவே பெற்றோர் முயல்கின்றனர்.

மேற்கண்டது டிரஸ்டியின் ஓர் இலக்கணம். இரண்டாவது இலக்கணம், பொறுப்பைத் தாங்கும் திறமையும் தகுதியும் மகனுக்கு உண்டாகாத வரையில், பெற்றோர் தம்மைப்பற்றிக் கவலைப்படுவதைவிட அம்மகனைப் பற்றிக் கவலைப்படுவார்கள் இப்படி இரண்டு இலக்கணங்கள் உண்டு ''டிரஸ்டிஷிப்'' புக்கு கூலிக்காரர்களுக்கு சற்றதிகம் கூலி கொடுத்தால் எல்லாம் ஆயிற்று என்பதன்று டிரஸ்டிஷிப். நிரந்தரமாக, டிரஸ்டியின் தேவை இல்லாமற் செய்வதே அதன் முக்கிய

அம்சம் என்பதை உணர்ந்து முழுமுயற்சியும் மேற்கொள்ள வேண்டும். இன்று சீனர்களும் தாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், ''நாங்களே திபேத்துக்கு டிரஸ்டிகள்'' என்று நூறு, நூற்றைம்பது ஆண்டுகளாக ஆங்கிலேயரும் தாம் ''பாரத நாட்டின் டிரஸ்டிகள் நாமே'' என்று வாதாடி வந்தனர். காந்தியடிகளின் டிரஸ்டிஷிப்புக்கு இப்படியெல்லாம் பொருளில்லை.

குணங்களின் மொத்தக் குத்தகை காரர் (காண்டிராக்டர்) ஆக இருப்பதுகூட காந்திக்கு உகப்பன்று

காந்தி ஒரு புதுயுகத்தையே தோற்றுவித்த மகான். அவர் ஒரு புது வாழ்க்கைச் சித்தாந்தத்தையே வழங்கியவர். இந்த யுகத்திலும் கூட 'தாஸ்ய' பக்தியும் சமூகத்தில் ஆண்டான் அடிமை என்ற பாகுபாடும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற செய்திகள் நினைப்பளவிலேயே அவர் சிந்தனையோடு சுருதி சேராதவை. நம் சமூகத்தில் குணங்களைப் பாகுபாடு செய்து வைத்திருப்பதற்கு எதிராகத் தம்குரலை உயர்த்தியவர் அவர். பிராமணர்களுக்கு இன்னகுணங்கள் இருக்கவேண்டும், சூத்திரர்களுக்கு இன்னவை என்று நம்மிடையே வழக்கில் இருந்திருக்கிறது. ஒவ்வொருவருடைய தர்மமும் இன்னது என்று தனியாக வகுக்கப்பட்டு வந்தன. இந்தக் குணங்கள் விஷயத்திலும் 'புஞ்சீவாதம்' (தொகைவாதம்) தலை தூக்கியிருந்தது. சத்தியம் அகிம்சை அன்பு முதலிய குணங்கள் சாதுக்களுக்குரிய குணத் ''தொகை'' ஏனையோரெல்லாம் சாதுக்களுக்கு மரியாதை தருவார்கள்; வழிபாடுசெய்வார்கள் ஆனால் அவர்களைப் பின்பற்றமாட்டார்கள். காந்தியோ வாய்மை சொல்லாமை அன்பு முதலிய குணங்கள் சன்யாசிகளுக்கு இருக்கவேண்டிய அளவு இல்லறத்தாருக்கும், ஏன் மற்ற எல்லோருக்குமே இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். நாம் நம் ஆற்றல் முழுவதையும் சமூக சேவைக்கே அர்ப்பணம்செய்யவேண்டும் என்றும், அதற்குக் கைம்மாறாகச்

சமூகம் ஏதேனும் நமக்குத்தந்தால் அதை நாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் சொன்னார். இதையே இன்றைய பேச்சுப் பாணியில் சொன்னால், உள்ள நற்குணம் எல்லாம் சமூகத்துக்குப் பயன்படுவதற்கன்றி வேறல்ல என்று அமையும், இக்கருத்தை நமக்கு விளக்கிச் சொன்னவர் காந்தி

காந்தியின் இந்தப்போதனை காரணமாக வாழ்க்கையைப் பற்றிய முழுப் பார்வையுமே மாறிப்போகிறது. இந்த யுகத்திலும் யாரோ ஒரு எஜமான் தன் ஊழியனை மிகநன்றாக நடத்தி பசிக்கு மிக உயர்ந்த உணவு தந்து வந்தாலும் கூட அது நம் மனதுக்குப் பிடித்தமில்லை. இப்படி உண்டு, குடித்து சுகம் அனுபவித்தல் அன்றி அவன் – பணியால் - எங்கே முழு வளர்ச்சி அடைகிறான்? என்று இன்று நாம் கேட்கிறோம். அது போலவே அந்த எஜமானும் எஜமான் பாவத்துக்குரிய பரிவோடு ஊழியனுக்கு உணவளித்துக் காக்கும் அந்த வாய்ப்பினால் – யோகத்தால் – அந்த எஜமானுக்குப் பூரண வளர்ச்சியும் –மலர்ச்சியும் எப்படி உண்டாகும். கொண்டவன் அதாவது கணவன் மனைவியை செவ்வனே பேணுவான். அதே போல் கொளப்பட்டவள் அதாவது மனைவி கணவனின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து அவன் கூடலை விருப்புற்றவளாய்ச் சமைந்திருப்பாள், என்ற அளவில் இருவரும் தத்தம் கடமைகளைச் செம்மையுறச் செய்தால் மட்டும் இருவரும் முழு மலர்ச்சி பெற்று மலர்ந்ததாக நினைப்பதற்கில்லை. கணவன் மனைவியாகவேண்டி இருக்கும்; மனைவி கணவனாக வேண்டி யிருக்கும். ஆண், ஆணும் பெண்ணுமாக வேண்டும். அப்போது தான் இருவருடைய பூரண மலர்ச்சியும் கைகூடிற்று எனலாகும்.

காந்தியின் வாழ்க்கைச் சித்தாந்தம் இப்படி அமைந்துள்ளது. அது முற்றும் ஒரு புதுப் பார்வையுடையது, ஆதலால் பழைய சமூக அமைப்பு அதன் உச்சகட்ட நற்பண்போடு அடைந்தாலும் கூட இன்று நமக்கு ஏற்புடைய

தன்று அது சாதுர்வாணிய (வருணாசிரம) காலத்துக்குச் சிறந்த தாக இருந்திருக்கலாம். ஆனால் இக்காலத்துக்கு அது சற்றும் உகந்ததாக இல்லை. ஒவ்வொரு வருணத்திலும் நான்கு வருணங்களும் இருக்கவேண்டியதே நான்கு வருணத்துக் குணமும் ஒரு வருணத்தில் இருக்கவும் வேண்டும். பிராமணனின் சாந்தமும் ஞானமும் க்ஷத்திரியனின் தேஜஸும் வீரமும், வைசியனின் கவன மிகுதியும் செயல் நுட்பமும்: சூத்திரனின் பணிவும் சேவை மனப்பான்மையும் இன்று ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கவேண்டும். அப்போதுதான் அவன் முழுமலர்ச்சியும் எய்தமுடியும் என்று நாம் இன்று கருதுகிறோம். அதனாலேயே காந்தி ஸ்திதப் பிரக்ஞனுடைய லக்ஷணங்கள்கூட எல்லா மக்களுக்கும் இருக்கவேண்டுமென்ற ஒன்றைத்தம் அன்றாடப் பிரார்த்தனையில் சேர்த்துக் கொண்டார்.

காந்தியின் முழுப்பணியின் உள்ளார்ந்த தத்துவம்

ஒரு விஷயம், நாம் எல்லோரும் பகவானின் அம்சம் என்பதே கருத்து. ஒருவரும் தாழ்ந்தவர் இல்லை. உயர்ந்தோர் என்று ஒருவரும் இல்லை. ஆதலால் ஒருவரையும் அமிழ்த்தவேண்டாம். நம்மையும் பிறர் அமிழ்த்த விடுவதில்லை. குடும்பத்திலிருப்பதுபோலவே அன்பு சமூகத்திலும் இருக்கவேண்டும். இந்தப் பிறவியிலேயே கடவுளைத் தரிசிக்க வேண்டும். கடவுளாவது பூர்ணத்துவம். அந்தப்பூர்ணத்துவத்தை நாம் அடையவேண்டியுள்ளது. சமூகத்தையும் ஆனந்திக்கச் செய்யவேண்டிள்ளது. அதற்கு நம் வாழ்க்கை முழுதும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த மனோநிலையில் செய்யும் பணியால் மட்டுமே காந்தியின் காரியங்களை அறிவோடு இயைந்து செய்ய இயலும். இதுவே அவருடைய முழுப்பணியின் உள்ளார்ந்த தத்துவம். இன்றைய சூழ்நிலையில் அதை — அந்த சூட்சுமத்தை — பற்றிக்கொண்டு,

அதை மலர்விக்க வேண்டியுள்ளது. அதற்குப் பதிலாக அவருடைய ஸ்தூல வரலாற்றின் வாலைப்பிடித்து வைத்துக் கொண்டு இருந்தால் அவருக்கு அநீதி இழைத்தவர்கள் ஆவோம் என்பதோடு நமக்கு நாமே அநீதி இழைத்தவரும் ஆவோம்.

பல ஆண்டுகளுக்குமுன் சபர்மதி ஆசிரமத்தில் இருந்த பொழுது நிகழ்ந்த செய்தி. அப்போது ''வைஷ்ணவ ஜனதோ தேனே கஹியே'' என்ற பஜனை பாடப்படுவது வழக்கம். அதில் பக்திமான்களின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அவற்றில் எந்தெந்த இலக்கணங்கள் எந்த அளவு எனக்குப் பொருந்தும் என்பதைப் பற்றி மனப்பூர்வமாகச் சிந்தித்து வந்தேன். அதோடு பாபுவின் வாழ்க்கையும் என் கண்முன் இருந்தது. ஆதலால் அவருடைய வாழ்க்கையிலும் இந்த இலக்கணங்கள் எந்த வகையில் எந்த அளவு உண்டு என்பதைப் பற்றியும் சிந்தித்து வந்தேன். பிறர் மனதை ஆராய்வது கூடாது; தத்தம் மனத்தைச்சோதித்துப் பார்ப்பதே உயர்வுக்கு உதவும். ஆயினும் பாபு என் மனத்தினின்றும் வேறுபட்டவரல்லர்—ஒரு வேற்று மனிதரல்லர் என்ற காரணத்தால் அவரிடம் இந்தப் பண்புகள் எவ்வாறு அமைந்துள்ளன என்று பார்க்கும் உரிமை எனக்கு இருந்ததோ இல்லையோ என் மனத்துக்கும் மனமான உள் மனத்தின் ஆழத்தில் இவ்வொப்புமை பார்ப்பது நடந்து வந்தது. அவ்வாறு பார்த்ததில் ஏறத்தாழ எல்லா இலக்கணங்களும் பாபுவுக்கு இருப்பதாக என் மனத்துக்குத் தெரிந்தது. ஆனால் ''இராமநாமசு(ங்)தாளி லாகீ—ராம நாமத்திலேயே சமாதி கண்டார்'' என்ற இலக்கணம் மட்டும் சிறிதளவு குறைவென்று தோன்றிற்று.

கடைசி நாளின் மிகப்பெரிய விளக்கம்

1920 ஆம் ஆண்டு வாக்கில் நடந்த செய்தி இது. வர வர இராமநாமத்தில் தன்மயமாகிவிடும் அளவுக்கு வேகமாக அவர் முன்னேறி விட்டார். கடைசியிலே பார்த்தால் ஏதோ

முன்னூறு முன்னூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் துளசி தாசரும், துகாராமும் ஜபம் செய்திருந்தது போல ராமநாம கோஷத்திலேயே ஈடுபட்டிருந்தார் என்று தெரியலாயிற்று. இறுதியிலே இதே நாமத்தை உச்சரித்துக் கொண்டுதான் அவர் உயிர் விட்டார் தில்லியில் அவர் அக்காலத்தில் செய்த பிரார்த்தனைச்சொற்பொழிவுகள் செய்தித்தாள்களில் பிரசுரமாகும். கடைசி நாள் நிகழ்ந்த விளக்கவுரையாக அச்சாகி இருப்பது இரண்டேசொல்-''ஹேராம்'' அவருடைய விளக்கவுரைகள் யாவற்றினும் இவ்விளக்க உரையேதான் தலையாயது—மகத்துவம் மிக்கது.

ராமநாமத்தின் அழகில் அவர் பிறரையும் ஈடுபடுத்துவது உண்டு' அவர்களை அந்த '' அந்தர்முக '' வாழ்க்கையில் இறங்கச்செய்யவும் முயன்றுள்ளார் பாபு. அவரிடம் ஒரு தந்திரம் உண்டு உயர்ந்த சிந்தனை இருந்ததோடு அதைத் தன்னைப்பொறுத்த அளவில் நடத்தியும் வருவார் என்பதன்றி பிறரையும் அத்தகைய சொல்—செயல் ஒருமைப்பாட்டை பெறும் முயற்சியில் ஈடுபடச்செய்வார், கீதையின் தந்திரமும் இதுவே. ஏதோ சிறிதளவு தத்துவஞானத்தைச் சொல்லி உடன் செயல் செய்யத் தூண்டுகிறது. சாங்க்ய புத்தியைச் சொன்ன உடனேயே யோகபுத்தி வருகிறது. இந்தச் சிறப்பு பாபுவின் வாழ்க்கையிலும் காணக்கிடைக்கிறது. 'மந்திரம், மனனம் செய்யச்செய்ய வருவதே. ஆனால் அது ஒவ்வொரு அணுவிலும் சுரவேகத்தோடு பற்றிப்புகவேண்டும் ஆதலால் ' தந்திரம் ' தேவைப்படுகிறது. இவை இரண்டும் சேர்ந்தால் அது கைகூடி உருப்பெறுகிறது—சாக்ஷாத்காரம் பெற்று நிற்கிறது. இப்படியே பாபு ராம நாமத்தோடு அன்றாடக் காரியங்களையும் இணைத்து வைத்தார். அவர் எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பார் ராம நாமத்தைச் சொல்லி வந்தால் நோய் வராதென்று. நோய் இருந்தால் அது குணமாகும் என்பார். இவ்வாறு அவர் பக்தி அசை–விலா உறுதி பூண்டு நின்றது. இந்தப் பக்தியின் அழகை பலருக்கு பகிர்ந்தளிக்கவும் அவரால் முடிந்தது.

இத்தகு பெற்றி எங்கிருந்து வந்தது

முதுமையில் எல்லோருக்கும் சோர்வுண்டாகும் என்று சொல்கிறார்கள். ஆனால் பாபு விஷயம் அப்படி இல்லை. பாபுவின் வாழ்க்கையை மக்கள் கண்டுள்ளனர். நவகாளிக்கு அவர் போனபோது அவர் வயது என்ன? அப்படியிருந்தும் தாம் தனியே போவதாகச் சொன்னார். தன்னுடன் வந்தோரை எல்லாம் திருப்பி வேறு அனுப்பிவிட்டார். இந்தக் கிழவன் இந்த முதியவயதில் நவகாளியில் தன்னந்தனியாக வழிநடந்தார். அந்தத்தெம்பு எங்கிருந்து வந்தது? ஒன்றன் பின் ஒன்றாகப் புதுக்கற்பனைகள் அவருக்குத் தோன்றிக் கொண்டிருக்கும். அவையும் ஒன்றையொன்று ஒளியில் மிஞ்சுவன. அந்தக் கற்பனா சக்தி கடைசி வரைக்கும் ஜொலித்துக்கொண்டிருந்தது. கடைசியாக அவர் 'உயில்' சாசனம் எழுதினார். காங்கிரஸ் லோகசேவா சங்கமாக மாறவேண்டும் என்று அதில் குறிப்பிட்டார். அதுவெறும் ஒரு பூர்வாங்க வரைவுதான். அதிலும் கூட அவருடைய சீரிய கற்பனை தெரிகிறது.

இவ்வளவு உற்சாகம், இவ்வளவு வீரியம், இவ்வளவு ஊக்கம், சணந்தொறும் மலரும் கற்பனைத்தெம்பு ஆகியவை எங்கிருந்து வந்தன? கடவுள்பால் அவருக்குள்ள "ஊன்றிய கொள்கை"யிலிருந்தும், அவருடைய பிரம்மச் சரியையின் சாதனையிலிருந்துமே. இத்தனைக்கும் அவர் இல்லறத்திலிருந்தவர். வாழ்க்கையின் பிற்பகுதியில் தான் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டார். அவர் இறக்கும் வரை அந்த விரதத்தை நடத்தி வந்தார். என்னைப்போன்ற இளைஞர்களையும் அவ்விரதத்தைப் பழகச் செய்தார். காந்தியின் ஆலோசனையின் பேரில் இல்லறத்திலிருந்து கொண்டே காந்தி போல பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித் தவர்களை நூற்றுக்கணக்கில் நான் பார்த்திருக்கிறேன். திருமணமாகாத இளைஞர்களும் சன்னியாசிகளும் வானப் பிரஸ்தம் மேற்கொண்டோர் சிலரும் அவ்வாறே பிரம்மச்

சரியத்தை மேற்கொண்டனர். இல்லறத்திலும் பிரம்மச் சரியத்தைக் கடைப்பிடிக்க இயலும் என்பது காந்திஜி உலகுக்கு வழங்கிய ஒரு பெரும் கருத்து.

இவ்வாறு அவரால் பிறரை ஊக்குவிக்க முடிந்தது. சொல்வது எளிதுஎன்ற நிலை மட்டுமல்ல அவருடையது. அவர் "சொல்லியபடி செய்யும்" அரியதோர் மனிதராகவும் இருந்தார். தாம் சொல்வதை எல்லாம் தாமே தம் வாழ்க்கையில் செயலாக்குவார். அதோடு பிறரைக் கொண்டு செய்விப்பார். சத்தியம், அகிம்சை, பிரம்மச்சரியம் ஆகியவை சமூக சேவை, ஆக்கவேலைகள் ஆகியவற்றிற்குமே தேவை என முதன் முதலாகச் சொன்னவர் காந்தியே.

சேவாசரியை, சாந்திசரியை, பிரம்மச்சரியை :-

ஓர்லிகஞ்சிலுள்ள இயற்கை வைத்திய கேந்திரம் பிர பலமடைந்து வரத்தொடங்கிய காலம். பேச்சுத்தொடர் ஒன்று அமைத்து அத்தொடரில் காந்தியையும் பேச அழைத்தனர். இயற்கைச் கிகிச்சைப் பணியை மேற் கொள்ளும் விருப்பம் இருந்தால் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியத்தைக் காக்கவேண்டிவரும். அப்போதுதான் 'உங்கள் கையால் அப்பணி நிறைவுறும்" என்று காந்தி பேசினர். இப்படியே, மணிபாயி (சகோதரர்மணி) யிடமும் "கோசேவை செய்யுங்கள். ஆனால் அதற்கு நீங்கள் பிரம்மச்சரியத்தைக் காப்பாற்ற வேண்டியிருக்கும்" என்று ஒருகால் கூறினர். கோசேவைக்கு ஒரு லட்சிய பிரம்மச்சாரி தேவை என்றுவது அவன் வாயிலாக அன்றி கோசேவை நிகழாது என்றுவது இக்கணம் வரைக்கும் யாரும் சொன்னதாக நினைவில்லை.

தொண்டு செய்பவன் பிரம்மசாரியானல் அவனுக்கு வேறு தொல்லைகள் இரா என்ற காரணத்தால் அச்சேவையை அவன் செவ்வனே செய்வான் என்பது இதற்குப் பொருள்

என்று சகோதரர் மணி நினைத்துக்கொண்டார். "இதன் விஞ்ஞான பூர்வமான பொருளை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்கிறேன்" என்று நான் குறிக்கிட்டேன் "பசுவையும் நம் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினராகக் கொண்டாடு கிறோம். ஜனத்தொகை ஓர் எல்லைக்குள் நில்லாது வளர்ந்து கொண்டே போனால், பிறகு பசுவுக்கும் மனிதர்களுக்கு மிடையே போட்டியும் பூசலும் பிறந்தால் வாழ்வது யார்? இந்நிலையில் மனிதன் பசுவையே கொன்று தின்பான்! இப்படிப் பசுவை அடித்து உண்பதினின்று தப்பவும் வேண்டும்; கோசேவை செய்யவும் வேண்டும் என்றிருந்தால் மனிதன் தன்னடக்கத்தின் தேவையை உணர்ந்து அதைப் பயின்று, இன வளர்ச்சியை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த வகைக்குத்தான் பிரம்மசரியம்" என்று நான் சகோதரர் மணிக்கு விஷயத்தை விளக்கிச் சொன்னேன்.

பிரம்மச்சரியம் அப்படி வெறும் தன்மறுப்புச் செய்கிற— எதிர்மறை-விஷயம் அன்று, விஷய வாசனையினின்றும் விலகி நிற்பதென்பதோடு அது நின்று விடுவதில்லை. அதற்கு நேர்மாறாக அது உணர்ச்சியை உள்ளிட்ட, முழு மனோ பாவத்தைத் தொடுகிற விஷயம். பிரம்மசரியத்தின் லட்சியம் மிகப் பெரிது. பிரம்மத்தில் லயமாகி விடுவது என்ற கருத்து அதில் உண்டு. இந்தப் பரந்த லட்சியத்தில் சிரத்தை வைத்து அதற்காகச் செய்யப்படுவது அது சொல், செயல். சித்தம் இவற்றில் அடக்கம் பேணி நடத்தல், இவ்வழியில் சிந்திக்கிற சித்த சக்தியை இந்த லட்சியத்திற்காகவே பயன்படுத்தல்— ஆகியவற்றிற்குப் பிரம்மசரியம் என்று பெயர். பிரம்மத்தை அடையவேண்டி கைக்கொள்ளப்படுகிற சரியையே பிரம்மச்சரியம்.

இந்தக் கண்கொண்டு பார்க்கும் போது பீஷ்மரின் பிரம்மசரியத்தை பிரம்மசரியமாகக் கொள்வதற்கில்லை.

அது 'பித்ருசர்யம்' — தன் தந்தைக்காக அவர் நோற்ற பிரம்மசரியம். இப்படியே ஆரம்பத்தில் பாபு நோற்றது பிரம்மசரியமாக இருக்கவில்லை—அது சாந்தி சரியை ஆயிற்று 1907 ஆம் ஆண்டுவாக்கில் ஜுலுப் போர் நடந்தபோது அவர் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. ஒருபுறம் இத்கைய பணிசெய்வதும், மற்றொருபுறம் குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டு போவதும் சரியன்று என அவருக்குத் தோன்றிற்று. அதிலிருந்து அவருக்குத் தன்னடக்கத்துக்கான ஊக்கம் பிறந்ததினால் அது சாந்திசரியை மட்டும் தானாயிற்று. பிறகு அது மெல்ல மெல்ல பிரம்மசரியமாக விளைந்தது என்பது என் கருத்து. அவர் தம் முப்பது முப்பத்திரண்டாவது வயதில் பிரம்மசரிய விரதத்தை மேற் கொண்டு கடைசிவரையில் அதை அனுஷ்டித்து வந்தார். அவருடைய கடவுட்பற்று வளர்ந்தது போலவும், ராம நாமத்தின் பெற்றி தீவிரமடைந்ததை ஒட்டியும் அது உண்மையிலேயே பிரம்மசரியமாக உருப்பெற்றது.

சில ஆன்மிக விஷயங்களைச் சிக்கறுத்து விடவேண்டியதுதான்

பாபுவைப்போலவே பிறர் விஷயத்திலும் பல ஆன்மீகப் பிரச்சினைகள் அவர்கள் முன் இருந்திருக்கின்றன என்பது கவனத்தில் படும். அவற்றில் தெளிவு கண்டதன்றி அவர்கள் மேலும் ஓர் அடியெடுத்து வைக்கவில்லை. ஏசு முப்பத்தி மூன்று ஆண்டுகள் வாழ்ந்தார். அதற்கிடையில் அவர் மூன்றே ஆண்டுகள் நாட்டைச் சுற்றிவந்தார். அதைப் பற்றிய செய்தி நமக்குக் கிடைக்கிறது. அதற்கு முன்னைய முப்பதாண்டுக் காலம் அவர் என்ன செய்தார் என்பதைப் பற்றி யாரும் அறியார். அதற்கு முன் அவர் தச்சுவேலை செய்து கொண்டிருந்தார் என்கின்றனர். ஆனால் அவர் அந்தக் காலத்தில் ஓர் உபவாசம் இருந்திருக்கிறார். சைத்தானோடு அவருக்கு ஒரு மோதல் உண்டாயிற்று. இவ்விரண்டு செய்திகளைத் தவிர மூன்றாவது செய்தி ஒன்றும் நாம் அறிகிறோம் மில்லை. அவர் திபெத் வரை வந்தார் என்று கூட இப்போது

சொல்கிறுர்கள். இங்கே கொஞ்சம் நான் சொல்ல வேண்டியதுண்டு. சில அடிப்படை ஆன்மீக விஷயங்களில் தெளிவு கண்ட பிறகே அவர் தம் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு இருக்கிறுர். "லவ்தை நெய்பர் அஸ்தை ஸெல்ஃப்" — 'உன் அண்டை வீட்டுக்காரனை நீ உன்னை நேசிக்குமளவு நேசிப்பாயாக! இந்தச் சொல் உள்ளார்ந்த அனுபவம் இன்றிப் பேசப்படவில்லை. அதுபோலவே பகைவன்பாலும் அன்பு செலுத்தச் சொன்ன அந்தச்சொல்லின் அழுத்தம் உள்ளார்ந்த அனுபவம் இன்றிப் பேசப்பட்டதாகத் தோன்றவில்லை.

அதுபோலவே புத்தருக்கு யாகத்தில் இம்சை உண்டாகலாகாது என்ற பிரச்சனை உண்டாயிற்று. அவரும் அலைந்து திரிந்தார். இதைப்பற்றிய செய்தி கிடைக்கிறது. ஆனுல் அவர் தவம் செய்தபோது என்னென்ன செய்தார் என்பது பற்றி ஒன்றும் அறிகிறேம் இல்லை. அவர் எத்தனை மண்டலங்களுக்குச் சென்றுர், தியானத்தின் எத்தனை வகைககள் அவருக்குச் சித்தித்தன என்பதெல்லாம் நமக்குத் தெரியவில்லை. இவையெல்லாவற்றின் பரிணுமமாக அவருக்குச் சித்தசாந்தி கிட்டிற்று என்பதும், உலகத்தில் நட்புறவு, அன்பு இவ்விரண்டுமே மிகப்பெரிய விஷயங்கள் என்பதைப்பற்றி அசைக்கமுடியாத தெளிவுபெற்றுர் என்பதுமெல்லாம் எவ்வாறு நிகழ்ந்தன என்பதை நாம் அறியோம்.

அதுபோலவே பாபுவின் சுயசரிதையைப் படிக்கும்போது ஏதோ போகிறபோக்கில் சில குறிப்புக்கள் கிடைக்கின்றன. ஸ்ரீமத் இராமச்சந்திரமூர்த்தியோடு அவர் சர்ச்சை செய்திருக்கிறுர், அதுவும் நமக்குத் தெரிந்திருக்கிறது. ஆனுல் இதைத்தவிர அவர்மனதில் சில ஆன்மீக சந்தேகங்கள் இருந்தன. அந்த ஐயப்பாடுகள் அகலாதவரை — தனக்கு "மிஸ்டிக் எக்ஸ்பீரியன்ஸ்" என்று அவர் குறிப்பிடுகிற— உள்ளார்ந்த அனுபூதி — ஏற்படாதவரைத் தம்பணியில் அவர் இறங்கினவரல்லர்.

கடவுள் அனுபவம்

காந்தி சொல்வது — " ட்ரூத் இஸ் காஃட் " — "சத்தியமே கடவுள்" என்பதல்லவா. அதை ஆதாரமாகக் கொண்டு மக்கள் இது விஞ்ஞானத்தின் செய்தி, பேச்சு என்று கருதுகின்றனர். ஆனால் எல்லோரும் கருதுவதுபோல இது விஞ்ஞானத்தின் பேச்சேயன்று. இதுபற்றி நானே அவருடன் சர்ச்சை செய்திருக்கிறேன். கான் அப்துல் கபார் கானின் உதவிக்குப் போகிற விஷயம் பேசப்பட்டிருந்தது. அப்போது ஒருகால் திரும்பி வராமலே போகக்கூடும் என்று பாபுவுக்குத் தோன்றிற்று. ஆதலால் என்னை இவ்விஷயம் பற்றிச் சர்ச்சைக்குக் கூப்பிட்டனுப்பி இருந்தார். ஏறத் தாழப் பதினைந்து நாட்கள் வாதப்பிரதிவாதம் நடந் திருந்தது. இரண்டு மூன்று நாட்கள் நான் கேள்வி கேட்பதும் அவர் பதில் சொல்வதுமாகக் கடந்தன. பிறகு ஒரு நாள் நான் அவரைக் கடவுள் அனுபவ விஷயமாக சில கேள்விகளைக் கேட்டேவிட்டேன். நான் சொன்னேன் " தாங்கள் சத்தியமே கடவுள் என்கிறீர்கள் என்பதுசரி: ஆனால் உபவாசத்தினத்தன்று எனக்கு உள்ளி ருந்து ஒலி கேட்கிறது என்று பேசியிருக்கிறீர்களே அது என்ன? அதில் ஏதேனும் ரகசியம், மறைபொருள் உண்டா? அதற்கு அவர் பதில் தந்தார் "அதென்னவோ உண்மை அப்படித்தான்! இது முற்றும் ஒரு சாதாரண விஷயம் அன்று. எனக்கு மிக மிகத் தெளிவாக அந்த ஒலி கேட்டது. மனிதர்கள் பேசுவது செவிவாயிலாகக் கேட்டுணர்வது. போலவே அக்குரலைக் கேட்டேன். நான் (பாபு அவர்கள்) செய்ய வேண்டியது ஏதாவதுண்டா? என்று வினவினேன் அதற்கு அவர் உபவாசமிருக்கவேண்டும் என்று பதில் கூறினர். மீண்டும் நான் வினவினேன் எவ்வளவு உபவாசம் செய்யவேண்டும்? என்று 'இருபத்தொருநாள்' என்று பதில் வந்தது. அதாவது, ஒருவர் கேள்வி கேட்பவர், மற்றவர் பதில் சொல்பவர். பார்க்கப் போனல் இப்படித்தான்

கிருஷ்ணார்ஜுனஸம்வதாமுமே நிகழ்ந்தது. பாபு உண்மை பேசுபவர் ஆதலால் ஏதோ பிரமை என்பதற்கு இடமே இல்லை. சாஷாத் கடவுளே என்னிடம் பேசினார் என்றார். ஆதலால் நான் மீண்டும் வினவினேன் — கடவுளுக்கு ஏதேனும் உருவம் இருத்தல் சாத்தியமா ?—என்று.

கேட்டல் இயலுமாயின் தரிசனமும் இயல்வதே

அவர் சொன்னார். "உருவம் இருத்தல் இயலாதென்று நினைக்கிறேன். ஆனால் என் செவியால் கேட்க முடிந்திருக்கிறது"

நான் சொன்னேன் "உருவம் நிலையற்றது என்றால் அவ்வொலியும் நிலையில்லாததே. இப்படி இருந்தும் ஒலியைக் கேட்க முடிகிறதென்றால் உருவம் ஏன் தெரியாமல் போக வேண்டும்? பிறகு உலகத்தில் பிறருக்கு ஏற்பட்டுள்ள இதுபோன்ற அனுபூதிகளை (உள்ளார்ந்த அனுபவங்களை)ப் பற்றியும் அவருக்கு எடுத்துச் சொன்னேன். என் சொந்த அனுபவங்கள் இவற்றையும் எடுத்துச் சொன்னேன். கடவுள் தரிசனம் ஏன் உண்டாகவில்லை என்பதைப் பற்றியும் பேசினேன். பிறகு கேட்டேன் "உங்கள் மனதுக்குள்ளேயே கேள்வி பதில் நிகழ்ந்திருக்கிறதல்லவா? அவற்றிற்குமே கடவுள் தொடர்புண்டுதானே ?

அவர் சொன்னார் "ஆம் அவற்றுக்கும் கடவுட் சம்பந்தம் உண்டு. ஆனால் இங்கே ஒலியே செவிக்குப் புலனாயிற்று. தரிசனம் என்று ஒன்றும் உண்டாகவில்லை. நான் உருவத்தை காணவில்லை. ஆனால் அவர் ஒலியைக் கேட்டேன். அவருக்கு உருவம் இருப்பதாக எனக்கு அனுபவம் உண்டாகவில்லை. அதுபோலவே அவருடைய தரிசனம் கண்கூடாக நிகழவில்லை. ஆனால் நிகழலாம் என்பது சரி."

இப்படி, கேட்டல் இயலுமாயின் காணலும் இயல்வதே என்று பாபு ஒப்புக் கொண்டார். சிரவணானுபூதி (செவிக் கொளல் அனுபவம்) உண்டாகிறவர்களுக்கு அது போலவே

தரிசனமும் உண்டாவது சாத்தியம். கடவுள் தரிசனம் உண்டாதல் சாக்ஷாத்காரம் உண்டாதல், ஸ்பரிசம் மட்டும் உண்டாதல் என்று பலநிலைகள் உள்ளவற்றை நான் தெளிவுபடுத்தினேன். இவை வாயிலாக அன்றி வேறு வழியாக விகாரங்கள் (உணர்ச்சி கொந்தளிப்பு) அழிவதில்லை, தீர்வதில்லை. இப்படி குறிப்பிட்ட ஓர் அனுபூதியை பிரமை என்றும், மித்யை என்றும் தள்ளுவதற்கில்லை. கடவுள் எந்த அனுபவ பூமியில் அல்லது மண்டலத்தில் (பூமிகா) ஒலியற்றவராய் இருக்கிறாரோ அதே மண்டலத்தில் அருவமாகவும் இருக்கிறார். அவர் ஒலியுள்ளவராக இருக்கும் அனுபவ பூமியில் அவர் உருவம் உடையவருமே ஆவர்.

பாபுவை ஐயம் திரிபின்றி நுட்பமாக இனங்கண்டு கொள்ள வேண்டும்

இது நிற்க இவ்வளவும் உங்களுக்கு விளக்கிச் சொல்வதற்கு ஒரு காரணமுண்டு. நீங்கள் மேலோட்டமாகப் பணி செய்து வருகிறீர்கள். வாழ்க்கை விஷயத்தில் ஆழமாக இறங்கவில்லை. இவ்விரு குறைகளின் மீது உங்கள் கவனத்தை சுண்டி இழுக்கத்தான் இதைக் கூறுகிறேன். பாபுவையும் நீங்கள் மேலோட்டமாகத்தான் அறிந்திருக்கிறீர்கள். அவர் செய்த வெளிப்படையான செயல்களுக்கே பெருமை அளித்து வந்திருக்கிறீர்கள். தம் பொழுதையெல்லாம். அரசியலிலேயே அவர் கழித்ததையும் ஆக்கப்பணிகளில் மூழ்கி இருந்ததையும் தான் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இவையெல்லாம் உண்மையாகவே அவரோடு பழகியதாகாது. பாபு ஏதோ சிலவற்றை உங்கள்முன் வைத்திருப்பது முற்றும் ஆன்மீக வாழ்க்கையைச் சேர்ந்தவையே. வேறொரு வாழ்க்கை மண்டலத்தும் அவை வருவனவல்ல. ஆதலால் 'பாபுவைச் சரியாக இனம் கண்டுகொள்ள, அவருடைய தனித்துவத்தில்

உள்ள இந்த ஆன்மீக மண்டலத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும். அடிப்படையில் அவரோடு ஈடுபாடு கொள்ள விரும்பினீர்களானுல் அவருடைய இந்த ஆத்மீக விருப்பத்தில் தான் எல்லோரும் ஈடுபடவேண்டும். எளிய, சாமானிய மக்கள் மொழியிலேயே சொல்லப்போனுல் நீங்கள் கொள்ள வேண்டியது 'ராம நாம' த்தின் மீது விருப்பம்.

சில தகவல்கள்

கேள்வி;– “அற்பாத்துமாக்களை அளக்கச் சவுகரியமாய் சத்தியத்தின் கெஜக்கோலைக் குறுக்கி விடாதீர்கள்” என்று காந்தி சொல்லி இருக்கிருரே. இதன் பொருள் என்ன?

பதில் :– காந்தியானுலும் சரி வேறு எந்த மகானுனுலும்சரி, அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை வைத்துக் கொண்டு அவர்கள் வாழ்க்கையே சத்தியத்தின் முழுஅளவு என்று கொண்டுவிடாதீர்கள் என்பது இதன் சாரம். எவ்வளவு பெரிய மகாத்மாவாக இருந்தாலும் அவர் வாழ்க்கையில் சத்தியத்தின் முழுப்பிரகாசமும் உண்டாவதியலாது. பிரகாசத்தின் ஓர் அம்சம் அதில் காணக் கிடைப்பதே சாத்தியம். ஆதலால், ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையில் கிடைக்கும் தரிசனம் ஓர் “அம்ச”தரிசனம் மட்டுமே என்றுணர வேண்டும். அவ்வாறன்றி, பகுதியை முழுதென்று நினைத்து அமைவோம் ஆயின், முழுவதும் வெகுதூரத்துக்குப் போய்விடும்—அதாவது அம்முழுமையை உணர இயலாமற் போகும். மகாத்மா சொல்லியிருக்கிருர் என்பதால் அதையே பிரமாணம் என்று நம்பிக்கொண்டிருக்க வேண்டாம். நீங்களே சொந்தமாகச் சிந்தியுங்கள்; சிந்தித்து முடிவு செய்யுங்கள்.

கேள்வி :- ஆன்மநேயமும், கடவுளோடு ஐக்கியமும் விரும்புகிறவன் தனிமை பேணவேண்டும். அதாவது உலகுக்கெல்லாம் அன்பு காட்டுபவனுக இருக்கவேண்டும் எனக் காந்தி சொன்னுர். மறுபக்கத்தில் நல்லோர் கூட்டுறவும்—சத்ஸங்கம்—அதாவது நல்ல நூல்களோடு உறவும் சாதனைக்கு உதவும் என்றும் சொல்கிருர். இவற்றில் எது உண்மை ?

பாபு சொன்ன "ஏகாந்தமாக இருக்கவேண்டும் அல்லது முழு உலகோடும் நட்புறவு பேண வேண்டும்' என்ற வாக்கியத்துக்கு 'ஆன்மீகத்துறையில் ஒருவருக்கு நண்பனே இருக்கலாகாது என்பதன்று பொருள். ஆசைபற்று காரணமாக யாரோ ஒரு தனிநபரிடம் நட்பு வைக்கிறவன் விசுவத்தின்பால் செலுத்தும் அன்புக்கு ஊறு விளைக்கிறான். விசுவத்தின்பால் அன்பு என்பதன் பொருள் "பகையின்மை" யாகும். ஒத்துவாழும் மனிதர்களோடு ஆன்மீக உள்முக உறவு உண்டாகத்தான் வேண்டும். அது ஏற்படவில்லையென்றால் அந்த அளவுக்கு நாம் குறையுடையவர்களாகிறோம். நாம் ஒருவரோடொருவர் அன்பினால் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதுவுமே நம் சக்தியைப் பெருக்க வல்லதுதான்.

பவனாரில் பெண்களுக்கு "பிரம்ம வித்தியா மந்திரம்" என்ற நிறுவனம் ஒன்று நடக்கிறது. அதில் ஒரு சகோதரி தன் சொந்த ஊர்ப்பகுதியில் சர்வோதயப் பணி செய்யத் திரும்பிப் போனாள். அப்போது பிரம்ம வித்தியா மந்திரத்திலுள்ள மற்றொரு பெண் எனக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதினாள். "நான் அந்தச் சகோதரியின் பிரிவால் மிகவும் வருந்துகிறேன். இது எவ்வளவு தூரம் சரி என்று எனக்குத் தெரியவில்லை. பிரம்மவித்தைக்கு இது எப்படிப் பொருந்தும்?" அவளுக்கு, "இதுவேதான் பிரம்மவித்யை" என்று பதில் எழுதினேன். "ஹேஅரஹ்ரஹ் தோமாரி விரஹ புவனே புவனே ராஜேஹே"—பகவானே இந்த உலகில் நீ எங்கே மிகவும் ஒளி பொருந்தி விளங்குகிறாய்? 'நீ விசுவரூபம் எடுத்துவிட்ட பிறகு உன்னுடைய பிரிவாற்றாமையே மனக் கண்முன் வந்து நிற்கிறது. விசுவத்தை அல்ல, உன் பிரிவாற்றாமையையே இரவும் பகலும் பார்த்துக்கொண்டிருக்கிறேன்! பகவான் சிருஷ்டியில் ஒளிந்துகொண்டிருக்கிறான். 'கடவுள் என்று ஒருவன் இல்லவே இல்லை' என்று சொல்லத்தானும் சிலர் கிளம்பும் அளவுக்குத் தந்திரம் செய்து அவன் ஒளிந்து கொண்டுவிட்டான். இதுவே பகவானைப் பிரிந்த வருத்தத்தின்

பெருமை. அதனுல்தான் அப்பெண்ணுக்கு, 'உன் பிரிவாற்ருமையே பிரம்மவித்தைதான், உனக்குச் சற்றுமே ஸ்தூல சம்பந்தம் இல்லாத ஒரு சகோதரியின் பிரிவுக்கு ஆற்ருது நீ துன்பப்படுகிருய். நீ அனுபவிக்கிற இந்தப் பிரிவாற்ருமைக்குத்தான் 'பக்தி' என்று பெயர். ஆதலால் நாம் எல்லோரும் ஒருவரோடொருவர் காதலால் கட்டுண்டு போகவேண்டும். காரணமில்லாமல் பிரிவாற்ருமைத் துன்பம் அனுபவிக்க வேண்டும்'' என்றும் எழுதினேன்.

இப்படி ஐக்யபாவம் அனுபவிப்பதில்தான் பிரம்மவித்தை ஒளிந்துகொண்டிருக்கிறது. ஆன்மீக நட்புறவு—ஆன்மநேய ஒருமைப்பாடு—எல்லோரும் சாதிக்க இயன்றதுவே. ஆனுல் தனியொருவர் பழக்கமும், அதன் வாயிலாக உண்டாகும் நட்புறவும், அதுபோலவே அது பற்றிய கர்த்தவ்ய பாவனையும் (தன்முனைப்பும்) ஓர் எல்லைக்குள்தான் நிற்க இயலும்.

கேள்வி :- '' ஆர்கனேஸேஷன் இஸ் தி டெஸ்ட் அஃப் நான்-வயலன்ஸ்'' —தொகுத்த அமைப்பே (கட்டமைப்பே) அகிம்சையின் உரைகல் என்ற ஒரு வாக்கியத்தைக் காந்தி அடிக்கடி சொல்வது உண்டு. இதன் பொருளை விளக்கிக் கூறுவீர்களா ?

பதில்:- இம்சையின் ஸ்தாபன ரீதியான கட்டமைப்பால் இம்சை சார்ந்த திறமை வெளிப்படுகிறது. இவர்கள் வெகு திறமையான அமைப்புக்களை உருவாக்குகின்றனர். அவற்றில் சட்டதிட்டம், சட்டரீதியான நிர்ப்பந்தங்கள், ஆலோசனைகள், உத்தரவுகள் முதலியன எல்லாம் உள்ளன. அவற்றின் கட்டமைப்பு திட்டமிட்ட வகையில் நடக்கின்றன. இப்படியிருந்தும் இம்சையில் பாதுகாப்புச் சக்தி இல்லை—இம்சை என்ருல் அடிதடி, வெட்டுக்குத்து முதலியன. அடிதடி, வெட்டுக்குத்து ஆகியவற்றில் இல்லாத பாதுகாப்புச் சக்தி கட்டமைப்பினுல் உண்டாகிறது. இம்சையில் கட்டமைப்பின் வலிமைதான் எத்தனை! ஐம்பது பேர் தேவையென்று

தோன்றினால் அங்கே ஐம்பது பேரை மட்டும் அனுப்புகின்றனர். இவர்கள் வரி வாங்குகிறார்கள். வீரர்களையும் பயிற்றுவிக்கின்றனர். வேறிடங்களில் கிடைக்காத அளவு சம்பளம் படைவீரர்களுக்குத் தருகின்றனர். அவர்களுக்கு இதர சாதனங்களும் சலுகைகளும் தருகின்றனர். இடைக் காலத்தில் படையிலிருந்தோ, போருக்கிடையிலோ ஓடிப் போகவும் முடியாது. ஓடிப்போகிறவர்களைப் பிடித்து ராணுவ நீதிமன்றங்களின் முன்நிறுத்தி வழக்கு நடத்தி மரண தண்டனை வாங்கிக் கொடுத்து விடுவார்கள். அதாவது ஒன்று அவர்கள் முன்னேறிச் சாகவேண்டும் அல்லது பின்வாங்கி மரிக்கவேண்டும். இவ்வாறு அவர்களுடைய கட்டமைப்பு தரமாக அமைந்துள்ளது. ஆதலால் அடிப் படையில் இம்சைக்கு இயல்பாக இல்லாத ஒரு பாதுகாப் பாற்றல் கட்டமைப்பு வடிவில் அதற்குள் புகுந்து கொள்கிறது.

அகிம்சையில் இதெல்லாம் செய்வது இயலாது அகிம்சையில் உத்தரவிடுகிற சங்கதியே இல்லை, தண்டனை இல்லை; பொருளீட்டும் ஆசையில்லை; புகழாசையும் கூட இல்லை. இறந்தபிறகு சுவர்க்கம் புகலாம் என்ற ஆறுதல் இல்லை. இவற்றைப் பற்றிய பேச்சே இல்லை. இப்படியெல்லாமிருந்தும் இம்சைக்கு இல்லாத ஒரு சிறந்த கட்டுமானம் அகிம்சையில் உண்டாகிறது. இம்சையின் கட்டுக்கோப்புக்குச் சரிசமமாக அகிம்சைக்கும் கட்டுக்கோப்பு அமைக்கலாம். அவ்வளவு மட்டுமென்ன? அதைவிட நாலு விரல் மேலோங்கியதாகவும் நல்விளைவுகள் உண்டாக்குவதாகவும் கட்டமைப்பது சாத்தியமே. அப்படிக் கைவந்தால்தான் அது அகிம்சையின் உயர்வுக்கு உரைகல்லாகக் கொள்ளத்தகும்.

உத்தரவு இடுவதென்பதில்லை; தண்டனையின் அச்சமும் இல்லை. இந்நிலையிலும் அகிம்சையில் மேலும் மிகுதியாக நல் விளைவு உண்டாகுமானால் அகிம்சையே சிறந்தது என்று

பொருள்படும். நீங்கள் எனக்கு ஆலோசனை கூறுகிறீர்கள்; உத்தரவு அன்று. அதன் விளைவு, உத்தரவால் விளைவதைவிட அதிகம் என்ருல் அவ்வாலோசனைக்குச் சிறப்பு அதிகமாகிறதல்லவா? அதிகாரத்தில் பிறக்கின்ற ஆணைக்கு மக்கள் கீழ்ப்படிகின்றனர் எனினும் உணர்ச்சிபூர்வமாக அவர்கள் கீழ்ப்படிவதில்லை. அன்போடியைந்த ஆலோசனைக்குத்தான் அத்தகைய விளைவுண்டு. இம்சை சார்ந்த ஆணை விஷயம் இப்படியன்று. உங்கள் உணர்ச்சிகளும் மனமும் வாக்கும் தூய்மையாக இருந்தால் பணிவுடன் தருகிற ஆலோசனையும் வெகு சகஜமாக எதிரிலிருப்பவன் மனதில் இறங்கும், பிரவேசிக்கும். அவனுக்கு மேலும் ஊக்கம் பிறக்கும்.

இப்படியாக அகிம்சையில் உள்ள யுக்திகள் இம்சையை விடச் சிறந்து நிற்பது சாத்தியமாகிறது. கட்டமைக்கும் போது இவையெல்லாம் செய்து காட்டப்படுமாஞல் அவை அகிம்சைக்கு உரைகல் ஆகும். இது எப்படி இயலும்?

இதைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க எனக்கு ஒரு கருத்துத் தோன்றுகிறது. ஒருவன் உத்தரவுக்கு வசப்படமாட்டான் என்ருல் இனிய பேச்சிஞல் அவனோடு ஒன்றுபட்டுவிட வேண்டும், சர்ச்சை செய்ய வேண்டும். இதன்மீது உண்டாகிற முடிவு ஆணையால் உண்டாகிறதைவிட மதிக்கத்தக்கதாக, சிறந்ததாக அமையவேண்டும். இதெப்படிச் சாத்தியம் எனக் கருதுங்கால் எனக்கு ஏசுவின் வாக்கியம் நினைவுக்கு வந்தது. ‘எக்ரி உயித் தை அம்ஃட்வர்ஸரி க்விக்லி’’—கருத்து வேறுபாடு உள்ளவனோடு சட்டுப்புட்டென்று ஒத்துப் போய்விடு என்ருர் அவர். இதில் ‘‘எதிரி’’யை இணைத்துக்கொள்கிற, அவன் மனத்தை அசைக்கிற தந்திரம்—சதுரப்பாடு உள்ளது. இது அகிம்சையால் சாதிப்பதாக வேண்டும்.

பாபுவின் மேற்கண்ட வாக்கியத்தின் பொருளை உணர நான் முயன்றிருக்கிறேன். அதிலிருந்தே எனக்குக் கீழ்கண்ட பொருள் விளங்கிற்று—அதாவது எனக்கு அது ஒரு செய்தியை

உணர்த்துகிறது. அகிம்சையில் ஒருவன் மற்றவனை எவ்வகையிலும் நிர்ப்பந்திக்கிறதில்லை. அது உண்மையாயின் ஒருவன் கட்டமைப்புக்கு வசப்படாதவன்கூட அகிம்சைக்குச் சகஜமாகவே வசப்படுவான். இப்படிக் கட்டமைத்த சேவை சாதாரணமாகக் கட்டமைத்துச் செய்யும் ராணுவச் சேவையினும் சிறந்திருக்கும்.

கட்டமைப்பு இருவகை. ஒன்று கட்டொழுங்கின்மீது அமைந்தது; மற்றொன்று அன்பின் வழியது, அன்பு வழிக் கட்டமைப்பு இயல்பாக நிகழ்வது. கட்டொழுங்கின்படி அமையும் கட்டமைப்பு அத்தகையதன்று. அது முயன்று உருவாக்கப்படுவது; செயற்கைத் தன்மை உடையது. இங்கே எழும் பிரச்சினை, கட்டொழுங்கினால் சமூகமாக இயங்கிப் பணி செய்வதுபோல, அன்பு வழியிலும் சமூகமாக இயங்கவும் செயல்படவும் முடியுமா என்பதே. அதில்தான் அன்பைச் சோதித்துப் பார்க்கும் உரைகல் இருக்கிறது. கூட்டமாகப் பணிசெய்யும் நிலையை மேற்கொண்டவனுக்கு முக்கிய ஆதாரம் அன்பேயாதல் வேண்டும். அந்நிலையில் அதில் தலைவன் ஒருவனால் உண்டாகும் வலிமையைவிட மிகுந்த வலிமை இருக்கும்.

இதுவே அகிம்சைக்கு உரைகல்—அதாவது, நம்மிடம் எவ்வளவு தூரம் ஆன்மார்த்தமான—மனமார்ந்த—அகிம்சை உள்ளது என்பதற்கு ஓர் உரைகல்.

கேள்வி :- காந்தி எப்போதும் 'சத்தியம், அகிம்சை' என்றே சொல்வார். அதற்குப்பதிலாகத் தாங்கள் சத்தியம், அன்பு, கருணை என்ற சொற்களை ஏன் பயன்படுத்தி வருகிறீர்கள் ?

பதில்:- இதற்குச்சற்று விரிவான விளக்கம் தேவைப்படும். அகிம்சை என்ற சொல்லுக்குச் சாதாரணமான பொருள் ''யாருக்கும் துன்பம் விளைக்காமை'' என்பது. பாபு இந்தச்

சொல்லை இந்தப் பொருளில் கையாளவில்லை. ஆத்மாவின் ஒருகுணம் என்ற அளவில் வருணிப்பதற்கு இச்சொல்லைக் கையாண்டார். ஆன்மகுணங்களை "உடன்பாட்டு முறை"யில் சொல்வதைவிட எதிர்மறையாகச் சொல்வது எளிது. எடுத்துக்காட்டாக "அஸ்தேயம், அபரிக்கிரகம்" முதலியன. உபகாரம் செய்தலை வருணிப்பதாயின் அதில் ஆணவம் புகுந்துகொள்ளும் வாய்ப்புண்டாகும் என்று கருதி கூடவே, "செய்தேன் என்ற தன்முனைப்புக் கொள்ளாமல்" என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது "பரதுக்க உபகார கரேதோயே, மனஅபிமான ந ஆணேரே" என்று வருணனை அமைகிறது—"பிறர் துன்பத்தில் உதவுவதாயினும் மனத்தில் அபிமானம் கொள்ளாதே" என்று அதைவிட 'அகிம்சை என்ற சொல் எளிதாய் அமைந்தது. ஆனால் இப்போது' ஆன்மாவின் குணத்தைத் தெளிவாக வருணிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று தோன்றியதால் நான் 'அன்பு, கருணை' என்ற சொற்களை பயன்படுத்துகிறேன். அது "உடன்பாட்டு முறை" வருணனையாகும்.

கேள்வி :- ஆனாலும் பிரேமை, (அன்பு) கருணை என்ற இரண்டுக்கும் சொல்லத்தக்க வேற்றுமை என்ன என்று புரியவில்லை.

பதில் :- பிறர் இன்பத்தில் நாமும் இன்புறுவது பிரேமை, அன்பு. பிறர் துன்பத்தில் நாமும் துன்புறுவது கருணை. இரண்டும் சேர்ந்துதான் குணம் முற்றும் மலர்கிறது.

இதுவுமன்றி, சமயசமரசம் என்ற பார்வையும் இந்தச் சொல்லில் அடங்கிவிடுகிறது. இஸ்லாம் விஷயத்தில் மக்களுக்கு வேறு கருத்திருக்கலாம். இங்கு முக்கியமாக வற்புறுத்தப்படுவன, தயையும், கருணையும். கிறிஸ்தவச் சமயத்தின் முனைப்பான விசாரம் அன்பு பற்றியது. இந்து சமயமும் ஜைன (சமண) சமயமும், சத்தியத்தை முக்கிய மான விசார விஷயமாகக் கொண்டது.

பாரதநாட்டு வரலாற்றை வைத்துப் பார்த்தால் இந்தச் சொற்களில் மூவர் பெருந்தகையாளர்களின் சிந்தனையும் வந்துவிடுகிறது. ஸ்ரீராமச்சந்திரனை சத்தியத்தின் அவதாரமாகவும், ஸ்ரீகிருஷ்ணனை அன்பின் அவதாரமாகவும், புத்தரைக் கருணையின் அவதாரமாகவும் போற்றுகிறோம்.

கேள்வி :- 'சத்தியமே கடவுள்' என்று காந்தி சொல்லி வந்தார். இதன் பொருள் என்ன?

இது மிகப்பெரிய விஷயம். சத்தியம் கடவுள் அல்ல என்று நினைத்துவிட்டாலுமே சத்தியம் சத்தியமாகவாவது இருக்கிறதே! வாழ்க்கைக்கு சத்தியம் மிகமிகத் தேவை. சத்தியம் இன்றி வாழ்க்கை வற்றிச் சுருங்கிவிடும். சத்தியம் என்று கண்டுகொண்டதை வாழ்க்கையில் அனுசரிக்க வேண்டும். தவறிய பிறகு அசத்தியத்தின் வழியிலேயே நின்று வாழ்ந்துவிடுவது பயனற்றது. இவ்வளவு விழிப்புடன் இருந்துவிட்டால்போதும். சத்தியமே கடவுள் என்பது மெல்ல மெல்ல விளங்கும்.

கேள்வி : கிருஷ்ணனோடு சம்பந்தப்பட்டிருந்த கோபிகையர் முக்தியடைந்தனர் எனப் பாகவதத்தில் படிக்கிறோம். ஆனால் காந்தியுடனும் உங்களுடனும் தங்கியிருக்கும் பெண்களுக்கு இவ்வுலக (சம்சார) வாசனை ஏன் உண்டாகிறது?

பாபு மகாத்மா. நானோ ஏதோ ஓரளவு சாதகன் மட்டுமே. அதற்குமேல் நான் ஒன்றும் விரும்பவும் இல்லை. ஒன்று நிச்சயம். பாபுவின் பிரம்மசரியம் அவருக்கே உரிய பாங்கில் அமைந்தது. என் பிரம்மசரியம் எனக்கே உரிய பாங்குடையது. இருவரும் பிரம்மசரியத்தைப் பெரிதும் மதிக்கிறோம். பாபு சத்தியத்தை முக்கியமெனக்கொண்டிருந்தார். நானும் அந்தக் குணத்தையே முக்கியமெனக் கொள்கிறேன். 'சத்தியநிஷ்டை' நம்முள் பிரவேசித்து

இருக்குமானால், ஊறியிருக்குமானால்—அதன் விளைவுகள் சூழ இருப்போரிடையும் உண்டாகும் எனக் கருதுகிறேன்.

பகவான் கிருஷ்ணன் எங்கே, நாம் எங்கே? பாகவதத்தில் சொல்லியிருக்கிறது 'கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்'—'சாக்ஷாத் பகவானே கிருஷ்ணன்' என்று. ஆதலால் பகவானுக்கு யாரையும் ஈடு சொல்வது பொருந்தாது. மக்கள் பாபுவை ஏசுக்கிறிஸ்துவுக்கு ஈடு சொல்கின்றனர். ஆனால் எனக்கு அது உகப்பன்று. தம் வழியிலே ஈடு இணையற்று விளங்கியவர் ஏசு. அவருக்கு இணையாக ஒருவர் கிடைப்பது என்பது இயலாது. அவர்பால் பக்தி செலுத்திக் கோடிக்கணக்கானவர்கள் உயர்ந்துள்ளனர்.

இதுபோன்றதே பாரதநாட்டில் கிருஷ்ணனுக்கு உள்ள இடமும். அதுபோலவே ராமநாமமும் இடம்பெறுகிறது. ஆதலால் அவர்களுக்கு ஈடாக மற்ற எவரையும் சொல்ல இயலாது. அவர்களை பகவானின் வடிவமாகவே மதித்து வருகிறோம். அவர்களோடு குறிப்பிட்ட ஏதோ ஒருவரை ஈடுசெய்து பேசுவது சோபிக்காது, அது அழகன்று.

இந்த விஷயத்தில் இஸ்லாமிய விசாரம் மிக நன்றாக அமைகிறது. இஸ்லாத்தில் விளக்கி, விளக்கித் தெளிவாக்கப் பட்டுள்ளது. ஈசுவரனின் (அல்லாவின்) பெயரோடு வேறு ஒரு பெயரையும் ஈடுசொல்வது வேலையற்ற காரியம் என்று. கடவுளைத்தவிரப் பூசனைக்கு உரியவர் எவருமில்லை; மகம்மது அவருடைய தூதர்—கடவுளின் செய்தியைத் தாங்கி வருபவர் மட்டும்தாம். அவரால் கடவுளின் இடத்தைப் பிடித்துக் கொள்வது இயலாது.

கேள்வி:- பாபு உப்புச் சத்தியாக்கிரகம் செய்தார். உப்பு காந்தியின் ஒருசின்னம். அதுபோலவே பூதானமும், கிராம தானமும் அவருக்குத் சின்னங்கள்தாமே ?

பதில்:- பாபுவுக்கு உப்பு ஏதோ ஒரு சின்னம் எனலாம் தான். பூதானமும் கிராமதானமும் "சின்னங்கள்" என்பதை

விட அதிகச் சிறப்புடையவை. அவை கிராமசுயராஜ்யத்தின் அஸ்திவாரம்.

கேள்வி :- காந்தி எல்லா ஆக்கவேலைகளுக்கும் மையப் புள்ளி சர்க்கா என்றார். நீங்களோ கிராமதானத்தை அஸ்தி வாரமாகக் கொள்ளவேண்டும் என்கிறீர்கள். இதன்பொருள் பாபுவின் மையப்புள்ளியையே மாற்றிவிட்டீர்கள் என்கிற தல்லவா ?

பதில் :- பாபுவின் மையக்கொள்கை அவரது ராட்டை யாகும். ''என்''னுடைய மையப்புள்ளி ''என்''னுடைய ராட்டை என்று யாரும் சொல்லக்காணோமே! பாபுவின் ராட்டை, பாபுவின் விரதங்கள், பாபுவின் அகிம்சை, இவையெல்லாம் பாபுவினுடையதாகவே இருக்கும்வரை, எல்லாம் காற்றில்தான் இருக்கும், ''என்'' அகிம்சை, 'என்' விரதங்கள் என்று யாராவது பேசினால் அதில் பொருளுண்டு. பாபு மையப்புள்ளியாகச் சர்க்காவை வைத்திருந்தார். நாம் இப்போது கிராமதானத்தில் அழுத்தம்தந்து வருகிறோம். ஏதோபெரிய சம்பிரதாய பேதம் வந்துவிட்டதுபோலும்.

இதுபோன்ற சம்பிரதாய பேதம் பாரதநாட்டில் நிறைய உண்டு. ஏதோ சிறிது வேறுபாடு வந்துவிட்டாலும் எல்லோ ரையும் 'சம்பிரதாயத்தை இழக்கப்போகிறோம்' என்ற எண்ணம் வந்து கவிழ்ந்து கொள்கிறது. அப்படி காந்தி சம்பிரதாயத்திலும் வந்துவிட்டது. சிறிதளவு மாறுதலைக் கூடப் பொறுக்கமாட்டார்கள். இவ்வளவுக்கும் பாபுவே தன்காரியத்தை ஒரு குறிப்பிட்ட 'சம்பிரதாய'மாக்குவதை எதிர்த்துள்ளார்.

இந்தச் 'சம்சார விருக்ஷமே' தலைகீழாக இருக்கிறது என்று கீதையின் பதினைந்தாவது அத்தியாயத்தில் வருணித் திருப்பதே இப்போது கவனிக்க வேண்டிய விஷயம். அதாவது

அதன்வேர் மேலேயும், அதன் கிளைகள் கீழேயும் இருக்கின்றன, ஞானத்தின் சோதனை—விசாரம் நிகழும்போது எல்லாம் எதிர்த்திசையை நோக்கிப் போகும் என்பதையும் கர்மயோகம் ஆரம்பமாகும்போது எல்லாம் இயல்பாகச் சரியான திசையில் இயங்கும் என்பதையும் சமூக விஷயத்தில் பார்த்திருப்பீர்கள். நம் ஆக்கவேலைகளிலும் ஆரம்பத்தில் ஞானத்தின் சோதனை— ஆராய்ச்சியே நடைபெற்றது. தன்னாட்சி வந்தபிறகு கர்மயோகம் துவங்கியுள்ளது. மக்களுடைய விழிப்பின்றித் தன்னாட்சி வருவதன்று என்பதால் மக்களுடைய விழிப்புக்கான வழிப்பற்றிய சோதனையும் விசாரமும் அந்த முதல் கட்டத்தில் நடந்தேறியது.

ராட்டை விஷயம் காந்திக்கு முதலிலேயே தோன்றியதன்று. பிறகுதான் உதயமாயிற்று. அன்றிலிருந்து ராட்டையின் பணியும் துவங்கிற்று. 1916 வாக்கில் நாங்கள் "கோச்ரப்பில்" துணிநெய்து கொண்டிருந்தோம், ஆனால் மில்நூலைத்தான் பயன்படுத்திவந்தோம். அது ஞான சோதனையின் துவக்கம்; கர்மயோகத்தின் துவக்கமன்று. பிறகுதான் நூல் நூற்பதையும் நாமே மேற்கொள்ள வேண்டும் என்று தோன்றிற்று. பிறகு ராட்டைவந்தது. ஆனால் பஞ்சுப்பட்டை மில்லில் இருந்து வந்துகொண்டிருந்தது. நாளடைவில் பஞ்சுப்பட்டையையும் தாமே தயாரித்துக்கொள்வது அவசியமாயிற்று. அதற்குப்பின் சாகுபடியாளர்களிடமிருந்து மிக உயர்ந்த பஞ்சு கொள்முதல் செய்யவேண்டும் என்ற விஷயத்தைக் கவனித்தோம்.

இப்படி நூற்பதில் ஆரம்பித்து எல்லாம் தலைகீழ்பாடமாக நடந்தது. மெல்ல மெல்லப் பஞ்சுவரை வந்து சேர்ந்தோம். பிறகு நிலத்தின் விஷயத்துக்கு வந்து சேர்ந்தோம். இவ்வளவுக்குள் தன்னாட்சியே வந்துவிட்டது. பிறகு ஜமீன்கள் விஷயமும் பூதான விஷயமும் வந்தன. இவ்வாறு "ஊர்த்தவ மூலம் அத: சாகம்" (வேர் மேலும்

கிளை கீழும்) என்பதில் எப்படி வந்து சேர்ந்தோம் என்பது இப்போது புரியும். அந்தப் பூதானமும் சற்றே மேலோட்டமாகத்தான் இருந்தது. முற்றும் வேர்வரைக்கும் போகவில்லை. கடைசியாகக் கிராமதானத்துக்கு வந்த பிறகுதான் வேரையே அஸ்திவாரமாகக் கொள்வது சாத்தியமாயிற்று. இந்த அடிப்படையின் மேல்தான் இனி நாம் கர்மயோகம் துவங்குதல் சாத்தியம். இந்த அடிப்படையை மறந்தால் சர்க்கா எங்கே போய் நிற்கும். காற்றை நூற்க முடியுமா? ஆதலால் இந்த அஸ்திவாரத்தைக் கவனிக்காவிட்டால் பிறகு சர்க்காவைத் தூசிதட்டி வைக்கிறவர்கள்கூட இருக்க மாட்டார்கள். வேண்டுமானல் அதுவும் ஒரு சம்பிரதாயமாக அமையும். பாபு விரும்பினது போல எல்லாம் இணைந்த (ஸமக்ர) ஆக்கப்பணியை மேற்கொள்ள வேண்டுமெனில் இந்தக் கிராமதான அடிப்படையின் மீதுதான் சாத்தியம்.

கேள்வி:- உங்கள் கருத்து என்ன? நீங்கள் காந்தியின் பணியை முன்னேற்ற எந்தவகையில் தொடர்ந்து பணி செய்கிறீர்கள்?

பதில் :- தன்னுட்சி வந்த பிறகு இயல்பாகவே பூதான கிராமதானப்பணிகள் கண்ணை நிறைத்து நிற்கின்றன. காந்தி இருந்திருந்தால் இதேபணியில்தான் கவனம் செலுத்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது. எந்தப்பிரச்சினையையும் சிக்கறுக்கும்போது சிக்கறுக்கக் கையாளும் வழி மிகமுக்கியம் எனக் கருதுகிறேன். அப்படி "வழி"யைப் பற்றிய சிந்தனை இருக்கும்வரை நான் காந்திச் சிந்தனையின் சாரத்தை அமல் செய்வதாகவே கருதுகிறேன்.

கேள்வி :- காந்தியின் டிரஸ்டிஷிப் ஆன்மீக விஷயமா அல்லது உலகாயத நடைமுறை விஷயமா?

நான் அதை ஆன்மீகம் என்றே கருதுகிறேன். வெறும் ஒரு நடைமுறை யுக்தியன்று. ஏல்வாலில் நாடெங்கணு

முள்ள தலைவர்கள் கூடியிருந்தனர். மாணவர்களுக்கு விளக்குவதுபோல நான் இதை விளக்கியுள்ளேன். டிரஸ்டிஷிப்புக்கு உரைகல் சோதனையாக இரண்டைக் காட்டியிருக்கிறேன்.

(1) இதை நடத்திவைக்கப் போகிறவர்களை, நம்மினும் அதிகமாக இதைப்பற்றி சிந்திக்கச் செய்யவேண்டும்.

(2) எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு விரைவாக அவர்களைத் தயார் செய்து எல்லா அதிகாரமும் அவர்களிடம் ஒப்புவித்து விடவேண்டும். இவ்விரண்டு சோதனைகளையும் செய்து பார்த்தபிறகு டிரஸ்டிஷிப் பற்றிய எந்த வழக்காலும் சரி, வாதமானாலும் சரி, அதன் உண்மை அல்லது பொய்யைப் புரிந்துகொள்வது சாத்தியமாகும்.

கேள்வி:- பொதுவுடைமை, காந்தீயம் ஆகியவற்றிற்கு இடையிலுள்ள வேற்றுமை உங்கள் கருத்துப்படி என்ன?

பதில்:- எனக்கென்று,''வாதம்'' ஒன்றும் இல்லை. சர்வோதயம் என்ற சொல் காந்தி வழங்கியது. அந்தச் சொல்லைத் தாங்கிக் கொண்டு நான் அலைந்துவருகிறேன். நாம் 'வாதி'கள் அல்ல; 'காரி' கள்—பணி செய்வோர் ஆகும். வடதுருவத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தால் ஒன்றும் நடவாது. அந்தத் திசையில் இரண்டு 'எட்டு' கால் எடுத்து வைக்க வேண்டும்; நடக்கவேண்டும்.

கேள்வி:- பாபு ஒவ்வொரு நாளும் ''நாட் குறிப்பு எழுதச் சொல்லிச் சென்றார். நீங்கள் ஏன் இப்படி ஒன்றையும் அழுத்திச் சொல்லவில்லை.

பதில்:- ஆம். பாபு சொல்வது சரியே. ஆனால் எனக்கு இச்செய்தி அன்றும் பிடிக்கவில்லை இன்றும் ருசிக்கவில்லை. நிகழ்காலத்தில் இருந்துகொண்டு இறந்தகாலத்தின் சுமையையும் சேர்த்துச் சுமந்து திரிவானேன். ''ஆறு அடித்து இரண்டு நிமிஷமானதும் கண்விழித்தெழுந்தேன்

இரண்டு நிமிஷநேரம் விழித்தெழுவதில் தாமதம் ஆயிற்று. இது ஒரு தவறு.'' என்ன அப்படித் தலைபோகிற காரியம்? இந்த மறதிகளையெல்லாம் எழுதிவைக்கத் தேவை இல்லை. தலைக்கு—சிந்தனைக்கு—மூப்பு வராமல் காக்க நித்தம் ஒரு புதுமை தோன்றுமாறு வைத்துக் கொள்ள — வெற்று விஷயங்களையெல்லாம் எழுதத் தேவை இல்லை. ஓர் அனுபவம், ஒரு தரிசனம் சிந்தனை அல்லது உணர்வின் ஒரு துகள், இப்படி ஏதேனும் ஒன்றை நாட்குறிப்பில் குறித்து வைப்பதால் பயனுண்டு. இப்படி ஏதாவது இருந்தால் எழுதவே வேண்டுமென்கிறேன்.

கேள்வி:- காந்தி இறந்ததாகக் கேட்டவுடன் உங்களுக்குண்டான முதல் எண்ணம் என்ன?

பதில்:- அவர் இறக்கவே இல்லையென்றுதான் எனக்குத் தோன்றிற்று. இன்றுவரை அவர் உயிரோடிருப்பதாகவே எண்ணி வருகிறேன். சான்றோர் என்றும் இறப்பதில்லை. எப்போதும் உயிருடன் இருப்பார்கள். தீயோர் என்றுமே உயிரோடிருந்ததில்லை. அவர்கள் எல்லோரும் ஒருகற்பனை உலகில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

18

காந்தி நம்பிக்கையா? தன்னம்பிக்கையா?

காந்தியின் மறைவுக்குப் பிறகு பாரத நாடு தரத்தில் மிகவும் குறைந்து விட்டது போல் தோன்றுகிறது. ஆனால் அதைப் பற்றிச் சோர்வடையும் பிரச்சினை எழவில்லை. காந்தி போன்றவர்களின் விஷயத்தில் நீண்ட காலப் பார்வையோடு சிந்திக்க வேண்டும். அவரைப் போன்ற வல்லமை மிக்கோர் செய்யும் காரியங்களின் விளைவுகள் அண்டை அயலிலும் குறுகிய காலத்திலும் அதிகமாக இருக்கும் என்று எதிர் பார்த்தல் இயலாது. அதற்கு நேர்மாறாக நீண்ட காலக் கணக்கிலும் மிகப் பரந்த களத்திலும் அவற்றின் விளைவுகள் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆதலால் இது பற்றி மனமுடைந்து போகத் தேவையில்லை.

வெளிநாட்டுக்காரர் ஒருவர் என்னைச் சந்தித்து "இன்றைய பாரத நாடு காந்தி எதிர்பார்த்தது போல் முன்னேறி வருவதாக நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது சற்றுக்கடினம். பல இடைஞ்சல்களுக் கிடையிலும் பாரத நாடு காந்தியின் வழியில்தான் செல்ல முயன்று வருகிறது என்று மட்டும் என்னால் சொல்ல முடியும். காந்தியின் வழி ஏசு அல்லது புத்தரின் வழி. ஏசுக்கிறிஸ்து இன்று உலகுக்குத் திரும்பி வந்தால் என்ன காண்பார். உலகத்தில் ஒவ்வோர் ஆண்டும் பைபிளின் பிரதிகளை பத்து லட்சத்துக்கும் அதிகமாக அச்சிடுகிறார்கள் என்பதைக் காண்பார். அதன் பொருள் என்ன? ஏசுவின் வழியிலே நாம் எல்லோரும் நடக்கிறோம் என்று பொருள்? இதைக் கண்டு பூரித்துப் போவாரா? ஏசுவின் பிறந்த தினத்தன்று வியட்நாமில் போர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆம், ஏசு பிரான் நம் மீது தயை கூர்ந்து

''என் குழந்தைகள் இயன்ற அளவு முயன்று தான் வருகிறார்கள்'' என்று தானே சொல்வார்! வெளிப் பார்வைக்கு விஞ்ஞானம் பந்தயத்தில் அழகாக வென்றிருப்பது போலத் தான் தோன்றும். ஆனால் அது ஒரு பொய்த்தோற்றம்; உண்மையன்று. அமைதிச் சக்திகளின் வலிமை இன்று இருப்பதைப் போல் அதிகமாக என்றும் இருந்ததில்லை'' என்று அவருக்குப் பதில் கூறினேன்.

இவ்வாறே, சில நாட்களுக்கு முன் அமெரிக்கத் தினசரியான 'நியூயார்க் டைம்ஸின்' நிருபர், ''இன்று காந்தி மீண்டும் வர நேர்ந்து, அவர்பாலுள்ள பக்தியைத் தெரிவிக்க இன்று பாரத நாடு செய்து வரும் காரியங்களை- சிலை எழுப்புதல், பொருட்காட்சிகள் நடத்தல், சாலைகளுக்கும், தோட்டம் துறவுகளுக்கும் காந்தியின் பெயர் சூட்டுதல் போன்றவற்றைக் கண்டால் அவருக்கு என்ன தோன்றும்?'' என்று கேட்டார்.

பெருந்தகையாளர்களின் பெருமை வெகுதூரம் போகும்; படர்ந்து பரவும்.

''காந்தி போன்ற பெருந்தகையாளர்கள் காலத்தைக் கடந்தோர்; குறுகிய காலநோக்கில் பணி செய்வோர் அல்லர். அவர்கள் தொலை நோக்குடன் பணி செய்வோர். இருபதாண்டுக் காலம் என்பது அவ்வளவு நீண்ட காலம் அன்று. அது மிகவும் குறுகிய காலம். மேலும் தாக்குப் பிடிக்கும் ஆற்றல் காந்திக்கு உண்டு. அவரை ராஷ்டிர பிதா-இந்நாட்டின் தந்தை- என்றழைக்கின்றனர். ஆதலால் எல்லோரும் அவர் குழந்தைகள் என்றாகிறது. நாங்கள் இப்போது குழந்தைகள் போல நடந்து கொள்கிறோம்- நீங்கள் கிறிஸ்துமஸின் போது ஆடிக் குதித்து, சிரித்து விளையாடுகிறீர்களே அது போல'' என்று அந்தக் கேள்விக்குப் பதில் தந்தேன்.

காந்தி போன்ற மகான்களின் பெருமையை இரண்டு நான்கு ஏன், பதினைந்து இருபது ஆண்டுகளுக்குள் கூட அளந்து விட முடியாதென்பது என் கருத்து. அவர்கள் நெடுந்தூரம் செல்வோர்; படர்ந்து பரவுவோர். அவர்கள் தந்து செல்லும் சிந்தனை அழிவில்லாச் சிந்தனை. லட்சம் தாக்குதல் வந்தாலும் அவற்றை எதிர்த்து உயிர் வாழும். பாரத நாட்டில் அவை உயிர் வாழவில்லை என்றால் பாலஸ்தீனத்திலோ, இங்கிலாந்து அல்லது அமெரிக்காவிலோ அவை வாழும். இத்தகு உயிராற்றல் உள்ளவை அவை.

காந்தி சிந்தனை அமரத்துவம் வாய்ந்தவை

''ஹாஃப் ஹாஃப் ஸ்கூல்'' (அரைப் பள்ளிக்கூடம்) என்று ஒரு வகையான பள்ளிகள் சீன நாடு நெடுகிலும் நடப்பதாகச் சொல்லுகிறார்கள். மாணவ மாணவியர் எல்லோரும் பாதி நேரம் உடலுழைப்புச் செய்ய வேண்டும் என்று இதற்குப் பொருள். அந்த உழைப்பும், ஏதோ உழைப்பின் சின்னம் என்றவாறு ஒரு சிட்டம் நூல் நூற்றால் போதும் என்பது போன்ற 'வாயளவு' உழைப்பன்று. உழவர்கள் உழைப்பது போல, வாழும் வகைக்கு ஈட்டும் அளவு உழைக்க வேண்டும். எஞ்சிய பாதி நேரம் பாடப் பயிற்சி இதைப் படித்ததும் ''கடைசியாக மகாத்மா காந்தியின் பேச்சைக் கேட்க ஒரு நாடாவது புறப்பட்டதே'' என்று எண்ணினேன். சீனர்கள் அவருக்குச் செவி சாய்த்துள்ளனர்; அவரைப் பின்பற்றுகின்றனர். பாரத நாட்டினரும் இப்படிச் செவிசாய்க்க வேண்டும் என்று ஆசை வைக்கலாம் தானே. அப்படிச் செவி சாய்க்காமல் பழைய பாணியிலேயே கல்வித் திட்டத்தை நடத்திக் கொண்டு போவார்களாயின் நன்றாக அடி வாங்குவார்கள்! 'புதுக்கல்வி' (நயீ தாலிம்)யைப் பற்றிய எளிய, சிக்கலற்ற நேரான சிந்தனையை வாழ்க்கையோடு இணைத்துக் கொள்ள வேண்டும்.

தன்னாட்சி வந்த பிறகும் உணவுத் தானியங்களின் பற்றாக்குறை இருக்குமாயின், தன்னாட்சி என்பது வெறும்

போலி - பொக்கை - யாசகத்தரன் இருக்கும் என்று கூறினர். ஆதலால், ஒவ்வொரு வீட்டிலும் உணவு உற்பத்தியாக வேண்டும். காந்திக்கு இப்படி ஒரு பித்து-ஒரு கனவுக்காட்சி. கையகல நிலம் தரிசாகக் கிடந்தாலும், அங்கே எதாவது காய்கறி பயிரிட வேண்டும். பட்டணவாசிகளுக்கு ஒரு சிறு துண்டு தரிசு நிலமும் கிடைக்காது தான். அவர்கள் தொட்டியிலாவது பயிர் செய்ய வேண்டும். தொட்டியில் என்ன பெரிதாக விளைந்து விடப் போகிறது? ஏகமாகப் பயிராகாவிட்டாலும் தான் என்ன. கொஞ்சம் பயிரானாலும் அவ்வளவுக்கு நல்லது தானே. அதுவுமன்றி, கோடிக் கணக்கானவர்களால் இப்படி உற்பத்தி நிகழும் போது அது கொஞ்சமாயிராது. பெருக்கல் கணக்கில் வரும் தொகை மிகப் பெரிதாக இருக்கும். 'குணகார்' என்ற சொல் பெருக்கி வரும் தொகை என்றும், 'குணவடிவம்' என்றும் பொருள் தரும் நயமுடையது. 'குணகார்' என்ற சொல் மூலத்தில் பயிலப்பட்டுள்ளது. சொட்டு சொட்டாகத் தான் மழை பெய்கிறது; ஒவ்வோர் இடத்திலும் ஒரு சொட்டு பெய்வதால் நிலம் முழுவதும் நனைகிறது. அதைப் போலவே ஒவ்வொரு வீட்டிலும் சிறிது சிறிதாக உற்பத்தி என்றால் அதன் மொத்தம் மிகப் பெரிதாகிவிடும். நாட்டுக்காக ஒவ்வொருவரும் எதோ ஒன்றை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கல்வி இதன் வாயிலாகக் கிடைக்கிறது. இப்படி உற்பத்தி செய்தன்றி நமக்கு உண்ண உரிமை இல்லை.

இப்போதைக்கு ஜப்பானில் காந்தியின் இச் செய்தி அமுலாகி வருகிறது. அங்கே ஓரடி நிலந்தானும் தரிசாகக் கிடப்பதைக் காண இயலாது. சகாவா என்பவர் இது பற்றி ஒரு நாவல் எழுதியுள்ளார். அந்த ஜப்பானியர் மிகப் பெரிய ஞானியும் மிஷனரியும் ஆவார், இவ்வாறு ஜப்பானில் காந்தியின் சொல் அம்பலம் ஏறி இருக்கிறது. நம்மிடமோ நிறைய நிலம் இன்னமும் தரிசாகக் கிடக்கிறது. இவ்விஷயத்திலும் காந்தியின் சொல்லை இன்றல்லவென்றால் நாளை நாம் பின் பற்றாமல் தீராது.

காந்தியைச் சேர்ந்தோரே அவருடைய போதனையை வெகு விரைவில் மறந்தனர்.

காந்திச் சிந்தனை அமரத்துவம் உடையது என்றும் அதன் செல்வாக்கு வெகு தூரம் படர்வது, பரவுவது என்றும் மேலே கூறினேன் அல்லவா. இடையில் அதன் வெற்றி குறைந்தது போல் தோன்றினாலும் அது மீண்டுப் உயிர் பெறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை. ''என்னுடைய யோகத்தை இதோ வருணிக்கிறேன், இடைக் காலத்தில் இந்த யோகம் இழக்கப்பட்டிருந்தது''. என்று கீதையில் பகவான் பேசுகிறார். நான் அதை மராத்தியில் மொழி பெயர்த்த போது ஒரு சிறு மாறுதல் செய்தேன். 'யோகம் மறைந்திருந்தது, செய்ய விட்டுப் போயிருந்தது, என்று மொழி பெயர்த்தேன். முன் இருந்தது தானே உயிர் பெற்று வந்தது? அப்படி இருக்க அதை எப்படி இழந்திருக்க முடியும்? பாரதத்தில் யோகம் மறக்கப்பட்டிருந்தது. 'வாசனைகளின் அழுத்தம் மிகுந்ததால் இப்படி ஆயிற்று, உடம்பின் பால் பற்று உணர்ந்ததால் அதிலும் உணர்வு மறந்து போயிற்று. ஆயினும் அந்த விசாரம் அமரத்துவம் உடையதாதலால் அது மீண்டும் அவதரித்தது, மீண்டும் துவங்கிற்று' என்று ஞான தேவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறே காந்தி விசாரமும் அமரத்துவம் உடையது. அது பாரத நாட்டுக்கு மட்டும் உரியதன்று; உலகம் முழுவதுக்கும் உரியது. காலத்தையும் நாட்டையும் பொறுத்துச் சற்றதிகமாகவோ குறைவாகவோ வேறுபாடுகள் காணலாம். ஆயினும் உள்ளார்ந்த தத்துவம் அழிவற்றது. ஆதலால் காந்திச் சிந்தனையைப் பற்றிக் கவலை இல்லை எனினும் ஆண்டாண்டுகளாக அவர் எந்த மக்களோடு சேர்ந்து பணி செய்தாரோ அந்த மக்களே அவர் போதனையை மறந்தார்களே என்று யாரேனும் பேசுவார்கள் என்பது ஒன்றுண்டு.

ஏன் தன்னம்பிக்கை பிறக்கவில்லை ?

இதன் காரணத்தையும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம். கல்வி, கேள்வி, (ஸ்வாத்யாயம்) இல்லாமற்போனது ஒரு காரணம். காந்தியைச் சேர்ந்தோர் வேலையில் சூட்டிகையாயிருந்த அளவு சிந்தனையில் தோயவில்லை. இதில் இருந்தே இரண்டாவது காரணமும் முளைத்தது. கொஞ்ச நஞ்சம் இருந்த விசாரமும் காந்தியின் சிந்தனையாகவே இருந்தது; சுய சிந்தனையாக அமைய வில்லை. அவர்கள் மேற்கொண்டிருந்த பணியில் அமரத்துவம் வாய்ந்த ஒரு சிந்தனை உள்ளது என்ற தோற்றம் கூடப் புலப்படவில்லை,

ஒரு தரம் புத்த கயையில் தேசத் தலைவர்களும் ஆக்கப் பணித்தலைவர்களும் கூடி இருந்தனர். அப்போது சகோதரர் தேபர் என் முன் ஒரு பிரச்சினையை வைத்தார். "காந்தியின் காலத்தில் நாம் எல்லோரும் தன்னம்பிக்கையோடு பணி செய்து வந்தோம்' ஆனால் இப்போது அந்தத் தன்னம்பிக்கை நம்மிடையே காணப்படவில்லை. ஆதலால் நாம் எல்லோரும் நம்பிக்கையற்றுச் சோர்ந்து போயிருக்கிறோம். இந்தப் பிற்போக்குச் செயலை எப்படித் தடுத்து நிறுத்துவது? என்பதே அவர் எழுப்பிய வினா.

என் அனுபவப்படி இந்தச் செய்தியே சரியன்று. காந்தி காலத்தில் நாம் தன்னம்பிக்கையோடு பணி செய்தோம் என்பதே தவறு. நாம் காந்தி அடிகளிடம் வைத்த நம்பிக்கையால் பணி செய்தோம்-அவ்வளவே. காந்தி நம்பிக்கை இருந்த இடத்தில் தன்னம்பிக்கை வர வேண்டிய தேவையை நாம் உணருவதற்காகவே கடவுள் அவரை நம்மிடமிருந்து பிரித்து விட்டார். காந்தி இன்னும் நாலைந்தாண்டுகள் இருந்திருந்தால் நாமும் தன்னம்பிக்கையின் தேவை இல்லாமல் இருந்திருக்கலாம். எதற்கெடுத்தாலும் ஒரு 'ரெஃபான்ஸ் புக்' கைச் சார்வது போல பக்தியோடு

அவரைச் சார்ந்து வாழ்ந்திருப்போம், போதுமே காந்தியை 'ரெஃபர்' பண்ணிக்கொண்டிருந்தது. ஒருவரிடம் பக்தி என்று விழுந்துவிட்டால் பிறகு எல்லாம் அவர் பின்னேடு, பின்னேடு போகிற காரியம் தான். சுதந்திரமான சுய நம்பிக்கை அன்று நமக்கு இருந்ததே இல்லை. இன்றுவரைக்கும் நாம் தன்னம் பிககை கொள்ளவில்லை காந்தியிடம் தன்னம்பிக்கை வைத்திருந்தோம் என்று நான் சொல்லாமல் தீராது.

பக்தியால் கேடுதான் வருகிறது என்று நான் கருத வில்லை. அதிலிருந்து நன்மையும் விளையும். நாம் 'ஆத்ம நிஷ்டை', என்று கூறுவது பக்தியினின்றும் வேறு ஒரு தத்து வம் காந்தி மறைந்த பிறகு இப்போதுதான் தன்னம்பிக்கை யின் தேவையை உணருகிறோம். இது ஒரு நல்ல அறிகுறி. கடவுள் இதற்காகத்தான் காந்தியை நம்மிடமிருந்து பிரித்துவிடத் திருவுளம் பற்றினர்.

நாம் சிறியவர்களாயினும் பெருந்தகையாளர்களின் தோள் மேல் அமர்ந்திருக்கிறோம்

பெருந்தகையாளர்களிடம் குற்றம் காண்பது விசித்திர மாகத் தோன்றலாம். நாம் அவர்களை விடச் சிறியவர்கள். ஆயினும் அவர்கள் தோள் மீது அமர்ந்திருக்கிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். ஆதலால் அவர்கள் பார்வை எட்டின தூரத்துக்கு மேல் நம் பார்வை எட்டுவது சாத்தியம். நம் உயரம் மிகக் குறைவானுலும் கூட. இதை நான் ஏதோ காந்தி விஷயத்தில் மட்டும் சொல்கிறேன் என்பதில்லை. இத் தகைய எல்லாப் பெருந்தகையாளர்கள் விஷயத்திலும் சிறப்பாக கௌதம புத்தர் விஷயத்தில் இதைச் சொல்கிறேன்.

ஒவ்வொரு மகானுக்கும் சமூகத்தைப்பற்றிய சிந்தனை யும் அச்சிந்தனையை ஒட்டிப் பணி செய்யும் வழக்கமும் இருக்கும். அவர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்வதோடு ஒரு திருக்கூட்டமும் சேரும், ஒரு 'சங்க பாவனை' மலரும். மகான்களுக்கு இவையெல்லாம் வேண்டியிருக்கும், புத்தர்

பிரான் 'சங்கம் சரணம் கச்சாமி' என்று சொல்லவும் சொன்னார், ஆனால் எப்போது? புத்தர் மறைந்த பிறகு! புத்தர் உயிர் வாழ்ந்த போது எல்லாம் அவர் தலைமையி லேயே, அவர் வழிகாட்ட நடந்தது. கடைசி வரைக்கும் அவரே வழிகாட்டி வந்தார். அவ்வாறு செய்வதை விட்டு 'நீங்கள் இனி உலகத்தை ஒரு சங்கமாக அல்லது சமுதாயமாக அமைக்க வேண்டும். உலகத்தை ஒரு திருக்கூட்டமாகப் பாவிக் கவும் வேண்டும். எல்லோரும் கருத்தொற்றுமையை வளர்க்க முயலுங்கள்; அதற்கு வேண்டியதைச் செய்யுங்கள்; நான் வெறும் சாட்சியாக நிற்கிறேன். ஏதோ ஒரு நிலையில் என் ஆலோசனையை நீங்கள் கேட்டால் மட்டும் சொல்வேன். ஆனால் நீங்கள் கட்டுப்பட்டாக வேண்டும் என்பதில்லை. முடிவு செய்வது எப்போதும் நீங்களே' என்று தாம் இருந்த போதே கூறியிருந்தால் அவருடைய சீடர் நால்வரும் அவர் பெயரிலேயே நான்கு தனித்தனி சம்பிரதாயங்களை அமைத் ததாவது தவிர்க்கப்பட்டிருக்கும்.

புத்தர் பிரான் இவ்வாறு செய்யவில்லை. ஆதலால் அவர் நிர்வாணத்துக்குப் பிறகு 'அவருடைய சீடர்களிடையே தீவிரமான கருத்து வேற்றுமை தோன்றிற்று. நான்கு மார்க்கங்கள் எழுந்தன ''எனக்குப் புத்தர் பிரான் இப்படித் தான் போதித்தார்'' என்று நால்வரும் வெவ்வேறு கருத் தைச் சொன்னார்கள். ஒருவர் 'உலகம் பூரண சத்தியம், என்றார். இரண்டாமவர் ''இல்லை, அது சூன்யம்' என்றார். மூன்றாமவர் 'விஞ்ஞானம்' என்று சாதித்தார். எல்லோரு மாக தத்துவ ஞானத்தையிட்டு சந்நதக்காரர்களின் வெறி யாட்டம் ஒன்றையே புத்தர் பிரான் பெயரில் ஆடித்தீர்த் தனர். ஆயிரம் ஆண்டுகள் அவர்கள் சண்டை நீடித்தது. அதன் விளைவாக நலிவுண்டாயிற்று, பிறகு சங்கராச்சாரி யார் போட்ட போட்டில் எல்லாம் சிதறுண்டு போயிற்று- அடிதாங்கமாட்டாமல்.

புத்தர் கதையே காந்தியின் கதையும் ஆயிற்று

புத்தர் விஷயத்தில் நடந்ததே காந்தியின் விஷயத்திலும் நடந்தது. மிகுந்த கருணை காரணமாக காந்தி ஒரு காரியம்

செய்து வந்தார். கருணையால் தூண்டப் பெற்று எல் லோருக்கும் விளக்கங்கள் கூறி வந்தார். கடைசிக்கணம் வரை வருவோர் சொல்வதையெல்லாம் கேட்டு ஒவ்வொரு வருக்கும் தனித்தனியாக ஆலோசனை சொல்லி வந்தார். அதன் விளைவோ? அவர் இருந்த வரை நாம் பணி செய் வதில் ஈடுபட்டோம்; அவர் மறைந்த பிறகு உலைந்து போனோம்; எல்லாம் மறந்தோம். புத்தர் பிரான் விஷயத் தில் சீடர்களிடையே கருத்து வேற்றுமை தோன்றியது போலவே காந்தியின் உயர் மட்டச் சீடர்கள் எல்லோரும் ஒருவருக்கெதிராக மற்றொருவர் எழுந்தனர். ஓரளவு கருத்து வேற்றுமை இருப்பது இயல்பே. இப்படி வெவ் வேறான கருத்துக்கள் இருக்க வேண்டும் என்று தானே பெரும் எண்ணிக்கையில் மனிதர்களைக் கடவுள் படைத் திருக்கிறார். அப்போதுதானே எல்லோருடைய சிந்தனையும் ஒன்று சேர்ந்து பூரண சிந்தனை ஒன்று உருவாதல் இயலும். கருத்து வேறுபாடு என்பது வேறு. கருத்து காரணமாகப் பகை என்பது வேறு. இங்கோ என்றால் கருத்துப் போரே நிகழ்ந்துள்ளது, வீரர்கள் போராடுகிறார்கள்; செத்துச் செத்து வீழ்கிறார்கள் - என் மேல் என் மேல் என் மேல், என்பது ஸ்வாமி ராம தீர்த்தர் சொன்ன வாக்கியம். அது போலவே போராடிக் கொண்டிருக்கும் வீரர்களே செத்துச் செத்து விழுங்கள்-காந்தியின் மீது, காந்தியின் மீது' காந்தி யின் மீது, என்கிறேன் நான். எல்லோரும் காந்தியின் பெயரைத் தான் சொல்லி முழக்குகின்றனர். ஆனால் தமக் கிடையிலேயே போராடுகின்றனர்.

உண்மை என்னவென்றால், காந்தி இருந்த போது நடந்தது ஒரு சர்க்கஸ்! சர்க்கஸில் பல்வேறு இனத்து விலங்குகள் இருக்கும். ஒன்றுக் கொன்று முற்றும் பகை யான விலங்குகள் கூட சர்க்கஸில் கூடி விளையாடுகின்றன. ரிங்மாஸ்டர் ஒருவர் இருப்பார். அவருடைய தயவால் அல்லது (அனுக்கிரகத்தால்) உயிரை அழித்துக் கொள்ள,

அழிக்க என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்களேன்-அவர் சித்தமாக இருப்பதால் எல்லா விலங்குகளும் தத்தம் வேலையில் ஈடுபடுகின்றன. எல்லாம் சேர்ந்து அழகான சர்க்கஸ் நடைபெறுகிறது. அப்படி நடந்தது அப்போது காந்தியின் பார்வை பரந்த பார்வை. விசுவரூப தரிசனத்தில் பகவான் எல்லோரையும் ஒரு சேரத் தப்முள் சேர்த்துக் கொண்டமை போன்றது காந்தியின் விசுவரூப தரிசனம். அவர் இருந்த வரைக்கும் இந்த சர்க்கஸ் நடந்தது. அவர் போன கணமே இயல்பில் பகையான எல்லாம் ஒன்றுக்கொன்று எதிராகக்கிளம்பின. புத்தரின் நிர்வாணத்துக்குப் பிறகு தோன்றிய நிலைமை போன்ற ஒன்று காந்தி விஷயத்திலும் தோன்றியுள்ளது.

பார்க்கப் போனால் புத்தரின் சீடர்களிடையே தோன்றிய கருத்து வேற்றுமை வெறும் தரிசனம் பற்றியது தத்துவஞானம் என்ற களத்துக்குள் நின்றது. ஆனால் காந்தி விஷயத்தில் கருத்து வேற்றுமை நடை முறை விவகாரங்களிலும் பரவியுள்ளது. மற்றத் தலைவர்களின் வழியில் நாடு சென்றால் எல்லாம் அழிந்து விடும்'' என்பார் ஒரு தலைவர், நேரு, சர்தார். ராஜேந்திரபாபு, ராஜாஜி, கிருபளானி, ஜயப்பிரகாஷ் ஆகியோர் சில ஆண்டுகள் முன்பு வரைக்கும் காந்தியோடு சேர்ந்து பணி செய்தவர்கள். அவர்களிடையே தான் எவ்வளவு தீவிரமான கருத்து வேற்றுமை இப்போது! எனக்குத் தெரிந்தவரை ஒவ்வொருவரும் கட்சியாடுகிற விஷயம் காந்தியோடு ஒத்துப் போகிறது பற்றித்தான். இப்படி காந்தியின் பெயரிலேயே இவ்வளவு தீவிரமான பகை நாட்டில் பிறந்துள்ளது. இன்று காணப்படும் அராஜகத்துக்கும் நிலைகுலைவுக்கும் எல்லாம் இதுவே மூலகாரணம்.

கருத்தொற்றுமை கண்டு பணிசெய்யப் பழகி இருந்தால்

சற்றே ஒன்றைக் கற்பனை செய்து பாருங்கள். காந்தி இத்தகைய மயக்கை—கருணைமோஹத்தை — சற்றே விலக்கி

வைத்தார் எனவும், சூழ்நிலே அதற்குச் சாதகமாக இருந்தது என்றும் வைத்துக்கொள்வோம். தம்மைப் பின்பற்றுவோர்களிடம் எல்லாம் உற்றுரே! உறவினரே! நேரிடவே வழிகாட்டும் பணியிலிருந்து இப்போது விலகிக்கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு விஷயத்தையும் விவாதிக்கவேண்டும். செய்வதெல்லாம் கருத்தொற்றுமையின் அடிப்படையில் நிகழவேண்டும். கருத்தொற்றுமை உள்ள விஷயங்களில் மட்டும் செயல் திட்டம் அமைத்து முன்னேற வேண்டும். ஒற்றுமை காண இயலாதவற்றை இப்போதைக்கு ஒதுக்கி வைத்துவிட வேண்டும்". என்று அவர் கூறியதாகவும் வைத்துக்கொள்வோம். இத்தகைய மன உறுதியை காந்தி தம் கடைசி ஐந்தாண்டுகளில் காட்டி இருந்தால் என்ன நடந்திருக்கும்? தாம் தோழர்களிடம் பாபு இப்படி ஏதேனும் கூறியிருந்தால் எல்லோரும் சேர்ந்து சிந்திப்பது கருத்தொற்றுமையைத் தோற்றுவித்து அதன்பிறகு பணி செய்வது என்ற 'வழக்கம்' ஒன்று உருவாகி இருக்கும். அதன் வாயிலாக நாட்டுக்கு நிறைய லாபமும் உண்டாகியிருக்கும்.

பாபு இவ்வாறு செய்ய வாய்ப்பில்லாமல் போயிற்று. அபாரமான கருணே, தாயன்பு அவர் மனதில் வேலேசெய்து வந்தது. அது காரணமாகக் கடைசி நிமிடம் வரை தனி ஒவ்வொருவருக்கும் வழிகாட்டி அறிவுரை வழங்கி வந்தார். அந்தக் கருணே கடைசிக் காலத்தில் காங்கிரஸோடும் தம் தோழர்களோடும் தொடர்பைப் பேண முயன்றதும். இந்தக் கருணே காரணமாகத்தான் கடைசிக்கட்டத்தில் காந்தியின் தோழர்கள் அவருக்கு எதிர்த்திசையில் செயல்பட்டனர் என்பது உங்களுக்கு புலப்படும். அந்நிலேயிலும் தம் தோழர்களே ஒட்டியே அவர் இருந்தார். இந்த விஷயத்தில் அவர் சத்தியத்தைவிட அதிகமாகக் கருணேயை மதித்தார் எனலாம். கருணேயின்பாலுள்ள பற்றிஞல்தான் கடைசிக் கட்டத்தில் தம் தோழர்களே எதிர்க்கவில்லே அவர்கள் போக்குக்குத் தம்

இசைவைத் தெரிவித்தார். 'அக்வயஸென்ஸ்' என்றோர் ஆங்கிலச்சொல் — ஏதேனும் ஒன்று நடந்தேறிவிட்டபிறகு நடந்துவிட்டதற்கு இசைவு தருதல்—உண்டு. பாகிஸ்தான் - இந்துஸ்தான் என்று பிரித்தலும் பிரித்து எண்ணுதலும் பாரத நாட்டைத் துண்டாடுதலும் ஆகும். ஓர் உயிர்ப் பிராணியை வெட்டுவதாகும் என்று பாபு பலதரம் சொல்லி யிருந்தார். இதற்கு 'விவி ஸெக்ஷன்' என்ற ஆங்கிலச்சொல்லே அவர் பயன்படுத்தினர். கடைசியிலோ என்றால் அதற்கே இசையவும் செய்தார். தம் சிந்தனையையும் கருத்தையும் அவர் கைவிட்டார் என்பதன்று. இந்த விஷயத்தை இப்போது அழுத்திச் சொன்னால் நடைமுறை விவகாரங்கள் எல்லாம் குளறுபடியாகிவிடும் என்று எண்ணினார் ஆதலால் பிரி வினையை ஏற்றுக்கொண்டார். இதுவும்கூட அவருடைய அபார கருணையால்தான்.

சத்தியத் தவத்தினர் கடைசியில் கருணைத்தவத்தினர் ஆனார்

இவ்வாறு, சத்திய நிஷ்டையர் கருணநிஷ்டையராகிச் சமைந்தார். அந்த அளவுக்கு சத்தியம் அறுந்து பட்டது. அவர்தம் வாழ்க்கையின் அவல முடிவு என்பது இதுவே. குண்டு பாய்ந்தது என்பதெல்லாம் அப்படி ஒரு பெரிய சோக மல்ல. தாம் சத்தியம் என்று கருதியதையே பாபு பற்றி நின்றி ருந்தார் ஆயின் என்னவாயிருக்கும் என்பது சொல்ல இயலாது. ஒருகால் அப்போதும் அவர் கொலையுண்டிருக் கலாம். இன்றுள்ள சூழ்நிலையில் பிரிவினையை நாம் ஒப்புக் கொள்ளாவிடில் இந்த என் தோழர்கள் பாவம் அடிவாங்கு வார்களே என்று நினைத்தார். ஒரு பக்கம் ஆங்கிலேயரின் அரசு மறுபக்கம் காந்தி. இவ்விரண்டுக்கும் மத்தியில் பாவம் இவர்கள் நெரிந்து நசுங்கியே போவார்கள்!! இப் படிக் கருணையால் கனிந்த பார்வையோடு பாபு கடைசியாக

பிரிவினை விஷயத்தில் கருத்தொற்றுமை தெரிவித்தார் என்றே எனக்குத் தோன்றுகிறது.

போகட்டும் இதையெல்லாம் உணர்வதும் மனத்தில் வைப்பதும் மிக அவசியம். இதை உணர்ந்தால் தான் பிற்காலத்தில் அனுபவத்திலிருந்தும் ஏதேனும் படிப்பினை கிடைக்கும். சிந்தனை, விசாரம் ஆகியவற்றின் விஷயத்தில் மிகவும் கவனமாக விவாதம் நிகழ வேண்டும். எல்லோரையும் செயலில் இறங்கத் தூண்டும் சிந்தனைப் போக்குகளில் நிரம்ப ''அத்யயனம்'' - கல்வி கேள்விச் சிந்தனை - வேண்டும். அதில் கருத்தின்மை அல்லது தீய கருத்து இருந்தால் அவற்றைக் களைதல் வேண்டும். இவ்வாறு விசாரம் பழகுதல், மனனம் செய்தல் (மனத் திருத்தல்) இருந்தால் தான் இப்போது நாம் காணும் துடிப்பிழந்த மந்த நிலை தோன்றாதிருக்கும்.

மேலும், மன அமைதியோடும், சித்தத் தெளிவோடும் ஒரு சிந்தனைப் பாங்கை (விசாரம், கொள்கை ஆகியவற்றை) ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு அதை நம்முடைய சொந்த விசாரமாக்கி விட வேண்டும்; பிறர் விசாரம் அன்று. அவற்றைக் காந்திச் சிந்தனையாகக் கொள்ளாமல்; நம் விசாரமாக்கி விட்டால் மட்டுமே நாம் தன்னம்பிக்கையோடு அதைப் பின்பற்றவும், வழக்கத்தில் கொண்டு வரவும் இயலும். காந்தி வழியாகவே வரட்டும் விசாரம், வேண்டியமட்டும் ஒரு தரம் அதை விரும்பி ஏற்றுக் கொண்டு வீட்டால், பிறகு அது உங்களுடைய சிந்தனையாகி விட்டது. ஒருவனுடைய மகளை நீங்கள் காதலித்து, ஏற்றுக் கொண்டும் விட்டீர்கள். பிறகு அவள் உங்களுடையவள். அவளுக்கு நான் பொறுப்பல்ல; அவள் தந்தை தான் என்றால் அது முற்றும் பொறுப்பற்ற பேச்சன்றி வேறல்ல. காந்தியிடமிருந்து உங்களுக்குக் கிடைத்த விசாரம் எல்லாவற்றையும்

உங்களுடைய சொந்த விசாரமாக்கிக் கொண்டு மேல் நடக்க வேண்டியதே. அதை நம் ஆத்ம சாதனையாகக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் என்றும் சோர் வில்லை. ஊக்கம் தருவார் இல்லையே என்று தோன்றவும் தோன்றாது. என்றும் முழுத் தன்னம்பிக்கையோடு பணி யாற்றுவது சாத்தியமாகும்.

19 காந்திச் சிந்தனையின் உயிர்மூச்சு

கடைசி முறையாக 1945-ல் காந்தி சிறையிலிருந்து விடுதலையாகி வந்த பிறகு 'சமக்ர சிந்தனை' (ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் சிந்தனை) என்று பேசத்தலைப்பட்டார். 'சமக்ரமாக வேண்டும்' 'சமக்ரமாக வேண்டும்' என்று சொல்லி வந்தார். சமக்ரம் என்பது நாலைந்து துண்டுகளை ஒன்றோடொன்று ஒட்டுப் போட்டுத் தைத்து வைக்கிற விஷயம் அன்று. 'சமக்ரம்' தையல் வேலையல்ல; அது நெசவு வேலை. ஆக்கப்பணித் திட்டங்கள் யாவும் ஊடும் பாவும் போல குறுக்கும் நெடுக்கும் பின்னி வரவேண்டும். அப்போது தான் வலிமை நீடித்து நிற்கும்'' என்று இடைவிடாது சொல்லிக் கொண்டிருந்தார்.

தன்னாட்சி வந்தது. காந்திக்கு அதைப்பற்றி மகிழ்ச்சி இல்லை. தன்னாட்சி கிடைத்து விட்டது என்பது ஏதோ உண்மை தான். ஆயினும் அவர் விரும்பிய விளைவுகள் அதில் காணப்படவில்லை. கதர்-கிராமக் கைத்தொழில், அமைதி நிறுவும் பணி, அகிம்சைச் சிந்தனை ஆகியவை தன்னாட்சி வந்ததன் பயனாக உருவாயின என்னுமாறு அமையவில்லை. அவர் வாழ்க்கைக்கு இருபெரும் சிறகுகளாக அமைந்தவை இரண்டு விஷயங்கள். ஒன்று கதர்-கிராமத்கைத்தொழில் முதலியவற்றின் வாயிலாக மக்கள்தம் முயற்சி வாயிலாகவே பொருளாதாரத் துறையில் நலிவு, சுரண்டல் ஆகியவற்றினின்றும் விடுபடுவார்கள் என்பது. இரண்டாவது, அகிம்சை சத்தியாக்கிரகம் ஆகியவற்றின் வாயிலாக அரசியல் துறையில் சட்டத்தின் பிடியிலிருந்து விடுபட்டு மக்கள் தன்னாட்சி நிறுவுவர் என்பது. இவ்விரண்டு விஷயத்தில் அவருக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும்

உண்டாகவில்லை. ''தி லாஸ்ட் ஃபேஸ்'' என்று பியாரிலால் எழுதியுள்ள அற்புதமான நூலில் (பூர்ணாஹுதி - நவஜீவன் பிரசுரம்) இது பற்றிய விவரங்கள் நிறையக் காணக் கிடக்கின்றன. ஆதலால் கடைசிக் காலத்தில் அவர் வெகு தீவிரமாகச் சிந்தனை செய்து வந்தார். எல்லாவற்றையும் புதிய முறையில் தொகுத்துச் செப்பம் செய்ய வேண்டும் என்ற வழியில் அவர் சிந்தனை இயங்கிற்று.

புது முறையில் தொகுத்துச் செப்பனிட அவருக்கு வாய்ப்புக் கிட்டவில்லை

தம் கருத்தை நிறைவேற்ற அவருக்கு வாய்ப்பில்லாமற் போயிற்று. கடைசிக் காலத்தில் எல்லோரும் சேவாக் கிராமத்தில் ஒன்று கூடும்படியாக ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். தம்மைப் பின்பற்றுவோரை எல்லாம் அங்கே சேர்த்து வைத்து விஷயத்தை விளக்கிச் சொல்ல வேண்டும் என்பது அவர் நோக்கம். இது நடந்தேறவில்லை. கூட்டம் ஏதோ நடக்கத்தான் செய்தது - காந்தி இறந்த பிறகு. காந்தியின் மறைவுக்குப் பிறகுதான் அவருடைய தோழர்கள் எல்லோருக்கும் சேவாக்கிராமத்தில் வந்து கூடுவது சாத்தியமாயிற்று. அப்போது வழிகாட்ட காந்தியை நாம் விட்டு வைத்திருக்கவில்லை.

பாபு மறைந்த பிறகு என் கடமை என்ன என்பதைப் பற்றி நினைக்கலானேன். நான் இடம் பெயர வேண்டி இருக்கும் என்பது பற்றியும் சிந்தித்தேன். சேவாக்கிராமத்தில் நடந்த கூட்டத்தில் நேருவின் நிலை தெரிவதாயிற்று. அவர் கேட்டுக் கொண்டபடி (ஆசிரமத்தில்) நிராதரவாகி விட்டவர்களுக்குத் தொண்டு செய்ய பரீட்சார்த்தமாக ஆறு மாதம் தங்குவதாக அறிவித்தேன். அக்கூட்டத்தில் நேரு முதலிய அரசியல் தலைவர்களிடம் ஆக்க வேலையில் ஈடுபட்ட தலைவர்கள் பலர் அப்பணிகளுக்கு அரசினரின் உதவி தேவை என்பதை விளக்கிச் சொன்னார்கள். நானோ ''உங்களிடமிருந்து

நான் எவ்வித உதவியும் எதிர்பார்க்கவில்லை என்பதற்கு மேல் உங்கள் பணிக்கு நான் உதவ முடியுமானால் அதை மகிழ்ச்சியுடன் செய்கிறேன்'' என்று குறிப்பாக நேருவிடம் கூறியிருந்தேன்.

நாரதர் வேலையில் சர்வோதயத்தைக் கொண்டுவர இயலாது

தோழர்கள் சிலரின் உதவியோடு காந்தியின் மறைவால் திக்கற்றுப் போனவர்களுக்கு வாழ்வளிக்கும் பணியை மேற்கொண்டேன். அந்த ஆறு மாதத்துக்குள் நம் மக்களின் லட்சணம் நன்றாய்த் தெரிந்து போயிற்று. அந்த வேடிக்கையை வருணிக்க மட்டும் தனி ஒரு நூலே எழுதவேண்டியிருக்கும். எனக்கு இடைத்தரகு (லியேய்ஸான்) வேலை, நம் நாட்டுப் பாங்கில் சொன்னால் 'நாரதர்' வேலை. அங்கையச் செய்தியை இங்கே எட்டவிடல், இங்கையச் செய்தியை அங்கே எட்டவிடுதல் - இதுவே நான் செய்ய வேண்டியிருந்த பணி. பண்டித நேரு சொல்வது ஒன்றாயிருக்கும்; அதை அமல் செய்ய வேண்டியவர்களின் கருத்து முற்றும் வேறாக இருக்கும். இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டுவதாக இராது. ''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான்; நான் இந்த விஷயம் பற்றி உத்தரவிட்டு மூன்று மாதம் ஆகிறதே'' என்பார் நேரு; ஆனால் அது நடந்தேறியிராது. அப்படி இருந்தது அந்த இருட்டு நாட்டின் குருட்டு அதிகாரம்!

அக்காலத்தில் நான் நிறைய உழைத்தேன். அந்த ஆறு மாத காலத்தில் நம் கையில் ஒன்றுமில்லை, நாம் சாதிக்கப் போவது ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்தேன். நாரதர் வேலை செய்து சர்வோதயம் வராது என்பது நன்றாகத் தெரிந்தது. ஆறு மாதம் ஆனவுடன் நான் அந்த வேலையை விட்டுப் புறப்பட்டு என்னிடத்துக்கு வந்துவிட்டேன்.

நான் இனிச் செய்ய வேண்டியது என்ன என்று சிந்திக்கலானேன். பாபு மறைந்த பிறகு பாரத நாடு முற்றும்

சோர்வுற்றிருப்பது தெரியலாயிற்று. ஆக்கப் பணியாளர்கள் எல்லோரும் தைரியத்தைக் கைவிட்டு உட்கார்ந்தே போயினர். இனிப் பருப்பு ஒன்றும் வேகாது என்று கண்டு கொண்டதால் அவர்களுக்குச் சோர்வு. சிந்தனை தரை தட்டிப் போயிற்று இனி நாம் செய்கிறது, கொள்கிறது, ஒன்றும் இல்லை என்று அவர்கள் முடிவு கட்டி விட்டனர். ஒரு யுகம் முற்றுப் பெற்று அடுத்த யுகம் துவங்கி இருந்தது. அப்புதுயுகத்தில் அகிம்சைச் சிந்தனை மலர்கிறது. பழுக்கிற காரியம் இல்லை சர்தார் படேல் ஒரு விளக்கம் தந்திருந்தார். "காந்தியின் பேச்சையே மக்கள் மதிக்கவில்லை என்றால் உங்கள் பேச்சையா மதிக்கப் போகிறார்கள்? நாடு சுதந்திரம் அடைந்த பிறகு போருக்கு உதவும் வகையான (வார் பொடென்ஷியல்) தொழில்களை நாம் வளர்க்க வேண்டியிருக்கும்" என்பது அவர் தந்த விளக்கம்.

உலகுக்கு வார் பொடென்ஷியலை விடவும், பீஸ் பொடென்ஷியல் தேவை என்று நான் எண்ணத் தலைப் பட்டேன். அமைதியின் வலிமையோடு நடக்கும் பணிகளை நாம் தோற்றுவிக்க வேண்டியிருக்கும். இவ்வாறு அமைதியின் திறமைசான்ற பணிகள் யாவை எனச் சிந்திக்கலானேன்.

கடைசியில் ஒளி பிறந்தது

ஒளியைத்தேடி இருந்ததற்கிடையிலே நான் தெலிங்கானா போய்ச் சேர்ந்தேன். எங்கோ ஒளி நிச்சயம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அதுகாறும் அவ்வொளி என் கண்ணுக்குப் புலப்படவில்லை. அவ்வளவே, அது எனக்கு அங்கே கிட்டிற்று. அதை இறைவன் தந்த செய்தி எனக் கருதினேன். யாரோ அந்தராத்மாவில் இருந்து சொல்லிக் கொண்டிருந்தான் போலும் "உனக்கு அகிம்சையின்பால் பக்தி இருக்கிறதா இல்லையா? இதில் நீ பின்வாங்குவாயானால் அல்லது சந்தேகப்படுவாயானால் நீ அகிம்சை

முதலியவற்றின்பால் வைத்திருக்கும் நம்பிக்கையை விட்டொழிக்க வேண்டியிருக்கும்'' என்று.

அது அவ்வளவோடு நிற்கட்டும். அப்போதிருந்து பூதானத்தின் பணி துவங்கிற்று - ஒரு புதிய 'பிரதிவினை' அல்லது கிரியை துவங்கிற்று. பாரத நாட்டு மக்களையெல்லாம் அது தொட்டது. ஏக்கராக் கணக்கில் ஆயிரம், லக்ஷம் என்று நிலம் கிடைத்தது. பன்னிரண்டு லட்சம் ஏக்கரா நிலம் நிலமற்ற குடும்பத்தினருக்கு பகிர்ந்தளிக்கப் பட்டது. உச்ச வரம்பு (ஸீலிங்) முதலிய சட்டங்கள் வாயிலாகப் பங்கீடு செய்ததில் கூட இதைவிடக் குறைவாகத்தான் பிறருக்கு நிலம் கிடைத்துள்ளது.

ஊஞ்சலிடம் அன்று ஆரோகணம்-இயக்கம் அன்று புரட்சி

பூதானத்திலிருந்து கிராமதானம் உதித்தது. ஒட்டு மொத்தமான திட்ட இணைப்பு; தனியாரின் தானத்தால் அன்று. கிராமம் முழுவதும் தன் புருஷார்த்தம் என்று செய்து கொண்ட சங்கல்பத்தால், கிராம சமுதாயத்தில் ஏற்பட்ட ஒரு புது அமைப்பு, புத்துயிர்ப்பு, கிராமத் தன்னாட்சியை (கிராம சுயராஜ்யத்தை) நோக்கிச் செல்லும் ஒரு செயல் திட்டம்- இத்தனையும்சேர்ந்தது கிராமதானம். மெல்ல மெல்ல அது மலர்ந்தது. இப்போது அது கிராமதானம், வட்டாரதானம், மாவட்டதானம், நாட்டுதானம் என்ற எல்லையில் போய் நிற்கிறது, இதை ஊஞ்சலாட்டம் போன்ற இயக்கம் என்று வருணிக்காமல் 'ஏற்றம்' - ஆரோகணம் என்று வருணிக்கிறேன். ஏற ஏறப்பார்வையின் எல்லையும் விரிகிறது; புதுப்புதுக் காட்சிகள் கண்ணுக்குத் தெரிகின்றன அது போலவே செல்லும் பாதை மேலும் மேலும் கடினமாகி வருகிறது. 18, 19 ஆண்டுகளுக்குள் இவ்வளவு காரியம் நிறைவேறி இருக்கிறது. அப்படிச் சின்னஞ்சிறு விஷயமும் அல்ல இது. காங்கிரஸ் 1885ல் துவங்கிற்று. சுயராஜ்யம் என்ற சொல்

1906ல் கிடைத்தது. அதுவரை துன்புற்றோருக்கு உதவலும் அரசாங்கத்தை விமரிசித்தலுமே நடந்து வந்த பணி. 1906ஆம் ஆண்டு காங்கிரஸ் கல்கத்தாவில் கூடிற்று. "தன்னாட்சி இன்றி பாரத நாட்டு ஏழைகளுடைய துன்பத்தைக் களைவது சாத்திய மில்லை" தாதாபாய் நௌரோஜி கூறினார். இவ்வாறு சுயராஜ்யம் என்ற சொல் வந்து சேர 21 ஆண்டாயிற்று. பிறகு அச்சொல்லையே கோகலே, திலகர் முதலியோர் உருப்போட்டு வந்தனர். பிறகு காந்தி வந்தார். 1921ல் 'ஓராண்டில் சுயராஜ்யம் கிடைக்கப் பண்ணுவோம்" என்றார். ஓராண்டில் அது கிடைக்கவில்லை எனினும் ஒரு புது 'பாவம்' தோன்றிற்று. பிறகு 1947ல் தன்னாட்சி வந்தது—அதாவது காங்கிரஸ் தோன்றி 62 ஆண்டுகளுக்குப் பிறகு. அந்த கணக்குப்படி பார்த்தால் இந்த 18, 19 ஆண்டுக்காலத்தில் நடந்திருக்கும் பணி அப்படி ஒன்றும் சிறிதன்று. அகிம்சா பூர்வமான சமூக அமைப்பு பற்றிய சிந்தனை நிரம்ப மலர்ந்துள்ளது. அவ் வமைப்புக்கு மக்களாதரவு திரட்டப் பெற்றுள்ளது. "காந்தியின் காலத்தில்கூட பட்டிதொட்டிகளில் இவ்வளவு பெரியதோர் இயக்கம் என்றும் நடந்ததில்லை" என்கிறார். தீரேன்பாயி.

இவ்வாறு சர்வோதயச் சிந்தனை ஓரிடத்தில் வந்து தங்கி இருக்கிறது —பாடியிறங்கி இருக்கிறது. அதன் கடைசிப் பாசறை வெகுதூரத்தில் இருக்கிறது. கடவுளுக்குச் சித்தமானால் நம்முடைய அடிப்படைச் சிந்தனையை இது உயர்த்தும். கிராம சுயராஜ்யத்தைப் பற்றி பாபு கண்ட கனவு நனவாக இதனால் ஓர் அடிப்படை கிடைத்துள்ளது —ஒரு களம் தயாராகி உள்ளது. பாபுவின் அரைகுறையாய் போன ஆசை இதன் வாயிலாக நிறைவேறும் சாத்தியக் கூறுகள் தெரிகின்றன. அகிம்சா பூர்வமான சமூகத்தை நிறுவ, அடிப்படையிலிருந்தே துவக்கும் முயற்சியை மேற் கொள்ள ஒப்பற்றதொரு வாய்ப்பு நம் எதிரே வந்துள்ளது.

சர்வோதயச் சிந்தனையைப் போற்றி வருவோருக்கு ஓர் அழைப்பு!

ஸங்காத், சேதனு, த்ருதி (கட்டுடல் உணர்வு, உறுதி)

கீதையில் பகவான் சங்காத், சேதனு, த்ருதி ஆகியவை பற்றிக் கூறியுள்ளார். பகவான் 'க்ஷேத்ர'த்தை (உடலை) வருணித்திருக்கிறார். உடலுக்கு உருவம் உண்டு, பொறி புலன்கள் உள்ளன, மனம் உண்டு. இப்படித் தனித்தனியாக தத்துவங்களை விவரித்த பிறகும் உடலை முழுதும் வருணித்து விட்டதாக பகவானுக்கு நிறைவு வரவில்லை. ஆதலால் 'சங்காத்' என்ற ஒரு தத்துவம் உண்டு என்றார். சங்காத் என்றால் 'ஒன்றுயிணைதல்' என்று பொருள்.

பாபு பல ஆக்க வேலை நிறுவனங்களைத் தோற்றுவித்தார். ஆயினும் அவற்றின் பின்னுள்ள சிந்தனை முற்றும் ஒன்றோ டொன்று சுதிசேர்ந்திருக்கவில்லை. பலவகையான ஆக்கப் பணிகள் தனித்தனியாக நிகழ்ந்து வந்தன. எல்லாம் வேண்டிய அளவு பொறுத்தி இணைக்கப்படவில்லை. ஆதலாலேயே கடைசிக்காலத்தில் ஒருசேரப்பார்த்தல் (ஸமக்ரம்) என்ற கருத்தைப்பற்றிப் பேசிவந்தார், 'ஸங்காத்' (ஒருங்கிணைப்பு அல்லது கட்டுக்கோப்பு) இன்றி வேலை நடவாது என்பதைக் கண்டு கொண்டார். ஆதலால் மேற்கண்ட நிறுவனங்கள் யாவற்றையும் ஒரு சங்கமாக இணைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார். நாவை அறுத்து மேசை மீது வைத்தால் அது ஏதாவது பேசுமா? செவியை அறுத்து வைத்தால் அது சற்றுவது கேட்குமா? இவை ஒவ்வொன்றும் உடலோடு இணைக்கப் பெற்றிருக்க வேண்டும் என்பது கருத்து. அதைப் போலவே பணிகள் யாவும் ஒரே சரட்டில் கோத்தது போல் அமைய வேண்டும். கிராமதானத்தால் 'கிராமம், என்ற ஓர் அலகு (யூனிட்) கிடைக்கிறது. அதை அடிப் படையாக வைத்தே ஆக்கப் பணிகள் யாவற்றையும் எழுப் புதல் இயலும்.

பகவான் கீதையில் உணர்வு (சேதனு) என்ற ஒன்றும் தேவை என விளக்கி இருக்கிறுர். எல்லாம் ஒன்றுயிணைந் தாலும் உணர்வு இல்லையாயின் என்ன ஆகும். எல்லா ஆக் கப்பணிகளும் ஒன்றுயிணைந்தாலும் அவ்விணைப்பில் சமூகத்தை விரைந்து மாற்றியமைக்கும் ஊக்கம் இல்லையாயின் வேலை எப்படி நடக்கும்? ஆதலால் கிராமதான இயக்கத்தை ஒரு புரட்சி வெளிச்சம் காட்டும் பந்தமாகக் கொண்டால் நம் பணியில் ஓர் உணர்வோட்டம் உண்டாகும்.

கட்டுக்கோப்பு (ஸங்காத்) வந்தாயிற்று; உணர்வும் வந்து விட்டது. அப்படியும் வருணனை முழுமை பெறவில்லை. பகவான் அதில் உறுதியை (தீரத்தையும்) அதோடு சேர்த் தார். உறுதியோடு, இடையருது பணி செய்ய வேண்டும். தொடர்ந்து பணி செய்தன்றி புரட்சி நடவாது. லெனினும் காந்தியும் புரட்சி செய்தவர்கள், லெனின் புரட்சிக்கு இரண்டு நாள் போதும் என்று ஒதுக்கி வைத்தாரா என்ன? காந்தி புரட்சிக்கு இரண்டு நாள் தவணை தந்திருக்கிறேன் என்ரு சொன்ஞர்? 1901-ஆம் ஆண்டு வாக்கில் அவர் 'ஹிந்த் ஸ்வராஜ்' என்ற நூலை எழுதினுர். 'இது என் கனவு மட் டுமே. ஆனுல் இதை நனவில் உருவாக்க என் உயிரையே அர்ப்பணித்திருக்கிறேன்' என்ருர். அப்போது ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலம் இதற்காக உழைத்தார். ஆதலால் நாமும் கிராமத்தை அடிப்படையாக வைத்து உணர்வோடும் உறுதியோடும் ஒருங்கிணைந்த பாங்கோடும் பணித்திட்டங் களை நடத்தி வைக்க வேண்டியுள்ளது. அவ்வகையில்தான் அகிம்சாபூர்வமான சமூக அமைப்பை நிறுவுதல் இயலும்.

நம் பணிக்கு அன்பளிப்பு மக்கள் ஓட்டு (வாக்கு)

''இன்று உங்கள் கிராமதானமும் உங்கள் பீகார்தானமும் எல்லாம் காகிதத்தில் தானே இருக்கிறது'' என்று பலர்பேசி வருகின்றனர்! சரிதானே அவர்கள் சொல்வது. அந்த ஒப்புதல் பத்திரத்தில் இருப்பதை நடை முறையில் கொண்டு வர

வேண்டும். ஓட்டு திரட்டி தேர்தலை நடத்தி ஆட்சி நடத்துகிறார்களே, அது என்ன? என்று கேட்கிறேன்? எல்லாம் காகிதத்தின் வலிமை தானே. மக்களாட்சி நாடகம் நடந்திருக்கிறது, கார் வைத்து வருந்தி அழைத்துப் போவார்கள், ஒருநாள் சாப்பாடு போடுவார்கள், ஓட்டுப் பெட்டியில் ஓட்டுச்சீட்டு என்ற சிறிய காகிதத் துண்டைப் போடச் சொல்வார்கள். உங்கள் கண் முன்னேயே சூாரியம் நடந்தேறி விடுகிறது

கிராமதான விஷயத்திலோ என்றால், மக்கள் தாமாகவே ஒரு சங்கல்பம் செய்து கொள்கிறார்கள். இதற்கிடையில் பரந்த அளவில் ஒரு சமூக சம்பந்தமான ஸங்கல்பம் நடந்தேறி இருக்கிறது. அதை நடைமுறையில் கொண்டுவரும் பணி எஞ்சியுள்ளது. கிராமசபை அமைத்து, எல்லோர் இசைவையும் பெற்று வேலைகள் நடக்க வேண்டும். நில உரிமைப் பட்டா கிராம சபையின் பெயரில் பதிவாக வேண்டும். நிலத்தின் இருபதில் ஒருபங்கை நிலமற்றோருக்கு தானமாகக் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொருவர் வருமானத்திலிருந்தும் நாற்பதில் ஒரு பங்கைக் கொண்டு கிராமக் கருவூலம் (நிதி) நிறுவ வேண்டும். ஏழைகளுக்கு ஊர் பொதுவில் உதவியும், போலீஸ், நீதி மன்றம் கச்சேரி முதலியவற்றின் உதவி இன்றி காரியங்கள் நடக்க இயக்கம் ஒன்று நடத்த வேண்டி உள்ளது. கிராமத்துக்கு சாந்தி சேனை (அமைதிப் படை) நிறுவ வேண்டும். ஊரில் அமைதி நிலவ வேண்டும். சண்டை சச்சரவுகள் நடக்கலாகாது. அப்படி நடந்து விட்டால் அதன் விசாரணை கிராமத்திலேயே நடக்க வேண்டும். இவ்வளவும் வெகு விரைவாக நடக்க வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை நாம் செய்து முடித்தால் பேராற்றல் பிறக்கும். இப்போது நாம் வாக்குச் சீட்டுகளைப் போடும் முறையில் மேற்கண்டது போன்ற மக்கள் சக்தி என்றும் பிறவாது.

யூனியன் அஃப் ஸர்வோதய ரிபப்ளிக்ஸ்

கிராமதானம் அமலுக்கு வராமல், கிராமங்ளைத் தொகுக்கும் திட்டம் நிறைவேறுமல் ஒருங்கிணேந்த பணிக்கு ஓர் அடிப்படை கிடைக்காது. அதுவுமின்றி வர இருக்கும் யுகம் உலக சமஷ்டி அரசியலின் "காலம்". பாரதநாடு அதன் ஒரு பகுதி அல்லது மாகாணமாக இருக்கும்; மஹாராஷ்டிரம் அதன் ஒரு மாவட்டம்; அதன் கிராமங்கள் எல்லாம் 'மஜராக்களின்' தொகுப்பாக அமையும். இப்போது உட்கிடை கிராமங்கள் மிகச்சிறியவை, அவற்றை கிராமம் என்ற அளவுக்கு விரிவாக்க வேண்டும். ஆதலால் முதலில் கிராமதானத்தைச் செய்து முடித்து, கிராமத்தையே ஓர் 'மஜரா' உட்கிடையாக்கிய பிறகே உலக அமைதியைப் பற்றிப் பேசுதல் சாத்தியம். அந்நிலேயில் தான் நாம் இந்த யுகத்தில் வாழும் தகுதி பெற்றவர்கள் ஆவோம். கிராமத்தில் அமைதி உண்டானுல் அது உலக அமைதிக்கு ஊட்டம் கொடுப்பதற்கு ஒப்பாகும். ஆதலால் ஒரு பக்கம் ஜெய் ஜகத், மறுபக்கம் கிராமதானம் என்ற கண்ணேட்டத்தோடு சிந்திக்க வேண்டி இருக்கும், கிராமச் சமூக அமைப்பு இன்றி மற்றென்றும் நடந்தேருது. யு. எஸ். எஸ். ஆர் (யுனேடெட் ஸ்டேட்ஸ் அஃப் ஸோவியட் ரிபப்ளிக்ஸ்) என்றுள்ளது போல ஒவ்வொரு கிராமத்தையும் சர்வோதய ரிபப்ளிக் ஆக்க வேண்டும். பிறகு யூனியன் அஃப் ஸர்வோதய ரிபப்ளிக்ஸ் உருவாகும். அவ்வாறமைந்த பிறகே பீஸ் பொடென்ஷியல் - அமைதியின் தீவிரம் உள்ள வாழ்வு, அதற்குரிய 'பாவனே', பாங்கு, நிறுவன உறுதிப்பாடு, அமைதியின் வலிமை என்பவையெல்லாம் வெளிப்படும்.

இன்றே 'மக்கள் நல அரசியல்' (வெல்ஃபேர் ஸ்டேட்) சமூக நல அரசியல் (ஸோஷலிஸம்) பொதுவுடமை அல்லது சமதர்மம் (கம்யூனிஸம்) ஆகிய எல்லாவற்றிற்கும் 'சாங்க்ஷன்' - ஆதாரம் - படை வலிமையே. அவையாவும் எதேச்சாதிகார அரசுகளே யாகும். எல்லாம் மலேப் பாம்பைப்

போல உலகத்தை வளைத்துச் சுற்றி நெரித்துக் கொண்டிருக்கின்றன. அவை படை வலிமையில் மட்டும் நம்பிக்கை வைப்பவை. வெளிநாட்டுப் படையெடுப்பு, உள்நாட்டுக் கலகம் ஆகியவை பற்றிய அச்சம் காரணமாக மக்களாட்சியின் (ஜனநாயகத்தின்) ஆதாரமும் படை வலிமையே. படையின் வலிமையைச் சார்ந்து நடக்கும் மக்களாட்சி மக்களாட்சியே அன்று. மக்களாட்சியின் ஆதாரமாகப் படை வலிமை இருக்கும் வரை கம்யூனிசத்தின் பொருளாதாரக் கொள்கையான 'அரசுடைமையாக்குதலை'த் தவிர்க்க முடியாது. ஜனநாயகத்திலும் ஒரு மனிதர் கையில் அதிகாரத்தை எல்லாம் ஒப்புக் கொடுத்தாலும் படை பலத்தையே நம்புதலும் நிகழும். இப்படி ஒரு 'விஷமசக்கரம்' தோன்றும். இன்று எல்லாவற்றிற்கும் முற்று முடிந்த ஆதாரமாக இருப்பவை படைகளும் படைக்கலன்களுமேயாம். அதிலிருந்து உலகத்தை விடுவிக்கவேண்டிய பணி உள்ளது. இத்தகைய சிந்தனைக்கு ஆக்கம் தருபவை இந்த கிராமதானப் பத்திரங்கள், மிகுந்த ஒரு 'பீஸ் பொடென்ஷியல்' – அமைதி தரும் ஆக்கம் அப்பத்திரங்களில் நிறைந்துள்ளது.

பாபுவின் ஆன்மா வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறது

பாபுவின் ஆன்மா நம்மையெல்லாம் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அவருடைய ஆன்மா உலகின் எந்த மூலையில் அல்லது முடுக்கில் இருக்கிறது என்பதை அறியேன். முக்தர்களின் ஆன்மா கடவுளில் கலந்து விடுகிறது. அவ்வாறு பாபுவின் ஆன்மா கடவுளில் கலந்து விட்டது என்றால் கடவுளே நம்மீது கண்வைத்து வழிபார்த்திருக்கிறான் எனல் வேண்டும். கடவுளுக்குள் இருந்து கொண்டு பாபு நம்மைக் கண்காணித்து வருகிறார் என்பது இதன் பொருள். பாபுவின் ஆன்மா கடவுளிடத்தில் கலக்கவில்லை, 'வாசனை'

காரணமாக வேறெங்கோ இருக்கிறது என்றாலுமே அது நம்மையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறது. கடவுள் ஏதோ நம் கூடவே இருக்கிறார் என்றே எனக்குத் தோன்றுகிறது. விசுவ காந்தியின் வழியை பாரதநாடு உலகுக்குக் காட்ட வேண்டும் என்பது கடவுளின் இச்சை- விருப்பம்.

சந்தேகமற அதிகாரம் மாறியாக வேண்டும் என்பதே என் கருத்து

இந்நிலைக்கு மக்கள் விழித்தெழ வேண்டும். "நம் தலை விதி பிறர் கையிலா?" இந்தக் கருத்தை வைத்தே நாம் தாக்க வேண்டும். "அதிகாரம் மாற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று என்னை ஒருவர் கேட்டார். "ஆம் நிச்சயம் விரும்புகிறேன்" என்று அவருக்குப் பதில் சொன்னேன்.

தன்னாட்சி வருவதற்கு முன் இருந்த அதிகாரம் மேலோட்டமானது. இரண்டு மூன்று லட்சம் ஆங்கிலேயர்கள் இருப்பார்கள். இவ்வளவு தொலைவு வந்து இவ்வளவு பெரியதொரு நாட்டை ஆண்டனர். ஆதலால் அவர்கள் தம்மைப் பொறுத்த வரையில் விழிப்போடிருப்பது இன்றியமையாததாயிற்று. நாம் அவர்களைப் பார்த்து "க்விட் இன்டியா" — ஓடிப்போ இந்திய நாட்டைவிட்டு - என்று சொன்னவுடன் அவர்கள் போக வேண்டியதே ஆயிற்று. இவ்வகையாகப் பார்க்கும் போது நம் இயக்கம் ஓர் 'எதிர் மறை' இயக்கமாகவே அமைந்தது என்பது புலப்படும். இப்போதோ மக்கள் சக்தியே மக்களாட்சியாக உருமாற வேண்டியுள்ளது. இதுவே இப்போதைக்கு முக்கியமான சிந்தனை. 'உங்கள் தலைவிதி பிறர் கையில் இருக்கிறது' என்று மக்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். இதற்கு நாம் தந்திருக்கும் பெயர் 'நீதி' என்பது. இந்த குறிக்கோளைக் கண்முன் வைத்து, இடையறாது உழைத்து வந்தோமாயின் புகழுறு பெரும் விளைவுகள் உண்டாகும்.

'சர்வோதய வேலைத்திட்டம்' என்று காந்தி தந்திருப்பதற்குத் தேவையான அடிப்படையை கிராமதானம் அமைத்துத் தரும் என்பது என் உறுதியான நம்பிக்கை. இந்த அஸ்திவாரத்தின் மீதே சர்வோதய மாளிகை எழும்பி நிற்கும். ஆதலால் காந்தியைப் போற்றுகிறவர்கள் தம் முழு வலிமையையும் இதற்குத் தர வேண்டும். இதுவே காந்திச் சிந்தனையின் உயிர் மூச்சு என்றுணர வேண்டும் அகிம்சையை ஆதாரமாகக் கொண்ட சமூக அமைப்பு தோன்றினால்தான் காந்திச் சிந்தனை உயரும்.

பாபு காலமான பிறகு 1948ல் சேவா கிராமத்தில் காந்திக் குடும்பத்தினர் எல்லோரும் ஒன்று கூடின போது பல முகங்கள், முன்னர் பார்த்தறியாத முகங்கள், 'ஒரே குடும்பக் கூட்டமாக இருந்தும் இதுதான் முதல் சந்திப்பாக இருக்கிறது' என்று கூறினேன். அந்தக்குற்றம் அங்கு கூடியிருந்தவர்களுடையதோ பிறருடையதோ அன்று; அந்த பரிவாரங்களுக் கெல்லாம் தலைவராக இருந்தவரின் குற்றம்'. குடும்பத்தினர் யாவரும் ஒருவரையொருவர் தெரிந்து கொள்ளும் வாய்ப்பில்லாமற் போகும் அளவு பெரிது அவர்தம் குடும்பம் - அவ்வளவு பரந்தது அவர் பரிவாரம்.

அவருடைய அன்புப் பார்வையின் இதமான கதகதப்பு வெகு தொலைவிலுள்ளவர்களுக்குக் கூட கிடைத்து வந்தது. அன்பு அவரிடம் ததும்பிற்று. தனித்தனியாகப் பலர்பால் அவர் அன்பு வெளிப்பட்டது. தம்மோடு பழகியவர்களைக் காணும்போதெல்லாம் அவர்கள் குடும்பத்தினர் நலனை யெல்லாம் அவர் விசாரிப்பார். குடும்பத்தினர் ஒவ்வொருவருடைய பெயரும் அவருக்கு நினைவிருக்கும்.

தொட்டதெல்லாம் பொன்னாகும் 'சித்தர்களின் மந்திரக் குளிகை' போன்றவர் பாபு. அவர் ஸ்பரிசத்தால் இரும்பு பொன்னாகும்; மண்ணிலிருந்து மகான்கள் தோன்றுவர். அவருடைய ரஸவாதத்தால் சிறியவர்கள் பெரியோர் ஆவர். காட்டுமிராண்டிகள் 'நாகரீகம்' அடைவர்.

என் போன்ற அருவருக்கத்தக்கவனைத் தொண்டனாக மாற்றினார்

ஒரு கொள்கையோடுஅவரிடம் போய்ச்சேர்ந்தவன் நான். அருவருப்புக்குரிய என் போன்ற ஒருவனை பலர் விரும்பத்

தக்கவனாக மாற்றவில்லை என்றாலும் ஒரு தொண்டனாக மாற்றியிருக்கிறார் என்பது முற்றும் உண்மை. என்னுள்ளே எரிந்து கொண்டிருந்த கோபத்தின் 'ஜ்வாலாமுகி'யை அவிக்கும் வல்லமையும் பிறவாசனைகள் பலவற்றைக் களையும் ஆற்றலும் அவர் ஒருவரிடம் தான் இருந்தது. இன்று நான் ஏதோ ஒரு நிலையை அடைந்திருக்கிறேன் என்றால் எல்லாம் பாபுவின் ஆசீர்வாத மகிமைதான். பாபுவின் திருவடிகளைச் சார்ந்து நான் பற்பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

முதன் முதலாக பாபுவின் ஆசிரமத்துக்குப் போனவுடன் அவர் எனக்குக் காய்கறி நறுக்கக் கற்பித்தார். நாங்கள் முதலில் நிறையப் பேசினோம், அதோடுசரி. பிறகு வேலையைத் தவிர மற்றொன்றைப் பற்றியும் பேசியதில்லை. பாபுவின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருப்பேன். ஒருக்கால் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்ததற்கிடையே 'இதென்ன தரக்குறைவான பேச்சு-அசிங்கமான பேச்சு', என்றார். அப்போது நான் 'அல்ல அல்ல இது பக்தியின்பேச்சு', என்றேன் குறுக்கிட்டு பாபுவும் 'நீ சொல்வது சரிதான்; இது ஞானப் பேச்சு, பக்தியின் பேச்சு' என்றார். அப்போதுதான் கூடி இருந்தோர் பலருக்கும் இவனும் ஒரு 'ஆள்'தான் என்று தோன்றிற்று. அதற்கு முன் எல்லோரும் 'இவன் ஒரு பிணம்' என்றுதான் நினைத்திருந்தனர் என்னைப்பற்றி.

அது அவர்கள் குற்றமும் அன்று. அப்போதெல்லாம் நான் பெரிய 'சிடுமூஞ்சி'. வேலையிலேயே மூழ்கி இருப்பேன், ஒருவரோடும் வெட்டிப் பேச்சு பேசுவதில்லை. யாரேனும் வந்தால் 'என்ன சேதி' என்று கேட்பேன்.

'உங்களைத் தரிசிக்கத்தான்'என்று பதில் வரும் சாதாரணமாக. அவர் அதைச் சொல்லி முடிந்ததும், சரி தரிசனம் ஆயிற்றே என்ற நினைப்பில் செய்து கொண்டிருந்த வேலையில் மீண்டும் ஈடுபட்டுவிடுவேன். வந்தவர் பின் என்ன

பேசுவார்? அந்த அப்பாவிக்குத் திரும்பிப் போவதைத் தவிர வழியிராது, ஏதேனும் பேசவேண்டி இருந்தால் சந்தித்த உடனே பேச வேண்டியது தானே. தரிசனத்துக்கு வந்தேன் என்றால் அதோடு முடிந்து விடுகிறது விஷயம், தரிசனமோ செய்தாயிற்று. மிச்சம் சொச்சம் என்று ஏதேனும் இருக்கிறதா என்ன?

பாபு ஒருபக்கம் என்னைப்பற்றிப் பிரசாரம் செய்வதோடமையாது, அவர்களை என்னிடம் அனுப்பவும் செய்வார். நான் பவுனருக்குப் போன பிறகு, தலைவர்கள், அறிஞர்கள் சிந்தனையாளர்கள் யாரேனும் சேவாகிராமத்துக்கு வந்தால் பாபு அவர்களிடம் 'நீங்கள் விநோபாவைச் சந்தித்து விட்டீர்களா? இல்லையானால் உடனே அவரைச் சந்திக்க வேண்டும்'' என்பார்.

ஒருநாள் தக்கார் ஒருவரை பாபு என்னிடம் அனுப்பி வைத்தார். பாரதநாட்டின் பெரும் புரட்சிக்காரரர் என்று பெயரெடுத்தவர் அவர். பாபு சொன்னாரே என்று கால் நடையாகவே வந்திருந்தார் என்னைக்காண. சேவாகிராமத்திலிருந்து இரண்டு மூன்று மைல் தொலைவிருக்கும் பவுனர் ஆசிரமத்திற்கு. நடந்து வந்ததால் சற்றுக் களைத்திருந்தார். நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்தேன். தற்செயலாகப் பார்வையை நிமிர்த்திய போது வந்தவர் நிற்பது கண்ணில் பட்டது. ''வந்த காரியம் என்ன ?'' என்று வினவினேன்.

'சாதாரணமாகத்தான். தரிசனம் செய்ய வந்தேன்' என்றார்.

பிறகென்ன, வேறு பேச்சு ஒன்றும் நிகழவில்லை. சிறிது நேரத்தில் என் கை வேலையில் ஈடுபட்டு விட்டது; பார்வை அதில் பதிந்தது. வந்தவர் மேலும் நின்று கொண்டே இருந்தார். ஆனால் ஒன்றும் பேசவில்லை. திரும்பிப் போய்

பாபுவிடம் சொன்னாராம் 'போயும் போயும் என்ன மாதிரி ஆளிடம் ஐயா என்னை அனுப்பி வைத்தீர்கள். அவர் என்னிடம் பேசக்கூட இல்லை', என்று.

அன்பின் இனிய தேன் துளி தடவி விளக்க வேண்டியுள்ளது

பாபுவுக்கு விஷயம் புரிந்து விட்டது. 'நீங்கள் போன போது என்ன செய்து கொண்டிருந்தார்?

'மண்ணை வெட்டிக் கொண்டிருந்தார்.

'பிறகு அலுத்துக் கொள்ள என்ன இருக்கிறது?

விநோபா தன் வேலையைச் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் உங்களோடு எப்படிப் பேச இயலும். ரொம்ப நல்ல ஆளய்யா நீங்கள். யாரையேனும் பார்க்கப் போகு முன் கொஞ்சம் பொழுது ஒதுக்கக் கேட்டிருக்க வேண்டாமா?'

இப்படி ஒரு வழியாக பாபு அவரைச் சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தார். பிறகு நான் பாபுவைச் சந்தித்த போது அந்த நிகழ்ச்சியை நினைத்து "என்னப்பா நீ. யாராவது வந்தால் அவர்களை வரவேற்றுப் பேசுவதில்லையா? அதுவும் வேலையில் ஒரு வகை தானே" என்று கூறி என்னைக் கடிந்து கொண்டார்.

இனிய தேன்துளி தடவி நம் குற்றத்தை நமக்குச் சுட்டிக்காட்டி உணரவைப்பார் பாபு. அது அவர் வழக்கம் அவருடைய கைபட்டு கைபட்டுமெல்ல மெல்ல திருந்தினேன். அவருடைய திருவடிகளிலே அமர்ந்துதான் அருவருக்கத் தக்க நான் தொண்டனாக உருவாகி இருக்கிறேன்.

அடக்கத்துடன் பேசும் பயிற்சி கிட்டிற்று

ஓர் எடுத்துக் காட்டு. ஒப்புக்குப் பேசுவது என்பது என் தலையில் எழுதவேயில்லை. சிறுபிராயம் முதல் இன்றுவரை அது

பிறவிக்குணமாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. சிறுவனுக இருந்தபோதும்சரி, மாணவப் பருவத்திலும் சரி, பிறகு ஆசிரமத்தில் தங்கி இருப்போரிடையிலும் சரி. அதற்கும் பிறகு மக்கள் என்னும் அந்த மகேசன் முன்னிலையிலும் சரி. ஓயாது பேசுவதும் விவாதிப்பதுமாகவே இருந்திருக்கிறேன், எப்படி மனதுக்குத் தோன்றுகிறதோ அப்படி சகஜமாகவே பேசி வந்திருக்கிறேன். ஆனல் முன்பெல்லாம் பேச்சுக்கு அங்குசம் இடும் வழக்கம் இல்லை. மனத்தில் வந்ததைப் பேசித்தீர்த்து விடுவேன். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவன் அல்ல நான் என்பது என் நண்பர்களுக்குத் தெரியும். ஆதலால் என்னதான் தாக்கினுலும் யார் மனமும் துன்புற நேர்ந்ததில்லை.

பாபுவோடு தொடர்புண்டான பிறகு மெல்ல மெல்ல பேச்சுக்கு அங்குசம் இடுதல் தேவை என்பதை உணர்ந்தேன். குறிப்பாக பிரார்த்தனையின் போது கீதையைப் பற்றியோ அந்தக்கணம் மனத்தில் தோன்றும் விஷயம் ஏதாவது ஒன்றைப் பற்றியோ பாபு என்னைப் பேசச் சொல்லும் போதெல்லாம் பெரும் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறேன். பல தடவை அவர் முன்னிலையில் பேச நேர்ந்திருக்கிறது. அவர் ஆசிரமத்தில் இல்லாத போது நான் பேசுவதுண்டுதான். ஆனல் தொடர்ந்து நான்கைந்து நாட்களிடையில் ஏதோ ஒரு நாள் அவர் பேசுவதும் ஏனைய நாட்களில் என்னைப் பேசச் சொல்வதும் உண்டு. பாபுவே சபையில் ஒருவராக இருந்து விட்டால் சொல்வதையெல்லாம் குறிப்பிட்ட சில நிமிடங்களுக்குள் பேசி முடித்து விடவேண்டும். அதன் வாயிலாக அடக்கத்துக்கு அழகானதொரு பயிற்சி எனக்குக் கிடைத்தது. சிலகால் கடுமை தோன்றும் சொல் ஏதேனும் பேசி விட்டேன் என்ருல் ஆசிரமத்தார்களில் யாராவது பாபுவிடம் போய் எனக்கெதிராகப் புகார் செய்து சண்டை பிடிப்பார்கள். ஆயினும் பாபு என்னை ஒருபோதும் மட்டம் தட்டியதில்லை. அவர்களிடமிருந்து என்னைத் தப்ப

வைக்கவே முயல்வார். என்னைத் தாங்கும் வகையில் அவர் வாதித்தது பற்றியெல்லாம் பிறகு எனக்குத் தெரிந்தபோது அப்படி அவர் செய்தது கூட நல்லதல்ல என்று நினைத்திருக்கிறேன். இவ்வாறாக, தன்னடக்கத்துடன் பேசுதல் எனக்குக் கைவந்தது.

பாபுவிடம் போய்ச் சேர்ந்தபிறகு ஒழுங்காகப் பிரார்த்தனை செய்யத் தலைப்பட்டேன். இன்று வரை அது தவறாமல் நடந்து வருகிறது. அதனால் நான் பெற்ற பேறு பெரிது. பிரார்த்தனையின் போது தன்னை மறந்து கடவுளிடத்தில் ஒன்றிவிடல், உடனிருப்பவரோடு ஐக்கியமாகும் அனுபவம் உண்டாதல் என்ற வழக்கமெல்லாம் பாபுவினால் தான் எனக்கு வந்தன.

சேவையின் தாகமே உண்டாயிற்று

பாபுவின் அருகில் இருக்க இருக்கச் சேவை செய்ய வேண்டும் என்ற தாகமே எனக்கு உண்டாயிற்று. சேவையைக் கடவுள் வழிபாட்டுக்குரிய ஒரு சாதனம் என்றே கருதுகிறேன். கடவுளை வழிபடுவதன் வாயிலாக என் ஆன்மாவுக்கு அமைதி கிட்டுகிறது. பாபு இப்போது இருந்தால் அல்லது நான் பிரபல்யம் அடையாதிருந்தால் சேவையிலேயே ஒன்றிவிட்டிருப்பேன். கடைசியாக நான் சிறையிலிருந்து வெளிவந்த போது இருபதாண்டுக்காலம் தோட்டி வேலை செய்வது என்ற முடிவோடு வெளிவந்தேன். இருபதாண்டுக் காலத்தில் ஒரு தலைமுறை உருவாகிறது என்பதே என் முடிவுக்குக் காரணம். அக்காலத்தில் நான் தோட்டி வேலையை மிகுந்த ஏகாக்கிரத்தோடு செய்து வந்தேன் தோட்டி வேலையோடு வேறு சில விஷயங்களும் போதிக்கப்பட்டு வந்தன. சிறுவர்கள் என்னிடம் வந்து சொல்வார்கள்: ‘‘பாபா, இன்று நாங்கள் மலங்கழித்த பிறகு அதன் மேல் மண்ணைப் போட்டு மூடினோம்; சரிதானே?’’ என்பார்கள். பிறகு அதைப் பார்க்கச் செல்வேன். ஒரு

பிள்ளையார் சதுர்த்தி நாள். அன்று ஊர் முழுவதும் மிகத் துப்புரவாக இருந்தது. எனக்கு யாரும் ஒரு வேலையும் பாக்கி வைத்திருக்கவில்லை. அதற்கு முன்தினம் ஊர்ப்பெண்கள் எல்லோரும் கூடி முடிவு செய்து விட்டார்களாம் - மறுநாள் புனித நாள் ஆதலால் தோட்டி வேலையைத் தாமே செய்வதென்று!

இவ்வாறு சேவையிலேயே மூழ்கி இருந்தேன். இந்த சேவைத்தாகமும் கூட பாபுவினால்தான் எனக்குண்டாயிற்று. இதையெல்லாம் நான் எண்ணும்போது பாபுவின் உருவம் என் மனக்கண்முன் நிற்கிறது. எத்தனை வாத்ஸல்யம் அவருக்குத்தான் என்னிடம்! என் தலைமீது, என் உள்ளே, வெளியே, சூழ எல்லாம் தம் ஆசிகளைப் பொழிந்திருக்கிறார். உள்ளார்ந்த அன்போடு என்னை ஏந்திக் காத்து வந்திருக்கிறார்.

அவருடைய எல்லையில்லாத அன்பு நமக்குக் கிடைத்துள்ளது

1938 ஆம் ஆண்டுச் செய்தி இது. அப்போது என் உடல் மிகவும் நலிந்திருந்தது. எடை 88 ராத்தலுக்கு இறங்கி விட்டது. கடவுளிடம் போய்ச் சேரவேண்டிய கட்டம் வந்து விட்டதோ என்று நினைக்கலானேன். ஆதலால் மனம் தெளிவாகவே இருந்தது. நண்பர்கள் பெரிதும் துயருற்றனர். வழக்கு பாபுவிடம் போயிற்று. எனக்கு சம்மன் வந்தது. நானும் 'ஆஜ'ரானேன். 'என்னிடமே வந்து இரு. நான் உனக்கு வேண்டிய பணிவிடைகள் செய்கிறேன்' என்றார் பாபு.

'உங்கள் சேவையில் எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. உங்களுக்கு ஐம்பது வேலை. அதில் ஒன்று இந்தப் 'பண்டிதம் பார்த்தல்', அந்த சேவையைப் பெற ஏற்கனவே ஐம்பது பேர் நோயாளிகள். அதோடு நான் ஒருவன். இந்நிலையில் என்ன உருப்படப் போகிறது?'

பாபு சிரித்து விட்டார் 'சரி, டாக்டரிடம் போயேன்'.

'அதைவிட எமனுடைய நாட்டுக்குப் போவது மேல்' என்றேன்-

'சுகவாஸஸ்தலம் ஏதேனும் ஒன்றுக்குப் போய் வாயேன்' என்றவர் வெவ்வெறிடங்கள் பலவற்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். ஒவ்வோர் ஊரையும் உற்சாகத்தோடு வருணித்துக் கொண்டே போனார்.

'பவனாரில் ஜம்னாலால்ஜியின் பங்களா இருக்கிறது-இலவசமாக இடம் கிடைக்கும். அங்கே போய்த் தங்கப் போகிறேன்' என்று என் முடிவைத் தெரிவித்தேன்.

'மிக நல்லது. ஏழைகள் பெரிய சுகவாஸஸ்தலங்களுக்குப் போய்க் காற்று வாங்கக் கட்டுபடியாகுமா?' என்றார். (முதலில் இந்த விஷயம் அவருக்கு மறந்து போய் விட்டது போலும்!) 'ஆனால் ஒன்று. பவனாரில் சிந்திப்பதை எல்லாம் விட்டு நிம்மதியாக இருக்க வேண்டும். விசாரம் எல்லாம் ஒதுக்கி வைக்க வேண்டி இருக்கும். ஆசிரமம், வேலை என்றெல்லாம் மனத்தை அலட்டிக் கொள்ளக்கூடாது'.

'சரி அப்படியே செய்கிறேன்,' என்றேன்.

நடந்து செல்ல முடியாத அளவு உடல் சோர்ந்திருந்தது. ஆதலால் காரில் போகத்திட்டமிட்டேன். பவனாருக்கு (சிவப்பு பங்களாவுக்குப்) போகும் வழியில் ஆற்றுப் பாலத்தைத் தாண்டியவுடன் பாபுவிடம் வாக்களித்திருந்தபடி ''ஸந்நியஸ்தம் மயா, ஸந்நியஸ்தம் மயா, ஸந்நியஸ்தம் மயா' (விட்டேன், விட்டேன், விட்டேன்) என்று மூன்று தரம் சொன்னேன். அது நான் சூன்யாவஸ்தை என்பதைப் பழகி வந்த காலம். மணிக்கணக்காக சூன்யாவஸ்தையிலே இருந்து வந்தேன். ஊட்டம் மிகுந்த உணவை உட்கொண்டேன். பாலின் அளவை உயர்த்தினேன். மனதில் சிந்தனை என்பது ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. எவ்வித விசாரமோ, சிந்தனையோ இல்லாத, இனிமையும் அமைதியும்

இளைந்த மனத்தோடு சூன்யாவஸ்தையிலேயே பொழுது முழுவதையும் கழித்து வந்தேன். பத்து மாதத்தில் எடை 128ஆக உயர்ந்தது. இதிலும் கூட அடிப்படையாய் இருந்தது பாபுவின் அன்புக்கட்டளையே.

அவர் ஆணைகள் எனக்கு சிரமேற் கொள்ளத்தக்கவை

பாபுவைப்பற்றி இத்தகைய நினைவுகள் பல என் மனத்தில் எழுகின்றன. அவரிடம் போய்ச் சேர்ந்தபிறகு தொடர்ந்து அவர் திருவடிக்கீழ் அமர்ந்து பணிசெய்ய கடவுள் எனக்கு அறிவைத்தந்தருளினார். அவர் மறைவுக்குப் பிறகும் வேறு விதமான எண்ணம் உண்டாகவில்லை. என் வாழ்க்கை முழுவதையும் நான் அவர் பாதங்களில் அர்ப்பணித்து விட்டேன். எந்தக்கணமும் அவர் ஆணைகள் எனக்குச்சிரமேற் கொள்ளத் தக்கவையாயிருந்தன.

1940 ஆம்ஆண்டு, ஓர் அழகான வைகறையில் பாபுவிடமிருந்து ஆணை வந்தது—தம்மைச் சந்திக்கச்சொல்லி. அவர் உத்தரவுப்படி ஆஜரானேன். "இப்போது உன் சேவை எனக்கு வேண்டியுள்ளது. நீ இப்போது சுதந்திரமாக இருக்கிறாயா இல்லையா என்பது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நீ தான் எப்போதும் எதாவதொரு பணியில் சிக்குண்டிருப்பாயே. நாம் இப்போது 'தனி நபர் சத்தியாக்கிரகம்' செய்ய வேண்டியுள்ளது. உடனே உன் வேலைத் தொந்தரவிலிருந்து, உனக்கு இடைஞ்சல் ஒன்றும் நேராத வகையில் உன்னை விடுவித்துக்கொள்ள இயலுமானால் முதல் தனிநபர் சத்தியாக்கிரகம் நீயே செய்ய வேண்டும் என்பது என் விருப்பம். ஆதலால் நீ தயாராகி விடு" என்றார்.

"உங்கள் அழைப்பும் எமன் அழைப்பும் வேறல்ல—என் மனதைப் பொறுத்தவரையில், ஆதலால் நான் இங்கிருந்து பவுனாருக்கு மீண்டும் போக வேண்டும் என்பது கூடத் தேவையில்லை. இங்கிருந்தே இப்பணிக்கு நேராகப் போக முடியும்" என்றேன்.

நான் இப்படிச் சொன்னவுடன் பாபுவுக்கு அது சரி எனத் தோன்றிற்று. நான் 'தனி நபர் சத்தியாக்கிரகம்' செய்து சிறை சென்றேன்.

அவரே என்னை எல்லோருக்கும் அறிமுகமாக்கினர்

மேலும் ஒன்று நினைவுக்கு வருகிறது, சிறையிலிருந்து விடுதலையாகி வந்து பாபுவைச் சந்தித்தபோது, "விநோபா, இது கடைசிச் சிறைவாசம் அன்று, தெரியுமா? மீண்டும் போகவேண்டியிருக்கும்" என்றார்.

"ரொம்ப நல்லது. நான் தயார்" என்றேன்.

"சிறையிலிருந்து ஏதேனும் புதுச் சிந்தனை கொண்டு வந்திருக்கிறாயா?" என்று பேச்சைத் தொடர்ந்தார்.

"ஆஹா! கொண்டு வந்திருக்கின்றேனே! எல்லா நிறுவனங்களிலிருந்தும் நான் விடுபட்டாக வேண்டும். அவ்வாறன்றி நான் அகிம்சையில் முன்னேற்றம் காணமுடியாது" என்றேன்.

"ரொம்ப நன்றாகச் சொன்னாய்" என்றார் பளிச்சென்று பிறகு நான் சொன்னதற்கு தமக்கே உரிய முறையில் வெகு அழகாக வியாக்கியானம் சொன்னார், 'அதாவது நீ எல்லா ஸ்தானங்களுக்கும் தொண்டு செய்வாய். ஆனால் அதிகாரம் செலுத்தும் பதவியை விரும்புவதில்லை!' என்றார்.

பிறகு ஆஷா தேவியை அழைத்து "விநோபாவுக்கு முழு விடுப்பு கொடுத்து விடுங்கள். அவன் எல்லாத் தொந்தரவுகளிலிருந்தும் விடுபட்டுச் சிந்தனை செய்தானானால் நல்ல விளைவுகள் உண்டாகும். தொந்தரவுகளைத் தலைக்கு மேலே வைத்துக் கொண்டு சிந்திப்பவர்களின் சிந்தனை சுதந்தரமாக அமைவதில்லை. புது விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சி நிகழாது" என்றார்.

பாபுவின் இலச்சினை பெற்ற பிறகு மற்றவர்கள் காரியம் ஒன்றும் நடக்கவில்லைதான். ஆனால் பாபுவே எல்லா ஸ்தாபனச் செயலாளர்களைப் பற்றியும் எனக்கு விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

குழந்தைகளிடமிருந்தும் கற்றுக்கொள்ள அவர் தயாராக இருந்தார்

பாபுவின் பல குணங்களில் தலைசிறந்ததாக நான் கருதுவது அவர் 'சத்தியாக்கிரகி' (சத்தியத்தைக் கிரகிப்பவர்) என்பதே. எப்போதும் முன்னேற்றத்திலேயே நாட்டம் கொண்டவர், இயக்கம் உடையவர். புதிது புதிதாகக்கற்றுக் கொள்வதற்குச் சித்தமாக இருந்தார். அவரை எல்லோரும் வழிகாட்டும் தலைவராக நினைத்தனர். ஆனால் அவரோ விட்டு விடுதலையாகி-பற்றற்று-நின்றார். அவர் சத்தியாக்கிரகி என்பதுதான் தெரிந்ததாயிற்றே. அவர் ஒரு 'சத்தியக்கிராகி' யும் கூட. மனு கூறுகிறார்: 'பாலாதபி ஸுபாஷிதம் கிராஹ்யம்' - நல்ல விஷயங்களைக் குழந்தைகளிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று இதை நான் பாபுவிடம் கண்டேன்.

வெகு நாளைக்கு முன்னையச் செய்தி இது. ஸாவ்லியில் காந்தி சேவா சங்கத்தின் கூட்டம் கூடியிருந்தது. குடும்பக் கட்டுப்பாடு பற்றி யாருடனோ பாபு விவாதித்திருந்தார் போலும். 'ரித்ஃம் ஸிஸ்டம்' என்னும் முறையை ஓர் அளவு ஆதரித்து அவர் பேசியதாக பத்திரிகையில் செய்தி வந்திருந்ததை நான் படித்திருந்தேன். அவர் கருத்து சரி அன்று என்பது என் கட்சி. அது பற்றி ஸாவ்லியில் நான் பாபுவோடு விவாதித்தேன். ஒன்று ஒன்றேகால் மணி நேரம் விவாதம் நடந்தது. என் கருத்தை நான் அவர்முன் வைத்தேன். கடைசியில் அவர் என் கருத்தை மதித்தார். 'இன்றைய கூட்டத்தில் நீ சர்ச்சையைக் கிளப்பு' என்றார். நான் கிளப்பப் போவதில்லை; பிரச்சினையை நீங்களே எழுப்ப

வேண்டும்' என்றேன். பிறகு அவரே அப்பிரச்சினையை எழுப்பி, ரித்ஃம் ஸிஸ்டத்துக்குத் தந்திருந்த கொஞ்சநஞ்சம் ஆதரவையும் வாபஸ் பெற்றுக் கொண்டார். ஓர் அற்ப மனிதனிடமிருந்து வந்த சிந்தனையானாலும் அதைக் கிர கிக்க அவர் சித்தமாயிருந்தார் என்பதைக் காட்டவே இதைச் சொல்கிறேன்.

பாபுவின் மீது விழுந்த அடியை நான் மட்டும் ஏற்க முடிந்திருந்தால்

இவ்வாறு பாபுவின் அன்பையும் நம்பிக்கையையும் நான் நிரம்பப் பெற்றிருக்கிறேன், நானும் என்னை அவருக்குக் காணிக்கையாகத் தந்துவிட்டேன். பாபு வாழ்ந்த காலத்தில் நான் கவலையற்ற மனத்தினனாய் பணி செய்து வந்தேன், இன்னும்சில ஆண்டுகளுக்கு முன்னாகவே நான் ஆசிரமப்பணி களிலிருந்து விடுபட்டு வெளியேறி பிராபல்யம் அடைந்திருந் தால், பாபுவை பலி கொண்ட அப்பெருநெருப்பை ஒரேயடி யாய் அணைக்கும் நற்காரியத்தைச் செய்ய முடியாது போயிருந் தாலும் அதற்கு நானே பலியாகும் மகிழ்ச்சியையாவது அடைந்திருப்பேன் என்று இப்போது நினைக்கிறேன். பாபுவின் மீது குண்டு பாய்ந்த பிறகு தான் நான் ஐந்து அல்லது பத்தாண்டுகளுக்கு முன் பிராபல்யம் அடைந்திருந்தால் ஓரளவு உதவி இருக்கமுடியும் என்று தோன்றிற்று. ஒன்றும் இல்லை என்றாலும் 1945 ம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலை யான பிறகாவது பாபுவின் பெரும் பணிகளில் பங்கு கொள் ளத் துவங்கி இருந்தேனாயின் பாபுவின் மீது நிகழ்ந்த தாக்குதலை என்மீது திருப்பிக் கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

பாபு இருந்தவரை பாபுவும் அவருடைய தோழர்களும் உரியதைச் செய்து வருகின்றனர் என்ற கருத்தில் தன்னை மறந்து என் வேலையில் ஈடுபட்டிருந்தேன். கடைசியில் பாபு வுக்கும் அவர் தோழர்களுக்குமிடையே கருத்துவேறுபாடுண் டாகியது. பாரத நாட்டைத் துண்டாட வேண்டியதே இல்லை

என்று அவர் கடைசி வரை கூறி வந்தார். ஆயினும் இரண்டு துண்டாகித் தீர்ந்தும் போயிற்று. எல்லாம் தில்லியில் முடிவாயிற்று, வலிமை ஏதோ குன்றிவிட்டது போன்ற உணர்வு பாபுவுக்கு உண்டாயிற்று இனி இயன்ற அளவு சமாளிப்பதே வழி என்று முயல்வதானார். அக்காலத்தில் மஹாராஷ்டிரத்திலும் பாஞ்சாலத்திலும் வங்கத்திலும் பிற இடங்களிலும் நடந்தவற்றைப் பார்த்தபிறகு, அப்போது நான் முன் வந்திருந்தால் — என்வரவால் நிலைமையில் மாறுதலோ வேறு விளைவுகளோ உண்டாகியிருக்குமா இல்லையா என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம் என்றாலும் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் பாபு இறப்பதற்கு முன் என் உயிரைக் கொடுக்கவாவது முடிந்திருக்கும் என்று எனக்குத் தோன்றிற்று. அவ்வாறு நடந்திருந்தால் எனக்குச் சற்றே அமைதி உண்டாகி இருக்கும். பாபுவுக்குக் கிடைத்த முடிவு எனக்கும் கிடைத்திருக்கும்.

என்ன? விநோபாவுமா அழுதார்?

அது ஒருபக்கம் இருக்கட்டும் எல்லாம் கடவுள் வகுத்த திட்டப்படி நடக்கிறது. ஒரு வெறியன் அவரைக் கொன்றான் என்பது ஓர் அவச் செய்தி — நூத் தேவதைகளின் செயல் — தான். அது நிகழ்ந்து இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு பவுனாரில் எனக்குச் செய்தி கிட்டிற்று. அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்கள் மன அமைதியோடு தான் இருந்தேன். எந்தச் செய்தியும் என்னை அடியோடு பாதித்து விடுவதில்லை. அப்படி எனக்கொரு வழக்கம். இந்நிகழ்ச்சியின் போதும் அப்படியே ஆயிற்று. ஆனால் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு என்னிடம் ஒரு மாறுதல் நிகழ்ந்தது. மனத்தில் ஆழ்ந்த துயரம் உண்டாயிற்று. அக்காலத்தில் நான் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனையின் போது பேச வேண்டியிருந்தது. சேவாகிராம ஆசிரமத்தில் பிரார்த்தனை நடக்கும் இடத்தில் தான் ஒரு நாள் உரை நிகழ்த்துகையில் கண்ணீர்

தாரை தாரையாகப் பெருகிற்று. அதைப் பார்த்த ஒரு சகோதரர் "என்ன, வினோபாவுமா அழுகிறார்?" என்றார், "ஆம் சகோதரா, எனக்கும் கடவுள் இதயத்தைக் கொடுத்திருக்கிறார். அதற்கு நான் கைம்மாறு தருகிறேன் — நன்றி செலுத்துகிறேன்" என்று பதில் கூறினேன்.

என் கண்ணிலிருந்து வழிந்த நீர் பாபுவின் மரணத்துக்காகச் சிந்தியதன்று, பெருந்தகையாளர் ஒவ்வொருவரும் அடையவேண்டிய முடிவே அவருக்கும் கிட்டிற்று. அதுவும் இன்றி தமக்கு எத்தகைய மரணம் நேரும் என்பதை அவர் உணர்வால் அறிந்திருந்தார். அது அவ்வாறே நிகழவும் செய்தது. ஆனால், அந்த சகோதரர்களின் கொலைகாரப் புத்தியை — சிந்தனையைத் தடுத்து நிறுத்த என்னால் முடியாது போயிற்றே என்று தான் வருந்தினேன். அதற்கிடையில் பவுனாரில் உள்ள ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தினர் சிலரைக் கைது செய்யலானார்கள். அவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் என நான் கருதவில்லை, ஆயினும் பத்தாண்டுக்காலம் வசித்திருந்த அந்த ஊர் மக்கள் இதயம் வரைக் கூட நான் சென்று விடவில்லை என்பதல்லவா அதன் உட்கிடை. அதை எண்ணியே நான் பெரிதும் வருந்தினேன்

கண் இமைத்தால் ஆச்சு, பாபுவைக் காண்கிறேன்

பாபுவின் மரணச் செய்தியைக் கேட்டவுடன் பாபு அமரர் ஆகிவிட்டார் என்ற எண்ணமே முதலில் எனக்குண்டாயிற்று. அக்கணத்திலிருந்து இதுவரை அதே மனநிலை தான் நீடிக்கிறது. பாபு உடல் தாங்கி இருந்த காலத்தில் அவரைக் காண நான் அவர் இருக்குமிடம் வரை போக வேண்டி இருந்தது. இன்றோ, அவருடைய பேட்டி கிடைக்க ஒருகணப் போது கூடத் தேவை இல்லை, கண்ணை மூட வேண்டியது தான் தாமதம், பேட்டி கிடைத்தாயிற்று! பாபு உயிரோடிருந்த காலத்தில் அவர் பணியைச் செய்வதற்கு என்னையே நிறைய வேலை வாங்க வேண்டி இருந்தது. இடையிடையே

தான் அவரோடு பேச்சு நிகழும். இன்றோவென்றால் பொழு தெல்லாம் அவரோடு பேச்சும் ''அரட்டை''யுமாகவே கழிகி றது. அவர் எனக்கு முன்னும், பின்னும் பிரசன்னமாக இருப் பதை உணர்ந்து வருகிறேன்.

பாபு உயிரோடிருந்த காலத்தில் எனக்கு இருந்த ஊக்கத்துக்கு இன்றைய ஊக்கம் சற்றும் குறைவன்று, உற்சாகம் குன்றவில்லை, நிராசையால் பீடிக்கப்படவில்லை. சற்றும் தொய்வு தோன்றவில்லை. பாபு இருந்த போது என் பணி ஓர் எல்லைக்குள் நின்றது. ஆயினும் பணியில் தீவிரம் இருந்தது. இன்றோ என் எல்லை அகன்றுள்ளது. அத்துடன் மனதில் அதே அளவு தீவிரம் இருப்பதை உணர்கிறேன். ஒருக்கால் சற்றுக் கூடி இருக்கிறதோ என்னவோ?

அவர்தம் ஆன்மா நம்மையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும்

பாபுவின் ஆன்மா முக்தி அடைந்திருக்குமா அல்லது இன்னமும் வாஸனைகளிலிருந்து விடுபடாமல் இருக்குமா என் பது எனக்குத் தெரியாது. அவ்விஷயம் என் கற்பனையின் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது. கடைசிக் கணத்தில் ராம நாமத்தை உச்சரித்தவராதலால் அவர் எல்லா ஆசைகளி லிருந்தும் விடுபட்டவர் என்றுதான் பொருளாகிறது. இத்தகைய நிகழ்ச்சிகள் வரலாற்றில் நிரம்பி உள்ளன. அவர் ஆன்மா முக்தி அடையவில்லை என்று வைத்துக் கொண் டாலுமே அது நம்மையெல்லாம் கண்காணித்து வரும். உலகத்தின் எந்த மூலையிலானாலும் சரி, எந்தச்சிறு அளவி லானாலும் சரி அகிம்சைச் சிந்தனையோ செயலோ நிகழ்வ துண்டு எனில் அங்கெல்லாம் பாபு பிரசன்னமாகி அதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பார்.

நாம் சிரார்த்தம் தர்ப்பணம், என்றெல்லாம் செய்து வருகிறோம். ஒன்று பித்ரு தர்ப்பணம், மற்றொன்று ரிஷி

தர்ப்பணம். உடலுக்குக் காரணமாக இருப்பவர்களுக்கு-பெற்றோர்களுக்குச் சிரார்த்தம் செய்கிறோம். சிந்தனை, ஞானம் பக்தியின் ஊக்கம் ஆகியவற்றை நமக்கு வழங்கியுள்ள ரிஷிகளுக்கும் சிரார்த்தம் செய்கிறோம். பாபு தந்தையும் ஆவார் ரிஷியும் ஆவார். அவரை நாம் "ராஷ்டிரபிதா"—நாட்டின் தந்தை என அழைக்கிறோம். அதோடு சத்தியாக்கிரக தரிசனத்தையும் சர்வோதய தர்ம தரிசனத்தையும் நமக்கு வழங்கிய குரு என்ற தகுதியும் ரிஷி என்ற தகுதியும் அவருக்குண்டு. தந்தையின் காரியங்களை மக்கள் ஏற்று நடத்த வேண்டும், அதுபோலவே குரு அல்லது ஆசிரியனுடைய காரியங்களையும் ஏற்று நடத்த வேண்டியதுண்டு. உலகம் முழுதுக்குமாக அவர் செய்த பணியை அறிவறிந்து தொடர்ந்து ஆற்றுவதே அவருக்குச் செய்கிற பித்ரு தர்ப்பணம். அவருடைய இடையறுத சிந்தனையை நினைத்தும் மனத்திருத்தியும் வந்தோமாயின் அதுவே ரிஷிதர்ப்பணம்,

என் அந்தராத்மா நாள்தோறும் சாட்சி சொல்லிக் கொண்டிருக்கிறது

பாபு காட்டிய அகிம்சை வழி — அன்பு வழியினை முற்றும் செயலாக்க நான் முழு முயற்சி மேற்கொண்டுள்ளேன், உச்ச கட்டம் முயன்றிருக்கிறேன் என்பதற்கு என் அந்தராத்மாவே சாட்சி கூறுகிறது. இவ்விஷயத்தில் ஒரு கணந்தானும் கவனக்குறைவு நேர்ந்ததாக எனக்கு நினைவில்லை. பாபுவின் மறைவுக்குப் பிறகு அவருடைய பணியைத்தான் செய்து வருகிறேன் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. இப்பணி காரணமாக என் இதயத்தில் ஆனந்தம் ததும்புகிறது. இப்பணியில் பாபு நிரந்தரமாக என்னோடிருக்கிறார் என்பதையும் உணர்கிறேன். பாபுபோதித்ததின் ஓர் அம்சமாவது என் சிந்தனையில் உண்டு என நான் கருதுகிறேன். பாபு உயிர் வாழ்ந்த காலத்தை விட அதிகமாக இன்று அவர் சந்நிதியில் நான் இருப்பதாக உணர்கிறேன். அவர்கூறியவற்றைப்பற்றிச் சிந்திக்கிற விஷ

யத்தில் அவரிடமிருந்து எனக்குக் கிடைத்து வருகிற உதவி யின் அளவு மற்ற யாரிடமிருந்தும் கிடைப்பதில்லை.

பாபு நம் எல்லோர் இதயத்திலும் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறார். நம் அந்தராத்மாவுக்குள் அவர் கடவுள் போல இடம் பிடித்துக் கொண்டாயிற்று. பக்தனும் பகவானும் ஒன்றாகி விட்டிருக்கின்றனர். அவர் உயிர் வாழ்ந்த போது கடவுளிடமிருந்து தனியாகப் பிரிந்து நின்று பணி யாற்றினார், தம் மரணத்துக்குப் பிறகு அவர் கடவுளோடு ஒன்றிக் கலந்து விட்டாராதலால் நம் பணிக்கு நல்லாசி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

பக்தன் எப்போதும் தலைமேல் உட்கார்ந்து கொள்வான்

எப்படியும் கடவுள் என்ற பரம்பொருள் ஒன்றுண்டு. அவ ரன்றி வேறொருவர் இல்லை. அப்பரம்பொருளின் பெயரைச் சொல்லி வரும்போது அவருக்கு இணையாக வேறொன்றை யும் சொல்லத்தேவையில்லை. கடவுளுருவத்தின் பரப்பு— வியாபகம் — இத்தகையதென்று உருவகப்படுத்தி உணரப் பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று மாதுளம் பழத்துக்குள் எண்ணிறந்த மணிகள் பொதிந்திருப்பது போல் பெருந்தகை யாளர் பலர் கடவுளுக்குள் இருக்கின்றனர் என்பது. அது போலவே தம் இதயங்களில் அடியார்களுக்கு ஓர் இடம் இருப்பது போன்ற உணர்வு பக்தி நிறைந்த இதயங்களில் உண்டாகிறது.

மாரக்மே தாரண் மிலே ஸந்த ராம தோயி
ஸந்த் ஸதா சீச ஊப்பர், ராம ஹ்ருதய் ஹோயி

இப்படி ஒரு "ஸந்தை" — பெரும்தகையாளரை நாம் கண்டோம். அவரோடு சேர்ந்து பணி செய்யும் வாய்ப்பு நமக்குக் கிட்டிற்று, எவ்வளவு பாக்கியசாலிகள் நாம்! இயன்றஅளவு அவரைப் பின்பற்றிச் செயலாற்றலாம். ஆன்ம உணர்வு பெறலாம், ஆன்ம சோதனை செய்து சித்த சுத்தி பெற்று கடவுளைச் சரணடையலாம்.

வெகு நாட்களுக்கு முன்னேய செய்தி இது. ஜம்னு லால்ஜியின் மகள் மதாலஸா அப்போது சிறுமி. "காந்தியின் படம் வரைந்து வைத்திருந்ததை ஏன் அழித்துவிட்டீர்கள்" என்று என்னிடம் கேட்டாள். ஐயேடி! அது சிலேட்டில் வரைந்ததல்லவா. அதுவுமின்றி காந்தியின் படம் வரைய நினைத்து வரையவுமில்லை, அந்தச் சிறுவன், "எனக்கு மனிதன் படம் வரைந்து காட்டு" என்று அடம் பிடித்ததால் என் மனக் கண் முன் நின்ற காந்தியின் உருவத்தைப் படமாக வரைந்து வைத்தேன். நான் என்னமோ மனிதன் படத்தை வரைய எண்ணியல்லவா அந்தக் காந்திப் படத்தைப் போட்டேன்!" என்று அவளுக்கு விஷயத்தை விளக்கினேன்.

நரசிம்மமேத்தாவின் "வைஷ்ணவ ஜன" என்ற பஜனையில் இலட்சிய மனிதன் யார் என்ற ஒரு விளக்கம் உண்டு. காந்திக்கு மிகவும் விருப்பமான ஒரு பஜனைப்பாடல் அது. அப்பாடலின் கருத்தைத் தம் வாழ்க்கையில் பாபு கடைப் பிடித்துக் காட்டியிருக்கிறார். அப்பாடலுக்கு அவர் வாழ்க் கையே ஒரு பொழிப்புரை எனலாம்.

அந்த பஜனைப் பாடலில் வைஷ்ணவனுக்குச் சொல்லி யுள்ள இலக்கணங்கள் ஓரளவு சைவர்களுக்கும் பொருந்து கின்றன. கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியருக்கும், பௌத்த சமயிகளுக்கும் பொருந்துகின்றன. "பிறர் துக்கம் பார்க்கச் சகிக்கமாட்டான்; அவன் உபகாரம் செய்தவண்ணம் இருப் பான்" என்கிறது அப்பாடல். 'உபகாரம்' என்ற சொல்லே மிக அழகானதொரு சொல். அதில் ஆணவத்தின் சாயல் ஏதோ சற்று படிந்திருப்பதுபோல் தோன்றும். ஆனால் அடிப் படையில் அது பணிவைக் குறிக்கும் சொல்தான். மனமொழி மெய்களால் பிறருக்கு உதவுதல் என்று பொருள். மரணத்தை

யும் பொருட்படுத்தாது செய்கிற காரியமானாலும் அது ''உப-கார''மாகவே குறைந்த தகுதியுள்ள காரியமாகவே-அமையும். ''முக்கியமான''-(''உப''அல்ல)-செயல் என்னவோ கடவுள் செயல்தானே. நம் செயல் ''உபகாரியம்'' என்ற அள-வோடு நிற்பவை. சிறிய காரியம் செய்தாலும் மனத்தில் அகங்காரம் புகுந்துவிடும். ஆதலால், மன அபிமான ந ஆணே ரே (மனதில் அபிமானத்தைக்கொண்டு வந்து விடாதே யப்பா!) என்கிறுர் நரசிம்மமேத்தா.

மிக உயர்ந்த பூர்ணுஹுதி

பாபுவின் வாழ்க்கையில் இந்த பஜனைப்பாடல் வடிவு பெற்று வந்திருப்பதைப் பார்க்கலாம். அந்தப்புனித வாழ்க்கையின் நினைவால் கண்கள் பனிக்கின்றன. அவரோடிணைந்து பணி செய்யவும் தொண்டு செய்யவும் வாய்ப்புப் பெற்ற நாமெல்லோரும் பெரும்பேறு பெற்றவர்கள். அவர் மரணமும்தான் எத்தகைய சூழ் நிலையில் நிகழ்ந்துள்ளது! பிரார்த்தனைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்-அதாவது அவர் இதயத்தில்கடவுள் நினைவைத் தவிர வேறு நினைவு இல்லாத நிலை அவருடைய வாழ்க்கை சேவாமயமும் பரோபகாரமயமுமான வாழ்க்கை என்பதைப் பார்த்திருக்கிறோம். அத்தகைய வாழ்க்கையில் வழிபாட்டு மனநிலையும் வழிபாட்டு வேளையும் மிகப் புனிதமான வேளை என்று இறைவன் கண்டுகொண்டார் போலும். அப்போது அனுப்பிவைக்கிறுர் கொல்படை தாங்-கிய ஒருவனை. ''உயிர் பிரியும்போது பாபுவின் முகத்தில் பணி செய்வதற்கிடையிலேயே தனக்கு மரணம் வந்தது பற்றிய ஆனந்தமும், அதற்குக் காரணமாக அமைந்தோன்பால் பரிவு, அவனைப் பொறுத்தருளும் பாங்கு ஆகிய இரு பாவமும் இருக்-கக் கண்டேன்'' என்று வல்லபபாயி கூறியிருக்கிறுர்.

இது காந்தி வாழ்க்கையின் பூர்ணுஹுதி - முழுச்சித்தி - என்று எனக்குத் தோன்றுகிறது. யாவற்றினும் உயர்ந்த சிந்தனையைச் செய்தவாறே உடல் விடுதல் புண்ணியம்

யாவற்றுள்ளும் உயர்ந்த புண்ணியம் தன் வாழ்நாள் முழுதும் தர்மத்தைக் கடைப்பிடிக்க முயன்ற ஒருவன், அன்றைய கடமைகள் யாவற்றையும் செய்து முடித்து பிரார்த்தனேக்குப் போகிருன். சூழ நண்பர்கள் இருக்கின்றனர். எல்லோரையும் அவன் பிரார்த்தனேக்கு அழைக்கிருன். அக்கணத்தில் முடிகிறது அவன் வாழ்க்கை. இத்தகைய மரணம் மிகப் புனிதமான மரணம்.

கொலேகாரனின் கை எப்படி இயங்கிற்று?

"காந்தி போன்ற ஒரு புனித மனிதருக்கெதிராக கொல்படை தாங்கிய கை எப்படி எழ முடிந்தது? என்று என்னே ஒரு சகோதரர் கேட்டார். இது சிந்தனேக்குரிய விஷயம்தான். காந்தி என்ருெரு தனி மனிதன் எங்கே இருந்தார்? அவர் நம் எல்லோர் பாரத்தையும் சுமந்தவர். நம் வாழ்க்கையில் அழுக்குச் சேர்ந்துவிட்டதால் அவர் கொலேயுண்டார் அவர் ஒரு தனி மனிதராக இருந்திருந்தால், நம் பொறுப்பையெல்லாம் அவர் சுமந்திராவிட்டால், செய்தி வேருக இருக்கும். நம் எல்லோருடைய பொறுப்பைச் சுமந்து கடைசிவரை அதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஆதலால் அவர் கொலேயுண்டதன் பொறுப்பு நம்மீதே சாரும்" என்று அவருக்கு மறுமொழி தந்தேன்.

மற்ருெரு சகோதரர் என்னிடம் ஒரு கேள்வி கேட்டிருந்தார், "பக்தனே வருணித்து கீதையில் 'உலகத்தாரைக் கண்டு வெறுக்காதவனே உலகமும் வெறுக்காது' என்று ஓர் இரட்டை லக்ஷணம் கூறப்பட்டுள்ளதே இது எப்படி காந்தி விஷயத்தில் பொருந்தும்?" என்று. காந்தி வெறும் பக்திமான் மட்டுமாக இருந்திருந்தால் இப்படி ஒரு பிரச்சினே எழுந்திராது. எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொல்லலாம். நரசிம்ம மேத்தா கடவுளின் பக்தரே அன்றி மக்களின் பிரதிநிதி அல்லர். மக்களின் பாவ புண்ணியங்களேத் தம்மேல் வாங்கிக்கொண்டவரல்லர். உலகத்தாரின் தீச்செயலால் தானே தீயோனுகி

நற்செயலால் நல்லோனாகி (பாவத்தால் பாவியாகி, புண்ணியத்தால் புண்ணியவானாகி) அதுபோலவே மக்கள் துன்பத்தில் துன்புற்று அவர்களுடைய சுகத்தில் சுகம் கண்டவர்களுக்கு உதாரணமாக ஏசுநாதர் விளங்குகிறார். பாபுவும் தாமாகவே உலகப் பிரதிநிதியாகி தனக்கென்று ஒரு வாழ்க்கை இல்லாதாகிவிட்டவர். ஆகையால் நம் எல்லோர் பாவ புண்ணியமும் பாபுவின் பாவ புண்ணியங்களாகிவிட்டன. மக்கள் இன்னும் அவரை நினைவில் வைத்துள்ளனர். இதன் காரணம் அவர் ஒரு தனி மனிதர் அல்லர் என்பதே. நாடு முழுவதற்கும் முழுப் பிரதிநிதி அவர். அவர் பேச்சும் சிந்தனையும் மக்கள்குரலையும் மக்கள் சிந்தனையையும் வெளிப்படுத்தின. ஆதலால் யாருக்கு அதில் எதிர்ப்பும் பகையும் தோன்றிற்று என்பதற்கு நாம் அவரிடமே பதில் எதிர்பார்த்தல் இயலாது. அதற்குப் பதில் நாமே சொல்லவேண்டும். அவர் வாழ்க்கை முற்றும் பொருள் பொதிந்த வாழ்க்கை.

கடைசி நாட்கள் எல்லாம் ஒரே கிருஷ்ண லீலைதான்

தம் கடைசி நாட்களில் காந்தி மிகுந்த மன வேதனைப் பட்டார் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் அது அவருடைய உள்ளார்ந்த சொந்த வேதனையன்று. அவ்வேதனை நமக்காக அவர் பட்ட வேதனை. நாம் அவருக்கு விளைத்த வேதனை. கடைசி வரையில் பொறுக்க வேண்டியதைப் பொறுக்கவுமே செய்தார். அவரிடத்தில் ஏதோ வாஸனைகள் ஆசைகள் தங்கி இருந்தன என்றெண்ணுவது அறியாமையே. அவர் வாஸனைகளுக்கு அப்பாற்பட்டவர். கடைசியில் நடந்ததெல்லாம் அவருடைய லீலைகளே. கடைசி நாட்களில் நடந்தது கிருஷ்ண லீலையோ என்னுமாறு இருந்தது. அந் நாட்களின் ரகசியத்தை விளக்கிச் சொல்ல காந்தியே மீண்டும் வந்தாக வேண்டும்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வாழ்க்கையில் உள்ளும் புறமும் துன்பம் உண்டாயிற்று. யாதவர்களுக்கியையே நிகழ்ந்தவை பற்றி அவர் வருந்தினார். கிருஷ்ண

பகவான் மறைந்த போது யாதவர்களின் நிலை என்னவோ அதுவே காந்தி மறைந்த போது பாரத நாடு இருந்த நிலை, அதில் கிருஷ்ண பகவானுக்கு நேர்ந்த கதியே காந்திக்கும் நேர்ந்தது.

கடைசிக் காலத்தில் இராமனின் பெயர் சொல்ல வராது

கடைசிக் கணத்தில் அவர் என்ன செய்தார்? குண்டு பட்டவுடன் முதல் காரியமாக இரு கைகளையும் சேர்த்துக் கூப்பினார். — "நமஸ்காரம்!" வெகு இயல்பான பாவனையில் கடவுள் பெயரைச் சொன்னார் — "ஹேராம்!" போதும். முடிந்தது எல்லாம். துளசி தாஸர் பாடியிருக்கிறார்:

"ஜன்ம ஜன்ம முனி ஜதன் கராஹீங்
அந்த ராம் கஹு ஆவத் நாஹி

(பிறவி பிறவியாக முனிவர் முயல்கின்றனர். கடைசியில் ராமன் பெயர் சொல்ல வருவதில்லை,) பிறவி பிறவி தோறும் படாத பாடுபட்டு முயல்கிறவர்களுக்கும் கடைசியில் ராமன் பெயர் நினைவுக்கு வராது, காந்தியின் நாவிலிருந்து கடைசியாக வெளி வருகிறது ஒரு சொல்: 'ஹே ராம்!" என்று. போதும். கடைசியில் "ஹே ராம்!" என்று சொல்லிப்போனார். இதைவிட அதிகமாக எந்த பக்திமான் தான் என்ன செய்ய இயலும்?

காந்தி உச்சரித்த பெயர் கொண்ட அந்த ராமன் யார்? தசரதன் எந்த ராமன் பெயரை நினைத்துத் தன் மகனுக்குப் பெயர் சூட்டினானோ அந்த ராமன். பரசுராமன், பலராமன், ராமானுஜன் ஆகியோரின் தந்தையரும் அதே ராமன் பெயரை நினைத்துத் தான் தம் மக்களுக்குப் பெயர் சூட்டினர். தசரதனுடைய இராமன் பெரும் அவதார புருஷனாகத் திகழ்ந்தான். இந்த "ராம நாம"மோ தசரதனை விடவும் தொன்மை வாய்ந்தது. இந்த ராம நாமத்தைத் தாங்கியவன்

எல்லோர் இதயத்துள்ளும் களி நடம் புரியும் அந்தப் பரம் பொருளான கடவுளே, இந்த ராமன் பெயரைத்தான் காந்தி உச்சரித்தார்.

கடைசி இடைவெளி ஒரு கணத்தில் அறுந்துபட்டது

கடைசிக் காலத்தில் ஒன்றல்லவெனின் மற்ருென்று இடை புகுந்து மறைக்கிறது. ஆனுல் காந்திக்கும் கடவுளுக்கும் இடையே ஒன்றும் இடை புகுந்து மறைக்கவில்லே. இத்தனேக்கும், அவர் கடைசி வரை "சத்தியத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறேன்" என்று கூறி வந்தவர். தன் முயற்சியால் மனிதன் இடைவிடாது முன்னேறி வத்தாலும் அவனுடைய லட்சியத்துக்கும் அவனுக்கும் இடையில் மிகுந்த இடைவெளி இருந்து வருகிறது. ஆயினும் கடவுள் ஒரேயடியாய் அவனே அலாக்காகத் தூக்கிக்கொள்ளும் ஒரு கணம் வருகிறது. அவன் எட்டியிருக்கிற இடத்துக்கும், எட்ட வேண்டிய இடத்துக்கும் உள்ள இடைவெளி — அந்தரம் அறுந்து படுகின்ற கணம் வரும் போது தான் கடவுள் செயல் படுகிருர்.

மேலும் வெகு தூரம் போக வேண்டியுள்ளது, முன்னேற வேண்டியுள்ளது, அடையவேண்டிய இடம் வெகு தொலேவிலுள்ளது என்று காந்திக்குத் தோன்றி வந்தது. கடைசிக் கணத்தில் கடவுள் அந்த இடைவெளியை வெட்டித் தறித்துவிட்டார்—குறைத்து விட்டார். இதயத்தில் கடவுள் பக்தி இருந்தால் அந்த இடைவவளி கடவுள் கையாலேயே அறுந்து போகிறது. சுருங்கி விடுகிறது. காந்திக்கும் கடவுளுக்கும் இருந்த இடைவெளியும் கடைசிக் கணத்தில் அடியோடு மறைந்து போயிற்று.

இத்தகையோர் புறத் தோற்றத்தில் ஏதோ ஒரு வேலேயைச் செய்து வருவது போலத் தோன்றும், ஆனுல் உள் முகமாக, இடையருத்தாரையாக மற்ருெரு வேலே நிகழ்ந்து கொண்டிருக்கும், காந்தியின் உள்ளார்ந்த 'விசாரதாரை'

கடவுளோடு இணைந்திருந்தது. அப்படியும் அவர் இடைவிடாது சேவையில் தான் ஈடுபட்டிருந்தார். அவர் அடிக்கடி சொல்வார், ''நாம் சேவை செய்து விடவேண்டும்'' என்று. இந்த ''விடவேண்டும்'' என்ற சொல் தான் காந்தி. அது போன்றதே அவருடைய மற்றொரு சொல் — ''லக்னீ'' உள்ளிருந்து சுநாதம் பிறக்கவேண்டும். இந்த சுநாதம் அவரிடம் இருந்தது. ஆதலாலேயே இருந்தது போல் தோன்றிய இடைவெளி கடவுள் கைபட்டு இல்லாதாயிற்று,

இதுவே 'க்ராந்தி' — புரட்சி எனப்படுவது. விரிந்து விரிந்து போய்க்கொண்டிருக்கும் போது புரட்சி (க்ராந்தி) ஏற்படும் கணமொன்று வந்து சேர்கிறது, புரட்சி நடந்ததும் இடைவெளி மறைந்து போகிறது. அந்தக் கணம் வராத வரைக்கும் கடவுள் தொலை தூரத்தில் இருக்கிறான். இடைவெளியும் நிரந்தரமாக இருக்கிறது. முயற்சி இடைவிடாது நிகழ வேண்டியதே. முயற்சி இல்லை எனின் முயற்சியுண்மைக்கும் பக்திக்கும் ஊறு வரும். நிரந்தரமான தோற்றம் என்னவோ இன்னமும் இடைவெளி இருப்பதாகத்தான். பரமாத்துமனின் ஒளிப்பிழம்பு வெளிப்படும்போது அந்த இடைவெளி ஒரே கணத்தில் அறுந்துபடும் — மறைந்து போகும். அந்நிலையில்தான் காந்தி கடைசிக்கணத்தில் இராமன் நினைவோடு சென்றார். அவருடைய ஜோதி பரமாத்துமத்தின் ஜோதியில் கலந்துவிட்டது—கலந்து ஒருருவம் ஆயிற்று. ஒரு புனிதாத்துமா பரமாத்துமத்தில் ஒன்றிற்று.

தம் பாந்த (வியாபக) நிலையில் நின்று சிறந்த மனிதர்களை அவர் ஊக்குவித்து வருவார்

காந்தி இறந்த செய்தி கேட்டவுடன் எனக்குக் கடவுள் நினைவுண்டாயிற்று. நாள்முழுதும் அந்த நினைவிலேயே மூழ்கி இருந்தேன். பிறகு விராட்சிருஷ்டியில் - பேரண்டப்படைப்பில் - படைக்கப்படுகின்ற எண்ணிறந்த உயிர்த்தொகையுள் ஒன்றான மனித இனத்தில் மட்டும் பரிணும மாறுதல் உண்டா

வதில்லையே என்ற விசாரம் உண்டாயிற்று. ஆயினும் மனிதனுக்குத் தன்னைப் பற்றிய ஒரு சங்கற்பம்-கொள்கை - இருந்து வருகிறது அது அவனுடைய சிறந்த ஒரு படைப்பு.

காந்தி போய்விட்டார். அதனுல் நம் வாழ்க்கையில் இனி என்ன மாறுதல் உண்டாகும் என்று எண்ணலானேன். பெருந்தகையாளர்கள் உடல் தாங்கி இருக்கும்போது செய்யும் முயற்சியெல்லாம் உடலிலிருந்து விடுபட்டு எல்லாரோடும் ஒன்ருகக் கலந்து ஒன்றிவிடவேண்டும் என்பதுதானே. பாலில் சர்க்கரை கரைந்து, அதில் மறைந்து அதன் சுவையை மிகுவிப்பதுபோல சமூக வாழ்க்கையின் சுவையைப் பெருக்க அதில் லயித்துவிடவே சான்ருேர் முயல்கின்றனர். உடல் தாங்கி இருக்கும்போது அவர்கள் சிறந்தவர்களாகத் திகழ்வது 'விசிஷ்ட' என்ற நிலையில் ஆயினும் முயற்சி என்னவோ 'வியாபக' நிலையை அடைவதற்குத்தான். உடலை விட்டபிறகு முன்னிலும் அதிகமாகப் பரந்த – வியாபக – நிலையை அடைகின்றனரேனும், மீண்டும் தனிப்பட்ட சிறப்பு எனும் 'விசிஷ்ட' நிலையையே அடைய முயல்கின்றனர். தம்மைப் பொறுத்து வியாபக நிலையை அடைந்தபின் 'விசிஷ்ட' நிலையிலிருக்கும் பிறரை ஊக்குவிப்பதன் வாயிலாகத் தம் வலிமையை வெளிப்படுத்தி, தம் உயர்ந்த கொள்கையை - ஸங்கற்பத்தை - செயலாக்க விரும்புகின்றனர். இவ்வாறு எனக்கு ஓர் விசார அனுபவம் உண்டாயிற்று.

ஆத்துமத்தின் பரந்த-வியாபக-நிலையின் பெற்றி யாது?

காந்தியின் சிரார்த்த தினத்தன்று பவனுரிலுள்ள தாம் ஆற்றில் அவருடைய அஸ்தியை இட வந்தனர். அன்று தாம் நதிக்கரையில் உண்டான தரிசனம் ஒரு புதுப்பிறப்பின்-மறுபிறவியின்-அனுபவமாகத்தான் இருந்தது. ஈசாவாஸ்ய உபநிஷத்தை ஓதுகின்றபோது எனக்குண்டான அனுபவத்தைச் சொல்லால் வடித்துக்காட்டும் திறமை எனக்கில்லை. ஞானியர் நமக்கு ஆத்துமத்தின் பரந்த நிலையை விளக்கிக் கூறியுள்ளனர்.

அதை நாம் பக்தியோடு போற்றுவதும் உண்டு. ஆயினும் அன்றுதான் அதன் உண்மையான அனுபூதி எனக்கு உண்டாயிற்று. சான்றோர்கள் உடல் தாங்கி இருக்கும்போது அவர்களுடைய வலிமை ஓர் எல்லைக்குள் அடங்கி நிற்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அவர்கள் உடலைத் துறந்தபிறகு அவர்கள் ஆற்றலுக்கு எல்லையே இல்லை. காந்தி உடலைவிட்ட அனுபவம்கூட நம்மிடையே சக்திசஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறது. உடல் எனும் கட்டுக்குள் அடங்கி இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தால் ஓர் எல்லைக்குள் இருந்த சிந்தனைப் பரவுதல் இன்று உங்கள் இதயத்துள்ளும் என் இதயத்துள்ளும் புகுந்து வருகிறது.

கொஞ்சத்தில் நான் சாந்தி அடைவேனா?

காந்தியின் "கீதா சிக்ஷண்" என்ற நூலை சகோதரர் நரஹரி தொகுத்திருக்கிறார். அதை நான் இரண்டு தரம் வாசித்திருக்கிறேன். அதிலிருந்து ஒரு வாக்கியத்தை என் கீதைப் பிரதியில் எழுதி வைத்திருக்கிறேன் தன் முயற்சியால் உயர மனிதன் தன்னை அலட்டிக் கொள்ளும்போது அவன் அதிகம் முயல வேண்டியுள்ளது. யோகத்தை அவன் ஆள வேண்டியுள்ளது. அப்பால் அவன் அமைதி அடைகிறான், சாந்தமாவதால் அவன் செயலற்றுப் போவதில்லை. மாறுதலைத் தோற்றுவிக்கும் ஆற்றலை அவன் இழந்து விடுவதில்லை. இதற்கு நேர்மாறாக அவனுடைய அமைதி செயலைவிட மிகவும் வலிமையுடையதாகிறது. கீதையின் ஆறாவது அத்தியாயத் துவக்கத்தில் இந்த "சர்ச்சை" எழுப்பப் பெற்றுள்ளது. அதைப் பற்றி காந்தி கூறியதை நான் என் கீதைப் புத்தகத்தில் மேற்கோளாகக் குறித்து வைத்திருககிறேன். காந்தி சொல்கிறார்:

"காலையில் சூரியநாராயணன் தன்னையே உயர்த்திக் கொள்கிறான்—எழுகிறான்.

யோக முயற்சியில் ஊன்றி நின்றவனாக வருகிறான்-
மாலையில் அமைதி அடைகிறான்
ஆதவன் உண்மையாகவே அமைதி அடைகிறானா?
நான் இறக்கும் போதாகிலும் சிறிது அமைதி பெறுவேனா?''

நான் இறக்கும் போதாகிலும் சிறிது அமைதி பெறுவேனா?:- பொருள் பொதிந்த வாக்கியம்.

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
வெளியீடுகள் சில

	ரூ.	பை.
தமிழ்நாட்டில் காந்தி	18	00
காந்தி வழிக்கதைகள் (நூலகப் பதிப்பு)	10	00
,, ,, (சாதா பதிப்பு)	7	50
மகாத்மா காந்தி நூல்கள் (பதினேழு தொகுப்புகள்) தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம்—இந்திய சுயராஜ்யம், அகிம்சாதருமம், சத்திய சோதனை, ஆரோக்கியம், கதர் கிராமக் கைத்தொழில்கள், தொழில் உறவு, தீண்டாமை ஒழிப்பு, சமூகச் சீர்திருத்தம், சத்தியாக்கிரகம், சமூக ஒற்றுமை, மத ஒற்றுமை, பகவத்கீதை, கல்வி, கடிதங்கள்-தலைவர்களுக்கு, கிராமசுயராஜ்யம், கடிதங்கள் — சகோதரிகளுக்கு, பதினாறு தொகுதிகளின் பொருளடக்கம்	7	50
கல்விச் சிந்தனைகள்	4	50
காந்தி	2	50
காந்திய நவநீதம்	2	50
அனுசக்தியோகம்	2	00
காந்தியுகம்	2	00